zeevaa

சித்தரஞ்சனி

சாண்டில்யன்

SCAN & EDIT
ZEEVAA
zeevaa99@gmail.com

வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை – 17.

zeevaa

முதற் பதிப்பு	:	ஆகஸ்ட், 1986
இரண்டாம் பதிப்பு	:	ஜனவரி, 1989
மூன்றாம் பதிப்பு	:	மார்ச், 1993
நான்காம் பதிப்பு	:	ஜூலை, 1997
ஐந்தாம் பதிப்பு	:	பிப்ரவரி, 2000
ஆறாம் பதிப்பு	:	ஜூன், 2002
ஏழாம் பதிப்பு	:	அக்டோபர், 2005
எட்டாம் பதிப்பு	:	பிப்ரவரி, 2008
ஒன்பதாம்பதிப்பு	:	நவம்பர், 2009
பத்தாம் பதிப்பு	:	மார்ச், 2011
பதினொன்றாம் பதிப்பு	:	ஜூன், 2012

உரிமை : ஆசிரியருக்கு

பதிப்பாசிரியர் : வானதி திருநாவுக்கரசு

விலை : ரூ. 90.00

❒ Title	:	**CHITTARANJANI**
❒ Author	:	**SANDILYAN**
❒ Language	:	Tamil
❒ Subject	:	Historical Novel
❒ Edition	:	Eleventh Edition, June, 2012
❒ Pages	:	280
❒ Published by	:	**VANATHI PATHIPPAKAM** 23, Deenadayalu Street, Thyagaraya Nagar, Chennai-17. ☎ 24342810, 24310769 E-mail : vanathipathippakam@gmail.com Website : www.vanathi.in
❒ Price	:	**₹ 90.00**

Typeset at : Sivaa Graphics, Ph:8939475707

Printed at : Novena Offset Printing Co., ☎ 28446891, 28446166

zeevaa

முன்னுரை

இந்தத் தலைப்பை நான் கொடுத்தபோது எழுதப்போகும் கதை என்னவென்று திட்டமாக எனக்குத் தெரியாது. இருந்தாலும் நீண்ட நாளாக சாதவாகனப் பேரரசின் சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்டு ஒருகதை எழுத வேண்டும் என்று எனக்கிருந்த அவாவைப் பூர்த்தி செய்து கொள்ளத் தீர்மானித்து ஆராய்ச்சியில் இறங்கினேன். பலன் நான் எதிர்பார்த்ததைவிட பன்மடங்கு அதிகமா யிருந்தது. வாசக அன்பர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கதையைப் படித்தார்கள். இப்படி யொரு நல்ல சரித்திரக் கதையை எழுத எனக்கு வாய்ப்பளித்த கல்கி ஆசிரியருக்கும், எனக்கு ஊக்கமளித்த தமிழ் அன்பர்களுக்கும், இதைப் புத்தக வடிவில் கொண்டு வரத் தீர்மானித்த எனது பதிப்பாளர் வானதி பதிப்பக உரிமை யாளர் திரு.திருநாவுக்கரசு அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாண்டில்யன்

26-6-86

zeevaa

ஆசிரியரின் பிற நூல்கள்

கடல் புறா I, II, III
ஜலதீபம் I, II, III
யவன ராணி I, II
ராஜபேரிகை
ராஜதிலகம்
கன்னி மாடம்
மன்னன் மகள்
சேரன் செல்வி
கவர்ந்த கண்கள்
மலைவாசல்
ஜீவபூமி
மஞ்சள் ஆறு
மூங்கில் கோட்டை
மோகினி வனம்
இந்திர குமாரி
இளையராணி
நீள்விழி
பல்லவ திலகம்
நாக தீபம்
உதயபானு
அவனிசுந்தரி
மங்கல தேவி
நிலமங்கை
ஜலமோகினி
ராஜமுத்திரை I, II
கடல் ராணி
மலையரசி
மோகனச் சிலை
ராஜயோகம்
ராணா ஹமீர்
நீலவல்லி
நாகதேவி
விலைராணி
பாண்டியன் பவனி
சந்திரமதி
ராஜ்யஸ்ரீ
வசந்த காலம்
கம்பன் கண்ட பெண்கள்
மதுமலர்
நங்கூரம்
மனமோகம்
செண்பகத் தோட்டம்
புரட்சிப்பெண்

மேலும் பல நூல்களுக்கு

http://thamizhthenee.blogspot.in

zeevaa

சித்தரஞ்சனி

அத்தியாயம் 1

பாடும் பாவை

பாரத நாட்டின் தக்ஷிணபாரதத்தின் மேல்திசை அரணான ஸஹ்யாத்திரியிலிருந்து சற்றுத் தள்ளி நாசிக்யா நகரத்துக்கும் சிறிது மேற்கில் கோதாவரி நதி தீரத்திலிருந்த சாதவாகனப் பேரரசின் தலைநகரான *பிரதிஷ் டானாவின் பெரிய அரண்மனையின் மேல் உப்பரிகையில் உட்கார்ந்திருந்த ராஜமாதா மகாராணி பாலஸ்ரீ, சாதவாகனர்களின் மூதாதையான சிமுகன் காலத்திலிருந்த பேரரசையும் பிறகு குறுகிவிட்ட அன்றைய அரசையும் எண்ணிப் பார்த்துப் பெருமூச்செறிந்தாள். அங்கிருந்தபடியே தூரத்தே பெரிதாக எழுந்து நின்ற மேற்கு மலைத்தொடரையும், அப்பொழுதும் நிதானமாக ஓடிக் கொண்டிருந்த கோதாவரி நதியையும் மாறி மாறிப் பார்த்து இந்தப் புண்ய மலையும், புண்ய நதியும் இருந்தும் அரசைக் காக்க ஹிந்துக்களால் முடியவில்லையே என்று நினைத்தாள். சாதவாகனப் பேரரசின் க்ஷீணதசையை யோசித்துப் பெரியவர்கள் சம்பாதிக்கும் பெரும் சொத்துக்களை அழிப்பதுதான் அடுத்து வரும் குழந்தைகளின் கடமை போலிருக்கிறது என்ற நினைப்பால் சிறிது மனம் கலங்கவும் செய்தாள். வெளிநாட்டவர் சதா ஹிந்துஸ்தானத்தின் மீது வெற்றி கொண்டு சீரழிப்பதே பாரதத்தின்

★ Prathishtana the Capital of satan Vahanas -Refer "A Historical Atlas of South Asia" Edited by Joseph E.SCHWARTZBERG-Page 20. Plate III C-1

zeevaa

zeevaa

சரித்திரமாவதை எண்ணிப் பெரும் வேதனைக்குள்ளான ராஜமாதா பாலஸ்ரீ, சாகர்கள் படையெடுத்து சாகஸ்தான் ஒன்றை ஸிந்துநதி முகத்துவாரத்தில் நிறுவிவிட்டதையும், முதல் சாதவாகன மன்னர்கள் நிறுவிய பெரும் சாம்ராஜ்யத்தில் முக்கால்வாசியைக் கபளீகரம் செய்துவிட்டதையும் நினைத்து, 'அந்தப் பிராந்தியங்களை மீண்டும் மீட்பது எப்போது? யார் மீட்பார்கள்?' என்று தன்னைத்தானே கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்த சமயத்தில் அவள் உட்கார்ந்திருந்த உப்பரிகை மேல்தளத்தின் படிகளில் ஏறி வந்த வாலிபனொருவன் பாலஸ்ரீ உட்கார்ந்திருந்த இடத்தை நோக்கி நடந்து வந்தான்.

சுமார் ஆறடிக்கும் மேலான உயரத்துடனும் உறுதியான நடையுடனும் தன்னை நோக்கி வந்து தனது மைந்தனை மிகுந்த அன்பும் பெருமையும் நிறைந்த கண்களுடன் பார்த்த மகாராணி பாலஸ்ரீ, சாதவாகனர்களின் பழைய சாம்ராஜ்யம் அவன் காலத்தில் ஒருவேளை திரும்பவும் அமைக்கப் படலாம் என்று நினைத்தாள். கௌதமிபுத்ர சதகர்ணி என்ற பெயரைத் தாங்கிய அந்த வாலிபனின் அழகிய முகத்தில் சதா ஒரு சிந்தனையும் கண்களில் அவன் எதையோ எதிர்பார்ப்பது போன்ற சாயையும் விரிந்து கிடந்தன. அவன் கைகள் நீண்டும் உறுதியுடனும் இருந்ததையும், நடையில் ஒரு திடமும் விசாலமார்பில் பல காயத்தழும்புகளும் காணப்பட்டதையும் கவனித்த ராஜமாதா, அவன் காலத்தில் சாதவாகனர்களுக்கு ஏதாவது விடிமோட்சம் ஏற்படும் என்ற நம்பிக்கையும் கொண்டாள். அவன் அன்று மேலங்கி எதையும் அணியாமல் கழுத்தில் ஓர் ஆரமும் காதுகளில் இரண்டு சிறு பொன் வளையங்களையும் அணிந்து, நெற்றியில் திலகத்தையும் பிறைச்சந்திரனைப் போல் தீட்டியிருந்ததால் அவன் முகத்தில் பிரும்ம தேஜஸ் ஜொலித்துக்கொண்டிருந்தது. பிரும்ம குலத்தவரானாலும் சாதவாகனர் தங்களைத் துரோணர் போலும் பரசுராமனைப் போலும் க்ஷத்திரிய அலுவல்களுக்கு

zeevaa

மாற்றிக்கொண்டதால் அந்தக் குலத்தவனான அந்த வாலிபன் முகத்தில் அழகுடன் வீரக்களையும் படர்ந்து கிடந்தது. ஏற்கனவே சில சின்னஞ்சிறு போர்களில் ஈடுபட்ட கௌதமிபுத்தரன் 'பெரும் போர்களை நாம் ஏன் மேற்கொள்ளக்கூடாது' என்ற யோசனையிலுமிருந்தான். அங்கி ஏதும் அணியாது இடுப்பிலிருந்த மூலக்கச்ச வேஷ்டியுடன் தாயை நோக்கி வந்த சமயத்திலும் அவன் இடையில் சின்னஞ்சிறு கட்டாரியொன்றைச் சொருகியிருந் தான்.

ஏதோ சிங்கம்போல் நடந்து வந்த மகனின் கோலத்தையும் இடையிலிருந்த கட்டாரியையும் நோக்கிய ராஜமாதா பாலஸ்ரீ புன்முறுவலுடன் மைந்தனை வரவேற்றாள். ''மகனே! இதென்ன அந்தண வேடமா, க்ஷத்திரியர் வேடமா?'' என்று புன்சிரிப்புடன் ஊடே வினா ஒன்றையும் கிளப்பினாள்.

''இரண்டும் சேர்ந்தது'' என்று பதில் சொன்னான் கௌதமிபுத்ரன்.

''இரண்டும் சேருமா?'' என்று பாலஸ்ரீ வினவினாள் லேசாக நகைத்து.

''பரசுராமன் விஷயத்திலும் துரோணர் விஷயத்திலும் சேருமானால், எனது மூதாதைகளுக்கும் சேருமென்றால் எனக்கு என் சேரக்கூடாது?'' என்று கேட்டான் அந்த வாலிபன். மேலும் அவனே சொன்னான், ''தாயே! முன்பு வசிஷ்டர் தமது தண்டத்தை ஊன்றி விசுவாமித்திரன் கணைகளை விழுங்கச் செய்ததைப்போல் தவ பலமுள்ள அந்தணர் யாரும் இப்பொழுது கிடையாது. கால மாறுதலில், பெரும் படையெடுப்புகள் நாட்டில் ஏற்படும்போது அவசியத்தை முன்னிட்டு வர்ணங்கள் மாறுகின்றன. சாதவாகனர் அன்று எழுந்திராவிட்டால் வெளிநாட்டார் இந்த நாட்டை என்றோ விழுங்கியிருப்பார்கள். இன்று நமது

zeevaa

சாம்ராஜ்யம் க்ஷீணித்ததற்கு நம் பலமும் போரிடும் சக்தியும் குறைந்ததுதான் காரணம்'' என்று விரிவாகவே பேசிய கௌதமிபுத்ரன், ''தாயே! இத்தனை நேரம் ஏதோ சிந்தனையில் ஈடுபட்டிருந்தாயே, எந்தக் கோட்டையைப் பிடிக்க யோசித்துக் கொண்டிருந்தாய்?'' என்றும் கேட்டான்.

பாலஸ்ரீ சிறிது சிந்தித்துவிட்டு, ''மகனே! சாதவாகனர்கள் இழந்த கோட்டைகளை, நிலப்பகுதிகளை எப்படிப் பிடிக்கலாம் என்று யோசனை செய்துகொண்டிருக்கிறேன். அந்தச் சமயத்தில் நீ வந்தாய்'' என்று மெதுவாகப் பேசினாள். மேற்குத்தொடர்ச்சி மலையைச் சுட்டிக் காட்டிய ராஜமாதா, ''அந்த மலையைப் போல் உயர்ந்திருந்த நமது பேரரசு இன்று மடுவாகத் தாழ்ந்துவிட்டது. அதற்கு நீ என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேள்வியும் எழுப்பினாள்.

கௌதமிபுத்ர சதகர்ணி தாய் சுட்டிக் காட்டிய மலையையும் நோக்கி, கோதாவரியையும் நோக்கிவிட்டு, ''தாயே! வெகு சீக்கிரம் உன் இதயம் குளிரும். நமது நாட்டுப் பகுதிகளைப் பிடித்த சாக இனத்தினரையும், யவனர்களையும், பஹ்லவரையும் வெகு சீக்கிரம் அவர்கள் சொந்த ஊர்களுக்கு அனுப்பி விடுகிறேன்'' என்று சொன்னான். அவன் குரலில் உணர்ச்சி பரிபூரணமாக ஒலித்தது.

மைந்தன் பேச்சினால் பூரிப்படைந்த அந்த வீரத்தாய் ''அதற்கு என்ன செய்யப் போகிறாய் மகனே?'' என்று வினவினாள்.

''படை திரட்ட உத்தரவிட்டிருக்கிறேன். வெகு சீக்கிரம் இந்த மேற்கு மலைக்கு அப்புறம் உள்ள *'அபராந்தாவில் இருப்பேன்'' என்று கூறிய கௌதமிபுத்ரன், ''தாயே! அதைப்பற்றி உன்னைக் கலந்து பேசத்தான் வந்தேன்'' என்றான்.

★ வடக்கு கொங்கணம்

zeevaa

அவனை உட்காரும்படி ராஜமாதா கைகாட்ட அவள் காலடியில் உட்கார்ந்தான் கௌதமிபுத்ரன். ''மகனே! உன் இச்சையும் என் ஆசையும் நிறைவேறப் படைபலம் மட்டும் போதாது. தெய்வ பலமும் வேண்டும்'' என்றாள் தனது காலடியில் உட்கார்ந்த மகன் தலைமீது தனது கையை வைத்து ஆசீர்வதிக்கும் முறையில்.

அந்த வாலிபன் தாயைக் கேள்வி கேட்கும் பாவனையில் ஏறிட்டு நோக்கினான். தந்தைக்குப் பிறகு தனக்குத் தந்தையுமாகி வில்வித்தை, வாள்வித்தை அனைத்தும் போதித்த அந்த வீரமாதாவைப் பார்க்க, அவள் விதவைக் கோலங்கண்டு அவன் மனம் நெகிழ்ந்தது. ''அம்மா! உன்னை விட இன்னொரு தெய்வம் இருக்கிறதா? மாத்ரு தேவோ பவ என்று வேதம் உன்னைத்தானே முதலில் தெய்வமாகச் சொல்லிற்று?'' என்று கேட்டான் அந்த வாலிப வீரன்.

''தாய், தந்தை, குரு கண்கண்ட தெய்வங்கள். கண்ணுக்குப் புலப்படாத ஆத்மாவுக்கு மட்டும் புலப்படும் தெய்வமும் உண்டு மகனே. அவற்றையும் கண்ணுக்குக் காட்டத்தான் விக்ரகங்கள் இருக்கின்றன. அத்தகைய ஒரு தெய்வத்தின் சக்தி உனக்கு வேண்டும்'' என்று ராஜ மாதாவின் கண்கள் பிரதிஷ்டான நகரத்தை விட்டு எங்கோ கனவுலகில் சஞ்சரித்தன. கனவில் பேசுவது போலவே பேசமுற்பட்ட பாலஸ்ரீ, ''மகனே! நமது மூதாதைகளான சிமுகனும், கிருஷ்ணனும், முதல் சதகர்ணியும் புஜபலத்தோடு தெய்வபலத்தையும் நம்பித்தான் சாதவாகனப் பேரரசை நிறுவினார்கள். அவர்கள் வழிபட்ட தெய்வத்தை நீயும் வழிபட்டு உன் போர் முரசைக் கொட்டு. வெற்றி நிச்சயம். உன் தாய் தனது வாழ்நாளிலேயே மீண்டும் அந்தப் பெரிய சாம்ராஜ்யத்தைப் பார்த்துவிட்டுப் பிராணனை விடுவாள்'' என்று உணர்ச்சியுடன் கூறினாள்.

zeevaa

தனது மூதாதைகளின் வெற்றிக்கு ஏதோ தெய்வபலம் காரணம் என்று தாய் சொன்னதைக் கேட்டு வியப்படைந்த கௌதமிபுத்ரன், "அம்மா, அது எந்த தெய்வம்? எங்கிருக்கிறது?" என்று வினவினான்.

அதுவரை உட்கார்ந்திருந்த மகாராணி பாலஸ்ரீ எழுந்து நின்று கொண்டு, "மகனே! எழுந்து கம்பீரமாக நிற்கும் இந்த ஸஹ்யாத்ரி (மேலை) மலைத் தொடரைப் பார். இங்கிருந்து சற்றுத் தெற்கே கொங்கணத்தின் வழியாகப் போனால் பூமிக்குக் கீழே கோவில்களை உடைய *தாபிலேசுவர் என்ற துறைமுகமிருக்கிறது. இந்தத் துறைமுகத்தில்தான் ஆதிகாலம் தொட்டு அராபியர்களும், யவனர்களும் இதர நாட்டவரும் வந்து வாணிபம் செய்தார்கள். இது முன்பு அமராவதியென அழைக்கப்பட்டது. அங்கு காட்டு ரூபத்தில் தெய்வம் காட்சியளிப்பதாக ஒரு ஐதீகம் உண்டு. இப்பொழுதும் அங்கு பாதாளக் கோவில்கள் பல இருக்கின்றன. ஆனால் தாபிலேசுவரர் கோவில் மலைமீதே இருக்கிறது. அந்த இடத்துக்குப் போ. தாபிலேசுவரரையும் பாதாளத்திலுள்ள சண்டிகா தேவியையும் தரிசித்து வந்து போருக்குப்புறப்படு" என்று ஆவேசத்துடன் கூறினாள்.

தாயின் உத்தரவுப்படி அன்றே புறப்படத் தீர்மானித்தான் கௌதமிபுத்ரன். தனது பெரும் புரவிக்குச் சேணமிட்டுக் கட்டாரியும் வாளும் தரித்து, தாயின் திருவடி தொட்டுப் புறப்பட முயன்ற மகனுக்கு ஓர் எச்சரிக்கையும் விடுத்தாள் பாலஸ்ரீ. "மகனே! நான் சொல்வதை விளையாட்டாக நினைக்காதே. அந்த மலைக் காட்டில் அடிக்கடி பிசாசுகள் உலாவுவதாகக் கேள்வி. எதற்கும் எச்சரிக்கையுடனிரு" என்று கூறினாள்.

★ Dabhileswar or Dabhol port is on the ANJANVEL RIVER. Former Name Amaravati-Maharashtra State Gazetteer on Ratnagiri Dt. Page.97

zeevaa

வியப்பு நிறைந்த விழிகளைத் தாயின்மீது திருப்பிய கௌதமிபுத்ரன், ''என்ன அம்மா! பிசாசா?'' என்று குரலிலும் வியப்பு ஒலிக்க வினவினான்.

''ஆம் மகனே! அங்கு ஏதோ ஒரு மோகினிப் பிசாசு உலாவுவதாகவும், அடிக்கடி அது தரைக்கு மேலே வந்து பூமிக்குள் போய் விடுவதாகவும் வதந்தி இருக்கிறது. அது பொய்யாகவும் இருக்கலாம். எதற்கும் எச்சரிக்கையாக இரு'' என்றாள்.

''இதை நீ நம்புகிறாயா?'' என்றான் கௌதமிபுத்ரன்.

''நான் முதலில் நம்பவில்லை. ஆனால் வதந்தி நாளாக நாளாக வலுக்கிறது. அந்தப் பிசாசுக்கு ஒரு பெயரும் சொல்கிறார்கள்'' என்றாள் பாலஸ்ரீ.

''பெயரா!'' கௌதமிபுத்ரனின் வியப்பு உச்சிக்குச் சென்றது.

''ஆம் மகனே, பெயரும் விசித்திரமாயிருக்கிறது?''

''என்ன பெயர் அம்மா?''

''சித்தரஞ்சனி!''

''ஏதோ ராகத்தின் பெயர் போலிருக்கிறதே?''

''ஆம். அது சில இரவுகளில் அர்த்த ஜாமத்தில் பாடுமாம். அதைப் பாடும் பாவை என்றும் சொல்கிறார்கள்.''

பிரமித்து நின்றான் கௌதமிபுத்ரன். ''அம்மா! அந்தப் பிசாசு அழகாகவும் பாடுவதாகவும் இருந்தால் அதை நான் பிடித்து வருகிறேன்'' என்று கூறி நகைத்துக் கொண்டே புரவிமீது தாவினான்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு அந்த நகைப்பு மறைந்தது. அந்தப் பாடும் பாவையைப் பார்க்கவும் கேட்கவும் செய்தான் கௌதமிபுத்ரன்.

zeevaa

அத்தியாயம் 2

ஊர்ந்து வந்த மேகங்கள்

சித்தரஞ்சனி என்ற மோகினிப் பிசாசைப் பற்றியும் அது அடிக்கடி வெளியே தோன்றி பூமிக்குள் மறைந்து விடுவதைப் பற்றியும் தாய் கூறியதைச் சித்தத்தில் எண்ணி உள்ளூரச் சிரித்தபடியே தாபோல் துறைமுகத்தை நோக்கிப் பயணத்தைப் பிரதிஷ்டானாவிலிருந்து துவங்கிய கௌதமிபுத்ர சதகர்ணி, இரண்டு நாட்கள் இடைவிடாமல் இரவும் பகலும் பயணம் செய்து மூன்றாவது நாள் காலையில் தாபோல் துறைமுகத்துக்குச் சற்று முன்பிருந்த மலைக்காட்டுக் குடிசைக் கூட்டமொன்றுக்கு வந்து சேர்ந்தபோது, தாபோல் மலையை நெருங்க நெருங்க ஊர்களில் ஜன நடமாட்டம் குறைந்து வந்ததையும் கடைசியாகத் தோன்றிய குடிசைக் கூட்டத்தில் குடிசைகள் அதிகமிருந்தாலும் குடிசைகள் யாருமில்லாமல் வெறித்துக் கிடந்ததையும் கவனித்து அந்த நிலைமைக்குக் காரணம் எதுவாயிருக்கும் என்று உள்ளூர வினாவொன்றையும் எழுப்பிக்கொண்டு, புரவியை மலைச் சரிவிலேயே சிறிது நிறுத்தி அந்தக் குடிசைக் கூட்டத்தின் மீது தனது ஆராய்ச்சிக் கண்களை ஓடவிட்டான். அங்கிருந்த குடிசைக் கூட்டத்தில் அரவம் ஏதுமில்லாததையும் தனது புரவியின் குளம்படிகளைக் கேட்டதால் சற்று எட்ட இருந்து இரண்டு குடிசைகளிலிருந்து இரண்டு பூனைகளும், சில நரிகளும் வெளியே ஓடியதையும் கண்டான். காட்டு மரங்களிலிருந்து பறவைகள் சிலவும் சிறகடித்து மேலே

zeevaa

பறந்ததையும் ஆனால் மனிதர் யாரும் தலை காட்டாததையும் கவனித்து, சிறிது நேரம் நின்ற கௌதமிபுத்ரன் அந்தக் குடிசைகளில் சற்றுப் பெரிதாயிருந்த குடிசையை நோக்கிப் புரவியைச் செலுத்தி, ''யாரங்கே?'' என்று இரைந்து குரல் கொடுத்தான்.

அவன் குரல் மலையில் எதிரொலி செய்ததேயொழிய யாரும் நீண்ட நேரம் பதில் கொடுக்காததால் புரவியை எதிரே தெரிந்த மலையை நோக்கித் திருப்ப முயன்ற சமயத்தில் குடிசை வாயிலைத் திறந்து வந்த ஒரு வயோதிகன், ''யார் வேண்டும் உனக்கு?'' என்று கௌதமிபுத்ரனை நோக்கி வினாவொன்றை வீசினான். அந்த வினாவில் வரவேற்பில்லை, மகிழ்ச்சியில்லை. வெறுப்பும் வருத்தமும் கலந்து கிடந்தன.

கௌதமிபுத்ரன் தனது புரவியில் இருந்த வண்ணமே திரும்பி அவனை நோக்கி, ''நீண்ட தூரத்திலிருந்து வருகிறேன். *தாப்யாவுக்குப் போகப் பாதை எது என்று தெரியவேண்டும்'' என்று மெதுவாக பதில் சொன்னான்.

வயோதிகன் முகத்தில் வருத்தத்தின் சாயை பூர்ணமாகப் படர்ந்ததாலும், புருவங்கள் மேலே ஏறியதாலும் அவன் நெற்றியில் தீட்டியிருந்த சந்தனக் கோடுகள் சிறிது சுருங்கின. ''அங்கு நீ எதற்காகப் போக வேண்டும்?'' என்று வினவினான் அந்த வயோதிகன் வருத்தம் குரலிலும் ஒலிக்க.

''தாபிலேசுவரரைத் தரிசிக்க வந்திருக்கிறேன்'' என்று கூறிய கௌதமிபுத்ரன் புரவியிலிருந்து கீழே இறங்கினான்.

அவனை ஏற இறங்கப் பார்த்த அந்த வயோதிகன் தனது மீசை தாடிகளையும் சடைபோட்டுத் தொங்கிய தலைக்

★ தாபிலாவதி என்ற புராணப் பெயரிலிருந்து மருவி வந்தது தாபோல் அல்லது தாப்யா.

zeevaa

குழலையும் ஒருமுறை தடவி விட்டுக்கொண்டு, ''தாபிலேசுவரரை எதற்காகத் தரிசிக்க வேண்டும்?'' என்று வினாவினான் வெறுப்பு துலங்கிய குரலில்.

''ஆண்டவனைத் தரிசிக்கக் காரணம் வேண்டுமா?'' கௌதமிபுத்ரன் வியப்புடன் வினவினான்.

''ஆம், இப்பொழுது வேண்டும். தாபிலேசுவரரை நம்பியிருந்த இந்த மலைக்குடிசைகளில் இருந்தவர் ஓடி விட்டார்கள். சென்ற ஆறு மாதங்களாகச் சுற்றுப்புறக் கிராமங்களில் யாரும் கிடையாது'' என்றான் வயோதிகன்.

கௌதமிபுத்ரன் மேலும் பேச்சுக்கொடுத்து, ''தாபிலேசு வரருக்குப் பிரசாதம்?'' என்று கேட்டான்.

''உச்சிக் காலத்தில் மட்டும் நான் சென்று அபிஷேகம் செய்துவிட்டுச் சிறிது பிரசாதம் சமர்ப்பித்துவிட்டு வருகிறேன். அதை நான் சாப்பிட்டுக் காலம் கழிக்கிறேன்.''

''எல்லோரும் ஓடிவிட்ட பிறகு நீர் மட்டும் ஏன் இங்கு தங்கியிருக்கிறீர்?''

''நான் தாபிலேசுவரர் ஆலயத்தின் பரம்பரை பூஜாரி. எனது தந்தை கோயிலை என் கழுத்தில் கட்டி விட்டார். கோயிலைவிட்டு ஓட மனம் வரவில்லை. தவிர வாழ்க்கையிலும் எனக்கு ஆசையில்லை. அந்தப் பிசாசு அடித்துப் போட்டாலும் போடட்டும் என்றிருக்கிறேன். அந்தச் சனியன் பிடித்த பிசாசு என்னை அடிக்க மறுக்கிறது.''

''பிசாசா!'' என்று ஏதுமறியாததைப் போல் கேட்டான் கௌதமிபுத்ரன்.

வயோதிகன் முகத்தில் வியப்பு தோன்றியது. ''அதைப் பற்றி உனக்கு எதுவுமே தெரியாதா?'' என்று விசாரித்தான் வயோதிகன் வியப்பு குரலிலும் துலங்க.

zeevaa

''தெரியாது'' இதை சர்வசாதாரணமாய்ச் சொன்னான். கௌதமிபுத்ரன்.

''தாப்யா மலையில் ஒரு மோகினிப் பிசாசு உலாவுகிறது. நள்ளிரவில் பாடுகிறது. அந்தப் பாட்டைக் கேட்டவர் சித்தம் மயங்கிவிடுகிறது. அப்படியே சுரணையற்று விழுந்து விடுகிறார்கள். இரண்டொருவரை நான் எடுத்துவந்து சிகிச்சை செய்திருக்கிறேன். சிலர் என்ன ஆனார்களென்று தெரியவில்லை. அந்த மலைக்காட்டுக்குள் நுழைந்தவர்கள் மறைந்துவிட்டார்கள். திரும்பவில்லை'' என்று சொன்ன வயோதிகன், ''நீ அவசியம் தாபிலேசுவரரைத் தரிசிக்கத் தான் வேண்டுமா?'' என்று வினவினான்.

''ஆம்''

''அப்படியானால் இங்கே பக்கத்தில் அருவியிருக்கிறது. அதில் நீராடிவிட்டு வா, உச்சிக் காலத்தில் போவோம்.''

''நான் இப்பொழுதே போகிறேன். உச்சிக் காலத்தில் உங்களைக் கோயிலில் சந்திக்கிறேன்'' என்று தனது புரவியில் ஏறச்சென்ற கௌதமிபுத்ரனை வயோதிகன் தடுத்து, ''மகனே! நீ சிறியவன். இளங்கன்று பயமறியாது என்ற மூதுரைக்கு நீ சிறந்த சான்று. ஆனால் தனியாகப் போவது உசிதமல்ல'' என்றார்.

ஆனால் அச்சமென்பதை அறவே அறியாத கௌதமி புத்ரன், ''பூஜ்யரே! தங்களை நான் தாபிலேசுவரர் சந்நிதியில் சந்திக்கிறேன்'' என்று கூறிவிட்டுப் புரவிமீது தாவி அதைத் தாபோல் மலைக்காட்டுப் பாதையில் நடத்தினான். சற்றுத் தூரத்திற்கெல்லாம் கண்ணுக்குத் தெரிந்த தாபோல் துறைமுகம் கண்ணைப் பறிக்கும் அழகுடன் விளங்கியது.

ஸஹ்யாத்ரி மலைத்தொடரின் ஒரு பகுதியும், நைமி சாரண்யம் போல் கடவுளே காடாக அமைத்துவிட்டதாக ஐதீகமுள்ள அந்தத் தாபோல் துறைமுகக் காடு மிக

zeevaa

அடர்த்தியாயிருந்ததன்றிப் பெரும் மரங்களுடனும் புஷ்பச் செடி கொடிகளால் நிரம்பியதாகவும் காணப்பட்டதால் சில இடங்களில் புரவிமீது படுத்த வண்ணமே புஷ்பச்செடிகள் உடலில் உராயப் பயணம் செய்த கௌதமிபுத்ரன் மலைச்சரிவில் ஒதுக்குப்புறமாயிருந்த தாபிலேசுவரரின் சிறு கோவிலைக் கண்டான். அந்தக் கோவிலில் சிறு முகப்பு மண்டபத் தூண் ஒன்றில் புரவியைக் கட்டிவிட்டுச் சுற்று முற்றும் கண்களை ஓடவிட்டான்.

உயர்ந்து வானளாவிய மலைகளுக்கிடையில் வாசிஷ்டி நதியென்றும் தெற்குப் புறத்திலிருந்த அஞ்சன்வேல் கோட்டையின் காரணமாக அஞ்சன்வேல் நதியென்றும் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற புண்ய நதியின் வடக்குப் பகுதியிலிருந்த துறைமுகத்தின் மீது தாக்கிய கடலலைகள் காலை வெயிலில் வெள்ளிப் பாளங்களைப் போல் காட்சி யளித்தன. வாசிஷ்டி நதியும் பச்சிமக் கடலில் (அரபிக் கடலில்) வேகமாகப் பாய்ந்து கலந்த காட்சி, யுவதியொருத்தி காதலனை அணுகும் ஆத்திரத்தைப் புலப்படுத்தியது. அந்த நதி மலைச்சரிவிலிருந்து உதிர்ந்த புஷ்பங்களைத் தனது நீரில் சுழலவிட்டு மலர்க் கிரீடங்களைச் சமைத்துக்கொண்டது தனி அழகை அந்த ஆற்றுக்கு ஏற்படுத்தியது. தவிர தாபோல் மலைக்காட்டிலிருந்த விருட்சங்கள் லேசாகக் காற்றில் அசைந்ததால் வண்ணமலர்களும் காய்ந்த சருகுகளும் சேர்ந்து விழுந்து வாழ்க்கை புஷ்பிப்பதோடு காயவும் செய்யும் என்ற தத்துவத்தை விளக்கின. இந்த அழகையெல்லாம் நீண்ட நேரம் பார்த்துக்கொண்டு நின்ற கௌதமிபுத்ரன் மலைச் சரிவில் இறங்கிச் சென்று வாசிஷ்டி நதியில் நீராடிப் புரவியில் தொங்கவிட்டிருந்த மான்தோல் பையிலிருந்து புத்துடை அணிந்து பையில் எப்பொழுதுமிருந்த சந்தனத்தையும் நெற்றியில் தீட்டிக்கொண்டான். பிறகு நதியில் மீண்டுமொரு முறை இறங்கிக் காலைக் கடனை முடித்துக்கொண்டு

zeevaa

கோவிலுக்கு வந்து பத்மாசனம் போட்டுக்கொண்டு பிராணா யாமம் செய்தான். அவன் அனுஷ்டானங்கள் முடிவதற்கும் உச்சிக்காலம் வருவதற்கும், நேரம் சரியாயிருந்ததால் வயோதிக பூஜாரியும் கோவிலுக்கு வந்து சேர்ந்தார். கோவிலுக்குக் கதவு ஏதுமில்லாதிருந்ததால் அவர் நேராக உள்ளே சென்று அங்கிருந்த செப்புக்குடமொன்றை எடுத்து வந்து ஆற்றிலிருந்து நீர் மொண்டு வந்து சுவாமிக்கு அபிஷேகம் செய்தார். பிறகு தான் கொண்டு வந்த மூட்டையிலிருந்த பிரசாதத்தைச் சுவாமிக்கு நிவேதனம் செய்தார். அதை கௌதமிபுத்ரனுக்கும் கொடுத்துத் தாமும் உண்டு விட்டுக் குடத்தில் மீதியிருந்த நீரை அந்த வாலிபனுக்கும் கொடுத்துத் தாமும் அருந்தினார். பிறகு மிகுந்த களைப்பினால் அப்படியே கோவில் வாயிலில் படுத்தார். ''குழந்தாய்! இன்னும் நான்கு நாழிகைகள் நாம் இங்கு இருக்கலாம். பிறகு புறப்படுவோம்'' என்று சொன்னார்.

''எங்கு சுவாமி?'' என்று பயபக்தியுடன் கேட்டான் வாலிபன்.

''எனது குடிசைக்கு'' இதைத் திட்டமாகச் சொன்னார் பூஜாரி.

''நான் வரவில்லை!'' என்று பணிவுடன் கூறினான் கௌதமிபுத்ரன்.

''ஏன்?''

''ஒரு நள்ளிரவு சந்நிதியில் படுக்க வேண்டுமென்று எனது தாய் சொல்லியிருக்கிறாள்.''

''இரவு இங்கு படுக்க வேண்டுமா?''

''ஆம். அப்படித்தான் பிரார்த்தனை.''

''அந்தப் பிரார்த்தனையை விட்டுவிடு.''

zeevaa

''பிரார்த்தனையை எப்படி விட முடியும்?''

''ஒன்று பிரார்த்தனையை விடவேண்டும் அல்லது பிராணனை விடவேண்டும். எதைச் செய்யப்போகிறாய்?''

''சுவாமி! நான் என்றும் உயிருக்குப் பயந்தது கிடையாது. தவிர பிரார்த்தனை இத்துடன் முடியவில்லை.''

''வேறு என்ன பிரார்த்தனையோ?''

''சண்டிகாதேவியைத் தரிசிக்க வேண்டும்.''

இதைக் கேட்டதும் படுத்திருந்த பூஜாரி சரேலென எழுந்திருந்து அவனை நோக்கினார். ''உனக்குப் பைத்தியம் ஏதுமில்லையே?'' என்றார்.

''இல்லை ஏன்?'' என்று வினவினான் கௌதமிபுத்ரன்.

''சண்டிகாதேவி ஆலயம் பாதாளத்திலிருக்கிறது'' என்றார் பூஜாரி.

''இருந்தாலென்ன?''

''அதை, சித்தரஞ்சனியும் தரிசிக்கிறாள் ஒவ்வொரு நாளும் நள்ளிரவில்.''

''மோகினியா?''

''ஆம்.''

''மோகினியை நான் பார்க்கிறேன்!''

''பார்க்கலாம். பிழைக்க மாட்டாய்'' என்று எச்சரித்தார் பூஜாரி.

''ஏன் பிழைக்கமாட்டேன்? என்னை என்ன செய்து விடும் மோகினிப் பிசாசு?'' என்று கேட்டான் கௌதமிபுத்ரன் புன்முறுவலுடன்.

''உன்னை முறித்துப் போட்டுவிடும்'' என்றார் பூஜாரி.

zeevaa

அவர் அச்சுறுத்த அச்சுறுத்த அந்தப் பிசாசைப் பார்த்துவிடுவது என்று தீர்மானம் செய்துகொண்டான் சாதவாகன வாலிபன். அவன் பிடிவாதத்தைப் பார்த்த பூஜாரி தனது மடியிலிருந்து விபூதியை எடுத்துக்கொடுத்து, ''உன்னைத் தாபிலேசுவரன் காக்கட்டும்'' என்று கூறிச் சென்றார். போகும்போது உள்ளூரச் சொல்லிக்கொண்டார், ''நாளை உனது சடலத்தை எடுத்துச் செல்ல வருகிறேன்'' என்று.

மாலை மெள்ள மெள்ள முற்றியது. மலையும் கடலும் நதியும் இணைந்த மாலை நேரக்காட்சி மனோகர மாயிருந்தது. அதைப் பார்த்துப் பரவசப்பட்டான் அந்த வாலிபன், ''நள்ளிரவு வரட்டும். அந்த மோகினியைப் பார்க்கிறேன்'' என்று உற்சாகத்துடன் காலத்தை ஓட்டினான் அவன்.

இரவும் முற்றியது. கடல் அலைகள் மீது மேகங்கள் ஊர்ந்து வந்து விண்ணை நோக்கிச் சென்றன.

zeevaa

அத்தியாயம் 3

அவன் அதிர்ஷ்டம்

இரவு முற்ற முற்ற, சுக்ல பட்ச நான்காம் பிறைச்சந்திரனின் அற்ப ஒளியையும், கடல்மீது ஊர்ந்து வந்த மேகங்கள் மறைத்துவிட்டன.

அது காரணமாக, இலேசாகப் பளிச்சிட்ட கடல் அலைகள் கருப்பு மயமாகி ஒரு பயங்கரத்தை நிறுவி விட்டதாலும், அப்படி அடுக்கு அடுக்காக வந்த மேகங்கள் கடலிலிருந்து விண்ணை நோக்கிக் கிளம்பித்திரண்டு, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஒரு தூணை சிருஷ்டித்து விட்டதாலும், ஏதோ உற்பாதம் நிகழப் போவதற்கு அத்தாட்சியைச் சுட்டிக் காட்டியதாலும், தாபிலேசுவரர் மண்டபத் தூணில் சாய்ந்து உட்கார்ந்திருந்த கௌதமிபுத்ரன் சிறிதும் கலங்கினா னில்லை. பிசாசைப் பற்றிய கதைக்கும் மேகங்கள் விளை வித்த தூணுக்கும் மேலைக்கடலைப்பற்றி விஷயமறியா தவர்கள் ஏதாவது முடிச்சுப் போட்டு அதுவும் பிசாசின் வேலையாயிருக்குமென்று பயந்தாலும் மேலைக்கடலில் பலமுறை பயணம் செய்தவனான அந்த வாலிபன், 'இப்படி மேகம் திரளுவதும் திடீர் மழை பெய்வதும், இடிகள் மலையைத் தாக்கித் திக்பிரமையடையச் செய்வதும் மலைக் கடலோரப் பகுதிகளின் இயற்கை. இதைப்பற்றி அச்சப்பட ஏதுமில்லை' என்று மனத்தில் சொல்லிக்கொண்டான். "பிசாசென்பது மனப்பிரமை. மனிதனைவிடப் பெரிய பிசாசு

zeevaa

zeevaa

எங்கிருக்க முடியும்?'' என்றும் தன்னைக் கேட்டுக்கொண்டு நள்ளிரவை எதிர்பார்த்திருந்தான்.

நள்ளிரவு நெருங்குவதற்கு நான்கைந்து நாழிகைகளுக்கு முன்பாகவே கடலில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டு, அலைகள் பனை மர உயரத்துக்குக் கிளம்பி, மலைச்சரிவுப் பாறைகளில் வேகமாக மோதத் தொடங்கியதன் விளைவாக, பேரிரைச்சல் கொண்ட பயங்கரச் சூழ்நிலை அந்தப் பகுதியில் உருவாகிக்கொண்டிருந்ததால், கௌதமிபுத்ரன் தனது புரவியை ஆலயத்தின் உட்புறத்தூணொன்றில் பிணைத் தாலும், அந்தப் புரவியும் வெளியே எட்டிப் பார்த்துப் பெரிதாகக் கர்ஜனை செய்தது. திடீரெனப் பெருங்காற்று ஒன்று கிளம்பி மரங்களைப் பேயாட்டம் ஆட்டினாலும் அந்த உறுதியான மரக்கிளைகளில் ஒன்று கூட விழவில்லை யென்றாலும், மரத்தின் இலைகளும் புஷ்பங்களும் ஏராளமாக உதிர்ந்து, மலைத்தரையை புஷ்ப வேலை செய்யப்பட்ட கம்பளமாக அடித்திருந்தது. மரங்களின் அந்தப் பேயாட்டத்தைக் கவனித்த கௌதமிபுத்ரன் அதைப்பற்றி எந்த அக்கறையும் காட்டாமல் கோவிலுக்கு வெளியிலேயே நின்று ஆகாயத்தை நோக்கினாலும் ஆகாயத்தில் நக்ஷத்திர மேதுமில்லாததாலும் கருமேகம் மூடியிருந்ததாலும் நாழிகை களைக் கணக்கிட முடியாததால் 'நள்ளிரவு வந்திருக்குமா?' என்று சிந்தித்தான். எப்படியும் நள்ளிரவு நிகழ்ச்சியைக் கவனித்து மோகினியின் மாயக்கதையை உடைக்க வேண்டுமென்று தீர்மானத்துடன் தாபிலேசுவரர் முகப்பு மண்டபத்திலே உட்கார்ந்திருந்தான், காலைக் கீழே தொங்கவிட்டு ஆட்டிய வண்ணம்.

நாழிகைகள் ஓடினவேயொழிய, இருளையும், காற்றையும், கடலலைகளின் இரைச்சலையும், தவிர வேறு எந்த மாற்றமும் இல்லாததால், 'ஒருவேளை நான் வருகிறேனென்று தெரிந்த

zeevaa

பிசாசு வரவில்லையோ? என்னிடம் பிசாசே பயப்படுகிற தென்றால் சாகர்கள் பயப்படாதிருக்க முடியுமா?' என்று தனது நிலையைப் பற்றியும் நினைத்துப் புன்முறுவல் கொண்டான். அப்படி அவன் நினைத்துக்கொண்டிருக் கையிலே ஊழிக்காற்று ஒன்று 'ஊ' என்று ஊதிக்கொண்டு வாசிஷ்டி நதிப்பகுதியிலிருந்து எழுந்தது. பெரிதாக வானில் இடித்த பேரிடியொன்றை அடுத்து, கண்ணைப் பறிக்கும் மின்னலொன்றும் அந்த வனப்பகுதியின் இருளைக் கிழித்தது.

மின்னலை மட்டும் அவன் கண்டிருந்தால் அத்தனை அதிர்ச்சியடைந்திருக்க மாட்டான். அவன் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து முப்பது அடி தள்ளியிருந்த ஒரு சிறு பாறைமீது வெள்ளை வெளேரென ஒரு பெண்ணுருவம் நின்று கொண்டிருந்தது அவன் கண்களுக்குப் புலனாயிற்று. திடீரெனப் பளிச்சிட்ட மின்னல் கண்ணிமைக்கும் நேரத்தில் நீங்கிவிட்டதால் அந்தப் பெண்ணுருவமும் மறைந்து விட்டது. அடுத்து ஒரு பெரிய இடி வானத்தே இடித்தது. அதை அடுத்து இன்னொரு இடியும் பெரிதாக இடித்து மலைச்சாரலில் எதிரொலி செய்யுமுன்பாக மற்றுமொரு முறை ஏற்பட்ட மின்னலில் அந்தப் பாறையைக் கூர்ந்து நோக்கினான் கௌதமிபுத்ரன். அந்தப் பாறையில் பாதி தூரம் பூமிக்குள் இறங்கியிருந்த அந்தப் பெண்ணுருவம் இடுப்பு வரையிலுமே தெரிந்தது. அந்த வாலிபன் அடுத்து மற்றொரு மின்னலுக் காகக் காத்திராமல் அந்தப் பாறையை நோக்கி ஓடினான். அந்த இடத்தை அவன் அடைந்தபோது அங்கு அந்த மலைப்பாறையே இருந்தது. பாறையைக் காலால் உதைத்துப் பார்த்த கௌதமி புத்ரன் அங்கு எந்த மாறுதலுமில்லா ததையும் மின்னலில் தோன்றிய மின்னல் கொடி சுவடு தெரியாமல் மறைந்து விட்டதையும் உணர்ந்து, பெரும் குழப்பத்துடன் மண்டபத்தை நோக்கித் திரும்புகையில் வானத்திலிருந்து பெரும் தூறல்கள் மலைச்சரிவின் மீது

zeevaa

சடசடவென விழவே மண்டபத்தை நோக்கி விரைந்தவன் என்றுமில்லாத குழப்பத்துடன் பழையபடி ஆலயத்தூணில் சாய்ந்து உட்கார்ந்தும் கொண்டான்.

அவன் சிந்தனை பலவிதமாக ஓடிக்கொண்டிருந்ததால் தாபிலேசுவரர் ஆலயத் தூணிலேயே தனது தலையைப் புரட்டிய வண்ணம் உறக்கம் பிடிக்காமல் மோகினி மறைந்த இடத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். பிசாசுகளைப் பற்றி அவனுக்கு அடியோடு நம்பிக்கையில்லையென்றாலும் தனது கண்ணால் கண்டதைப் புறக்கணிக்க முடியாமல் திண்டாடினான். ‘அப்படியொன்றும் நான் மனப்பிரமை பிடித்தவனல்லவே? பெண்ணைப் பார்க்கத் தானே செய்தேன்’ என்று தன்னைத்தானே கேட்டும் கொண்டான். எப்படியும் அந்த மாயத்துக்கு விடை கண்டுபிடிக்காமல் ஊருக்குத் திரும்புவதில்லையென்று சங்கல்பமும் செய்து கொண்டு கண்களை லேசாக மூடினான். மூடிய கண்களைத் திடீரெனத் திறக்க வைத்தது மெல்லிய ஒலியொன்று. அது என்னவாயிருக்கும் என்று அவன் நினைத்துக் கொண்டிருக்கையிலேயே சுண்டிவிடப்பட்ட வீணையின் நாதத்தைப் போன்ற ஒரு மெல்லிய நாதம் தாபிலேசுவரர் கோவிலை நாடி வந்தது. அதிக உச்சத்துக்கும் போகாமல் அதிகமாகக் கீழேயும் போகாமல் ஸப்தஸ்வரங்களுக்கிடையே மாறி மாறி இழைத்த அந்தக் கீதம் அவன் சித்தத்தைப் பெரிதும் பாதித்தது. எந்தவிதமான கரகரப்போ பிசிறோ இல்லாமல் இழைந்து, காற்றிலே மிதந்து வந்த அந்த இசையின் மென்மை, சித்தத்தை மட்டுமின்றி அவன் ஆத்மாவிலும் பாய்ந்ததால் அதில் லயித்துக்கிடந்தான் கௌதமிபுத்ர சதகர்ணி. இப்படி சுமார் மூன்று நாழிகைகளுக்குமேல் அந்த மலைக் கோட்டையையே மயக்கிவிட்ட அந்த இசையினால் மெய்மறந்த அந்த வாலிபனும் அதன் இனிமையில் உணர்ச்சிகள் சுழலக் கண்களை மூடி நித்திரை வசப்பட்டான்.

zeevaa

அவன் கண் விழித்தபோது அருணனின் கிரணங்களால் கடல் செவ்விய ஆடையை அணிந்திருந்தது. அலைகள் முந்திய இரவின் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு அதிக சலனமில்லாமல் மெல்லிய அலைகளை மலையடிவாரத்துக்கு அனுப்பிக் கொண்டிருந்தது. கடலில் கலந்த வாசிஷ்டி நதியும் இரவு சங்கமத்தால் சளைத்த பெண்ணைப்போல மந்தகதியுடன் கடலில் பாய்ந்து கொண்டிருந்தது. ஒரு பெரிய சுழல் காற்று, இடி, மின்னல், மழை, பிறகு களைப்பு, அமைதி; இயற்கையின் இந்த நியதி சிருஷ்டியில் யாரை எதை விட்டது என்று நினைத்த கௌதமிபுத்ரன் முதல்நாள் இரவின் நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே உட்கார்ந்த நிலையிலிருந்து எழுந்து நின்றான்.

கையில் ஒரு சிறு மூட்டையுடன் வேகமாக வந்து கொண்டிருந்த தாபிலேசுவரர் கோவில் பூஜாரி கோவிலை அணுகுமுன்பாகச் சற்று எட்டவே நின்று சந்நிதிக்கு முன்பாக நின்று கொண்டிருந்த கௌதமிபுத்ரனைப் பார்த்துப் பெரும் பிரமிப்படைந்தார். அவர் பிரமிப்புக்குக் காரணத்தைப் புரிந்து கொண்ட கௌதமிபுத்ரன் லேசாக நகைத்து, "வாருங்கள், அஞ்ச வேண்டாம். நான் சாகவில்லை" என்று அழைப்பு விடுத்தான்.

அவன் அழைப்பை ஏற்று அருகில் வந்த பூஜாரி. "அதிசயம், அதிசயம்" என்று சொற்களை உதிர்த்தார் கௌதமிபுத்ரனை நோக்கி.

"என்ன அதிசயம்?" கௌதமிபுத்ரன் கேட்டான் அவர் வியப்புக்குக் காரணத்தை அறிந்து.

"நீ உயிருடனிருக்கிறாய்" என்றார் பூஜாரி.

"தங்களை ஏமாற்றியதற்கு வருந்துகிறேன்" என்றான் கௌதமிபுத்ரன் லேசாக நகைத்து.

zeevaa

''இது நகைப்புக்குள்ள விஷயமில்லை'' என்று பூஜாரி கடிந்து கொண்டார்.

''ஏன் நான் உயிருடனிருப்பது உங்களுக்கு இஷ்ட மில்லையா?''

''என் இஷ்டம் இருக்கட்டும் ஒருபக்கம். நீ உயிருட னிருப்பது தெரிந்திருந்தால் நான் இத்தனை சீக்கிரம் வந்திருக்க மாட்டேன். நடுப்பகலில் வந்திருப்பேன்!''

''ஏன்?''

''இந்தா இதைப்பார்'' என்று பூஜாரி தமது மூட்டையி லிருந்த சாமக்கிரியைகளை எடுத்து மண்டபத்தரையில் வைத்தார். அதில் தர்ப்பம், எள்ளு, அரிசி, சிறுசட்டி இத்தனையும் இருப்பதைப் பார்த்துத் தனது ஈமக்கிரியைக்குச் சாமான்களை அவர் கொண்டு வந்து விட்டதைப் பார்த்துச் சற்று பெரிதாகவே சிரித்தான் கௌதமிபுத்ரன்.

''வாலிபனே! சிரிக்காதே. ஏதோ உன் நல்ல காலம் நேற்று மோகினி வரவில்லை...'' என்று இழுத்தார்.

''யார் சொன்னது?''

''நான் சொல்கிறேன். வராததற்கு ருசு நீதான்?''

''நானா?''

''ஆம். வந்திருந்தால் நீ எப்படி உயிருடனிருப்பாய்?''

''பூஜ்யரே! நேற்று அந்த மோகினி வந்தது'' என்று சிறிது உறுதியாகச் சொன்னான் அந்த வாலிபன்.

''வந்ததா!'' பூஜாரி சந்தேகத்துடன் பார்த்தார் வாலிபனை.

''வந்தது. நான் பார்த்தேன்'' அழுத்தந்திருத்தமாகச் சொன்னான் கௌதமிபுத்ரன்.

''நீயே பார்த்தாயா?''

zeevaa

''ஆம்''

''எப்பொழுது?''

''நள்ளிரவில் வானம் மின்னியபோது''

''எங்கே?''

''அதோ அந்தப் பாறைமீது'' என்று எட்ட இருந்த இடத்தைச் சுட்டிக்காட்டினான்.

''அடுத்து என்ன நடந்தது?''

''மறுபடியும் மின்னியது.''

''அப்பொழுது?''

''மோகினியின் உடல் பகுதி தெரிந்தது. மீதிப் பாதி மறைந்துவிட்டது பூமிக்குள்.''

''அதையும் பார்த்தாய்?''

''ஆம்''

பூஜாரி சந்தேகப் பார்வையாக அவனைப் பார்த்தார். ''அந்தப் பிசாசைப் பிடிப்பதுதானே?'' என்று கேட்டார்.

''பிடிக்கத்தான் போனேன். அதற்குள் மறைந்து விட்டது.''

''பிறகு என்ன நடந்தது?'' என்று பூஜாரி கேட்டார்.

''பிறகு திடீரென ஒரு சித்தத்தை மயக்கும் சங்கீதம் கேட்டது. அப்படியே தூங்கி விட்டேன்'' என்றான் கௌதமிபுத்ரன்.

''தூங்கும்போது யாரும் உன் கழுத்தைப் பிடிக்கவில்லை?'' என்று விசாரித்தார் பூஜாரி.

''இல்லை'' என்றான் கௌதமிபுத்ரன்.

பூஜாரி ஏதும் புரியாமல் திகைத்து உட்கார்ந்து விட்டார். பிறகு கௌதமிபுத்ரனுக்காகக் கொண்டு வந்திருந்த சடங்குச்

zeevaa

சாமான்களை மறுபடியும் எடுத்துக்கட்டி வைத்துவிட்டு நடுப்பகல் வருவதாகச் சொல்லிப் போனார். நடுப்பகலில் வழக்கம்போல் வந்து சுவாமிக்கு அபிஷேகம் செய்து நைவேத்யம் முடித்து, பிரசாதத்தைத் தானும் உண்டு வாலிபனுக்கும் கொடுத்தார்.

இருவரும் உணவருந்தி முடிந்ததும் பூஜாரி சொன்னார். ''அப்பனே! நேற்று தாபிலேசுவரர் கோவிலில் படுத்துத் தாயின் பிரார்த்தனையை நிறைவேற்றிவிட்டாய். இனி நீ கிளம்பு. தாய்க்குப் பிள்ளையாக ஊருக்குப் போய்ச் சேர்'' என்று கெஞ்சினார்.

கௌதமிபுத்ரன் அதற்கு இணங்கவில்லை. ''இன்னொரு பிரார்த்தனை இருக்கிறதே'' என்றான்.

''அது என்ன?''

''சண்டிகாதேவியைத் தரிசிக்க வேண்டும்.''

''அது இன்னும் ஆறு மாதங்களுக்கு முடியாது. அந்தப் பாதாளக் கோவிலை இப்பொழுதுதான் மூடினார்கள். அடுத்து திறக்க ஆறு மாதம் ஆகும்'' என்றார் பூஜாரி.

''இடத்தைக் காட்டுங்கள். நான் போய்த் தரிசித்து வருகிறேன்'' என்று சாதவாகன நம்பி பிடிவாதம் பிடித்தான்.

பூஜாரி அவனைக் கடுமையுடனும் கருணையுடனும் நோக்கினார். ''நேற்று அதிர்ஷ்டம் என்றும் நீடிக்குமென்று நினைக்காதே. பேசாமல் ஊருக்குப் புறப்படு'' என்றும் சொன்னார்.

''இன்றிரவு மோகினி வருகிறாளா பார்க்கிறேன்'' என்றான் கௌதமிபுத்ரன்.

''விஷப் பரீட்சை செய்யாதே'' என்றார் பூஜாரி.

zeevaa

அவர் சொன்னதைக் கேட்கவில்லை கௌதமிபுத்ரன். அன்றும் தாபிலேசுவரர் கோவிலில் தங்கினான். இரவு நீண்ட நேரம் கழித்து உறங்கினான் மண்டபத்தில். நள்ளிரவில் சங்கீதம் ஒலித்தது. முதல்நாள் போல்! எழுந்திருக்க முயன்றான். முடியவில்லை. அவன் கழுத்தை வலிய மெல்லிய கையொன்று இறுக்கிக் கொண்டிருந்தது. கால்களில் ஏதோ தளைகள் மாட்டப்பட்டிருந்தது போன்ற ஒரு பிரமை! மூச்சுவிடுவதுகூடச் சிறிது கஷ்டமாயிருந்தது அவனுக்கு. அதிர்ஷ்டம் நீடிக்காது என்று பூஜாரி சொன்ன சொற்கள் அவன் காதில் ஒலித்தன.

zeevaa

அத்தியாயம் 4

வெண்ணிற மோகினி! விளைந்த விபரீதம்!

காரிருள் எங்கும் சூழ்ந்திருந்த நிலையில், கால்களுக்கும் தளைகள் பூட்டப்பட்டதாக ஏற்பட்ட பிரமையில், கழுத்தையும் யாரோ இறுகப் பிடித்த சமயத்திலும் சிறிது சிந்தனையை ஓட்டிய கௌதமிபுத்ரன், கழுத்தைப் பிடித்த கைகளின் மெல்லிய விரல்கள் ஓரளவுக்குமேல் நெரிக்க முயலாததையும், மெல்லிய விரல்களில் வலுவிருந்தும், அந்த வலுவோடு ஒரு மென்மையும் கலந்திருந்ததையும் எண்ணிப் பார்த்து, கழுத்தைப் பிடித்தது யாராயிருந்தாலும் தன்னைக் கொல்ல இஷ்டப்படவில்லையென் பதைப் புரிந்துகொண்ட தால் சற்று நிதானப்பட்டு மூச்சை மட்டும் நன்றாக இழுத்துப் பிடித்துக் கொண்டான். அத்துடன் கால்களுக்குத் தளையிட்டவர்கள் தனது கைகளைக் கட்டாததையும் நினைத்துப் பார்த்து, தன்னை பயமுறுத்தி ஓடச்செய்வதே அவர்கள் நோக்கமென்பதையும் நிர்ணயித்துக் கொண்டதால் தனது கைகளைச் சட்டென்று இருபுறத்திலும் செயலற்று விழும்படிச் செய்தான். அப்படி அவன் கைகள் செயலற்று விழுந்தவுடன் கழுத்தைப் பிடித்த கைகளிலொன்று கழுத்தை விட்டு அவன் நாசியில் நிலைத்தது ஒரு விநாடி. மூச்சு எதுவும் வராதிருக்கவே சட்டென்று எழுந்த அந்த உருவம் அவன் கால் தளைகளையும் நீக்கிவிட்டு அவனை ஒருமுறை சுற்றி வந்தது. அப்படி அது சுற்றி வந்த சமயத்தில் விசிறிய அதன்

zeevaa

ஆடையிலிருந்து மனோகரமான சுகந்தமொன்று நாசியில் புகுந்ததையும் கவனித்த கௌதமிபுத்ரன் அடுத்து நடப்பதை அறிய அசைவற்றே கிடந்தவண்ணம் ஒரு கண்ணையும் அரைவாசி திறந்து பக்கவாட்டில் பார்வையை ஓடவிட்டான்.

முதல் நாளிரவில் பார்த்த அதே பெண்ணுருவந்தான் கோவில் வாயில் தூணைப் பிடித்துக்கொண்டு சிறிதுநேரம் நின்றது. பிறகு படிகளில் இறங்கிச்சென்று அவன் பார்வையிலிருந்து மறைந்து விட்டது சில விநாடிகள். கௌதமிபுத்ரனைத் தவிர வேறு யாராவது அந்த நிலையில் இருந்தால் உடனடியாக வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்திருந்து அந்தப் பெண்ணைத் தொடர முற்பட்டிருப் பார்கள். ஆனால் அவசரப்பட்டு எதையுமே செய்யாதவனும், நிதானத்தாலும் மிகுந்த சூஷ்மத்தாலும் பெரிய காரியங் களைச் சாதித்திருப்பவனுமான கௌதமிபுத்ரன் இருந்த இடத்தைவிட்டுச் சிறிதும் நகராமலும் அசையாமலும் அப்படியே கிடந்தான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வெளியே யாரோ இரண்டு மூன்று பேர் நடமாடும் சத்தம் கேட்கவே, தனது பக்கத்தில் இருந்த வாளைச் சிறிது தடவிப் பார்த்துக்கொண்ட தன்றித் தனது கச்சையிலிருந்த சிறு கோடாரியையும் சிறிது தளர்த்திக் கொண்டான். அவசியமானால் வேகமாக எடுத்து வீச. ஆனால் எந்தவித அவசியமும் ஏற்படவில்லையென்பதை நீண்ட நேர நிசப்தத்தால் உணர்ந்த கௌதமிபுத்ரன் மெள்ள எழுந்து உட்கார்ந்து சுற்றுமுற்றும் நோக்கினான். வாயிலில் நடமாட்ட சத்தம் நின்றாலும் இருவர் பேசும் ஒலிகள் மட்டும் கேட்டன.

தடித்த ஆண் குரலொன்று கேட்டது. "அவன் இறந்து விட்டானா. இல்லையா?" என்று.

"இல்லை" பெண் குரல் பதிலளித்தது.

zeevaa

''எப்படித் தெரியும் உங்களுக்கு?'' இன்னொரு ஆண் குரல் கேட்டது.

''மூக்கில் கை வைத்துப் பார்த்தேன். மூச்சு வரவில்லை'' பெண் குரல் ஒலித்தது இன்பமாக.

''அப்படியானால் இறந்துதானே இருக்கவேண்டும்?''

''இல்லை. அவனை நான் சுற்றி வந்தபோது கால்களில் லேசாக அசைவிருந்தது. மூச்சை இழுத்துப் பிடித்ததால் அவன் என்னை ஏமாற்றிவிட்டதாக நினைக்கிறான்.''

''அப்படியானால் நாங்கள் அவனை வெட்டிப் போடட்டுமா?''

''அப்படிச் செய்தால் நம்மைப்பற்றிய சந்தேகம் அதிகமாகும்'' என்ற அந்தப் பெண் குரல், ''பயமுறுத்தல் தான் நமது நோக்கமே தவிர கொல்வது நோக்கமில்லை. தவிர இவனைக் கொல்வதும் அவ்வளவு சுலபமல்லவென்று நினைக்கிறேன்'' என்றும் கூறிற்று.

''ஏன் சுலபமல்ல? அத்தனை பெரிய வீரனா அவன்?'' என்று வினவியது முதலில் பேசிய ஆண் குரல்.

உடனடியாகப் பெண் குரல் ஒலிக்கவில்லை. நீண்ட மௌனத்துக்குப் பிறகு பேசியபோது அதன் குரலில் ஒரு கௌரவம் தெரிந்தது. ''உள்ளே படுத்திருப்பவன் இங்கு வந்து இரண்டு நாளாயிற்று. இரண்டு நாளும் இந்தக்கோவிலிலேயே படுத்திருக்கிறான். அவன் தைரியத்துக்குச் சான்று இதுவே போதும். அவன் வீரனா அல்லவாவென்பதை அறியக் கோவிலுக்குள்ளே போக வேண்டும். அப்படிப்போவது உசிதமில்லையென்று நினைக்கிறேன்'' என்று அந்தப் பெண் குரல் கூறிற்று. அடுத்து ஒலி ஏதுமில்லை. நள்ளிரவில் சற்றுமுன்பு ஒலித்த சங்கீதம் மீண்டும் ஒலித்தது வெளியே.

zeevaa

அதற்குமேல் காத்திருப்பதில் அர்த்தமில்லை என்று முடிவு செய்த கௌதமிபுத்ரன் எழுந்திருந்து வாளைக் கச்சையில் கட்டிக்கொண்டு மெதுவாகப் புறப்பட்டுக் கோவிலின் உட்புறத்தை விட்டு வெளியே வந்தான் மிகுந்த எச்சரிக்கையுடன். அன்று மேகமூட்டம் எதுவுமில்லாததன் காரணமாக, ஐந்தாம் பக்ஷத்து சந்திரன் தனது மங்கலான ஒளியை எங்கும் பரப்பிக்கொண்டிருந்ததால், அந்த மலைக்காடு ஆங்காங்கு மரங்களின் இடைவெளிகளில் காணப்பட்ட நிலாத் தட்டுகளுடன் இருளும் ஒளியும் கலந்த சூழ்நிலையை சிருஷ்டித்திருந்தது. இத்தனையிலும் தாபிலே சுவரர் ஆலயத்தின் அமைப்பின் காரணமாக அதற்குள்ளே அப்பொழுதும் காரிருள் சூழ்ந்து கிடந்ததைக் கண்ட கௌதமிபுத்ரன், 'தாபிலேசுவரர் தமது பிசாசு பூத கணங்களுக் காகவே இந்த இடத்தை இப்படி அமைத்திருக்கிறார் போலும்!' என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டான்.

இந்த எண்ணங்களுடன் வெளியே வந்த சாதவாகன அரசகுமாரன் கோவிலுக்கு வெளியே யாருமில்லாததையும் வெளிப்புறம் வெறித்துக்கிடந்ததையும் கவனித்துக் கோயிற் படிகளை விட்டிறங்கித் தரையில் காலடிகளைப் பார்வை யிட்டான். அங்கிருந்த பாறைகளின் வழவழப்பில் காலடிச் சுவடுகள் ஏதும் தெரியாமல் போகவே சற்றுத் தலை நிமிர்ந்து பார்த்த அந்த வாலிபன் தூரத்தே மரங்களுக்கிடையிலிருந்த பாறைமீது வெளேரென்ற ஓர் உருவம் தெரியவே அதை நோக்கி ஓசைப்படாமல் மெள்ள நடந்தான். ஆனால் அந்த உருவம் பழையபடி மெல்லிய குரலில் இனிமையான இசையை எழுப்பியது. சித்தத்தை ஈர்க்கும் அதே சித்தரஞ்சனி! ஏழு ஸ்வரங்களை விட்டு அப்புறமோ இப்புறமோ அசையாமல் அந்த சப்தஸ்வரங்களுக்குள்ளேயே புரண்ட சுழல் கீதம், திரும்பத் திரும்ப அலைகளாக அவன் காதில் விழுந்தது! அந்தச் சங்கீதத்தால் சித்தம் கலங்கிய அந்த

zeevaa

மகாவீரன், தனது வீரத்தை மறந்தான். வந்த காரியத்தை மறந்தான். வெண்ணிலவில் இன்னொரு வெண்ணிலாவாக நின்ற அந்த வெண்ணிற ஜோதியைப் பார்த்துக்கொண்டு சொப்பனத்தில் நடப்பது போல் நடந்தான். அவன் அப்படி நடந்து கொண்டே இருக்கையில் அந்த உருவம் மெதுவாகத் தரையில் இறங்கிக்கொண்டிருந்தது. முழுதும் மறையுமுன்பு அதைப் பிடிக்க முயன்று வேகமாக நடந்த கௌதமிபுத்ரன் அந்தப் பாறையை அணுகுவதற்கு முன்பாக அந்த மோகினி மறைந்து விட்டாள் மலைப்பாறைக்குள். ஓடி அந்தப் பாறையை நோக்கிய அந்த வாலிபன் பாறைக்கு அருகில் சுரங்கமோ வழியோ இருப்பதற்கான அறிகுறிகள் எதையும் காணாதிருக்கவே அந்த சூஷ்மத்தை எப்படியும் மறுநாள் கண்டுபிடித்து விடுவதென்ற உறுதியுடன் திரும்பிக் கோவிலை நோக்கி நடந்தான். கோவிலை அவன் கிட்டு முன்பே விண்ணில் மேகங்கள் சூழ்ந்தன. மதி மறைந்தான். காரிருள் எங்கும் மண்டியது. 'இது கர்ப்போட்ட காலம். இப்படித்தான் அடிக்கடி மேகங்கள் வரும் போகும். இதில் எந்த மந்திரமோ ஜால வித்தையோ இல்லை' என்று தனக்குள் சொல்லிக்கொண்ட கௌதமிபுத்ரன் கோவிலை நோக்கி நடந்தவன் திடீரென்று கடற்கரையை நோக்கித் திரும்பினான். அதுவரை எங்கோ மறைந்து கொண்டிருந்த அவன் புரவியும் அவனைத் தொடர்ந்து சென்றது. இப்படி சாதவாகன மன்னனும் புரவியும் நடந்து ஓர் அடர்ந்த மரக்கூட்டத்தருகே வந்ததும் புரவி பெரிதாகக் கனைத்தது. அடுத்த விநாடி இரண்டு வாட்களின் நுனிகள் கௌதமி புத்ரன் கழுத்தில் ஊன்றப்பட்டன. ''உன் வாளைத் தொட்டால் பிணமாகி விடுவாய்'' என்ற எச்சரிக்கைக் குரலொன்று பக்கத்திலிருந்து ஒலித்தது. கௌதமிபுத்ரன் பதிலுக்குப் பெரிதாக நகைத்தான். அந்த நகைப்பையொட்டி அவன் பின்னால் யாரோ பெரிதாக அலறினார்கள். அந்த அலறல் எழுந்த அதே சமயத்தில்

zeevaa

சரேலென்று தனது கட்டாரியை எடுத்துப் பக்க வாட்டில் வீசிய கௌதமிபுத்ரன் அதன் விளைவைப்பற்றிச் சந்தேகப் படாமல் தன் கழுத்தில் ஊன்றிய வாளொன்று அகன்று விடவே இன்னொரு வாளின் பிடி மீதும் தனது கையை நீட்டி இழுத்தான். பிறகு துரிதமான செயல்கள் மின்னல் வேகத்தில் விளைந்தன. வாட்களை உருவிய இருவரில் ஒருவன், அலறிக்கொண்டு ஓடிவிட இன்னொருவன் மீது வாளை வீசினான் கௌதமிபுத்ரன். அடுத்து யாரும் போரிடக் காணோம். யாரோ சட்டென்று தரையில் விழும் அரவம் கேட்டது. இன்னொருவன் வேகமாக ஓடும் காலடி ஓசையும் கேட்டது.

தன்னைப்பிடிக்க வந்த இருவரில் ஒருவன் ஓடிவிட்டான் இன்னொருவன் வீழ்ந்து விட்டதையும் உணர்ந்த கௌதமி புத்ரன் திரும்பி விழுந்தது யாரென்று பார்த்தான். விழுந்தவன் சடலம் அசையவில்லை. அவன் கழுத்தின் பின்புறத்தில் புரவியின் பற்கள் அழுந்தியிருப்பதைப் பார்த்து அது தனது புரவியின் வேலையாயிருக்க வேண்டுமென்று தீர்மானித் தான். அடுத்து அங்கு நிற்காமல் புரவிமீது ஏறிக்கொண்டு புரவியை மலைச்சரிவில் இறங்கும்படி செலுத்திக் கடற் கரைக்கு வந்து சேர்ந்தான். கடல் அன்றும் முதல் நாள் போலவே கொந்தளித்து அலைகளைப் பெரிதாகப் பாறைகள் மீது மோதிக்கொண்டிருந்தது. அங்கு வந்ததும் புரவியிலிருந்து இறங்கிய கௌதமிபுத்ரன் ஆகாயத்தை நோக்கினான். ஆகாயத்தில் சந்திரன் மேகக்கூட்டத்தில் பூர்ணமாக மறைந்து விட்டது. எங்கும் இருள் சூழ்ந்ததாலும் பேய்க் காற்றாலும் பயங்கரமான சூழ்நிலை உருவாகி இருந்ததாலும் சற்று எட்ட மறைவாயிருந்த பாறையொன்றில் உட்கார்ந்து கொண்ட கௌதமிபுத்ரன் வாசிஷ்டி நதியின் முகத்துவாரத்தில் படகு ஒன்று வேகமாக வந்து கொண்டிருந்ததையும் கவனித்தான். சங்கமத்துறையில் அந்தப் படகிலிருந்து இறங்கிய பூர்ண

zeevaa

ஆயுதம் தரித்த பெரிய வீரனொருவன் தனது இடையிலிருந்த சிறு குழலை எடுத்து மெதுவாக ஊதிவிட்டுச் சிறிதுநேரம் படகின் அருகிலேயே தயங்கி நின்றதையும் பார்த்தான். அவன் முகத்தில் ஏதோ பெரும் குழப்பம் ஏற்பட்டதைக் கண்ட கௌதமிபுத்ரன், 'இவன் மோகினியைத்தான் எதிர்பார்க்கிறான்' என்று தனக்குள் கூறிக் கொண்டதுடன், 'இங்கு நடப்பது எனக்குப் புரிகிறது' என்றும் சொல்லிக் கொண்டான். இத்தகைய சிந்தனையில் அவன் இறங்கியிருக் கையிலே கடற்கரை அலைகளில் அந்த வெண்ணிற மோகினி நடந்து வந்தாள். அவளைச் சந்தித்துத் தடுத்து விடுவது என்று தீர்மானித்து எழுந்த கௌதமிபுத்ரன் எந்தச் செயலிலும் இறங்கவில்லை, அடுத்து நடந்த, அவன் முற்றும் எதிர்பாராத, நிகழ்ச்சியால் கௌதமிபுத்ரன் சிலையென நின்று விட்டான் பல விநாடிகள். அவன் கண்முன்னே நடந்தது ஒரு விபரீதம்.

zeevaa

அத்தியாயம் 5

மகரந்தச் செய்தி

வானில் மேகங்கள் விலகி மூன்றாவது ஜாமமும் கடந்து விடவே, ஐந்தாம் பிறைச் சந்திரன் தனது லேசான ஒளியை எங்கும் பரப்பித் தாபோல் துறைமுகத்தில் சித்தத்தை மயக்கும் மங்கிய நிலவைப் பரப்பிவிட்டதால், கடற்கரையில் நடப்பதைத் தனது மறைவிடத்திலிருந்து நன்றாகப் பார்க்க முடிந்தது கௌதமிபுத்ரனுக்கு. வாசிஷ்டி நதியில் படகில் வந்து அதன் முகத்துவாரத்தில் தாபோல் துறைமுகத்தில் இறங்கிய மனிதன் சற்றுக் குழப்பத்தை முகத்தில் காட்டியதையும் பிறகு குழலை எடுத்து ஊதியதையும் கண்ட சாதவாகன வாலிபன், வந்த மனிதன் எதிர்பார்த்தபடி காரியங்கள் நடக்கவில்லையென்பதைப் புரிந்துகொண்ட தன்றி, அப்படி அவன் எதிர்பார்ப்பை உடைத்ததற்குத் தானே காரணமென்பதையும் ஊகித்துக் கொண்டதால் சிறிது புன்முறுவல் கொண்டு வந்தவனை உச்சி முதல் உள்ளங்கால் வரையில் அலசிப் பார்க்க முற்பட்டான்.

வந்தவன் திடகாத்திரமாக ஆறடி உயரத்துக்குக் குறையாமலும் கெட்டியான சதைப்பிடிப்பு உள்ளவனாகவும் காணப்பட்டதாலும், அவன் மார்பில் தரித்திருந்த உலோக கவசமும் நல்ல எஃகால் செய்யப்பட்டதாகப் புலப்பட்ட தாலும், அவன் இடையில் தரித்திருந்த பெரிய அகன்ற வாளும் நல்ல கனமாக இருப்பதாகத் தெரிந்திருந்ததாலும், அவன் சாக வம்சத்தவனாகவோ க்ஷத்ரபனாகவோ இருக்க வேண்டு

zeevaa

மென்று ஊகித்தான் கௌதமிபுத்ரன். அந்த மனிதனின் அகன்ற மார்புக் கவசத்தில் பெரிதாகக் காணப்பட்ட *சக்ரம், வில், அம்பு, இலச்சினை சாகர்களையும், க்ஷத்ரப இனத்தையும் குறிக்குமாகையால் அவன் க்ஷத்ரபனாகவோ சாகனாகவோ இருக்கலாமென்று திட்டமான முடிவுக்கும் வந்தான் அந்த வாலிபன். அவனுடைய கண்கள் அந்த மங்கிய நிலவிலும் பெரிதாகவும் பளிச்சென்றும் ராட்சதக் கண்களாகத் தெரிந்ததைக் கவனித்த சாதவாகனன் அந்த மனிதன் எந்த ஆபத்தையும் அலட்சியமாக எதிர்நோக்க வல்லவனென் பதையும், சற்றுக் குரூரமானவனாகக்கூட இருக்கக் கூடியவ னென்பதையும் உணர்ந்து கொண்டான். கடற்கரையில் உறுதியுடன் உலக்கைகள் போல் நின்ற கால்கள் அந்த மனிதனின் உரமான மனத்திற்குச் சான்றுகளாயிருந்தன.

படகிலிருந்து இறங்கியதும் அவன் சற்றுக்குழம்பி இருபுறமும் நோக்கிவிட்டுக் குழல் எடுத்து ஊதியபோது சற்றே கால்களை அசைத்ததைக் கவனித்த கௌதமிபுத்ரன் அவன் குழப்பத்தில் சிறிது கோபமும் கலந்திருப்பதைப் புரிந்துகொண்டான்.

இத்தகைய எண்ணங்களில் கௌதமிபுத்ரன் திளைத்திருந்த சமயத்தில் வாசிஷ்டி முகத்துவாரத்தின் நேர் எதிர்த்திசை யிலிருந்து அந்த வெள்ளை மோகினி அலைகளில் தோன்றினாள். மலைக்காட்டிலிருந்து தான் இருந்த சற்றுத் தூரத்தில் அவள் பாறைகளில் இறங்கிக் கடற்கரையை அடைந்திருக்க வேண்டுமென்று ஊகித்தான். அப்படிப் பாறைகளில் தாவி இறங்கி வந்து கடற்கரை அலைகளை

★ Their (Kshatrapas or Kshaharatas) insignia arrow. Discus and Thunderbolt may be compared with certain pieces having 'Discus, Bow&Arrow' issued by AZES (saka) "History of Ancient India-By R.S.Tripathi Page 215-216.

zeevaa

அடைந்ததும் அலை ஓரமே நடந்து வந்ததையும் அந்தச் சமயத்தில் அவள் அழகு யார் சித்தத்தையும் கொள்ளை கொள்ளும் வகையில் அமைந்திருந்ததையும் கண்ட வாலிபன் பிரமையின் உச்சத்தை அடைந்தான். நிலவின் வெளிச்சத்தில் அப்பொழுதுதான் அவளை நன்றாகப் பார்க்க முடிந்தது அவனால். அவள் நல்ல உயரத்துடன் கொடி போலிருந் தாலும் அவள் உடலில் காணப்பட்ட எழுச்சிகள் அது மலர்க்கொடி என்பதை வலியுறுத்தின. கடலின் வேகமான காற்றில் அவள் வெண்ணிற ஆடை உடலில் நன்றாக ஒட்டி விட்டதாலும், காலை அலம்பிய அலை சற்று அதிகமாகக் காலின் மேற்பகுதிகளை நனைத்துவிட்டதாலும், சற்று விளக்கமாகவே தெரிந்த அவள் பருவ உடலின் அழகுகள் கௌதமிபுத்ரன் சித்தத்தை ஈர்க்கவே செய்தன. கடற்காற்றில் நன்றாகவே பின்னால் பறந்த அவள் குழல்கள் அந்தச் சந்திர வெளிச்சத்திலும் அதிக கருமையைக் காட்டின. கன்னங்களில் புஷ்டியை மதியின் கிரணங்கள் அழகுபடுத்தின. வசீகர தீட்சண்யமான கண்களைத் தாக்கி எதிரொளி கிளப்பின. காற்றால் தேகத்தில் ஒட்டப்பட்ட ஆடையையும் திமிறிக் கொண்டு முறைத்த மார்பு முகடுகள் அவள் நடையின் வேகத்தில்கூட அசைய மறுத்தன. அவள் பருவத் தொடை களைப் புலப்படுத்தவும் மறைக்கவும் உட்புகுந்த ஆடையைப் பார்க்க இஷ்டப்படாமல் கண்களை ஒரு விநாடி மூடிக்கொண்டான் கௌதமிபுத்ரன்.

அவன் கண்களைத் திறந்தபோது, அந்தச் சித்தினி படகில் வந்தவனை நெருங்கிக் கொண்டிருந்தாள். கால்களில் அலைகள் தாக்கியும் அலட்சியம் செய்து நடந்துவந்த அவளுடைய மலர்ப் பாதங்கள் ஏதோ அலைமீது ஊர்ந்து வருவது போன்ற பிரமையை அளித்தன. அந்த ஊர்ந்து வந்த முறையிலும் ஓர் அழகிருந்தது அவள் கால்களில், அப்பொழுது அவள் தலையில் சொருகியிருந்த ஓர் புஷ்பம்

zeevaa

அத்தனை காற்றிலும் தலையிலிருந்து நகராமல் அவள் அழகிய வலது காதின் மேல் ஆபரணமெனக் காட்சியளித்தது. அப்படி பிரமிக்கும் அழகுடன் வேகமாக வாசிஷ்டி சங்கமத்துறையின் இடத்துக்கு வந்த அந்த மோகினியைத் தடுத்து விடுவதென்றும் அவசியமானால் வந்த க்ஷத்ரபனையும் மடக்குவதென்றும் தீர்மானித்த கௌதமிபுத்ரன் தனது புரவியைத் தட்டிவிட முற்பட்ட சமயத்தில் ஏற்பட்ட அந்த விபரீத நிகழ்ச்சி அவன் முயற்சிக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தது.

அந்தப் பெண் அவனை அணுகித் தனது இரு கைகளையும் நீட்டிக்கொண்டு சென்றாள். அந்தக் கைகளை அந்த க்ஷத்ரபன் தனது கையால் பலமாக அடித்தான். "சித்தரஞ்சனி!" என்று வெறிக்குரலில் அவளை அழைக்கவும் செய்தான். அந்தக் குரல் மலைப்பாறைகளில் தாக்கி, "சித்தரஞ்சனி! சித்தரஞ்சனி!" என்று பலமுறை எதிரொலி செய்து மலையே அபயக்குரல் கொடுப்பது போன்ற விசித்திரத்தை சிருஷ்டித்தது.

அடுத்து அவன் நன்றாக இரைந்தே பேசியதால் அவன் சொற்கள் நன்றாக வாலிபன் காதுகளில் விழுந்தன. "நான் குழலூதுமுன் ஏன் வரவில்லை நீ?" என்று கேட்டான் அந்த மனிதன்.

சித்தரஞ்சனி அவன் முன் அடிமைபோல் தலைகுனிந்து நின்றாள். பிறகு நிலத்தை நோக்கிய வண்ணம் ஏதோ மிக மெதுவாகச் சொன்னதால் கௌதமிபுத்ரன் காதில் ஏதும் விழவில்லை. ஆனால் அந்த மனிதன் மீண்டும் இரைந்தான். "உன்னுடன் நான் அனுப்பியவர்கள் எங்கே?" என்று.

இம்முறை அவள் பதிலேதும் சொல்லவில்லை. ஆனால் அவனுக்குப் பதில் கிடைக்கவே செய்தது. கௌதமிபுத்ரனிடமிருந்து தப்பி ஓடிவிட்ட வீரன் பாறைகளிலிருந்து எழுந்து

zeevaa

க்ஷத்ரபனை நோக்கி ஓடி அவன் கால்களில் விழுந்து ஏதோ சொன்னான். அதைக்கேட்ட க்ஷத்ரபன் அந்த வீரனைக் காலால் உதைக்க வீரன் சற்று எட்டப்போய் விழுந்தான். இனி தான் வாளாவிருப்பதில் பயனில்லை என்று முடிவு செய்த கௌதமிபுத்ரன் தனது புரவியைக் காலால் உதைத்த விநாடியில் இன்னொரு விபரீதம் நேர்ந்தது சித்தரஞ்சனியின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். அந்த அறையால் துவண்டு விழப்போன அந்தக்கொடியை அந்தக் கொடியவன் கைகளால் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு தான் வந்த படகில் ஏற, படகோட்டி துரிதமாகப் படகைச் செலுத்தினான் வாசிஷ்டி நதியில்.

அதற்குமேல் தான் அந்த மனிதனைத் தொடருவதில் அர்த்தமில்லையென்பதை உணர்ந்துகொண்ட கௌதமி புத்ரன், கரையில் நின்ற அந்த வீரனையாவது பிடிக்கலா மென்று எண்ணிய சமயத்தில் அந்த வீரனும் திடீரென வாசிஷ்டி நதியில் குதித்து மறைந்துவிடவே கௌதமிபுத்ரன் தீர்க்க சிந்தனையுடன் புரவியைத் திருப்பிக்கொண்டு நடந்தான். 'எப்படியும் இந்த விடுகதைக்கு, ராட்சதத் தனத்துக்கு, பிசாசு நாடகத்துக்கு, நாளை விடை கண்டு பிடிக்கிறேன்' என்று மனத்துக்குள் சொல்லிக்கொண்டே புரவியைத் திருப்பிக்கொண்டு தாபிலேசுவரர் ஆலயத்துக்கு வந்து சேர்ந்தான். அப்பொழுது கிட்டத்தட்ட விடியும் சமயம் நெருங்கிக் கொண்டிருந்ததால் புரவியின் சேணத்தை நீக்கி அதை ஓட்டிவிட்டுத் தான்மட்டும் ஆலயத்திலிருந்து சிறிது தூரத்திலிருந்து அழகு பிசாசு நிற்கும் பாறையை நோக்கி நடந்தான். பாறைக்கு அருகில் வந்ததும் அதன் மீது குவியலாகக் கிடந்த புஷ்பங்களைக் கையால் தொட்டுப் பார்த்தான். அந்தக் காட்டு வாசமலர்களின் சுகந்தம் அவன் நாசியில் புகுந்து மயக்கவே, 'இது அவள் குவித்த மலர்க்

zeevaa

கூட்டம். அது சித்தத்தை மயக்குவதில் என்ன ஆச்சரியம்?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான்.

அந்தப் பாறையில் அவள் கால்கள் பட்ட இடங்களைத் தொட்டுப் பார்க்க எண்ணி அந்தப் பாறையின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு அந்தப் புஷ்பக் குவியலை எடுத்து எடுத்து மலர்களை மடியில் போட்டுக்கொண்டான். புஷ்பங்கள் பூராவும் மடிக்கு வந்ததும் பாறையைக் கையொன்றால் தடவினான். சித்தரஞ்சனியின் கால் களையே தடவுவதுபோல், கைகளில் ஏதோ மழமழவென்று படவே கைகளைப் பார்த்தான். மடியின் மலர்கள்மீது விழுந்த நிலவு கைகளில் ஏதோ வழுவழுப்பான மஞ்சள் கறை பட்டிருப்பதைப் புலப்படுத்தவே உள்ளங்கைகளை முகர்ந் தான். வாசனை உணர்ச்சிகளை அள்ளவே சற்றுக்குனிந்து பாறையை உற்று நோக்கினான். பாறைமீது மகரந்தப் பொடியில் நன்றாக அழுத்தமாக இரண்டு சொற்கள் தெரிந்தன. ''அபாயம்! ஓடிவிடு'' என்று பொருள் கொள்ளக் கூடிய சொற்கள் மகரந்தப் பொடிகொண்டு வடமொழியில் தீட்டப்பட்டிருந்தன.

தீட்டியது சித்தரஞ்சனிதான் என்பதை கௌதமிபுத்ரன் சந்தேகமற உணர்ந்து கொண்டான். தன்மீது அவளுக்கு ஏதோ அன்பிருப்பதாகவும் நினைத்தான். பிறகு சற்று இரைந்து நகைத்தான். ''இது புருஷனின் பலவீனம். எந்தப் பெண்ணும் தன்மீது காதல் கொள்வாள் என்ற பைத்தியம் ஆணுக்கு இருக்கிறது. இந்தச்செய்தியை அவள் ஏன் அனுதாபத்தால் எழுதியிருக்கக்கூடாது?'' என்றும் தன்னைக் கேட்டுக் கொண்டான். இருப்பினும் அவள் தன்மீது அன்பு கொண்டிருப்பதாகவே முடிவு செய்தான். அதற்கான காரணங்களையும் சிருஷ்டித்துக்கொள்ள முயன்றான். எனது கழுத்தைப் பிடித்த அவள் ஏன் என்னைக் கொல்லவில்லை?

zeevaa

என் கால் தளைகளை ஏன் அவிழ்த்தாள்? நான் இறப்பதை அவள் விரும்பவில்லை?' என்று கேள்வி கேட்டுப் பதிலும் சொல்லிக்கொண்டான். இந்தச் சிந்தனைகளுடன் அவன் மடியிலிருந்த மலர்களை அள்ளி மீண்டும் அந்தப் பாறைமீது குவித்தான். பிறகு எழுந்து தாபிலேசுவரர் ஆலயத்தை நோக்கி நடக்க முற்பட்டவன் சற்றுத் திரும்பி கடற்கரையை நோக்கி நடக்க முற்பட்டுத் தன்னைத் தாக்க முற்பட்ட வீரர்கள் இருந்த இடத்தை அடைந்தான். எந்த இடத்தில் தான் ஒருவனைக் கொன்று விட்டதாக நினைத்தானோ அந்த இடத்தில் ரத்தக்கறை தரையில் நன்றாகப் படிந்திருந்தது. தான் வீசிய கோடரியும் அருகே கிடந்தது. ஆனால் காயப்பட்ட மனிதனைக் காணவில்லை. அவனைத் தான் கொல்லவில்லை என்றும் அவன் பிழைத்துவிட்டானென்றும் தீர்மானித்துக் கோடரியை எடுத்துக்கொண்டு கோவிலை எய்தினான். அப்பொழுது பூர்ணமாகப் பொழுது புலர்ந்துவிட்டதால் வாசிஷ்டி நதியில் நீராடச் சென்று உடைகளைக் களைந்து தரையில் வைத்துவிட்டு நீரில் இறங்கி நீந்த முற்பட்டான். கைகளை மாற்றிப்போட முயன்ற சமயத்தில் அவன் மார்பில் கட்டையொன்று தாக்கவே அதன்மீது நீந்திக் கரைக்கு வந்து கட்டையை இழுத்துத் தரையில் போட்டான். அவன் இழுத்துப் போட்டது கட்டையல்ல, மனித உடல்!

zeevaa

அத்தியாயம் 6

வர்ணமெட்டு வேறு!

வாசிஷ்டி நதியில் நீராடப் போய், அதன் குளிர் நீரில் நீந்துகையில் கட்டையொன்று மார்பில் உந்த அந்தக் கட்டையின் மீதே நீந்திக்கரைக்கு வந்து அதை இழுத்துக்கரையில் போட்டதும் அது மனித உடல் என்பதை அறிந்ததால், அதிர்ச்சியையும், அருவருப்பையும் ஒருங்கே அடைந்த கௌதமிபுத்ர சதகர்ணி, தலைக்குழலிலிருந்தும், இடையில் உடுத்திய துண்டிலிருந்தும் நீர் சொட்டச்சொட்ட நீண்ட நேரம் அந்த மனித உடலைப் பார்த்துக் கொண்டே நின்றான். அந்தச் சடலத்தின் கழுத்தில் ஆழ்ந்து வெட்டிக் குருதி வந்து உறைந்து போனதைப் பார்த்த அந்த வாலிபன், அந்தக் காயம் தனது கோடரியால் ஏற்பட்ட தென்பதையும், கழுத்திலிருந்து தலைக்கு ஓடும் நரம்பு வெட்டப்பட்டிருந்த தால் மரணம் மிகத் துரிதமாக ஏற்பட்டிருக்க வேண்டு மென்றும் நிர்ணயித்தான். அவ்விதம் இறந்தவன் யாரென் பதைத் தான் அறியக் கூடாது என்பதற்காகவே எதிரிகள் இந்தச் சடலத்தைப் பின்னால் இழுத்து வந்து வாசிஷ்டியில் தள்ளியிருக்க வேண்டுமென்றும், தனது கோடரியால் யாரும் இறக்கவில்லையென்பதைச் சுட்டிக்காட்டவே கோடரி மட்டும் தனித்து எடுத்துப் போடப்பட்டிருக்க வேண்டு மென்றும் ஊகித்தான். ''ஆனால் ரத்தக் கறைகளை ஏன் அவர்கள் அகற்றவில்லை?'' என்றொரு கேள்வியும் எழுப்பிக் கொண்ட கௌதமிபுத்ரன், 'அந்த ரத்தக் கறையைப் பிசாசு

zeevaa

zeevaa

விளைவித்ததாக நான் நினைக்க வேண்டுமென்று அந்த ராட்சஸ க்ஷத்ரபன் எண்ணியிருக்கலாம்' என்று தனக்குச் சமாதானம் சொல்லிக் கொண்டான். இன்னொரு சந்தேகமும் ஏற்பட்டது சாதவாகன வாலிபனுக்கு. தாபோலுக்கு வந்த இரு வீரர்களில் ஒருவன் இறக்க இன்னொருவன் வாசிஷ்டி நதியில் குதித்து மறைந்துவிட வேறு யார் பிணத்தை எடுத் திருக்க முடியும் என்று தன்னைத்தானே வினவிக்கொண்டு, 'நதியில் குதித்தவன் திரும்பி வந்து இந்த உடலை நதிக்கு இழுத்துச் சென்று மறைந்திருக்க வேண்டும்' என்று பதிலும் சொல்லிக் கொண்டான். முந்திய இரவில் கடைசிப் பகுதியில் எத்தனை துரிதமாக இத்தனை காரியங்கள் நடந்திருக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்த கௌதமிபுத்ரன், பிசாசுக் கதையைக் கூடிய வரையில் நிரந்தரமாக வைத்திருக்கவே அந்தத் தில்லுமுல்லுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும், தான் ஒருவன் மட்டும் பிசாசுக் கதையை உடைத்தாலும் பெருவாரியான மக்கள் நம்பமாட்டார் களாதலால் அந்தப் பகுதியிலிருந்து ஓடிவிட்ட குடிமக்கள் திரும்புவது துர்லபம் என்பதையும் சந்தேகமறப் புரிந்து கொண்டான். அதைப்பற்றிச் சில விவரங்களை விசாரிக்கத் தீர்மானித்து சடலத்தை இழுத்துப் பாறைகளின் நடுவில் மறைத்துவிட்டு மீண்டும் நதியில் நீராடாமல் கடலில் நீராடித் தலைதுவட்டி உடல் துடைத்து ஈர ஆடைகளுடன் தாபிலேசு வரர் ஆலயத்துக்குச் சென்றான். அங்கு வைத்திருந்த தனது தோல்பையிலிருந்து மாற்றுடைகளை அணிந்து திலகம் தீட்டிக் கச்சையில் வாளும் கோடரியும் புனைத்துக்கொண்டு புரவியை அழைத்தான். புரவிக்குச் சேணமிட்டு ஏறிக் கொண்டு அதைப் பூஜாரியிருந்த கிராமத்தை நோக்கி நடக்க விட்டான்.

வழியெங்கும் அடர்ந்த பெரிய மரங்களும், புஷ்பச் செடிகளும் கொடிகளும் மலைப் பகுதியை அலங்கரித்

zeevaa

தலையும், மலையை ஒட்டி வந்த கடல் அந்த மலையில் தாபிலேசுவரரும் சண்டிகாதேவியும் இருக்கிறார்களென்ற காரணத்தால் தனது திரைகளை மலைப்பாதைப் பாறைகளில் தாக்கி அர்ச்சனை செய்வதையும் பார்த்து, 'இத்தகைய ரமணியமான புனித இடத்தை மனிதன் தனது சுயநலத்துக் காகவும், நாட்டாமைக்காகவும், எத்தனை பாழ் படுத்து கிறான்? ஈசனிருக்கும் புண்யபூமியைப் பிசாசு இருக்கும் இடமாக மாற்றிவிட முயலும் மனித மூளை கேடுகளை விளைவிக்க எத்தனை கூர்மையாக வேலை செய்கிறது?' என்று சிந்தனையில் இறங்கித் துன்பப் பெருமூச்சும் விட்டான். இப்படிப் பற்பல எண்ணங்களுடன் பயணம் செய்த கௌதமிபுத்ரன் பூஜாரியின் குடிசையை அடைந்ததும், "பூஜாரி, பூஜாரி!" என்று இருமுறை குரல் கொடுத்ததும் பூஜாரி வெளியே வராததால் புரவியிலிருந்து இறங்கிக் குடிசைக்குள் நுழைந்தான். அங்கும் பூஜாரியைக் காணாததால் சுற்றுமுற்றும் மலைப்பகுதியிலும், மற்றக் குடிசைகளிலும் தேடினான். அவன் எங்கும் காணவில்லை என்று எண்ணித் திரும்ப முயன்ற சமயத்தில், சற்று எட்ட இருந்த புதரில் யாரோ முனகும் சப்தம் கேட்கவே அங்கு விரைந்து புதரை அகற்றிப் பார்த்தான். அந்தப் புதருக்குள் பூஜாரி நடுக்கத்துடன் படுத்துக்கிடந்தான். அவன் உடலில் ஓரிரு இடங்களில் ரத்தக் கறையும் இருந்தது. அவனருகில் உட்கார்ந்து அவன் உடலைப் பரிசோதித்த கௌதமிபுத்ரன் பூஜாரியின் உடலில் காயம் ஏதுமில்லாததைப் பார்த்துப் பூஜாரியைப் பயமுறுத்தவே இந்த ரத்தக்கறை பூசப்பட்டிருக்கிறது என்ற முடிவுக்கு வந்தான்.

அந்த முடிவின் விளைவாகப் பூஜாரியை அகற்றி, "உம் எழுந்திரும், உமக்குக் காயம் ஏதுமில்லை" என்று அழைத்தும் பூஜாரி மூடிய கண்ணைத் திறக்காமல், "இங்கிருந்து ஓடிவிடு,

zeevaa

இன்றிரவு எப்படியும் பிசாசு உன்னையும் என்னையும் கொன்றுவிடும்'' என்று உளறினார்.

''பயப்பட வேண்டாம் பெரியவரே! எழுந்திரும், நானிருக்கிறேன்'' என்று தைரியம் சொன்னான் சாதவாகன வீரன்.

''உன்னால்தான் எல்லாம் வந்தது. நேற்றுக்கு முன்பு பிசாசின் தூதர்கள் யாரும் எனது குடிசைக்கு வந்ததில்லை'' என்று நடுக்கத்துடன் சொன்னார் பூஜாரி.

''பிசாசுக்குத் தூதர்களா!'' வியப்புடன் வினவினான் கௌதமிபுத்ரன்.

''ஆம்.....ஆம்....ம்ம்...'' குலை நடுக்கத்துடன் கூறினான் பூஜாரி.

''எப்பொழுது வந்தார்கள் உம்மிடம்?''

''நேற்றிரவு இரண்டாவது ஜாமத்தில்''

''எப்படியிருந்தார்கள்?''

''மனிதர்கள் மாதிரி''

''உம்... என்ன செய்தார்கள் உம்மை?''

''ஒரு பிசாசு தனது கையிலிருந்து ரத்தத்தை என் மீது பூசியது. இன்னொன்று இந்த ரத்த அடையாளத்துக்கும் பிறகு நீயும் உன் நண்பனும் இங்கிருந்தால் நாளை உங்கள் இருவரையும் கொன்று போடுவோம். இப்பொழுதே ஓடிவிடு என்று எச்சரித்தது. நான் உடனடியாக இங்கு வந்து மறைந்து கிடந்தேன்.''

''ஏன் மறைந்து கிடந்தீர்?''

''உன்னையும் அழைத்துப் போவதற்காக.''

''நான் வராவிட்டால்?''

zeevaa

''நான் மட்டும் போய்விடுகிறேன்.''

''எங்கு?''

''இங்கிருந்த அனைவரும் போயிருக்கும் எட்ட இருக்கும் கிராமங்களுக்கு.''

இதைக்கேட்ட கௌதமிபுத்ரன் மெல்லப் புன்முறுவல் கொண்டு, ''பெரியவரே! நானில்லாமல் வேறு கிராமத்துக்குப் போனால் பிசாசு அங்கு வராதா?'' என்று கேட்டான்.

''வரும்'' என்று நடுங்கும் குரலில் சொன்னார் பூஜாரி.

''நான் இங்கிருந்து கிளம்பப் போவதில்லை. எதற்கும் நீராடி வாரும். தாபிலேசுவரருக்கு பூஜை செய்துவிட்டுப் பிறகு என்ன செய்ய வேண்டும் என்று தீர்மானிப்போம்'' என்று சொல்லியும் பூஜாரி நகர மறுக்கவே, ''பூஜாரி! நீராக நீராடி பூஜைப் பிரசாதத்துடன் வருகிறீரா அல்லது உம்மைக் கட்டித்தூக்கிப் போகட்டுமா?'' என்று அதட்டினான்.

வேறு வழியில்லாமல் பூஜாரி தமது குடிசைக்குப் பின்னா லிருந்து ஒரு கிணற்றில் நீராடினார். அவர் உடலிலிருந்த ரத்தக்கறைகளை கௌதமிபுத்ரன் துடைத்துவிட்டான். பூஜாரி நீராடி ஆசார உடை அணிந்து அடுப்பு மூட்டி நிவேதனப் பிரசாதம் தயாரித்து எடுத்துக்கொண்டு கௌதமிபுத்ரனுடன் கிளம்பினார். கௌதமிபுத்ரன் புரவியின் கழுத்தில் சேணத்தைச் சுற்றிவிட்டு பூஜாரியுடன் நடந்தே சென்றான். வழியில் பேச்சுக் கொடுத்துத் தைரியமும் சொன்னான். ''பூஜாரி! தாபிலேசுவரருக்கு பூஜை செய்யும் உம்மை யாரும் எதுவும் செய்ய முடியாது. இங்கு பிசாசு எதுவும் கிடையாது. மனிதர்கள்தான் இந்த நாடகம் ஆடுகிறார்கள். ஆனால் பிசாசைவிட மனிதன் மிகக் கெட்டவன். பிசாசு எப்பொழுதாவது யாரையாவது கொல்லும். மனிதன் நாட்டுக்காகப் போர் செய்து

zeevaa

பெரும்பான்மையோரைக் கொல்கிறான். நேற்று வந்தவர்கள் சாக வீரர்கள். அவர்களில் ஒருவனை நான் கொன்று விட்டேன். அவனை உமக்குக் காட்டுகிறேன்'' என்று கூறினான்.

ஆனால் இத்தனைக்கும் பூஜாரி பதில் சொல்லவில்லை. பலிக்குச் செல்லும் ஆடுபோல் தாபிலேசுவரர் ஆலயத்துக்குக் கௌதமிபுத்ரனுடன் நடந்தார். அங்கு சென்றதும் வழக்கப்படி தாபிலேசுவரருக்கு அபிஷேகம் செய்து பிரசாத நிவேதனமும் செய்தார். பிறகு பிரசாதத்தைக் கௌதமிபுத்ரனுக்கு அளித்துத் தாமும் உண்டார்.

சுவாமி பிரசாதத்தை உண்டதாலோ அல்லது தெய்வ சந்நிதியிலிருக்கும் காரணத்தாலோ சிறிது அச்சம் நீங்கப் பெற்ற பூஜாரி நிதானமாகப் பேசலானார். ''இங்கு நடமாடும் சித்தரஞ்சனிப் பிசாசும் மக்கள் சித்தப் பிரமையில் ஏற்பட்ட தல்ல. பலர் அதைப் பார்த்த பின்பு இங்கிருந்து ஓடி விட்டார்கள். சிலர் அதன் சங்கீதத்தைக் கேட்டு ஓடிவிட்டார்கள்...'' என்று துவங்கியவரை இடைமறித்த கௌதமிபுத்ரன், ''பிசாசின் சங்கீதம் அத்தனை மட்டமா?'' என்று கேட்டான்.

''இல்லை, செவிக்கு இனியதுதான். ஆனால் பிராணனுக்கு அபாயத்தை விளைவித்திருக்கிறது. அதைக் கேட்ட ஓரிருவரை அந்த மோகினி கழுத்தைத் திருகிப்போட்டு விட்டது'' என்றார் பூஜாரி.

''அப்படி இறந்தவர்களை நீர் பார்த்தீரா?'' கௌதமிபுத்ரன் வினாவைத் திட்டமாகத் தொடுத்தான்.

''இல்லை.''

''எப்படி உமக்குத் தெரியும்?''

''கேள்விப்பட்டேன்.''

zeevaa

''கேள்வி ஞானமா?''

''ஆம்''

''அது அஞ்ஞானம் பெரியவரே! நமது மக்கள் கதை கட்டுவதிலும் வதந்தியைப் பரப்புவதிலும் கைதேர்ந்தவர்கள். அதை நம்பித்தான் சமுதாயம் கெட்டுப் போகிறது.''

இதற்குப்பதில் சொல்லவில்லை பூஜாரி. கௌதமிபுத்ரனும் பதிலை எதிர்பார்க்கவில்லை. பூஜாரியைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு கடற்கரைக்குச் சென்று தான் பாறை களில் மறைத்திருந்த சடலத்தைக் காட்டினான். ''இவன் உம்மைச் சந்தித்த பிசாசுகளில் ஒருவனா?'' என்றும் விசாரித்தான்.

''ஆம்'' என்று ஒப்புக்கொண்டார் பூஜாரி.

''உங்களைச் சந்தித்த பின்புதான் இவர்கள் என்னைச் சந்தித்தார்கள். ஒருவன் என் கோடரியால் இறந்தான். இன்னொருவன் ஓடிவிட்டான். பிசாசாயிருந்தால் கோடரியால் இறக்குமா?'' என்று கேட்டான் பூஜாரியை நோக்கி.

பூஜாரிக்கு எதுவும் விளங்காவிட்டாலும் பிசாசு பயம் மட்டும் போகாததால், ''சித்தரஞ்சனியைப் பற்றி என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டார்.

''நல்ல அழகி'' என்றான் வாலிபன்.

''அவள் சங்கீதம்?''

''சித்தத்தை மயக்குகிறது!''

''ஆம். மயக்கும். அதனால்தான் சித்தரஞ்சனி என்று பெயர்.''

''அதில் தவறில்லை'' என்ற கௌதமிபுத்ரன். ''பூஜாரி! அந்த மோகினிப்பிசாசை இன்னொரு ராட்சஸப்

zeevaa

பிசாசிடமிருந்து நாம் காப்பாற்றப் போகிறோம்'' என்று கூறினான்.

''நாம் என்றால்...?'' என்று கேட்டார் பூஜாரி.

''நாம் இருவரும்'' என்று பதில் சொன்ன கௌதமிபுத்ரன் மேலும் சொன்னான்: ''பூஜாரி! இந்தப் பகுதியிலிருந்து மக்களெல்லாம் ஓடிவிட்ட பிறகும் உமது பரம்பரைக் கடமையை, தாபிலேசுவரர் பூஜையை நீர் கைவிட வில்லை, இனிமேலும் கைவிட அவசியமில்லை. இத்தனை நாள் உறுதியை இனி மேலும் கைவிடவேண்டாம். உம்மைக் காக்க நானிருக்கிறேன்'' என்று தைரியம் சொன்னான்.

''பிசாசிடம் நீ என்ன செய்ய முடியும்?'' என்று பூஜாரி கேட்டார்.

''பிசாசு என்னைக் காதலிக்கிறது'' என்றான் கௌதமிபுத்ரன்.

''மோகினி அப்படித்தான் காதலிக்கும், பிறகு கழுத்தைப் பிடிக்கும்'' என்றார் பூஜாரி நடுக்கத்துடன்.

''நேற்றிரவு பிடித்தது...''

''நினைத்தேன்.''

''ஆனால் என்னைக் கொல்லவில்லை.''

''ஏன்?''

''என்னிடம் காதலால்''

இதைக் கேட்டதும் ஏதுமே புரியாத பூஜாரி, ''அடுத்து என்ன செய்ய உத்தேசம்?'' என்று கேட்டார்.

''இன்றிரவு மோகினியைச் சந்திக்கப் போகிறேன்'' இதை அழுத்தந்திருத்தமாகச் சொன்னான் சாதவாகனன்.

zeevaa

கௌதமிபுத்ரன் தைரியம் பூஜாரியின் அச்சத்தையும் ஓரளவு தவிர்த்திருக்கவேண்டும். ''எப்படிப் பார்ப்பதாக உத்தேசம்?'' என்று கேட்டார்.

பூஜாரி வியந்து பிரமித்துப் போகும்படியான திட்டத்தைச் சொன்னான் கௌதமிபுத்ரன். அந்த பயங்கரத் திட்டத்தைக் கேட்ட பூஜாரி நடுங்கினார். இருப்பினும் கௌதமிபுத்ரன் சொற்படியெல்லாம் கேட்டார். முதலில் கௌதமிபுத்ரன் சித்தரஞ்சனி செய்தி எழுதிவைத்த பாறையைக் காட்டினான். அதன் அருகில் உட்கார்ந்து பழைய செய்தி எழுதியிருந்த இடத்தில் மகரந்தப்பொடி கொண்டு தானும் ஒரு செய்தியை எழுதினான். ''குகை வழியை மூடாதே'' என்று இரு சொற்களைத் தீட்டினான் பாறையில். அந்தச் செய்திமீது புஷ்பங்களையும் குவித்தான்.

அந்த இரு சொற்களும் மந்திரம் என்பதை அன்றிரவு பூஜாரி புரிந்துகொண்டார். இரவு மூண்டதும் புரவியைப் பிணைக்காமல் காட்டுக்குள் துரத்திவிட்டு பூஜாரியுடன் எதிரேயிருந்த புதரில் மறைந்து கொண்டான் கௌதமிபுத்ரன். நள்ளிரவும் வந்தது. பிரமிக்கும் நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. சித்தரஞ்சனி வந்தாள். பாறையைப் பார்த்துக் குழப்பத்துடன் நின்றாள். பூக்குவியலைக் கலைத்தாள். லேசாக நகைத்தாள். பிறகு பாடினாள். அதே சித்தரஞ்சனி ராகம்தான். வர்ணமெட்டு மட்டும் வேறு.

zeevaa

அத்தியாயம் 7

குல வைரி

ஸஹ்யாத்ரி மலைத்தொடரின் தாபோல் பகுதி செங்குத்தாக எழுந்து மிகப்பயங்கரமாகக் காட்சியளித்தாலும், அடர்த்தியான மலைக்காடு வெண்மதியைக் கூடியவரை உட்புகாது தடுத்தாலும், இருளைக்கிழிக்கும் மின்னல் போல் வெள்ளை உடையில் சித்தரஞ்சனி காட்டின் ஊடே மிக வேகமாக வந்தாள். அத்தனை இருளிலும் அவள் பூவுடலைத் தழுவ ஆசை கொண்ட சந்திரன் தனது கதிர்களை அவள்மீது வீச முயன்று முடியாது போகவே, கதிர்களை மரங்களின் இலை இடுக்குகளின் வழியாக அவள்மீது செலுத்தி அவள் வெண்ணிறச் சேலையை வட்டம் வட்டமான வெள்ளிக் காசுகளால் இழைத்து அழகு பார்த்தான். அந்தச் சமயத்தில் சந்திரன் தனது குருபத்தினியான தாரையை நினைத்து, அவளைப் போலவே சித்தரஞ்சனியையும் ஆடையற்ற வளாகப் பார்க்க வேண்டுமென்று துர் எண்ணம் கொண்ட தனால் அவன் துஷ்டக் கண்களைச் சிறுமேகமொன்று அவன் முகத்தில் படர்ந்து மூடியது. ஆனால் அந்தத் துஷ்டன் கண்கள் அந்தச்சிறு மேகத்தைக் கலைத்து எட்டிப் பார்க்கவே சண்டிகாதேவி குகைப் பகுதியில் வெளிச்சம் ஓரளவு தெரியவே செய்ததால், சித்தரஞ்சனி பாறை மீதிருந்த புஷ்பக் குவியலைப் பார்க்க முடிந்தது. அந்த புஷ்பக் குவியலைக் கண்ட சித்தரஞ்சனியின் முகத்தில் சிறிது குழப்பம் தெரிந்தாலும்; ‘இருக்காது இருக்காது. நேற்று நான் குவித்த

zeevaa

zeevaa

புஷ்பங்கள் இத்தனை நேரம் வாடா திருக்க முடியாது' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டாள். அதன் விளை வாகப் பாறைமீது குனிந்து புஷ்பக் குவியலைக் கலைத்து, அது மறைத்திருந்த செய்தியையும் உற்று நோக்கினாள். பிறகு மிக மெதுவாக நகைத்தாள். புஷ்பங்களில் இரண்டொன்றை எடுத்துத் தலைக்குழலில் சொருகிக்கொண்டாள். மீதியிருந்த புஷ்பங்களை அள்ளியெடுத்து மார்பிலும் அணைத்துக் கொண்டாள். அவள் செய்கைகளையெல்லாம் புதரின் மறைவிலிருந்து பார்த்த பூஜாரி, ''இன்று மோகினி இந்த முரடனைக் கண்டிப்பாய்ப் பிடித்துக் கொள்ளும்'' என்று உள்ளூர சொல்லிக்கொண்டான். அப்படி நினைக்கவில்லை கௌதமிபுத்ரன். ''அணைத்த புஷ்பங்களின் இதயப் பிராந்திய மேடுகளில் தனது தலையிருந்தால், எப்படியிருக்கும்?'' என்று நினைத்துப் பெருமூச்சு விட்டான்.

அந்த நினைப்புக்குச் சுருதி கூட்டுவது போல் சித்தரஞ்சனி தனது வீணைக்குரலில் பாடத் துவங்கினாள். முந்திய நாட்கள் போல் கீழ் ஷட்ஜத்திலிருந்து எழுந்து நிஷாதத்துக்குச் செல்லும் முறையை அவள் கடைப்பிடிக்கவில்லை. ஒரே ரீதியில் ஸாமகானம் போல் துல்யமாகச் சவுக்ககாலத்தில் எழுப்பப்பட்ட அந்த கீதம் அன்று எழும்பவில்லை. அவள் முந்திய இரு இரவுகளைப்போல் நின்ற இடத்தில் செங்குத்தாக நின்று பாடிக்கொண்டே பூமிக்குள் மறையவும் இல்லை. அன்றைய கீதம் ஸ்வரங்களை முன்னும் பின்னுமாக அமைத்து ஏதோ காமகீதம் போல் சலசலப்புடன் ஜலதரங்கம் போல் ஒலித்தது. தாள ஜதி துரிதப்பட்டு வர்ண மெட்டும் முற்றும் மாறி, துன்பம் தோன்றும் பிசாசகீதமாக இல்லாமல் காமத்தைக்கிளறும் இன்ப கீதமாக அமைந்தது. வர்ணமெட்டு ஊஞ்சலாடியது. அவளையும் இருபுறங்களிலும் ஆட்டியது. அவள் மோகன உருவம் அப்புறமும் இப்புறமும் அசைந்தது. கால்கள் மாற்றி மாற்றி வைக்கப்பட்டன. கீழே குத்தும்

zeevaa

பாறையின் மணிக்கற்கள் அவள் பாதத்தைக் குத்துவதையும் அவள் லட்சியம் செய்யாமல் நிருத்தம் செய்தாள். கடைசியாக அப்புறமும் இப்புறமும் பார்த்தாள். யாரும் கண்ணுக்குப் புலப்படாமல் போகவே பாட்டை நிறுத்திப் பெருமூச்சு விட்டாள். பிறகு கீழே உட்கார்ந்து ஏதோ ஒரு சிறு குத்துக்கல்லைக் காலால் உதைக்கப் பெரிய பாறை அகன்றது. அது கொடுத்த இடத்தில் அவள் மெதுவாக இறங்கினாள் பூமிக்குள். பாறை நீங்கிய இடத்தில் அடிமட்டும் இருளே தெரிந்தாலும் ஆரம்பப்படிகள் கண்ணுக்கு நன்றாவே தெரிந்தன. சித்தரஞ்சனி கண்ணுக்கு மறைந்த பிறகு அந்தப் படிகளில் கௌதமிபுத்ரனும் இறங்கினான். அவனுடன் அதுவரை புதரில் பதுங்கியிருந்த பூஜாரி ஓடி வந்து, அந்த வாலிபனைத் தடுக்க முயன்றும் முடியவில்லை. அவன் இரண்டடி குகையை நோக்கி எடுத்து வைப்பதற்குள் குகைவாய் மூடிக்கொண்டது. மேலே இருந்த பெரிய பாறை ஏதோ விசையால் ஏவப்பட்டது போல் மெதுவாக நகர்ந்து பழையபடி குகையை சுவடு தெரியாமல் அடைத்துவிட்டது. என்ன செய்வது என்று தெரியாத பூஜாரி மனிதயத்தனம் பயன்படாதபோது சாதாரண மனிதர்கள் செய்யும் அலுவலில் இறங்கினான்; அதாவது தாபிலேசுவரரை மனத்தில் தியானித்தான். சண்டிகாதேவியையும் வேண்டிக்கொண்டான். ''தாயே! இந்த வாலிபன் யார் பெற்ற பிள்ளையோ, அவனைக் காப்பாற்றிவிடு. அவன் அசட்டுத் துணிவை மன்னித்துவிடு'' என்று.

குகைக்குள் இறங்கிய கௌதமிபுத்ர சதகர்ணியின் நிலைமை பூஜாரியின் நிலைமைக்கு முற்றும் மாறாயிருந்தது. பாறை மூடியதுமே காரிருள் சூழ்ந்துவிட்டதால் பக்கப் பாறைகளைப் பிடித்துக்கொண்டும் தடவிக்கொண்டும் படிகளில் மிக எச்சரிக்கையுடன் இறங்கலானான். இருபுறத்திலும் இருந்த சுவரில் பாறையில் கடினம்

zeevaa

இருந்தாலும் ஓரளவு நேராகவே இருந்தது. படிகளும் ஒரு படியைப் போலவே அகலமும் உயரமும் உள்ளதாக அமைந்திருந்ததால் இறங்குவது சுலபமாயிருந்த போதிலும் கௌதமிபுத்ரன் எச்சரிக்கையாகவே இறங்கலானான். அவன் நாலு படிகள் இறங்கியதும் செண்பக மலரின் சுகந்தமொன்று கிளம்பி அவனை மயக்கவே, அந்த வாசனையைச் சிறிது நேரம் முகர்ந்த கௌதமிபுத்ரன் மூன்றாவது படியிலேயே சிறிது நேரம் நின்றதும் இன்னொருவித பூ வாசனை கீழேயிருந்து மிதந்து வந்தது. அப்படி மாறி வந்த வாசனைக்குக் காரணத்தை அறியவும் தனக்கு முன்பு இறங்கிச் சென்ற சித்தரஞ்சனியைச் சந்திக்கவும் மெள்ள படிகளில் இறங்க முற்பட்டான். பத்து படிகள்தான் இறங்கியிருப்பான். அவன் இறங்குவது சிறிது தடைப்பட்டது. எதிரே கையில் பட்ட இரு தூண்களால். தூண்களை அசைக்க முயன்ற அந்த வாலிபன் அவை நகராததால் என்ன செய்வது என்று சிந்தித்த சமயத்தில் இரண்டு மெல்லிய கைகள் அவன் வலது கையைப் பிடித்தன. அவை முன்பு தன் கழுத்தை முறிக்க முயன்ற கைகளே என்பதை அவற்றின் பரிமாணத் தாலும் விரல்களின் மென்மை கலந்த வன்மையாலும் புரிந்துகொண்ட கௌதமிபுத்ரன் அந்தக் கைகளைத் தனது இன்னொரு கையாலும் பற்றி இழுக்க ஆரம்பித்ததும், பூவுடலொன்று அவன் உடலுடன் உராய்ந்தது. அவன் காதுக்கருகில் தவழ்ந்த இரு அதரங்கள், ''கௌதமிபுத்ரா! பெரும் ஆபத்திலிருக்கிறாய். எந்த நிமிடத்திலும் நீ சிறைப்படலாம். நீ இங்கிருந்து போய்விடுவது நல்லது'' என்று கூறியபோது அந்த உதடுகள் காதில் அவ்வப்பொழுது பட்டதால் 'இந்த இந்திர போகத்தை விட்டு நான் ஏன் ஓட வேண்டும்?' என்று உள்ளூர எண்ணினான். எண்ணியதோடு நிற்கவில்லை அவன். தான் என்ன செய்கிறோமென்பதை அறியாமலே இருட்டில் நின்ற சித்தரஞ்சனியின் உடலைத்

zeevaa

தனது கைகளால் சுற்றினான். ஆனால் அவன் பிடியில் அவள் அகப்படாமல் வெகு லாகவமாகக் கழன்று கொண்டாள். அடுத்து அவள் படிகளில் இறங்கி வேகமாக ஓடும் காலடி ஓசை மட்டும் கேட்டதால் தானும் வேகமாக இறங்க முற்பட்டான் சாதவாகனன். சுமார் பதினைந்து படிகள் இறங்கியதும் திடீரென ஒரு விளக்கு பாதாளத்தில் ஏற்றப்பட்டது. அந்த விளக்கில் சண்டிகாதேவியின் அருளும் பயங்கரமும் இணைந்த முகம் பளீரெனத் தெரிந்தது. கருங்கல்லில் வடிக்கப்பட்ட சிலையாயினும் தேவிக்குக் கண் மலர்களும் நகைகளும் அணிவிக்கப்பட்டிருந்ததால் அவள் கண்கள் நேராக உற்றுப்பார்ப்பது போன்ற பிரமையை அளித்தன. அவள் கையில் காணப்பட்ட சூலம் எதிரிகளை சம்ஹரிப்பதற்குச் சித்தமாயிருப்பது போல் குகைப்படிகளை நோக்கிக் கொண்டிருந்தது.

விளக்கில் ஜொலித்த சண்டிகாதேவிக்கு முன்பாகச் சித்தரஞ்சனி மண்டியிட்டுத் தலை வணங்கி உட்கார்ந்திருந்தாள். அவள் உதடுகள் பழைய சித்தரஞ்சனி ராகத்திலேயே உச்சாடனம் செய்யப்பட்டாலும் இம்முறை அந்தக் காலத்தில் குகையின் மேற்பகுதியிலிருந்த குதூகலமில்லை. பயபக்தியும் துன்பமும் நிறைந்த வர்ணமெட்டில் அவள் மந்திரங்களைக் கீதம்போல் இசைத்தாள். அந்தக் கீதத்தைக் குகைப் பாறைகள் நாலா பக்கங்களிலுமிருந்து எதிரொலி கிளப்பியதால் ஏதோ நாத வெள்ளம் அங்கு பிரவகிப்பது போன்ற பிரமை ஏற்பட்டது சாதவாகன வாலிபனுக்கு. எங்கும் நிறைந்த அந்த நாதப்பிரம்மத்துக்கு அடிமையாகச் சித்தரஞ்சனியின் பக்கத்திலேயே உட்கார்ந்து தரையில் சிரசை வைத்து வணங்கினான் அந்த வாலிபன். பல நிமிஷங்கள் கழித்து அவன் தலை தூக்கியபோதும் சித்தரஞ்சனி எழுந்திருக்காமல் தரையில் தலைமுட்டிய நிலையிலேயே கிடந்தாள்.

zeevaa

மெல்ல அவள்மீது கையை வைத்தான், கௌதமிபுத்ரன். அவன் கைப்பட்டது அவளுக்குத்தெரியவில்லை. சுரணை சிறிதும் வராத நிலையில் கிடந்தாள் அந்த அழகி. கவிழ்ந்த நிலையிலும் அவள் பூவுடல் எத்தனை அழகாயிருந்தது என்பதைக் கண்ட அந்த வாலிபன் வளைந்த அந்த உயிர்ச் சிலையைக் கவனிக்கலானான். அவள் வளைந்து கிடந்ததால் அவள் மார்பகம் சிறிதும் தாழாமல் கெட்டிப்பட்டு ஒரே நிலையில் நின்றதையும், இடை வளைந்ததால் அவள் பின்னழகு அதிகமாக எழுந்து கிடந்ததையும் எண்ணிய கௌதமிபுத்ரன், "சே! இந்த எண்ணங்கள் சந்நிதியில் வரலாமா? அபசாரம்! என் சித்தமென்ன இப்படிக் குலைந்துவிட்டது?' என்று தன்னைத்தானே கண்டித்துக் கொண்டு தனது மனத்தைத் தூய்மைப்படுத்திக்கொள்ள மகாசண்டியை நோக்கினான். சண்டிகா தேவி தன்னை எரித்துவிடுவதுபோல் பார்ப்பதாகத் தோன்றியதால் தனது கண்களை அம்பாளின் திருவடிகளில் செலுத்தினான். சகல பாவங்களையும் தீயினில் தூசுபோல் பஸ்மீகரப்படுத்திவிடும் அந்த அருட்பாதங்கள் அந்த வாலிபனின் இதயத்தைத் தூய்மைப்படுத்தவே செய்தன. தன்னை இன்னும் தூய்மைப்படுத்திக்கொள்ள அம்பாள் திருவடிகளைத் தொட எண்ணித் தேவியின் சிலையருகே சென்றான். அந்தச் சமயத்தில் ஒலித்தது சித்தரஞ்சனியின் குரல், "சண்டியை நெருங்க வேண்டாம்" என்று.

திரும்பிப் பார்த்த சதகர்ணி, சித்தரஞ்சனி வணங்கிய நிலையிலிருந்து எழுந்துவிட்டதையும், அவள் கண்களில் கோபப் பொறிகள் வீசுவதையும் கண்டான். "சித்தரஞ்சனி!" என்று மெதுவாக அழைக்கவும் செய்தான்.

அவள் அவனை ஏறெடுத்து நோக்கினாள். "உன்னை யார் இங்கு வரச்சொன்னது? குகையைத் திறக்கும் சூட்சுமம்

உனக்கு எப்படித்தெரிந்தது?'' என்று சினம் பெரிதும் துளிர்த்த குரலில் வினாக்களைத் தொடுத்தாள்.

இந்த திடீர் மாற்றத்துக்கு என்ன காரணம் என்று அவன் வியந்து கொண்டிருந்தபோதே அவன் தோள்மீது இரும்புக் கையொன்று விழுந்து அவனை வேகமாகத் திருப்பியது. தன்னைத் திருப்பியவன் முந்திய இரவில் சித்தரஞ்சனியை அறைந்தவன் என்பதை உணர்ந்து கொண்ட கௌதமிபுத்ரன், ‘‘எடு உன் கையை. தெய்வசந்நிதானத்தில் பூசலுக்கு இடமில்லை'' என்று சொன்னான்.

‘‘பெண்ணைக் கெடுக்கத்தான் இது இடம்போலிருக் கிறது?'' என்று சினத்துடனும் ஏளனத்துடனும் பேசியதன்றி அந்த ராட்சதன், ‘‘உன் உயிர் இத்துடன் முடிந்தது. சண்டியைப் பிரார்த்தித்துக்கொள். நல்ல கதிக்காவது போகலாம்'' என்றும் கூறி இடையிலிருந்த குறுவாளை வலது கையில் எடுத்துக்கொண்டு ஓங்கினான் கௌதமிபுத்ரனை அங்கேயே வெட்டிப்போட. ‘‘சண்டிகாதேவி! இந்த நரபலியை வாங்கிக்கொள்'' என்று இரைந்தும் கூவினான். ஆனால் தேவி அன்று பலியை விரும்பவில்லை. அந்த ராட்சதன் வலதுகை திடீரென்று நடுங்கத் தொடங்கி விட்டது. கையிலிருந்த குறுவாள் தரையில் விழுந்து விபரீத ஒலிகளைக் குகையெங்கும் கிளப்பியது. ஆனால் அந்த இரவின் கதை அத்துடன் முடியவில்லை. அந்த ராட்சதனுக்குப் பின்னால் இன்னொருவன் குகைக்குள் இறங்கி வந்து கொண்டிருந்தான். அந்த மனிதன் பாரத சரித்திரத்தின் ஒரு முக்கிய பகுதியைத் திருப்பியவன் என்பதையும் சாதவாகனர்களின் குல வைரி என்பதையும் கௌதமிபுத்ரன் புரிந்துகொண்டான்.

zeevaa

அத்தியாயம் 8

அவள் கோரிக்கை!

கௌதமிபுத்ரன் தோளைப் பிடித்துத் தனது இடது கையால் திருப்பி வலது கை குறுவாளால் அவனை வெட்டிப்போட ராட்சதன் போன்ற க்ஷத்ரபன் தனது உலக்கைக் கையை ஓங்கியதும் சாதவாகன வாலிபன் அழிந்தானென்றே எண்ணி மிதமிஞ்சிய அச்சத்துக்கு ஆளான சித்தரஞ்சனி அடுத்த விநாடி விவரிக்க முடியாத அளவுக்கு வியப்பையும் பிரமிப்பையும் அடைந்தாள். க்ஷத்ரபன் கைமுழுதும் திடீரென நடுங்கியதையும், நடுக்கத்தைத் தொடர்ந்து குறுவாள் தரையில் விழுந்து உலோக ஒலிகளை குகையெங்கும் பரப்பியதையும் கண்ட சித்தரஞ்சனி அதற்குக் காரணம் எதுவாயிருக்கும் என்று ஊகிக்க முற்பட்டுக் குகைப்படிகளை நோக்கியதும், மேலிருந்து கீழே இறங்கிக்கொண்டிருந்த மனிதனைக் கண்டதன் விளைவாக தனது ஊகத்தைவிட்டு அடுத்து நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளை எதிர்பார்த்து நின்ற இடத்தைவிட்டு நகராமலே நின்றாள்.

குகைப்படிகளில் மேலிருந்து கீழே இறங்கி வந்த மனிதன் கௌதமிபுத்ரனைக் கொல்ல முயன்ற க்ஷத்ரபனை விட அதிக உயரமானவனாகத் தெரிந்தாலும், வீண் சதைப்பிண்டமாக இராமல், தேவையான அளவுக்கு சதைபிடித்து பொதுப் பார்வைக்கு க்ஷத்ரபனைவிடச் சற்று இளைத்தவனாகவே காட்சியளித்தாலும், அவனிடம் ஒரு தோரணை இருந்தது.

zeevaa

நடையில் நிதானமும் கம்பீரமும் தெரிந்தன. அவன் கண்களில் ஒரு அசட்டையும் பெருந்தன்மையும் கூடக் காணப்பட்டன. அவன் விசால நெற்றியின் குறுக்கே சந்தனக்கீறுகள் இட்டதுபோல் சருமம் மூன்று மெல்லிய மடிப்புகளுடன் தெரிந்தது. அவன் கௌதமி புத்ரனை விட சிறிது அதிக வயதுடையவனென்பதை நிரூபித்தன. அவன் தலைக்குழல்கள் முரடாகவும், சுருண்டும் இருந்ததால் அவன் விசால முகத்துக்குச்சிறிது அழகையும் ஊட்டின. நடுத்தர வயதுடைய அவன் வாலிபவயதில் அழகின் இலக்கணமாக இருந்திருக்க வேண்டுமென்பதைப் பொதுத்தோற்றம் விளக்கவே செய்தது. அவன் அடர்ந்த பெரிய பழுப்புநிற மீசை அவன் அஞ்சா நெஞ்சத்துக்கு அடையாளமாக அமைந் திருந்தது. அவன் நீண்ட உறுதியான கால்களும் விசால மார்பும் பழைய கிரேக்கர்கள் அணிந்திருந்தது போன்ற இரும்புவலைச்சட்டையும் காலில் இருந்த பாத அணிகளும் அவன் சாக வம்சத்தினனென்பதையும் *ஷஹராட குலத்தைச் சேர்ந்தவன் என்பதையும் வலியுறுத்தின. எல்லாவற்றையும் விட அவன் மார்புச்சட்டையின் நடுவிலிருந்த ஒரு பதக்கத்தில் காணப்பட்ட வில்லம்பு இலச்சினையில் அம்பின் நுனி பாம்பின் தலைபோல் இருந்ததும் சாகர்களின் சாதாரண முத்திரைகளுக்குச் சிறிது மாறுதலாகக் காட்சியளித்தது.

இவையனைத்தையும் சித்தரஞ்சனி மட்டுமின்றி கௌதமிபுத்ரனும் கவனித்ததால் வந்தவன் யாரென்பதை அவன் திட்டவட்டமாக அறிந்து கொண்டான். அவன் வரவு

★ Kshaharata is family name. Kshatrapa is the name of the office, an individual holds, normally the office of Governor of a Province. Kshatrapa is the Sanskrit adaptation of the old persian Kshatrapavan (Governor of a Province). History of Ancient India- By Sri R.Tripathi-page 214.

zeevaa

சித்தரஞ்சனியை நிலைகுலுங்கச் செய்தாலும் கௌதமி புத்ரனுக்குச் சிறிதளவும் அச்சத்தை விளைவிக்காததால், அவன் மேலிருந்து இறங்கி வந்து க்ஷத்ரபனுக்குப் பின்னால் நின்றுகொண்ட அந்த மனிதனை தலைசாய்த்து வணங்கி ''ஷஹராட மகாப்பிரபு நாகபாணர் வரவு இங்கு சுபிட்சத்தை விளைவிக்கட்டும்'' என்று முகமன் கூறினான் சாதவாகன வாலிபன்.

மகாக்ஷத்ரபனான நாகபாணன் உதடுகளில் புன்முறுவல் அரும்பியது. அவனும் லேசாக தனது தலையை ஒருபுறம் சாய்த்து, ''சாதவாகன மன்னர் வீரத்தைப் பற்றியும் துணிவைப் பற்றியும் நான் ஏற்கனவே கேள்விப்பட்டிருக் கிறேன். அவர் புத்திக் கூர்மையைப் பற்றியும் கதைகள் பல உலாவுகின்றன மகாராஷ்டிரத்தில். அந்தக் கதைகள் பொய்யல்லவென்பதை இன்று நானே கண்டேன்'' என்று கௌதமிபுத்ரனை சிலாகித்தான்.

''சாதவாகனர் ஆண்டுவந்த மகாராஷ்டிரத்தையும், வடக்குப் பகுதிகளையும் விழுங்கிய நாகபாணர் வீரமும் குறைந்ததல்லவே'' என்று பதிலுக்குச் சிலாகித்தான் கௌதமிபுத்ரன்.

ஏதோ நெடுநாள் கழித்துப் புதிதாக சந்தித்த இரு நண்பர்கள் குசலப் பிரச்னம் செய்து கொள்வதுபோல் பேசிக் கொண்டு நின்ற இருவரையும் பார்த்து எரிச்சல் கொண்ட ராட்சத க்ஷத்ரபன் கைகள் நடுங்கிய நிலையிலேயே, ''இங்கு நடந்ததை மகாக்ஷத்ரபர் கவனிக்கவில்லை போலிருக்கிறது?'' என்று கூறினான் குரலில் எரிச்சலைக் காட்டி.

இதைக்கேட்ட நாகபாணன் இன்னுமிரண்டு படிகள் இறங்கி க்ஷத்ரபன் தோளில் கையை ஆதரவுடன் வைத்து, ''தம்பீ! நீ செய்தது தவறு. காரணமில்லாமல் ஒரு மகாவீரனைக் கொல்ல முயன்றது தவறு. அதுவும் சண்டிகா

zeevaa

தேவியின் சந்நிதானத்தில் கொலை போன்ற மகாபாதகச் செயலைச் செய்யத் துணிந்தது மிகவும் பாவம்'' என்று கூறி இன்முறுவல் கொண்டான். அவன் சொற்களில் இகழ்ச்சி நன்றாகவே ஒலித்தது.

அந்த இகழ்ச்சியின் சாயையை க்ஷத்ரபனும் கவனித்திருக்க வேண்டும். ''அண்ணா! நமது குலவைரிக்கு சாதகமாகப் பேசுகிறீர்கள்...'' என்ற வார்த்தையை முடிக்காவிட்டாலும் சினம் சொற்களில் நன்றாகவே தெரிந்தது.

''தம்பீ! அவரும் நம்மை அப்படித்தான் நினைக்கிறார். வைரிகளாயிருப்பதால் தவறில்லை. வைரியிடமும் நிதானத்துடனும் தர்மத்துடனும் நடந்து கொள்ளவும் மனப்பாங்கு நமக்கு வேண்டும்'' என்று உபதேசித்தான் நாகபாணன்.

''அப்படியானால் இவனைச் சீராட்டட்டுமா?'' என்று தம்பி வினவினான்.

''இப்பொழுது உன்னால் முடியாது. உன் கை நடுக்கம் இன்னும் விடவில்லை'' என்று நாகபாணன் மேலும் சில படிகள் இறங்கி வந்து தம்பியின் உடலைச்சுற்றித் தனது ஒரு கையால் வளைத்து ஆடிய கையில் ஏதோ ஒரு பகுதியை அழுத்த கையாட்டம் நின்றது. அதை நிறுத்திய நாகபாணன் எதிரே சற்று எட்ட நின்றிருந்த கௌதமிபுத்ரனை நோக்கி, ''தம்பிக்கு மல்யுத்தத்தின் நரம்பு சாஸ்திரம் தெரியாது'' என்று தம்பியின் அறியாமைக்கு மன்னிப்பு கேட்கும் பாவனையில் பேசினான் மகாக்ஷத்ரபனான நாகபாணன்.

அவனுக்கு நேரிடையாகப் பதில் சொல்லவில்லை கௌதமிபுத்ரன். ''பழமொழி சற்று மாறியிருக்கிறது. தங்கள் குடும்பத்தில்'' என்று கூறினான்.

zeevaa

''பழமொழியா! மாறுதலா!'' என்று வினவினான் நாகபாணன்.

''ஆம்... மகாராஜா! தம்பியுள்ளான் படைக்கஞ்சான் என்பது பழமொழி. தங்கள் குடும்பத்தில் அது மாறியிருக் கிறது. அண்ணனுள்ளான் என்ற சொல் பொருத்தமா யிருக்கும்'' என்ற கௌதமிபுத்ரன், ''தாங்கள் இங்கு வந்தது இந்த ஏழையைச் சந்திப்பதற்காக மட்டும் இருக்காதென்று நினைக்கிறேன்'' என்று சொல்லி முறுவல் கொண்டான்.

இதைக் கேட்ட நாகபாணன் எதிரியின் முறுவலைக் கண்டு சீற்றம் கொள்ளவில்லை சிறிதளவும். ''தவறு சாதவாகனா! உன்னைக் காணவே இங்கு வந்தேன். நீ இங்கு வரப் புறப் பட்ட அன்றே எனக்குச் செய்தி வந்தது. ஸஹ்யாத்ரிக்கு மேற்குப் புறமிருக்கும் கொங்கணிக்கும் கீழ்ப்புறமிருக்கும் பிரதிஷ்டானா தலைநகருக்கும் இடையே நிற்பது ஒரு மலை. அதன் மறுபுறமிருப்பதை, அதன் நிலவரத்தை அறியாத மன்னர் நாடு எத்தனை நாள் நிலைக்கும். தவிர மகாவீர னென்றும் எதையும் சாதிக்கும் திறனுள்ளவனென்றும் பெயர்பெற்ற கௌதமிபுத்ரன் தெற்கு நோக்கிப் புறப்பட்டா னென்றால் காரணத்தை ஊகிப்பது ஒரு பிரமாதமான காரியமல்ல'' என்று தனது ஊகத்தைச் சர்வசாதாரணமாக விளக்கினான்.

அதற்குமேல் விவாதிக்க இஷ்டப்படாத நாகபாணன், ''சாதவாகன மகாராஜாவை சகல மரியாதைகளுடன் எங்கள் இருப்பிடத்திற்கு அழைத்துச்செல்ல இஷ்டப்படுகிறேன். உங்களை அழைத்துவர தம்பி மகள் இருக்கிறாள்'' என்று கூறிய நாகபாணன், ''சித்தரஞ்சனி! சாதவாகன மகாராஜாவை நமது இருப்பிடத்திற்கு அழைத்து வருவது உனது பொறுப்பு'' என்று சொல்லிச் சட்டென்று திரும்பி மீண்டும் படிகளில் ஏறலானான். அவன் அப்படி கௌதமி

zeevaa

புத்ரனை சுதந்திரமாக விட்டுச் செல்வதைக் கண்ட க்ஷத்ரபன், ''அண்ணா! இவனுடன் என் பெண்ணைத்தனியாகவா விட்டுவரச் சொல்கிறீர்கள்?'' என்று கூவினான்.

நாகபாணன் மேல்படியிலிருந்து சற்றே தலையைத் திருப்பித் தம்பியை நோக்கினான். ''தம்பி! உன்னைக் கொண்டு கௌதமிபுத்ரனை எடை போடாதே. அவன் முறை தவறாதவன், ஒழுக்கத்தின் இலக்கணம் என்று பெயரெடுத்திருக்கிறான். பேசாமல் வா'' என்று சற்று கடுமையுடன் கூறிவிட்டுப் படிகளில் ஏறிச்சென்றுவிட்டான்.

க்ஷத்ரபன் சில நிமிடங்கள் சிந்தனை வசப்பட்டு அண்ணனைத் தொடராமலே நின்றான். பிறகு தன்னைத் தானே சமாதானப்படுத்திக்கொள்பவன் போல் தலையை அசைத்துவிட்டுத் தனது ராட்சத விழிகளை கௌதமிபுத்ரன் மீது திருப்பி, ''சாதவாகனா! என் பெண்ணுக்கு ஏதாவது தீமை நேர்ந்தால் உன்னைக் கண்டதுண்டமாக வெட்டி அஞ்சன்வேல் நதியின் முதலைகளுக்குப் போட்டு விடுவேன்'' என்று எச்சரித்துவிட்டுப் படிகளில் ஏற முற்பட்டான்.

அவனை நோக்கிய கௌதமிபுத்ரன், ''உங்கள் மகளை நீங்கள் அழைத்துப் போவதை நான் தடுக்கவில்லை'' என்று சொன்னான்.

க்ஷத்ரபன் தனது மகளைத் திரும்பிப் பார்த்தான். பிறகு ஏதும் பேசாமல் படிகளில் ஏறிச்சென்றுவிட்டான்.

தனிமையில் விடப்பட்ட சித்தரஞ்சனியும் கௌதமி புத்ரனும் ஒருவரையொருவர் சில நிமிடங்கள் பார்த்துக் கொண்டே நின்றார்கள். அந்த வாலிபனின் அழகும் வீரமும் கலந்த வதனத்தையும் நீண்ட கைகளையும், விசால மார்பையும், நின்ற தோரணையில் இருந்த கம்பீரத்தையும்

zeevaa

நன்றாகப் பார்த்தாள் சித்தரஞ்சனி. பிறகு துன்பப்பெருமூச்சு விட்டாள்.

குகையில் அதுவரை நடந்த நிகழ்ச்சிகள் பலவற்றுக்குக் காரணம் புரியவில்லை கௌதமிபுத்ரனுக்கு. எந்த சித்தரஞ்சனியை நெருங்கியதற்காகத் தன்னை க்ஷத்ரபன் கொல்ல முயன்றானோ அதே சித்தரஞ்சனியை அண்ணன் உத்தரவால் தன்னிடம் எப்படி ஒப்படைத்துப் போகத்தம்பி ஒப்புக்கொண்டான் என்று சிந்தித்தான் அந்த வாலிபன். தவிர எந்த தைரியத்தைக் கொண்டு தன்னை அழைத்துவரச் சொல்லி நாகபாணன் சித்தரஞ்சனிக்கு உத்தரவிட்டான் என்றும் எண்ணிப் பார்த்தான். தான் போக மறுத்தால் அபலையான சித்தரஞ்சனி என்ன செய்யமுடியும் என்றும் சிந்தையை ஓட்டிப் பார்த்தான். இதில் தன் சிந்தனைக்கும் எட்டாத ஏதோ மர்மம் இருப்பதைப் புரிந்து கொண்டாலும் அதைப்பற்றி திட்டமாகத் தெரியாததால் சித்தரஞ்சனியை விசாரிக்கலாமென்று அவளை நோக்கினான்.

சித்தரஞ்சனி தலைகுனிந்து நின்று கொண்டிருந்தாள். சண்டிகாதேவியின் முன்பு அவள் ஏற்றிவைத்த விளக்கு வெளிச்சத்தில் அவள் வெள்ளைத் துகில் பெரிதும் பளபளக்க ஏதோ தெய்வ மங்கைபோல அவள் விளங்கினாள். நல்ல வெண்மை பெற்ற அவள் சங்குக் கழுத்தின் மீது விளக்கின் பொன்னிற ஜோதி விழுந்ததால் அந்தக் கழுத்து பழுப்பு தந்தத்தைப் போல சிறிது நிறம் மாறியிருந்தது. அவள் ஆடை மிக மெல்லியதாயிருந்ததால் அது தந்த அவள் மேனியின் விளக்கம் கௌதமிபுத்ரன் சித்தத்தை அள்ளிச் சென்றது. தலைகுனிந்து நின்றதால் அவள் மேலாடை இடைவெளி கொடுத்ததன் விளைவாக உட்புறம் சிறிய கச்சையை மீறி நின்ற அழகிய மார்பு முகடுகள் அவனைப் பைத்தியமாக அடித்துவிடும் போலிருந்தன. சிற்றிடையில் இறுகக்

zeevaa

கட்டியிருந்த ஆடையால் சற்றே கன்னிக் காணப்பட்ட சருமப்பகுதி அந்த வாலிபன் அனுதாபத்தைக் கிளறியதா அல்லது ஆசையைக் கிளறியதா என்று புரியாத ஒரு நிலையை அடைந்தான் கௌதமிபுத்ரன். இத்தனைக்கும் அவள் கால்களில் புகுந்த சேலை கால்களின் திண்ணிய பரிமாணத்தை எடுத்துக்காட்டவே செய்ததால் அவன் மனம் கலங்கி மெள்ள அவளை அணுகி ''பெண்ணே!'' என்று மெதுவாக அழைத்தான்.

அப்பொழுதும் அவள் அவனை தலைநிமிர்ந்து பார்க்க வில்லை. அவன் அவளை அணுகி அவள் சிற்றிடையில் ஒரு கையை வைத்த போதும் சிலையென நின்றாள். அவன் இன்னொரு கையால் அவள் தலையை மெதுவாகத் தூக்கி அவள் கண்களை நோக்கினான். அவள் கண்களில் அச்சம் நிரம்பியிருந்தது. அவள் செம்பருத்தி இதழ்கள் லேசாகத் துடித்தன. அடுத்த விநாடி அவள் திடீரென செயல்பட்டாள். அவள் கைகள் எழுந்து அவன் கழுத்தை இறுக்கி கீழ்நோக்கி இழுத்தன. அவள் இதழ்களுடன் இழைந்தன. பிறகு அவை சிறிது பின்வாங்க, ''எனக்கு ஒரு உதவி செய்வீர்களா?'' என்று அவள் இதழ்களை அசைத்துக்கேட்டாள்.

''என்ன உதவி?''

''எதுவாயிருந்தாலும் செய்யவேண்டும்.''

''சரி சொல்.''

''உங்கள் வாளின்மீது ஆணையிடுங்கள்.''

''என் சொல்லே ஆணைதான்''

அவள் சிறிது மௌனம் சாதித்து, பிறகு மிக மெதுவாகச் சொன்னாள். ''கௌதமிபுத்ர! என்னை இப்பொழுதே இந்த சந்நிதியிலேயே சண்டிகாதேவி முன்பு திருமணம் செய்து கொள். மறுக்காதே'' என்றாள்.

zeevaa

இப்படி ஒரு திருப்பம் ஏற்படுமென்பதை சொப்பனத்திலும் நினைக்காத கௌதமிபுத்ரன் சித்தரஞ்சனியின் பூவுடலை அப்படியே தனது கைகளில் வாரி எடுத்துக் கொண்டான்.

''குகை வாயிலை மூடிவிட்டு வாருங்கள்'' என்று அவள் தனது கன்னத்தை அவன் கன்னத்துடன் இழைத்து காதுக்கருகில் செய்தி சொன்னாள்.

அப்படி அவள் சொல்லிக்கொண்டிருக்கும்போதே குகைவாயில் சிறிதும் சத்தமின்றித் தானாகவே மூடிக் கொண்டது.

அத்தியாயம் 9

புதிதாக வந்த மரக்கலம்

மகாக்ஷத்ரபனும் மகாராஷ்டிரத்தையே ஆக்ரமித்துத் தனது ஆட்சிக்குள் கொண்டு வந்து விட்டவனும் மகாவீரனென்று பெயர் பெற்றவனுமான நாகபாணன், தன்னை அழைத்து வரும் பொறுப்பைச் சித்தரஞ்சனியிடம் ஒப்படைத்துவிட்டுத் தம்பியுடன் சென்றுவிட்டதையும், அதற்குப் பிறகு, குகைக்குள் அடியோடு மாறிவிட்ட நிலையையும் எண்ணிப் பார்த்த கௌதமிபுத்ரன் பல விஷயங்களுக்கு விடை காணாமல் தவித்தான். சித்தரஞ்சனியின் இதழ்கள் தனது இதழ்களுடன் இணைந்துவிட்ட பிறகும் தன்னை மணக்கும்படி அவள் வெளியிட்ட கோரிக்கைக்குப் பிறகும், குகையின் சம்பவங்கள் இயற்கைக்கு முற்றும் மாறாயிருப் பதை எண்ணிப் பார்த்த கௌதமிபுத்ரன் சிறிது குழப்பத் திலேயே இருந்தான். சித்தரஞ்சனி குகை வாயிலை மூடிவிட்டு வரும்படி தன்னைக்கேட்டுக்கொண்டதையும் அவள் எண்ணத்திற்கு இசைவது போல் குகைவாயிலும் சத்தம் போடாமல் மூடிக்கொண்டதையும் கவனித்த சாதவாகனன் குகை தானாக மூடிக்கொள்ளவில்லை யென்பதையும் யாரோ வேண்டுமென்றே மூடியிருக்க வேண்டுமென்பதையும் சந்தேகமறப் புரிந்து கொண்டான். அப்படி யாராவது மூடியிருந்தால் அது யாராயிருக்கும் என்ற சிந்தனையிலும் இறங்கிச் சித்தரஞ்சனியைத் தழுவிய கைகளை அகற்றாமலே ''சித்தரஞ்சனி, குகை வாயிலை

zeevaa

இங்கிருந்தே மூட விசை ஏதாவது இருக்கிறதா?'' என்று வினவினான், அவள் கழுத்தில் தனது உதடுகளைப் புதைத்த வண்ணம்.

அவன் உதடுகள் புதைந்ததால், உணர்ச்சிக்குப் பெரிதும் இலக்கான சித்தரஞ்சனி தனது அழகிய மெல்லிய கழுத்தை லேசாகத் திருப்பினாள். பெருமூச்சு விட்டு அவன் கைகளில் அதிகமாக நெருங்கினாள். அந்தப் பூவுடலை லேசாகத் திருப்பி அவள் முதுகுப் பகுதியைத் தன்மீது சாய்த்துக் கொண்ட கௌதமிபுத்ரன் தனது கைகளை அவள் தோள்மீது தவழச் செய்து முன்புறத்தில் தொங்கவிட்டுக் கொண்டான். முன்புறத்தில் துளைந்த அவன் கைகளிலிருந்தோ பின்புறத்தில் அதிகமாக நெருங்கிய அவன் திடமான தேகத்திலிருந்தோ விடுபட எந்த விதமான முயற்சியையும் எடுக்காத சித்தரஞ்சனி, எதிரே தன்னைப் பார்த்துக்கொண்டிருந்த சண்டிகாதேவியின் முகத்தைப் பார்த்த வண்ணம், ''குகையை மூட இங்கு ஏதும் விசைகிடையாது'' என்று மிக மெதுவாகச் சொன்னாள்.

அப்படி அவள் பதில் சொன்னபோது அவள் தேகம் நடுங்கியதால் அதைச் சற்றுத் தனது உடலுடன் அழுத்திப்பிடித்த சாதவாகனன், ''அப்படியானால் யாரோ அதை மூடியிருக்க வேண்டும்'' என்று அவள் காதுக்கருகில் சொன்னான்.

உணர்ச்சியின் சுழற்சியில் சிக்கியிருந்த சித்தரஞ்சனி தனது மார்புமீது தவழ்ந்து கொண்டிருந்த அவன் கைகளைத் தனது கைகளால் பற்றி அழுத்தியவண்ணம், ''ஆம்'' என்றாள் மிக மெதுவாக.

அவன் தனது கன்னத்தை அவள் கன்னத்தோடு இழைத்துக் கொண்டே, ''மூடியது உன் தந்தையாயிருக்குமா அல்லது

zeevaa

உங்கள் வீரர்கள் யாராவதாயிருக்குமா?'' என்று வினவினான்.

''என்னைச் சேர்ந்தவர்கள் யாரும் இதைச்செய்யத்துணிய மாட்டார்கள்'' என்றாள் அந்தச் சித்தினி.

''ஏன் அப்படித் திட்டமாகச் சொல்கிறாய்?'' என்று கேட்ட கௌதமிபுத்ரன் தனது கைகளை அவள் மார்பிலிருந்து நீக்கி அவளைப் பிடித்துத் தன்னை நோக்கித்திருப்பி அவள் விழிகளை நோக்கினான்.

அவள் கண்கள் மூடிக்கிடந்தன. நேராகத் திருப்பப்பட்ட தாலும் அவன் கைகளால் இறுக்கப்பட்டதாலும் அவன் மார்புடன் அழுந்திய அவள் மார்பு மிகவும் கெட்டிப்பட்டது. அவள் கால்கள் அவன் கால்களுடன் அழுந்தி இழைந்தன. அவள் மூச்சு பெருமூச்சாக வந்து உதடுகள் லேசாகத் துடித்தன. அவளை வளைத்திருந்த கைகளில் ஒன்றை முன்புறமாகக் கொண்டு வந்த கௌதமிபுத்ரன் அவள் முகவாய்க் கட்டையைச் சிறிது கையால் தூக்கிவிட்டுச்சற்றே குனிந்து அவள் பங்கயக் கண்களைத் தனது உதடுகளால் தீண்டினான். பிறகு சற்று மீண்டு அந்தக்கண்களைத் தனது கைவிரல்களால் பிரிக்க முயன்றான். ''கண்களை விழித்துப் பார் சித்தரஞ்சனி'' என்று சொல்லவும் செய்தான் அந்த வாலிபன்.

''ஊஹும்!'' முடியாது என்பதற்கு அடையாளமாக அந்த மறுப்பு ஒலியை எழுப்பினாள் அந்தப் பைங்கிளி.

''ஏன் சித்தரஞ்சனி! என்னைப் பார்க்க இஷ்டமில்லையா?'' முணுமுணுத்தான் அந்த வாலிபன்.

''இஷ்டமில்லாமலா இப்படி...'' கண்களை மூடிய படியே அவள் பேசினாள்.

zeevaa

அதற்குமேல் கௌதமிபுத்ரன் அவளைத் தனது இருகை களிலும் அனாயாசமாகத் தூக்கிக்கொண்டு போய்க்கடைசிப் படியில் உட்கார்ந்து அவளை மடியில் கிடத்திய வண்ணம் அவளை உற்று நோக்கினான் சில விநாடிகள். கர்ப்பக் கிரகத்தின் விளக்கின் பொன் ஒளியில் அவள் மார்பு எழுந்து எழுந்து தாழ்ந்துகொண்டிருந்தது. இரண்டு தாமரை மொட்டுக்கள் காற்றால் சலனப்பட்ட நீரின் அலைகளால் தூக்கித் தூக்கி அமிழ்த்தப்பட்டது போன்ற பிரமையை விளைவித்தது. மூடியிருந்த அவள் கண்களின் இரப்பைகள் சமுத்திரக் கிளிஞ்சல்கள் இரண்டு மலர் இதழ்களாக மாறிவிட்டது போன்ற நிலையை சிருஷ்டித்தன. அவள் செவ்விய அதரங்கள் ஏதோ சொல்ல முற்பட்டு அசைந்து மூடிக்கொண்டனவே தவிர சொற்கள் ஏதும் வெளிவர வில்லை. தன் மடியில் புஷ்பக் கொடிபோல் சக்தியை அடியோடு இழந்தவளாய் பலவீனப்பட்ட வளாய்க் கிடந்த சித்தரஞ்சனியை மெள்ள எழுப்ப முற்பட்ட சாதவாகனன் அவள் உடலை அசைத்து, "சித்தரஞ்சனி! கண்களைத் திறந்து பார். நாம் பேச வேண்டியது இருக்கிறது. துரிதமாகச் செயல்பட வேண்டியதும் இருக்கிறது" என்று கூற அவள் மெதுவாகக் கண்களைத் திறந்தாள். சாதவாகனனின் காந்தக் கண்கள் அவள் விழிகளைக் கவர்ந்து நின்றன. அந்தச் சில நிமிடங்களில் சுயஉணர்வை வரவழைத்துக் கொண்ட கௌதமிபுத்ரன், "சித்தரஞ்சனி! துரிதமாக விளைந்து விட்ட பல நிகழ்ச்சிகளுக்கு எனக்குக் காரணம் புரியவில்லை. நீதான் விளக்கவேண்டும்" என்றவன், "நான் இங்கு வரப்போவதை நீ முன்பாகவே ஊகித்திருக்கவேண்டும்" என்று சொன்னான்.

அவன் விழிகளிடமிருந்து தனது விழிகளை நீக்காமலே அவள் பதில் சொன்னாள், "ஆம் ஊகித்தேன்" என்று.

"என்னை ஓடிவிடும்படி செய்தி எழுதியிருந்தாய்."

zeevaa

''ஆம்... ஆனால்...''

''சொல்...''

''நீங்கள் ஓடமாட்டீர்களென்பது எனக்குத் தெரியும்....''

''இங்கு வருவேனென்பதும் தெரியுமா?''

''தெரியும்''

''உன் தந்தையும் நாகபாணனும் வருவதும் தெரியுமா?''

''தெரியாது. நாகபாணர் இங்கு வந்தது நான் முற்றும் எதிர்பாராத நிகழ்ச்சி.''

''உன் தந்தை...'' என்று ஏதோ பேசத் துவங்கிய சாதவாகனனைச் சற்றுத் துரிதமாகவே இடைமறித்த சித்தரஞ்சனி, ''அவர் என் தந்தையல்ல'' என்று ஒரு வெடியை எடுத்து வீசினாள்.

கௌதமிபுத்ரனுக்கு இது ஒருபுதிய கதையாயிருக்கவே அவன் தனது மடியிலிருந்த சித்தரஞ்சனியைத் தூக்கிப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு, ''க்ஷத்ரபன் உன்னை மகளென்று அழைத்தானே?'' என்று வினவினான்.

பக்கத்தில் உட்கார்ந்த சித்தரஞ்சனி தனது தலையைச் சாதவாகனன் தோள்மீது சாய்ந்துக்கொண்டு, ''வளர்த்தது அவர்தான்'' என்றாள்.

''பெற்றது?''

''யாரோ தெரியாது!''

''எங்கிருந்து உன்னை எடுத்து வந்தார்?''

''சிந்து நதிக்கரையில் ஒரு மரத்தடியில் நான் கிடந்ததாகச் சொன்னார்.''

இதைக்கேட்ட கௌதமிபுத்ரன் நீண்ட நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். ''உன்னை அவன் அன்று கடற்கரையில்

zeevaa

அறைந்ததற்குக் காரணம் புரிந்தது. சொந்த மகளை எந்தத் தந்தையும் அப்படி அடிக்கமாட்டான்'' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்ட சாதவாகனன், ''உன்னை மணம் புரிந்துகொள்ளும்படிக் கேட்டாயே...'' என்று சொற்களைச் சிறிது நீட்டினான்.

''கேட்டேன்.''

''முன்பின் தெரியாதவனை எப்படித்திருமணம் செய்து கொள்ளும்படி கேட்டாய்.''

''நீங்கள் முன்பின் தெரியாதவரல்ல. உங்களைப்பற்றிச் சாகர்கள் வட்டாரங்களில் சதா பேசப்படுகிறது. தவிர இங்கேயே உங்களைப் பலமுறை பார்த்துவிட்டேன்.''

''அது போதுமா திருமணத்திற்கு?''

''போதும் தவிர...''

''சொல் உண்மைக் காரணத்தை.''

''எனக்குக் கணவனாக நீங்கள் என்னுடன் வந்தால் உங்களை என் தந்தையோ மகாக்ஷத்ரபரோ எதுவும் செய்ய முடியாது. க்ஷத்ரபர் மருமகனைத்தொடக்கூட யாரும் துணியமாட்டார்கள்'' என்றாள் சித்தரஞ்சனி.

சற்றுச் சிந்தித்த சாதவாகனன் லேசாக நகைத்து, ''என் உயிரைக் காப்பாற்ற என்னை மணம் செய்துகொள்ள நினைக்கிறாயா?'' என்று வினவினான் நகைப்பின் ஊடே.

''அதுவும் ஒரு காரணம். ஆனால் அது மட்டும் காரண மில்லை, சந்தேகமிருந்தால் என் இதயத்தைக் கேளுங்கள்'' என்று கூறிய சித்தரஞ்சனி அவன் வலது கையை எடுத்துத் தனது மார்புமீது வைத்துக்கொண்டாள். அப்படி அவன் கையைக் கொண்டுவந்த சமயத்தில் அவள் மேலாடையும் உள் கச்சையும் சரிந்து கிடந்ததால் அவன் கை அவள் திண்ணிய வழுவழுத்த சருமத்திலேயே பதிந்ததால் அவன்

zeevaa

சற்று நிலைகுலைந்தாலும் சட்டென்று நிதானத்துக்கு வந்து, ''உன் இதயம் கைக்குச்சேதி சொல்ல முடியாது'' என்றான். இருப்பினும் பதிந்த கையை எடுக்காமலே, ''சிந்தரஞ்சனி! உன்னை அழைத்து வருவதாக என் தாயிடமே சபதம் செய்துவிட்டு வந்திருக்கிறேன். ஆகவே திருமணத்திற்கு அதிக தடையிருக்காது. ஆனால் கௌதமிபுத்ரன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளத் திருமணம் செய்து கொண்டான் என்ற அவப்பெயர் கூடாது'' என்று சொன்னவன், ''சரி வா, போவோம்'' என்று அவள் கையைப்பற்றி அழைத்தான்.

''எங்கே?'' திகிலுடன் கேட்டாள் சித்தரஞ்சனி.

''நீ அழைத்துச் செல்லுமிடத்திற்கு'' என்றான் கௌதமி புத்ரன்.

''நான் எங்கு அழைத்துச் செல்லவேண்டும்?'' சற்று குழப்ப மிருந்தது அவள் குரலில்.

''என்னை எங்கு அழைத்து வரும்படி மகாக்ஷத்ரபர் உத்தரவிட்டிருக்கிறாரோ அவ்விடத்திற்கு'' என்றான் கௌதமிபுத்ரன்.

''அங்கு அபாயம் காத்திருக்கிறது உங்களுக்கு'' என்றாள் சித்தரஞ்சனி.

''அதைப்பற்றிக் கவலைப்படாதே'' என்று கூறிய கௌதமி புத்ரன் அவள் கையைப் பற்றி அழைத்துக்கொண்டு சண்டிகா தேவி முன்பு அவளை மண்டியிடச் சொல்லித்தானும் மண்டி யிட்டு வணங்கினான். அப்படி மண்டியிட்ட வண்ணம், ''தாயே சண்டிகே! இந்தப் பெண்ணை நீதான் காப்பாற்ற வேண்டும். பெரிய ஆபத்தில் இருக்கிறாள்'' என்று சற்றே இரைந்தே பிரார்த்தனை செய்தான்.

அந்தப் பிரார்த்தனைக்குக் காரணம் அவளுக்குப் புரிய வில்லை. தனக்கு ஆபத்து ஏற்படக்காரணம் ஏதுமில்லை

zeevaa

என்பது அவளுக்குத் தெரிந்தே இருந்ததால் அவளுக்கு அவன் பிரார்த்தனை செய்ததே பெருவியப்பைத் தந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. சண்டியை வணங்கிய நிலையிலிருந்து அவன் எழுந்ததும் அவளும் எழுந்தாள். அவன் படிகளில் ஏறிச்சென்றபோது அவளும் ஏறிச் சென்றாள். குகை வாயிலை மூடியிருந்த பாறைக்கு வந்ததும் கௌதமிபுத்ரன் தனது கச்சையிலிருந்த கட்டாரியை எடுத்து இருமுறை பாறைமீது தட்டினான். அடுத்து அந்தப்பாறை மெதுவாக நகர்ந்து சந்திரவெளிச்சம் உள்ளே புகுந்தது. அந்த ஒளி வீச்சு உடலைத்தழுவ வெளியே வந்த கௌதமிபுத்ரன் சித்தரஞ்சனியையும் கை கொடுத்து மேலே தூக்கிவிட்டான்.

வெளியே வந்ததும் குகை வாயிலை மூடிவிட்ட சாதவாகனன், ''சித்தரஞ்சனி! நீ முன்னால் போ. அஞ்சன் மேல் நதியின் முகத்துவாரக் கரையில் படகு ஒன்று நின்றிருக்கும். அதில் ஏறிக்கொள். அந்தப் படகு செல்லுமிடத்திற்குப் போ. நீ மகாக்ஷத்ரபரைச் சந்தித்ததும் அவரை நான் மரக்கலத்தில் சந்திப்பதாகச் சொல்'' என்றான்.

''மரக்கலமா?'' வியப்படைந்தாள் சித்தரஞ்சனி.

அவளைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு நல்ல பாறையின் உச்சிக்குச்சென்று, ''இப்பொழுது கடலைப்பார்'' என்றான் கௌதமிபுத்ரன்.

சித்தரஞ்சனி கடலை நோக்கினாள். அதில் பெரிய மரக்கலம் ஒன்று அலைகளில் அசைந்துகொண்டிருந்தது. அதைக்கண்டு பிரமித்த சித்தரஞ்சனி, ''எனக்கு ஏதும் புரியவில்லை'' என்றாள்.

இதைக்கேட்ட கௌதமிபுத்ரன் லேசாக நகைத்தான். ''எனக்குப் புரிகிறது'' என்று நகைப்பின் ஊடே சொல்லி விட்டு, ''நீ செல் சித்தரஞ்சனி! நான் உன்னை வெகுசீக்கிரம் சந்திக்கிறேன்'' என்று கூறினான்.

zeevaa

அவள் மெதுவாக நடந்து சென்றாள். அவள் போவதைப் பார்த்துக் கொண்டிருந்த கௌதமிபுத்ரன், ''பாவம் அபலை! பெரிய சூழ்ச்சிக்காரர்கள் கைப்பாவையாகிவிட்டாள்'' என்று உள்ளூர வருந்தினான். அடுத்து பக்கத்திலிருந்த புதரை அணுகி, ''பூஜாரி! வெளியே வாரும்'' என்றான்.

நடுங்கிக்கொண்டே வெளியே வந்த பூஜாரியிடம் ஏதோ ரகசியம் சொன்னான். பூஜாரி புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான். பிறகு தனது கிராமத்துக்குச் செல்லும் பாதையில் விரைந்தான். அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டு சில விநாடிகள் நின்ற கௌதமிபுத்ரன் வெகு வேகமாகக் கடற்கரையின் முகப்பிலிருந்த பாறைகளை அடைந்தான். அவன் கண்ணெதிரே எழுந்த நிகழ்ச்சியால் அவன் வியப்படையவில்லை. சித்தரஞ்சனி இரு வீரர்களுக் கிடையில் சிக்கிக்கிடந்தாள். அவளை ஏற்றிக்கொண்ட படகு அஞ்சன்வேலை நோக்கி விரையவில்லை. கடலில் ஆடி நின்ற மரக்கலத்தை நோக்கி விரைந்தது.

zeevaa

அத்தியாயம் 10

சொப்பனமல்ல!

முந்திய இரவில் இல்லாமல் மறுநாள் கருக்கல் வேளையில் மந்திர ஜாலத்தால் சிருஷ்டிக்கப்பட்டது போல் மேலைக் கடலில் திடீரென்று தோன்றிய மரக்கலத்தைக் கண்டு சிறிதும் வியப்படையாத கௌதமிபுத்ர சதகர்ணி, அதன் தோற்றம் எதிரிகளின் மன சஞ்சலத்தையும், பீதியையும் வெளிப்படுத்து வதாக எண்ணினான். பிசாசு பயத்தைக் காட்டித் தாபோல் துறைமுகவாசிகளை விரட்டிவிட்ட சாகர்கள் தலைவன், பிசாசு கதையைத் தான் துண்டித்து விட்டதால் ஏற்படக்கூடிய விளைவைச் சமாளிக்கவே இந்தப் புதிய போர்க்கலத்தை துறைமுகத்தருகில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறான் என்று தீர்மானித்த கௌதமிபுத்ரன், வெகு சீக்கிரம் மேலும் மரக்கலங்கள் வருமானால் தாபோல் மலையில் போர் வீரர்கள் இறக்கப்பட்டு அது எதிரிகளின் போர்ப் பாசறையாக மாறிவிடும் என்ற முடிவுக்கு வந்தான். தான் பூஜாரியிடம் சொல்லியனுப்பியுள்ள செய்தியைத் தாபோலிலிருந்து வெளியேறிவிட்ட மக்கள் நம்பி உடனடியாகத் திரும்பினால் தாபோல் எதிரியின் தளமாவது சிறிது சிரமப்படும் என்றும் சதகர்ணி எண்ணினான். ஆனால் மக்களை அவர்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கையிலிருந்தும் பீதியிலிருந்தும் திடீரென மாற்றுவது அத்தனை சுலபமல்லவென்பதையும் அவன் உணர்ந்திருந்ததால், தான் துணிகரமான செயலில் இறங்கினா லொழிய எதிரி தனது படைகளைத் தாபோல் மலைப்

zeevaa

பகுதியில் இறக்குவதைத் தடை செய்ய முடியாதென்றும் திட்டமாக அறிந்திருந்தான்.

இந்த எண்ணங்களுடன் புதிய கப்பலை நோக்கி விரைந்த படகை உற்று நோக்கினான். சித்தரஞ்சனி படகில் நடுவில் உட்கார்ந்திருந்ததையும் அவளுக்கு இருபுறத்திலும் இரு சாக வீரர்கள் ஆயுதந்தாங்கி அமர்ந்திருந்ததையும், படகைத் துடுப்புக்களைத் துழாவிக்கொண்டு படகின் முன்புறத்திலும் பின்புறத்திலும் உட்கார்ந்த இருவரும் மிக துரிதமாகத் துடுப்புகளைத் துழாவியும் அன்று கருக்கலில் இருந்த கடல் கொந்தளிப்பில் அலைகளைச் சமாளித்துக்கொண்டு படகு முன்னேறுவது சிறிது கஷ்டமாக இருந்ததையும் கவனித்த சத்கர்ணி எதிரிக்கு இயற்கை சிறிது இடைஞ்சலாக இருப்பதை நினைத்துச் சிறிது முறுவலும் கொண்டான்.

இந்த எண்ணங்களில் அவன் திளைத்திருக்கையில் தனது கைகளிரண்டையும் தூக்கிக்காட்டிப் படகிலிருந்த வீரர்களிடம் சித்தரஞ்சனி ஏதோ சொல்ல முயன்றதையும், அப்பொழுது அவள் கைகளிரண்டும் கயிறு கொண்டு பிணைக்கப்பட்டிருப்பதையும் கண்ட கௌதமிபுத்ரன் படகு கவிழ்ந்தால் அவள் நீந்தித் தப்ப முடியாதென்பதை உணர்ந்து அவள் உயிரைப் பற்றிச் சிறிது கலக்கமும் அடைந்தான். ஆனால் அத்தகைய விபத்து ஏதும் ஏற்படாமல் படகு மெள்ள மெள்ள அலைகளைத் தாவித்தாவிப் புதிய மரக்கலத்தை அடைந்ததைக் கவனித்த சதகர்ணி ஆசுவாசப் பெருமூச்சு விட்டுப் புதிய மரக்கலத்தை விட்டுத் திரும்ப எத்தனித்த சமயத்தில் புதிய மரக்கலத்தின் தளத்தில் ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சி அவன் முகத்தை மீண்டும் கடலை நோக்கித் திருப்பியது.

புதிய மரக்கலத்தின் தளத்தின் முனைக்கு வந்து படகிலிருந் தவர்கள் ஏறிவர நூலேணியைத் தொங்க விட்டவன்

zeevaa

சாதாரண வீரனுமல்ல, க்ஷத்ரபனோ, மகாக்ஷத்ரபனோ, இருவரும் அல்ல. ஆஜானுபாகுவும் யௌவன வயதை உடையவனும் வீரக்களை பொருந்தியவனும், இடையில் ஒரு குறுவாளைத் தவிர வேறு எதையும் அணியாதவனுமான ஒரு வீரனே நூலேணியைத் தொங்கவிட்டான். கைகள் கட்டப்பட்டிருந்ததால் நூலேணியில் ஏற முடியாத நிலையைக் கைகளைத் தூக்கி சித்தரஞ்சனி விளக்கியதும் அவன் ஏதோ சைகை செய்ய அவள் கைத்தளைகளைப் படகிலிருந்த வீரனொருவன் குறுவாள் கொண்டு தரித்துவிட இரு கைகளையும் சிறிது சரிப்படுத்திக் கொண்டு சித்தரஞ்சனி நூலேணி மீது அனாயாசமாக ஏறிச்சென்றாள். அவள் நூலேணியின் உச்சியை அடைந்ததும் அந்த வாலிபன் அவள் கைகளைப் பிடித்து அரைவாசி தூக்கிவிட்டுப் பிறகு இடையைப் பற்றித் தனக்கும் மேலே தூக்கிப் பிடித்து அவளைத் தனது கண்களால் விழுங்கிய பிறகே தளத்தில் இறக்கினான். பிறகு அவள் இடையை ஆதரவுடன் அணைத்த வண்ணம் அவளை மரக்கலத்தின் தளத்தின் நடுவுக்கு அழைத்துச் சென்றான். அடுத்து அந்த வாலிபனும் சித்தரஞ் சனியும் கண்ணுக்கு மறைந்துவிடவே கௌதமிபுத்ரன் தீர்க்க சிந்தனையுடன் மீண்டும் மலைமீது ஏறிச் சென்றான்.

அப்பொழுது நன்றாகப் பொழுது விடிந்துவிட்டபடியால் தாபோல் மலைக்காடு மிகுந்த அழகுடன் காட்சியளித்தது. மரங்களிலெங்கும் புஷ்பங்கள் புஷ்பித்துக்குலுங்கின. அவற்றின் கிளைகள் சில கடலை நோக்கிக் காற்றில் தலையாட்டியதைக் கண்ட சதகர்ணி அவை சித்தரஞ் சனியைத் திரும்பக் கரைக்கு அழைப்பதாக மனத்தில் நினைத்து அதன் விளைவாக உவகையும் கொண்டான். முதல் நாளிரவில் குகைக்கதவை மூடியதும் பிறகு திறந்ததும் பூஜாரிதானென்பதைத் திண்ணமாக அறிந்திருந்த சதகர்ணி பூஜாரி வாளாவிருக்கமாட்டானென்பதும் துரிதமாகச்

zeevaa

செயல்படுவானென்றும் திட்டமாக நம்பினான். அதன் விளைவாகத் தனது புரவியில் ஏறி அஞ்சன்வேல் நதிக்கரையை அடைந்து புரவியையும் நீராட்டித் தானும் நீராடித் திரும்பி வந்து புரவிக்குத் தீனி வைத்துத் தானும் அங்கிருந்த காய் கனிகளை அருந்தி பூஜாரியின் வரவை எதிர்நோக்கியிருந்தான்.

பூஜாரி நடுப்பகல் தாண்டிய பிறகே வந்து சேர்ந்தார். வந்ததும் வராததுமாகத் தாபிலேசுவரருக்கு அபிஷேகம், பூஜை முதலியவற்றை முடித்து நிவேதனம் சமர்ப்பித்து அதில் தனக்கும் சிறிது பிரசாதம் கொடுக்க அதை உண்ட சதகர்ணி, ''பெரியவரே! போன காரியம் என்னவாயிற்று?'' என்று வினவினான்.

பூஜாரி முகத்தில் பெரும் துயரச்சாயை படரவிட்டுக் கொண்டார். ''பிசாசு போய்விட்டதை யாரும் நம்பவில்லை. நான் சொல்வது சுத்தப் புரட்டு என்று சொல்கிறார்கள். யாரும் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப மறுக்கிறார்கள்'' என்றார் பூஜாரி.

''நான் யாரென்பதைச் சொன்னீரா?'' என்று வினவினான் சதகர்ணி.

''சொன்னேன்.''

''அதற்கு என்ன சொல்கிறார்கள்?''

''மோகினிப் பிசாசின் கையில் நீங்கள் சிக்கிவிட்டதாகச் சொல்கிறார்கள்...''

''பெரியவரே! அவர்களைப் பிசாசு ஏதுமில்லை என்று நம்பச் செய்ய வழியே கிடையாதா?'' என்று வினவினான்.

''இருப்பதாகத் தெரியவில்லை'' என்றார் பூஜாரி.

zeevaa

தீவிர சிந்தனையில் ஆழ்ந்த கௌதமிபுத்ரன் நீண்ட நேரம் ஏதும் பேசவில்லை. கடைசியாக ஒரு தீர்மானத்துக்கு வந்து, ''பெரியவரே! இந்த க்ஷத்ரபர்களை நான் சமாளித்துக் கொள்கிறேன். நீர் என் தலைநகரத்திற்குச் சென்று வாரும். எனது தாயாருக்கு ஒரு கடிதம் தருகிறேன். அதைக் கொடுத்தால் எங்கள் வீரர்கள் சிலரை உம்முடன் அனுப்புவார்கள். அவர்களை அழைத்து வாரும்'' என்றான்.

பூஜாரி சிறிது சிந்தனையில் இறங்கிவிட்டு, ''நான் இங்கிருந்து போகமுடியாது'' என்றார் முடிவாக.

''ஏன்?'' வியப்புடன் வினவினான் சதகர்ணி.

''தாபிலேசுவரர் பூஜையை விட்டு நான் போக முடியாது'' என்றார் பூஜாரி.

''பூஜையை நான் செய்கிறேன்'' என்றான் சதகர்ணி.

''உங்களுக்குப் பூஜை செய்ய அருகதை கிடையாது. இது என் பரம்பரை தர்மம். இவருக்கு நான் தான் பூஜை செய்யவேண்டும்'' என்று திட்டமாகச் சொன்ன பூஜாரி அங்கேயே இரவு வரையில் தங்கிவிட்டு இராக்கால பூஜையையும் முடித்துக்கொண்டு கிளம்பினார். ''எதற்கும் நாளை பூஜையில் சந்திப்போம்'' என்று கூறிச் சென்று விட்டார்.

அவர் சென்றதும் மிகவும் குழம்பிய மனத்துடன் சிறிது நேரம் கோவிலின் முகப்புத் திண்ணையில் உட்கார்ந்திருந்த கௌதமிபுத்ரன் மெதுவாகக் கடற்கரையை நோக்கிச் சென்றான். கடற்கரை முகப்பிலிருந்த பாறைகளில் மறைந்து உட்கார்ந்த வண்ணம் கடலில் நின்ற மரக்கலத்தையே நோக்கிக் கொண்டிருந்தான். இரண்டாவது ஜாமம் முடிந்ததும் புதிய மரக்கலத்தில் எந்தவித நடவடிக்கையும் காணோம். அதில் எரிந்து கொண்டிருந்த விளக்குகளும்

zeevaa

அணைக்கப்பட்டன. அப்படி அணைக்கப்பட்டாலும் நன்றாய்க் காய்ந்த நிலவின் விளைவாக அந்த மரக்கலத்தில் நடந்துகொண்டிருந்த மாலுமிகள் நன்றாகவே கண்ணுக்குத் தெரிந்ததைக் கண்ட கௌதமிபுத்ரன் இரவும் பகலும் மரக்கலம் காக்கப்படுவதால் மகாக்ஷத்ரபனும் க்ஷத்ரபனும் ஏதோ புது நிகழ்ச்சியை எதிர்பார்க்கிறார்களென்பதைப் புரிந்து கொண்டான். ஆனால் அது என்ன ஆபத்தாயிருக்கும் என்று நினைத்து விடை காணாத சதகர்ணி அந்த மரக்கலத்தில் சித்தரஞ்சனி எங்கிருப்பாள், எப்படியிருப்பாள் என்று சிந்தித்தான். அவளது இடையைப் பிடித்து அழைத்துப் போனவன் யார்? அவனுக்கும் சித்தரஞ்சனிக்கும் என்ன உறவிருக்கும்? இப்படியெல்லாம் சிந்தித்த கௌதமிபுத்ரன் எப்படியாவது அந்த மரக்கலத்தை அணுகத் தீர்மானித்த சமயத்தில் அஞ்சன்வேல் நதியில் படகொன்று வரவே அதிலிருந்து இரண்டு வீரர்கள் இறங்கி மலைக்காட்டுக்குள் வந்தார்கள்.

அவர்கள் மலைக்காட்டுக்குள் வந்து தாபிலேசுவரர் சந்நிதியை நோக்கிச் செல்வதைக் கண்ட சதகர்ணி மெதுவாகத் தனது மறைவிடத்தை விட்டு வெளியே வந்து படகை நோக்கிச் சென்றான். அதில் துடுப்புகளைச் சித்தமாக வைத்துக்கொண்டிருந்த படகோட்டிக்குப் பின்னால் மெதுவாகப் படகில் ஏறி, ‘‘உம்! படகை விடு’’ என்றான். படகை விட்டுப்போன இருவரில் ஒருவர் மட்டும் வந்ததாக எண்ணிய படகோட்டி, ‘‘இன்னொருவர் எங்கே?’’ என்று கேட்டான்.

‘‘பிறகு வருவார்’’ என்று மெதுவாகச் சொன்னான் சதகர்ணி.

குரல் வித்தியாசப்பட்டதால் சந்தேகத்துடன் திரும்பிய படகோட்டியின் பொட்டில் கோடாரியின் பிடிபலமாகத்

zeevaa

தாக்கவே படகோட்டி அப்படியே படகில் விழுந்தான். அவனது தலைப்பாகையை எடுத்துத் தனது தலையில் சுற்றிக்கொண்ட கௌதமிபுத்ரன் படகில் உட்கார்ந்திருந் தான் மற்ற இருவர் வருகைக்காக. சிறிது நேரத்திற்கெல்லாம் வந்த அந்த இருவரும் படகில் ஏறிக்கொண்டு ''படகை செலுத்து, பட்சி பறந்து விட்டது'' என்று கூற கௌதமிபுத்ரன் வேகமாகத் துடுப்புகளைத் துழாவினான்.

படகு மரக்கலத்தை நோக்கி விரைந்து கொண்டிருக் கையில் இருவரில் ஒருவன் கேட்டான். ''சாதவாகனன் எங்கே போய் விட்டான்?'' என்று.

''யாருக்குத் தெரியும். அவன் கோவிலிலோ சுற்றுப் புறத்திலோ காணோம். அவன் புரவியுமில்லை'' என்றான் மற்றவன்.

''அவன் எங்கும்போக முடியாது. விரைவில் நம்மிடம் சிக்குவான்'' என்றான் முதலில் பேசியவன்.

அந்தச் சமயத்தில் சதகர்ணியால் பொட்டில் அடிக்கப் பட்டு நினைவு தப்பிக்கிடந்த படகோட்டியைப் படகின் முகப்பில் விட்டு அவன்மீது சதகர்ணி அமர்ந்திருந்தாலும் இரு வீரர்கள் கவனம் மரக்கலத்தின் மீதிருந்ததாலும் அவர்கள் சந்தேகம் ஏதுமில்லாமலே பயணம் செய்தார்கள். மரக்கலத்தைப் படகு அணுகிய சமயத்தில் படகோட்டிக்குச் சிறிது ஸ்மரணை வந்து அவன் முனகவே இரு வீரர்களும் ''யார் முனகுவது?'' என்று விசாரிக்கவே, ''நான்தான். இந்தக் கடற்காற்று என் விலாப் பக்கத்தைச் சிறிது பிடித்திருக்கிறது'' என்று முக்கி முனகி சதகர்ணி பதில் சொல்லவே அவர்கள் மேற்கொண்டு கேள்வி ஏதும் கேட்காமல் மரக்கலத்தைப் படகு அணுகியதும் குரல் கொடுக்க நூலேணி வந்தது. நூலேணியில் ஒருவர் பின்னொருவராக ஏறியதும், ''நீ போகலாம் கோட்டைக்கு'' என்று வீரன் ஆணையிடப்

zeevaa

படகை மறுபக்கம் திருப்பிக் கரையை நோக்கிச் சிறிது தூரம் சென்ற சதகர்ணி மீண்டும் படகை மரக்கலத்தை நோக்கித் திருப்பினான்.

இரவின் மூன்றாம் ஜாமம் நெருங்கிவிட்டதால் மரக்கலத்தில் அதிக சத்தம் ஏதும் கேட்கவில்லை. அலைகளின் ஓசையைத் தவிர வேறு சப்தம் எதுவும் காணோம். படகோட்டி முகத்தில் சிறிது கடல்நீரை அள்ளித்தெளித்து எழுப்பிய சதகர்ணி, ''நீ படகைக் கோட்டைக்கு ஓட்டிச்செல்'' என்று கூறினான்.

''என்னைப் பொட்டில் யாரோ அடித்தார்கள்'' என்று முனகினான் படகோட்டி.

''அவன் ஓடிவிட்டான். நீ போ தலைவர் காத்திருப்பார்'' என்று கூறினான்.

''ஆம், ஆம் அவரைக் காக்க வைக்கக்கூடாது. அந்த இன்னொரு வீரர்...'' என்று ஏதோ துவங்கினான்.

''நூலேணியில் ஏறிப்போய் விட்டார்'' என்ற சதகர்ணியின் குரலைக் கேட்டதும், ''உன் குரல் புதிதாக இருக்கிறதே...'' என்றான் படகோட்டி.

அடுத்து அவன் பேசவில்லை, கோடாரி இன்னொரு முறை பொட்டில் சம்பந்தப்பட்டதால். மறுமுறை படகோட்டி சுரணையற்றதும் படகை மரக்கலத்தைச் சுற்றிச் செலுத்தினான் சதகர்ணி. மரக்கலத்தின் ஒரு பக்கப்பலகையில் பாய் மரக்கயிறு ஒன்று விழுந்து கிடந்ததைக் கண்டதும் அதை மெதுவாகப் பிடித்து இழுத்துப் பார்த்தான். அது மேலே நன்றாகப் பிணைக்கப்பட்டிருந்ததைப் பார்த்து அதைப் பிடித்துக்கொண்டு பலகை மீது தொத்தி ஏறினான். தளத்தருகே வந்ததும் மெதுவாகத் தளத்தின் மீது கண்களை ஓடவிட்டுத் தூரத்தே இருந்த காவலர் அறியாமல் மெதுவாக

zeevaa

ஏறித் தளத்துப் பலகையில் ஓசைப்படாமல் இறங்கிப் படுத்துவிட்டான்.

தளத்தில் சுமார் நாலைந்து காவலரே இருந்ததாலும் அவர்களும் அலுத்துத் தளத்தின் ஒரு மூலையில் உட்கார்ந்து பேச முற்பட்டதாலும் மெதுவாக எழுந்து நடந்த சதகர்ணி தளத்தின் நடுவிலிருந்த தலைவன் அறையை நாடிச் சென்றான். உள்ளே யாரோ பேசும் குரல் கேட்டுக் கதவிடுக்கின் வழியாக உள்ளே நோக்கினான். அங்கே அவன் கண்ட காட்சி அவனை உலுக்கி விட்டது. அங்கிருந்த பஞ்சணையில் கைகால்கள் பிணைக்கப்பட்டுச் சித்தரஞ்சனி கிடந்தாள். ''கௌதமிபுத்ரனைப் பற்றி எண்ணிப் பயனில்லை. அவன் உதவிக்கு வரமாட்டான்'' என்று கட்டிலுக்கு எதிரே நின்ற வாலிபன் கூறினான். அவன் குரலில் ஏளனம் ஒலித்தது.

''கண்டிப்பாய் வருவார். வந்தால் உன் கதி அதோ கதிதான்'' என்றாள் சித்தரஞ்சனி படுக்கையில் கிடந்த வண்ணம்.

''அப்படி என்ன அக்கறை உன்னிடம் அவனுக்கு?'' என்று கேட்டான் அந்த வாலிபன்.

''அவர் என் கணவர்'' என்று சித்தரஞ்சனியின் முகத்தில் மகிழ்ச்சிச் சாயை விரிந்தது.

''உன்..... என்ன?''

''கணவர்..... என்னைக் கைவிடமாட்டார்.''

''சொர்ப்பனம் காண்கிறாய்!''

''சொப்பனமல்ல'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்து கதவைச் சாத்திவிட்டு அதன்மீது சாய்ந்து நின்றான் சதகர்ணி.

zeevaa

அத்தியாயம் 11

காத்திருந்தவன்! நேற்று வந்தவன்!

இரவின் மூன்றாம் ஜாமத்தில், எதிரேயிருந்த தாபோல் மலைக்காட்டு துஷ்டமிருகங்களின் கர்ஜனை தவிர வேறு எந்த அரவமும் கேட்காத பயங்கரச் சூழ்நிலையில், மரக்கலக் காவலனையும் மீறி யாரும் மரக்கலத்தை அணுகுவதோ அதில் ஏறுவதோ நடக்காத காரியமென்று தீர்மானத்திலிருந்த யௌவன வீரன், சித்தரஞ்சனி எதிர்பார்த்தது சொப்பனமல்ல வென்பதைச் சர்வ சாதாரணமாக உணர்த்திய வண்ணம் அறைக்கதவில் சாய்ந்து நின்ற கௌதமிபுத்ரனைக் கண்டதும் அவன் பெரும் வியப்பே அடைந்தாலும், பீதியைச் சிறிதும் அடைந்தானில்லை. சதகர்ணியின் குரலைக் கேட்டுச் சரேலெனத் திரும்பிய அந்த வாலிபன், ''நீ யார்? இங்கு எப்படி வந்தாய்? சிங்கத்தின் வாயில் தானாகத் தலையை விட்டு மடிய அத்தனை விரக்தி எப்படி வந்தது?'' என்று விடுவிடு என சொற்களை உதிர்த்தான். இத்தனைக்கும் அவன் எந்தவிதப் பதற்றத்தையும் காட்டாமலே ஏதோ குற்றவாளியை விசாரிக்கும் நீதிபதியைப் போலவே நின்றான்.

கௌதமிபுத்ரன் கதவுமீது சாய்ந்த நிலையிலிருந்து சற்றும் அசையாமலே, ''என் துணிவைப்பற்றி இன்று வரை யாரும் சந்தேகப்பட்டதில்லை. சிங்கத்தின் வாயில் தலையை விடுவதென்றால் சிங்கம் யார் என்பதையும் பொறுத்திருக் கிறது'' என்றான் நிதானமாக.

zeevaa

அவன் நிதானத்தையும், அவன் பதில் சொன்னதைத் தொடர்ந்து உதடுகளில் விரவிய புன்முறுவலையும் கவனிக்கவே செய்த சாக வாலிபன், "நீ இருக்கும் நிலை உனக்குப் புரியவில்லையா? புரிந்துதான் அசட்டுத் துணிவைக் காட்டுகிறாயா?" என்று வினவினான்.

"யார் நிலை யாருக்குப் புரியவில்லையென்பது தர்க்கத் துக்கு உரிய விஷயம்" சதகர்ணி சொற்களை இழுத்தான்.

"இதில் தர்க்கத்துக்கு என்ன இருக்கிறது? இப்பொழுது கூட நான் ஒரு குரல் கொடுத்தால் இம்மரக்கலத்திலுள்ள காவலர் உன்னை வெட்டிப் போடுவார்கள்" என்று சுட்டிக் காட்டினான் அந்த வாலிபன்.

"அதில் இரண்டு கஷ்டங்கள் இருக்கின்றன. முதலில் உன் குரல் வெளிப்படவேண்டும்."

"வெளிப்பட என்ன தடை?"

"உயிர் இருந்தால்தானே குரல் கொடுக்க முடியும்?"

"உயிர் இப்போது எங்கு போய்விடும்?"

"இதற்கு என்னால் பதில் சொல்ல முடியாது. சாஸ்திரங் களே இதற்குப் பதிலைத் தேடிக்கொண்டிருக் கின்றன. ஒன்று நிச்சயம் நீ குரல் கொடுக்க முற்படுமுன் உனது உடலிலிருந்து உயிர் ஓடிவிடும். பிறகு அது எங்கு போகிறது, என்ன செய்கிறது என்றெல்லாம் என்னால் சொல்ல முடியாது" என்ற சதகர்ணி, "காஷ்டானா!" என்று அந்த வாலிபனை அழைத் தான்.

அந்த ஒரு சொல் அந்த வாலிபனுக்குப் பேரதிர்ச்சியை அளித்திருக்கவேண்டும். "என்னை உனக்கு முன்பே தெரியுமா?" என்று வினவினான் அதிர்ச்சி ஒலித்த குரலில்.

"ஏன் தெரியாது. நீ சாக இனத்தவனல்லவா?"

zeevaa

''ஆம்''

''நான் சாகா இனத்தவன், சதகர்ணி.''

அந்த வாலிபன் கல்லாய்ச் சமைந்து நின்றான். ''கௌதமி புத்ர சதகர்ணியா?'' என்று அதிர்ச்சியின் விளைவாகச் சிறிது குளறினாலும் விநாடி நேரத்தில் தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''கௌதமிபுத்ரா! நீ இங்கு வந்திருப்பது தெரிந்தால் உடனடியாக வெட்டப்படுவாய். வந்த மாதிரியே தப்பி ஓடிவிடு'' என்று கூறினான்.

கௌதமிபுத்ரனைப் பற்றி காஷ்டானன் கேள்விப் பட்டிருந்தாலும், அவன் தாபோல் மலையில் இருப்பதைப் பற்றி மகாக்ஷத்ரபர் அறிவித்திருந்ததால் அதை உணர்ந்திருந் தாலும் அவன் இன்றுவரை சாதவாகனனை நேரில் பார்த்த தில்லையாகையால் சித்தரஞ்சனியின் உதவிக்கு வேறு யாரையோ சதகர்ணி அனுப்பியிருக்க வேண்டுமென்றே நினைத்திருந்த காஷ்டானன், வந்திருப்பவன் கௌதமி புத்ரனே என்பதை அறிந்ததும் அச்சத்திற்கே உள்ளானான். தான் தப்பி ஓடிவிடச் சொன்ன பிறகும் சதகர்ணி இடித்த புளியைப்போல் நின்ற இடத்தை விட்டு அசையாததைக் கண்டு, ''ஏன் நிற்கிறாய்? உன்னைப் பேராபத்து சூழ்ந்திருக் கிறது. பொழுது விடிந்ததும், மகாக்ஷத்ரபரும், க்ஷத்ரபரும் இங்கு வருவார்கள். வந்த பின்பு நீ இங்கிருந்து அசைய முடியாது. ஆகவே இப்பொழுதே போய்விடு'' என்று வலியுறுத்தினான்.

''நான் மன்னன்'' என்று சுட்டிக்காட்டினான் சதகர்ணி.

''அதனாலென்ன?'' என்று காஷ்டானன் கேட்டான்.

''குற்றவாளியைத் தண்டிக்காமல் நான் போக முடியாது.''

''யார் குற்றவாளி?''

zeevaa

''நீதான்'' என்ற சதகர்ணி, ''காஷ்டானா! சித்த ரஞ்சனி இந்த மரக்கலத்தின் மீது ஏறி வந்ததும் அவள் இடையைப் பிடித்து அழைத்துப் போனாய். தவிர இந்த அறைக்கு வந்ததும் ஏற்கனவே தறிக்கப்பட்ட கைகால் தளைகளுக்குப் பதில் வேறு கயிறு கொண்டு அவளைப் பிணைத்துக் கட்டிலில் தள்ளியிருக்கிறாய். அவளைத் தொட்டதற்கே உன்னைக் கொன்றிருப்பேன். அவளைக் கைகால்களைக் கட்டி இந்தக் கட்டிலில் தூக்கிப் போட்டதற்கும் உன்னைக் கொல்ல வேண்டும். ஒரு மனிதனை ஒரு தடவைக்கு மேல் கொல்ல முடியாதாகையால் உனக்கு என்ன தண்டனை விதிக்கலாமென்று எனக்கே புரியவில்லை'' என்ற கௌதமிபுத்ரன், ''காஷ்டானா! அறையின் அந்த மூலைக்குச் செல்'' என்று கூறி ஓர் எட்டில் அவனை அடைந்து அவன் கச்சையிலிருந்த குறுவாளை எடுத்துக்கொண்டான். அடுத்து அவனை அறை மூலைக்குத் தள்ளி விட்டு, அந்தக் குறுவாளால் சித்தரஞ்சனியின் தளைகளை அறுத்துப் போட்டான். பிறகு அவளைத் தூக்க முயன்ற சமயத்தில் ''அவளைத் தொடாதே!'' என்று கூவினான் காஷ்டானன்.

''ஏன் தொடக்கூடாது?'' என்று வியப்புடன் கேட்டான் சதகர்ணி.

''அவள் என்னை மணக்க வேண்டியவள்'' என்றான் காஷ்டானன்.

''அப்படியென்ன கட்டாயம்?'' என்று சதகர்ணி வினவினான் ஏளனக் குரலில்.

''எங்கள் திருமணத்தை நிச்சயித்து ஓராண்டுக் காலம் ஆகிவிட்டிது'' என்றான் காஷ்டானன்.

''இவளை மணக்க உனக்குத் தகுதி கிடையாது.''

''என் தகுதிக்கு என்ன குறைச்சல்?''

zeevaa

''இந்தச் சித்தினியை நீ எப்படி ஓராண்டு காலம் மணக்காமல் விட்டுவிட்டாயோ, அப்பொழுதே உனக்குத் திருமணத் தகுதி போய் விட்டது. தவிர...'' சற்று நிறுத்திக் காஷ்டானனை நோக்கினான் சதகர்ணி.

''தவிர? வேறு என்ன?''

''நீ காலங் கடத்தியதால் ஏற்பட்ட தவறு.''

''என்ன தவறு?''

லேசாக நகைத்த கௌதமிபுத்ரன், ''தமிழில் ஒரு பழமொழி உண்டு'' என்றான்.

''பழமொழியா! இப்பொழுது பழமொழிக்கென்ன அவசரம்?'' என்று கேட்டான் காஷ்டானனன்.

''நிலைமைக்குப் பொருத்தமாயிருக்கிறது. ''காத்திருந் தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போனான்'' என்பது பழமொழி. நீ காத்திருந்தவன், நான் நேற்று வந்தவன். காதலில் காத்திருப்பதைப் போலப் பைத்தியக்காரத்தனம் வேறில்லை'' என்ற சதகர்ணி, ''சித்தரஞ்சனி! வா என்னுடன்'' என்று கூறி அவளைக் கட்டிலிலிருந்து இறக்கி அவள் இடையில் தனது இடது கையைச் செலுத்தித் தன்னுடன் இழுத்துக் கொண்டான்.

அதைக் கண்ட காஷ்டானன் உறுமினான். ''காஷ்டானா! அறிவுடன் நடந்துகொள். என் கச்சையிலிருக்கும் கட்டாரி உன் உயிரைக் கண்ணிமைக்கும் நேரத்தில் முடித்துவிடும். கதவை ஓசைப்படாமல் திற. காவலரைப் படுக்கும்படி உத்தரவிடு. பிறகு நூலேணியை நீயே தொங்கவிடு. நானும் சித்தரஞ்சனியும் இறங்கிப் படகை அடையுமுன்பு எந்தவிதச் சைகை செய்தாலும் வாயைத் திறந்தாலும் பிணமாகி விடுவாய். நான் உன் பின்னாலேயே நெருங்கி வருவேன். எந்தவித அலுவலிலும் அனாவசியமாக இறங்காதே. உனக்கு

zeevaa

நல்ல காலம் இருக்கிறது. அதை வீணாக அழித்துக் கொள்ளாதே'' என்று சொன்ன சதகர்ணி அந்த அறையிலிருந்த விளக்கை ஊதிவிட்டான். சித்தரஞ்சனியைத் தனக்குப் பின்னால் வரும்படி அவள் கையை அழுத்தி ஜாடையால் கூறிவிட்டுக் கதவை மெதுவாகத் திறந்து, ''முன்னால் செல்'' என்று காஷ்டானன் காதில் ஓதினான் மெதுவாக மந்திரம் ஓதுவது போல்.

காஷ்டானன் மெதுவாக வெளியே தலையை நீட்டிப் பார்த்தான். மரக்கலத் தளத்துக் கோடியில் மாலுமிகள் பலர் படுத்து நன்றாக உறங்கிக்கொண்டிருந்தார்கள். நிலவின் வெளிச்சத்தில் காவலர் கும்பகர்ண சகோதரர்களாகி விட்டதைக் கண்ட சதகர்ணி மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். சாக வாலிபனும் எந்தவித சப்தமும் இன்றி மெதுவாக அந்தப் பெரும் மரக்கலத்தளத்தில் நடந்து, அங்கிருந்த நூலேணியை ஓசைப்படாமல் இறக்கினான். ''இனி இறங்கலாம்'' என்று சொன்ன காஷ்டானனை, ''நீ முதலில் இறங்கு'' என்று கூறியதன்றி வலுக்கட்டாயமாக இறக்கவும் செய்தான். அவனை அடுத்துத்தானும் இறங்கினான். பிறகு சித்தரஞ் சனியையும் இறங்கச் சொல்ல அவளும் மெதுவாக வரவே அவளைத் தூக்கி அங்கிருந்த படகில் இறக்கி விட்டான். ''நான் வந்த படகைவிட இது பெரிதாயிருக்கிறது'' என்று சிலாகித்த சதகர்ணி, ''துறை முகத்துக்கு விடு படகை'' என்று கூறினான். அந்தப் படகில் பெரிய முண்டாசு ஒன்றைக் கட்டிக்கொண்டு சற்றே குளிர் இருந்ததால் பெரிய போர்வையால் உடலை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்த படகோட்டி துடுப்புகளைத் துழாவப் படகு விரைந்தது.

துடுப்புகளைத் துழாவுபவன் ஒருவனேயென்பதையும் அவன் நல்ல பலசாலியென்பதையும் துடுப்புகளை அவன் துழாவிய வேகத்திலிருந்தே புரிந்துகொண்ட சதகர்ணி, சிறிது

zeevaa

தூரம் படகு சென்றதும், தாபோல் மலைப்பகுதியை விட்டு வேறு வழியில் செலுத்தப்படுவதைக் கண்டு, ''படகைத் திருப்பு. துறைமுகத்துக்குப் போ'' என்ற உத்தரவிட்டான்.

அவன் உத்தரவைக் காதில் வாங்காத படகோட்டி அஞ்சன்வேல் நதியை நோக்கிப் படகைச் செலுத்தினான். அதனால் வெகுண்ட கௌதமிபுத்ரன் தனது கச்சையில் கையை வைத்தான் கோடாரியை எடுக்க, கோடாரி கச்சையில் இல்லை. தான் நிராயுதபாணியாகி விட்டதைப் புரிந்துகொண்ட சதகர்ணி, ''படகோட்டி! இப்படித் திருப்பு'' என்று உத்தரவிட்டான். அதே சமயத்தில் சதகர்ணியின் முதுகில் குறுவாளொன்று ஊன்றப்பட்டது. படகோட்டியும் திரும்பினான் சதகர்ணியை நோக்கி, திரும்பியவன் முகத்தில் வெண் நிலவு பூர்ணமாய் விழுந்தது. அந்த முகம் நாகபாணன் முகம்!



zeevaa

அத்தியாயம் 12

அஞ்சன்வேல் கோட்டை

காலம் அனுகூலமாயிருந்தாலொழிய மனிதன் போடும் எந்தக் கணக்கும் பலனளிப்பதில்லை. எந்தத் திட்டமும் உருப்படியாக நிறைவேறுவதில்லை என்ற உண்மையை கௌதமிபுத்ரன் அந்த இரவின் நிகழ்ச்சிகளிலிருந்து புரிந்து கொண்டான். எத்தனையோ திறமையுடன் தான் படகோட்டியைப் பொட்டிலடித்து அவனைப் படகில் படுக்க வைத்து அவன்மீது ஏறி உட்கார்ந்து கொண்டதன்றி அவன் தலைப்பாகையையும் தான் தரித்துக்கொண்டதால், மலைக்குச் சென்று வந்த எதிரி வீரர்களைத் தான் ஏமாற்றி விட்டதையும், இன்னொரு முறையும் அவனைப்பொட்டி லடித்துப் படகிலிருந்து பாய்மரக்கயிறு மூலம் மரக்கலத்தில் ஏறிக் குதித்துக் காஷ்டானனையும் சித்தரஞ்சனியையும் அழைத்து வந்ததையும் எண்ணி, இத்தனை திறமையுடன் சித்தரஞ்சனியை விடுவித்துங்கூட கடைசியில் நாக பாணனிடம் சிக்கிக்கொண்டதை நினைத்ததால் மனிதத் திறமை எதையும் சிதற அடிக்கக்கூடிய மகாசக்தி வேறொன்றிருப்பதை உணர்ந்து கொண்டான்.

சந்திரவெளிச்சம் இருந்தும் படகில் தான் படகோட்டியின் துணியைத் தலைப்பாகையாகச் சுற்றி மலையில் தன்னைத் தேடிப் பார்த்து வந்த வீரர்களை ஏமாற்றிய அதே வழியைப் பின்பற்றி மகாக்ஷத்ரபனான நாகபாணன் தன்னை ஏமாற்றி

zeevaa

விட்டதையும் நினைத்துப் பார்த்து, ஒரே வித்தையை இருவர் கையாள முடியுமென்பதைப் புரிந்துகொண்டதாலும், தான் நிராயுதபாணி யாக்கப்பட்டிருப்பதை அறிந்து கொண்டதாலும் தனது நிலையை எடை போடத் துவங்கினான். சித்தரஞ்சனியை முன்னால் அனுப்பி காஷ்டானுக்குப் பின்னால் தான் மிகுந்த எச்சரிக்கையுடன் வந்தும் படகில் இறங்கிய சமயத்தில் தன்னுடன் லேசாக இழைந்த காஷ்டானன் தனது கோடரியை எடுத்துக் கொண்டிருக்க வேண்டுமென்றும், மரக்கல அறையில் சித்தரஞ்சனியின் தளைகளை அறுத்த பிறகு குறுவாளைப் படுக்கை மீது எறிந்துவிட்டதால் காஷ்டானன் அதை எடுத்துக் கொண்டிருக்க வேண்டுமென்றும் உணர்ந்து கொண்ட கௌதமிபுத்ரன், காஷ்டானனும், தான் எடை போட்டது போல் அத்தனை அறிவிலி அல்ல என்றும் புரிந்து கொண்டான். தனது முதுகில் ஊன்றப்பட்டிருந்த குறுவாள் காஷ்டானனுடைய குறுவாளேயென்பதில் சதகர்ணிக்குச் சந்தேகமில்லாததால் தன்னைத் திரும்பி நோக்கிய நாகபாணனைப் பார்த்து மெல்லப் புன்முறுவல் கொண்டான்.

அவன் தன்னைப் பார்த்துப் புன்முறுவல் செய்ததைக் கவனித்த நாகபாணன், சாதவாகனன் தைரியத்தை உள்ளூர மெச்சிக் கொண்டதன்றி, ''கௌதமிபுத்திரா! உன் துணிவை நான் மிகவும் பாராட்டுகிறேன்'' என்று கூறவும் செய்தான்.

இதைக்கேட்ட கௌதமிபுத்ரன், ''மகாக்ஷத்ரபர், அபராந்தா என்ற சிறப்புப் பெயர் கொண்ட கொங்கணத்தை ஆளும் மகாராஜா, கேவலம் தலைப்பாகையணிந்து படகோட்டி வேஷம் போட முன்வந்தது எத்தனை விசித்திரம்'' என்று நகைச்சுவையைக் காட்டினான்.

zeevaa

மகாக்ஷத்ரபனான நாகபாணனும் கௌதமிபுத்ரனுக்குச் சிறிதும் சளைக்காமல், ''ஒரே வேஷம் இருவருக்கும் பொருந்துகிறது. ஆனால் கடைசியில் பலன் கிடைப்பது சாதவாகனருக்கல்ல. சாகர்களுக்குத்தான் கிட்டுகிறது. படகை மன்னர் இருவர் செலுத்தலாம் என்பதற்கு நாம் இருவருமே அத்தாட்சி. ஒரே ஒரு வித்தியாசம்...'' என்று கூறியவன் வாசகத்தை முடிக்க வில்லை.

கௌதமிபுத்ரன் இதழ்களில் இளநகை அரும்பியது. ''என்ன வித்தியாசமோ?'' என்று வினவவும் செய்தான் புன்முறுவலின் ஊடே.

''மரக்கலத்துக்கும் கோட்டைக்கும் உள்ள வித்தியாசம்'' என்றான் நாகபாணன். மேலும் விளக்கினான். ''சாதவாகனா! நீ சித்தரஞ்சனியை விடுவிக்க மரக்கலத்தை நாடினாய். உங்களிருவரையும் அஞ்சன்வேல் கோட்டைக்குக் கொண்டு போக நான் முன்னதாகவே முடிவு செய்தேன். சித்தரஞ்சனி எப்பொழுது மரக்கலத்துக்குக் கொண்டு போகப்பட்டாளோ அந்தச் சமயத்திலிருந்து உன்னைக் கண்காணித்து வருகிறேன். நீ படகை ஓட்டி வந்ததை நான் மரக்கலத்திலிருந்தே கவனித்தேன். நீ மரக்கலத்தில் ஏறி உள்ளே சென்றதும் அடுத்து நீ சித்தரஞ்சனியுடன் வெளியே வருவாய் என்பதை அறிய பிரமாத அறிவு தேவையில்லை. நீ அறைக்குள் நுழைந்தவுடன் நான் இந்தப் படகை அவிழ்த்து மிதக்க விட்டுச் சித்தமாயிருந்தேன் உன் வருகையை எதிர்பார்த்து...''

இதைக் கேட்டு மகாக்ஷத்ரபன் சூக்ஷ்ம புத்தியை வியந்த கௌதமிபுத்ரன், ''நான் அந்த இடத்தில்தான் இறங்குவே னென்பது எப்படித் தெரியும்?'' என்று வினவினான்.

''மரக்கலத்தில் நான்கு நூலேணிகள் உண்டு. மூன்றை மறைத்து விட்டேன். ஒன்றை மட்டும் கண்ணுக்குப் புலப்படும்படி போட்டு வைத்தேன். அது கிடந்த இடத்துக்கு

zeevaa

நேர் கீழே இருந்த சமுத்திர மட்டத்தில் நான் படகுடன் நின்றேன்'' என்றான் மகாக்ஷத்ரபன்.

''முந்தியே திட்டமிட்டுத்தான் செய்திருக்கிறீர்கள் உங்கள் அலுவலை. ஆனால் உங்கள் திட்டத்தை அறிந்த காஷ்டானன் ஏன் உடனடியாக என்னைப் பிடிக்க ஏற்பாடு செய்யவில்லை?'' என்று கேட்டான் சதகர்ணி.

''திட்டத்தை நான் காஷ்டானனுக்குச் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் நீ இப்பொழுது என்னிடம் சிக்கியிருக்க முடியாது'' என்ற நாகபாணன், ''சாதவாகனா! கோட்டைக்குச் சென்றபின் சில முடிவுகளை எடுக்கத் தீர்மானித்திருக்கிறேன். அவற்றுக்கு நீ இடைஞ்சலாக இல்லையென்றால் உன்னை உடனே விடுதலை செய்து அனுப்பி விடுகிறேன். என்னுடைய விரோதத்தைவிட எனது நட்பு உனக்குப் பயனளிக்கும்'' என்று கோட்டையில் நடக்கக்கூடியது என்னவென்பதைப் பற்றிச் சிறிது சூசகமும் காட்டினான்.

மகாக்ஷத்ரபன் சொற்களைக் கேட்ட சதகர்ணி லேசாக நகைத்தான். ''ஏன் நகைக்கிறாய் சாதவாகனா?'' என்று வினவினான் நாகபாணன்.

''எந்தத் திட்டமும் காலத்தின் அனுகூலத்தையோ பிரதிகூலத்தையோ பொறுத்தது. இந்தச் சமயத்தில் காற்று உமது பக்கம் வீசுகிறது. எந்த விநாடியில் அது என் பக்கம் திரும்புமென்று சொல்லமுடியாது. நாம் திட்டம் தீட்டலாம். ஆனால் முடிவு காலத்தைப் பொறுத்தது. நமது கண்ணுக்குத் தெரியாத, அறிவுக்கும் எட்டாத ஏதோ ஒரு சக்தியைப் பொறுத்தது'' என்று சொன்னான் கௌதமிபுத்ரன்.

''வேதாந்தம் பேசுகிறாய்'' என்று ஏளனக் குரலில் சொன்னான் சாகனான நாகபாணன்.

''தவறென்ன?'' என்று சாதவாகனன் வினவினான்.

zeevaa

''வேதாந்தம் பேசும் வயதல்ல இது.''

''வேதாந்தம் வயதைப் பொறுத்ததல்ல, சிந்தனையைப் பொறுத்தது. விவேகத்தைப் பொறுத்தது.''

''தர்க்கத்திலும் பரிச்சயம் இருக்கிறது உனக்கு.''

''மனித வாழ்க்கையே ஒரு பெரிய தத்துவம். அதன் ஓட்டமே சிறந்த தர்க்கம். ஒவ்வொரு மனிதன் காலமும் முன்னேற்றமும் சாதக பாதகங்களைச் சீர்தூக்கிப் பார்த்துத் தர்க்கித்து எடுக்கும் முடிவைப் பொறுத்திருக்கிறது'' என்றான் சதகர்ணி.

சதகர்ணியின் பேச்சுத் திறமையையும் தர்ப்பத்தின் நுனியைவிடக் கூர்மையான புத்தியையும் உள்ளூர வியந்து கொண்ட நாகபாணன் அவனிடம் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டிய அவசியத்தைச் சந்தேகமறப் புரிந்து கொண்டான். அதன் விளைவாக மேற்கொண்டு பேச்சுக் கொடுக்காமல், ''காஷ்டானா! துடுப்புகளை நீ வாங்கிப் படகைச் செலுத்து. நான் சதகர்ணியுடன் பேசிக் கொண்டு வருகிறேன்'' என்று கூறவே சதகர்ணியின் முதுகிலிருந்த குறுவாளை எடுத்தான் காஷ்டானன். இருப்பினும் தான் துடுப்பு தள்ளப் படகின் நடுவுக்குப் போய்விட்டால் சாதவாகனன் சித்தரஞ்சனியுடன் நெருங்கி உட்கார்ந்து விடுவானே என்று நினைத்துச் சிறிது தாமதித்தான். ''வா இங்கே'' என்று நாகபாணன் சுடுகுரல் அவனை நடுவுக்குச் செல்ல உந்தவே ஏதோ முணுமுணுத்துக் கொண்டு துடுப்புகளை வாங்கித் துழாவலானான் காஷ்டானன். மெள்ள ''மாமா!'' என்றழைக்கவும் செய்தான்.

''என்ன?'' சுள்ளென்று வந்தது நாகபாணன் கேள்வி.

''சித்தரஞ்சனி...'' முனகினான் காஷ்டானன்.

''அவளுக்கென்ன?''

zeevaa

‘‘எனக்கு நிச்சயிக்கப்பட்டவள்.’’

‘‘ஆம். ஒரு வருஷத்துக்கு முன்பு.’’

‘‘நிச்சயதார்த்தத்துக்குக் காலாவதி உண்டா?’’

‘‘உலகத்தில் எல்லாவற்றுக்கும் உண்டு. அவனவன் சாமர்த்தியத்தைப் பொறுத்து.’’

‘‘நீங்கள் பேசுவது நியாயமல்ல.’’

‘‘இதில் நியாய அநியாயம் எங்கு வருகிறது?’’

‘‘வேறு என்ன வரும்?’’

‘‘சாமர்த்தியம். பெண்கள் மனத்தை ஈர்க்கும் கவர்ச்சி. இவற்றைப் பொறுத்தது பெண்ணின் இணக்கம்; சித்தரஞ்சனி யார் பக்கம் சாய்வாளோ?’’ என்று கூறிய நாகபாணன் பெரிதாக நகைத்தான்.

அந்த நகைப்பின் விளைவாகச் சினம் தலைக்கேற வேகமாகத் துடுப்புகளைத் துழாவினான் காஷ்டானன். படகு அஞ்சன்வேல் நதிக்குள் பிரவாகத்தை எதிர்த்து வேகமாகச் சென்றது. அதற்குமேல் படகிலிருந்த யாரும் பேசவில்லை. சமுத்திரத்தின் அலைகளும் அஞ்சன்வேல் நதியின் சிற்றலைகளுமே இரைந்துகொண்டிருந்தன.

படகு நதிப் பிரவாகத்தை எதிர்த்துச் செல்லச் செல்லத் துடுப்பு துழாவுவது சிறிது கஷ்டமாயிருந்ததால் துடுப்பி லொன்றைத் தானே பிடித்துத் துழாவலானான் நாகபாணன். இப்படி செலுத்தப்பட்ட படகிலிருந்து எதிரே தெரிந்த அஞ்சன்வேல் கோட்டையை நோக்கினான் கௌதமிபுத்ரன். இதே கோட்டை பிற்காலத்தில் மிகப் பிரசித்தி பெற்ற தென்றாலும் இக்கதை நிகழும் காலத்தில் சிறிய கோட்டை யாகவே இருந்தது. இருப்பினும் எதிரே எழுந்த தாபோல் மலையும் காடும், அஞ்சன்வேல் நதியென்ற வாசிஷ்ட நதியும்

zeevaa

அதற்குச் சிறந்த அரண்களாக இருந்தபடியால் அப்படி சுலபமாக அடைய முடியாத கோட்டையாகவே காட்சியளித்தது. தவிர மகாக்ஷத்ரபன் அந்தக் கோட்டையைத் தனது வீரர்களால் பெரிதும் பலப்படுத்தியிருந்தான். தூரத்தே தெரிந்த கோட்டையில் அதிக விளக்குகள் எரியாததால் பெரிய பிசாசு நிற்பது போன்ற பிரமையை அளித்தது கோட்டைக் கட்டடம். படகு அதை நெருங்க நெருங்கப் பல காவல் வீரர்கள் நதிக்கரையோரம் நடமாடிக் கொண்டிருந் ததைப் பார்த்த கௌதமிபுத்ரன் கோட்டைக்குள் ஒரு முறை போய் விட்டால் தப்புவது கடினம் என்பதை உணர்ந்து கொண்டான். அந்தச் சமயத்தில் சித்தரஞ்சனியின் கை அவன் கையை நோக்கி நகர்ந்து அவனது சிறு கோடரியை அவன் கைகளில் திணிக்கவே அதைத் தந்திரமாகத் தனது ஆடையால் மறைத்துக் கொண்டான். கோடரியை எடுத்தது காஷ்டானன் அல்ல என்பது புரிந்ததால் மகிழ்ச்சியும், எடுத்தது சித்தரஞ்சனி என்பதால் தனிப்பட்ட உற்சாகமும் ஏற்பட்டது சதகர்ணிக்கு.

மெள்ள மெள்ளப் படகு கோட்டையை நெருங்கியதும் காஷ்டானனும் நாகபாணனும் படகைக் கரை சேர்த்தனர். படகிலிருந்து கரையில் தாவி இறங்கிய நாகபாணன், ''சாதவாகனரே! பிராசீனமான இந்தக் கோட்டைக்கு வர வேண்டும். உமது வரவு நல் வரவாகட்டும்'' என்று கூறித் தனது கையை நீட்ட சாதவாகனன் அவன் கையைப் பற்றிக் கரையில் இறங்கினான். பிறகு தனது கையை நீட்டிச் சித்தரஞ்சனியையும் கரையில் இறக்கியதும் நாகபாணன் அவர்களைக் கோட்டைக்கு அழைத்துச் சென்றான். அங்கிருந்து ஒரு மாடி அறையைச் சதகர்ணிக்குத் திறந்து விட்டு, ''நேரம் ஓடிவிட்டது. சிறிது நேரம் உறங்குங்கள். காலையில் பேசுவோம்'' என்று கூறிச் சித்தரஞ்சனியை அழைத்துக் கொண்டு சென்றுவிட்டான்.

zeevaa

அறை நல்ல விசாலமாக இருந்தது. அதன் சாளரத்திலிருந்து தாபோல் மலைச் சிகரங்களையும் கடலலைகளையும் பார்க்க முடிந்தது. அப்படிப் பார்த்துக்கொண்டே நீண்ட நேரம் நின்ற சதகர்ணி அறைக் கோடியிலிருந்த கட்டிலில் சென்று படுத்துக் கண்ணை மூடினான். அப்படியும் உறக்கம் வராததால் சிந்தனை வசப்பட்டிருந்த சமயத்தில் அறைக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த ஓர் உருவம் கதவை மூடிவிட்டுக் கட்டிலை நோக்கி வந்ததும் சிறிது நேரம் அவன் உறக்கத்தைச் சோதித்து நின்றது. பிறகு அவன் கையொன்றில் எதையோ திணித்தது. குனிந்து பிறகு வந்தபடியே ஓசைப் படாமல் அறையைவிட்டுச் சென்றுவிட்டது. அது சென்றதும் கையில் திணிக்கப்பட்டதைக் கவனித்தான் சதகர்ணி. அது ஒரு முத்திரை ஓலை. முத்திரையைப் பிரித்துப் படித்தான். தான் பெரிய ஆபத்தில் சிக்கியிருப்பதை உணர்ந்தான் சதகர்ணி.

சாண்டில்யன்

அத்தியாயம் 13

தேவி பேசினாள்!

மூன்றாம் ஜாமத்தின் ஆரம்பத்தில் எதிரி மரக்கலத்தின் அறையிலிருந்து சித்தரஞ்சனியை மீட்டுக் கொண்டும், காஷ்டானனை அழைத்துக்கொண்டும் கீழே மிதந்திருந்த படகில் இறங்கி மகாக்ஷத்ரபனின் யுக்தியால் அவனிடம் சிக்கிக்கொண்ட கௌதமிபுத்ரன், அஞ்சன்வேல் நதியில் படகு சென்றபோதே நதியின் முகத்துவாரத்தையும், துறைமுக நிலையையும் கவனித்துக் கொண்டே சென்றான். வாசிஷ்டி நதியென்றும் அஞ்சன்வேல் நதியென்றும் பிரசித்தி பெற்ற அந்த மகாநதியின் முகத்துவாரம் இக்கால கணக்குக்குச் சுமார் ஒரு மைல் அகலமிருந்தாலும் * அதன் முகத்துவாரத்தின் ஒரு பக்கத்தில் மணல் பெரிதாக ஒதுங்கியிருந்ததால் நதியின் அளவு சிறிது குறுகியிருந்ததையும் கவனித்த சாதவாகனன் தங்கள் படகு முகத்துவாரத்தைக் கடந்த உடன் பெரும் சத்தத்துடன் சீறி வந்த அலைகள் அந்த மணல் மேட்டை மறைத்துவிட்டதையும் பார்த்து 'இது மிகவும் ஆபத்தான துறைமுகம், எந்தச் சமயத்திலும் யாரையும் ஏமாற்ற வல்லது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். 'பருவக் காற்றுகள்,

---

★ Sand in the river - bed accumulates to form a sand - bar across the mouth of the river. Rushing waves make water rise over the bund and a roaring sound is made - Maharashtra state Gazetteer - Ratnagiri Dt.P.735

zeevaa

zeevaa

அவற்றையொட்டி எழும் அலைகள், இவற்றின் நுட்பங்களை அறிந்தவர்கள் மட்டுமே அஞ்சன்வேல் கோட்டையை அடைய முடியும்' என்றும் எண்ணமிட்டான். இந்த எண்ணங்களுடன் அஞ்சன்வேல் கோட்டைக்கு வந்தவன் அக்கோட்டையை பலப்படுத்தியிருப்பது நாகபாணனின் வீரர்களேயென்பதையும் புரிந்து கொண்டான். ஆதி காலத்தில் கட்டப்பட்ட அஞ்சன்வேல் கோட்டை மிகச் சிறியதாக இருந்தபடியால் அதிலிருந்து தப்புவது அதிகக் கஷ்டமில்லை யென்பதையும், அப்படி கஷ்டமில்லாத நிலையிலிருந்து ஆபத்து விளைவிக்கும் நிலைக்கு அதைக் கொண்டு வந்திருப்பது மகாக்ஷத்ரபனின் படைபலமே யென்பதையும் உணர்ந்து கொண்டும் அதிலிருந்து தப்பும் மார்க்கத்தைச் சிந்தித்துக் கொண்டும் சென்ற சதகர்ணி அந்த இரவின் நான்காவது ஜாம ஆரம்பத்தில் அறையில் படுத்துக் கிடந்தபோதும் அதே சிந்தனையிலிருந்தான்.

இத்தகைய எண்ணங்களுடன் கோட்டையின் மாடி அறையில் படுத்துக் கிடந்த சதகர்ணி, கதவு மெதுவாகத் திறக்கப்பட்டதையும், தலைமுதல் கால் வரை பூர்ணமாகப் பெரிய துணியால் தன்னை மறைத்துக்கொண்ட ஓர் உருவம் ஓசைப்படாமல் கட்டிலை நோக்கி வந்ததையும், தனது கையில் ஓலையொன்றைத் திணித்துவிட்டுச் சென்றதையும் உணர்ந்து, தீர்க்கமான உறக்கத்திலிருப்பது போலவே நடித்தான். வந்த உருவம் அறையை விட்டுக் கதவைச் சாத்திக் கொண்டு சென்ற பின்பும் எழுந்திருக்காமல் படுத்தபடியே தனது வலது கையில் திணிக்கப்பட்ட ஓலையைப் பிரித்துச் சாளரத்திலிருந்து வந்த நிலவொளியில் அதைப் படித்தான். ''நாளை இரவில் மகாக்ஷத்ரபர் மரக்கலம் அபராந்தாவை நோக்கிப் போகிறது. அதில் உங்களையும் அனுப்ப ஏற்பாடாகியிருக்கிறது'' என்று எழுதப்பட்டிருந்தது. அதைப் படித்த கௌதமிபுத்ரன் நாளை இரவுக்குள் தப்பாவிட்டால்

zeevaa

அப்புறம் தப்புவது குதிரைக் கொம்பு என்று எண்ணினாலும், ஒரு முழு பகலும் இரவில் ஒரு பகுதியும் இருப்பதை நினைத்து, 'அதற்குள் ஆயிரம் நிகழ்ச்சிகள் விளையலாம்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். சாளரத்தின் மூலமாக எதிரே பெரிதாக எழுந்து நின்ற தாபோல் மலையையும் அதன் உச்சிகளையும் கவனித்தான். அஞ்சன் வேல் கோட்டைக்கு நேர் எதிர்க்கரையில் குத்து குத்தாக மலைப்பகுதி இருப்பதைக் கண்டு நதியில் குதித்து நீந்தினாலும் கரையின் குத்துக் கற்கள்மீது ஏறுவது மிக அபாயமென்பதையும் அறிந்தான். ஏதேதோ சிந்தனைக்குப் பிறகு ஏதோ முடிவுக்கு வந்தவனாய் மீண்டும் கட்டிலில் போய்ப் படுத்தவன் சிறிது நேரமாவது உறங்கும் நோக்கத்துடன் கண்களை மூடினான். உறக்கமும் அவனை மெதுவாக ஆட்கொண்டது.

சாதாரணமாகப் பொழுது விடிவதற்கு நீண்ட நேரம் முன்பே எழுந்திருக்கும் பழக்கமுள்ள சதகர்ணி அன்று விடிந்த பின்பும் தூங்கிக் கொண்டிருந்தானாதலால் காலையில் அவனைச் சந்திக்க முயன்ற நாகபாணன் அவன் எழுந்திருக்க வில்லையென்பதைக் காவலரிடமிருந்து அறிந்ததும் தானே அவனைக் காண மாடி அறைக்கு வந்தான். அங்கு கட்டிலில் சிறிதும் கவலையின்றி உறங்கும் கௌதமிபுத்ரனைக் கண்டதும் மிதமிஞ்சிய வியப்புக்குள்ளானான். தன்னிடம் சிறைப்பட்டிருக்கும் சதகர்ணிக்குத் தூக்கம் எப்படி வந்தது என்பதை நினைத்து ஆச்சரியமடைந்த நாகபாணன் சதகர்ணியைத் தனது கையால் பிடித்து அசக்கினான். அதனால் சற்றே நித்திரை கலைந்த சதகர்ணி, ''யார் எழுப்புவது?'' என்று சீறி மறுபடியும் தலையைப் போர்த்திக் கொண்டு மறுபக்கம் திரும்பிப்படுத்தான். அதனால் வியப்பிலிருந்து கோபத்துக்குத் தாவிய மகாக்ஷத்ரபன் இன்னொரு முறை சதகர்ணியை அசைத்து, ''சாதவாகனா!

zeevaa

எழுந்திரு. இந்தக் கும்பகர்ணப் பழக்கம் மன்னர்களுக்கு உதவாது'' என்று கூறவும் செய்தான்.

மகாக்ஷத்ரபனின் வலுவான கையால் பலமாக அசைக்கப்பட்டதாலும் அவன் சொற்களாலும் அப்பொழுதே எழுந்தவன் போல் பாசாங்கு செய்து கட்டிலில் உட்கார்ந்து கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டே கௌதமிபுத்ரன் கட்டிலில் பக்கத்தில் நின்ற நாகபாணனை நோக்கி, ''சாக மன்னரே! நீங்களா என்னை எழுப்பினீர்கள்? அபசாரம், அபசாரம்!'' என்று மன்னிப்புக் கேட்கும் பாவனையில் பேசினான்.

''சதகர்ணி!'' சற்றுக் கடுமையாக எழுந்தது நாகபாணன் குரல்,

''மகாக்ஷத்ரபரே!'' என்று கேட்டு நாகபாணனை நோக்கினான் சதகர்ணி.

''சூரியன் எழுந்து விட்டான்...'' என்று நாகபாணன் நேரம் அதிகமாகி விட்டதை உணர்த்தினான்.

''நாம் தூங்குவதற்காக அவன் எழுந்திருக்காமலிருப் பானா? அவன் ஒரேயடியாக உறங்கி விட்டால் நீரும் நானும் உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்தும் வாழ முடியுமா?'' என்று சதகர்ணி கட்டிலில் உட்கார்ந்தபடியே கேள்வியை வீசிப் புன்முறுவலும் செய்தான்.

சதகர்ணியின் சொற்கள் நாகபாணன் வியப்பை உச்சிக்குக் கொண்டு போகவே அவன் கேட்டான், ''நீர் பிராமணன் தானே?'' என்று.

''அப்படித்தான் பிறந்தேன்'' என்றான் சதகர்ணி.

''இப்பொழுது?''

''க்ஷத்திரியனாக மாறிவிட்டேன்.''

zeevaa

''அவ்வப்பொழுது ஜாதியை மாற்ற முடியுமா?''

''தொழிலை மாற்றிக் கொண்டால் ஜாதி தானாகவே மாறுகிறது. தொழிலை வைத்துத்தானே ஜாதி'' என்ற சதகர்ணி, ''படிப்பு சொல்லிக் கொடுத்தால் பிராமணன், சண்டை போட்டால் க்ஷத்திரியன், வாணிபம் செய்தால் வைசியன்...'' என்று சொல்லிக் கொண்டு போனவனைத் தடுத்த நாகபாணன், ''உன் விவரணத்தைக் கேட்க நான் வரவில்லை'' என்றான்.

''வேறு எதற்கு வந்தீர்கள்? ஓ! என்னை எழுப்ப வந்தீர்களா? மறந்துவிட்டேன். தூங்குபவர்களை எழுப்புவதற்கு இந்தக் கோட்டையில் உஷத்கால (விடியற்கால) வாத்தியங்கள் இல்லையா?'' என்று கேட்டான்.

''இங்கு கேளிக்கைக்கு வரவில்லை நான். சங்கீதத்துக்கு இங்கு என்ன வேலை?'' சீற்றத்துடன் வந்தது நாகபாணன் கேள்வி.

''ஓகோ! எதிர்க்கரையில்தான் வேலையா? ஏன் நாகபாணரே! சித்தரஞ்சனி இங்கு பாடினால் என்ன?'' என்று விசாரித்தான்.

''இங்கு அதற்குத் தேவையில்லை.''

''ஏன்? நீங்கள் இருக்கிறீர்களே?''

''எதிர்க்கரையில் இருந்த மக்களைக் கிளப்ப அவள் பாடினாள். இங்கு நாங்கள் தானிருக்கிறோம். எங்களைக் கிளப்ப யாராலும் முடியாது.'' இதைச் சொன்ன நாகபாணன், ''சரி சரி! காலைக்கடனை முடித்துக்கொள்'' என்றான்.

''நான் நன்றாக நீராடிப் பழக்கம். நதியில் நீராட அனுமதிப்பீர்களா? இல்லை நான் தப்பி விடுவேனென்று அஞ்சுகிறீர்களா?'' என்று வினவினான்.

zeevaa

இந்தக் கேள்வியில் விழுந்து விட்டான் மகாக்ஷத்ரபன். ''சதகர்ணி! இந்த நாகபாணன் யாருக்கும் எதற்கும் அஞ்சுவதில்லை. இதை உலகம் அறியும். நதியில் நீராடினால் தப்பிவிடலாமென்று நினைக்காதே. நீ நதிக்குள் மூழ்கினால் உன்னைச் சந்திக்க எதிர்க்கரையிலும் எனது வீரர்கள் இருப்பார்கள். இக்கரையிலும் என் வீரர்கள் உன்னைக் கண்காணிப்பார்கள். அது மட்டுமல்ல...'' என்று சற்றுப் பேச்சை நிறுத்தினான்.

''வேறு என்ன?'' என்று கேட்டான் சதகர்ணி.

''சித்தரஞ்சனி அறையில் அடைத்து வைக்கப்படுவாள் நீ வரும்வரை.''

''நான் வராவிட்டால்?''

''அவளை காஷ்டானனுக்கு மணமுடித்து விடுவேன்.''

''அவள் என் மனைவி.''

''யார் சாட்சி?''

''சண்டிகாதேவி.''

''சண்டிகாதேவி பேசுவாளா?''

''அவசியம் வரும்போது பேசுவாள். பேசும்போது என்ன உத்பாதங்கள் உங்களுக்கு ஏற்படுமென்று சொல்ல முடியாது'' என்றான் சதகர்ணி.

''உனக்கு?'' என்று கேட்டான் மகாக்ஷத்ரபன்.

''பக்தர்களுக்கு எதுவும் ஏற்படாது.''

''நீ பக்தனா?''

''ஆம்.''

zeevaa

இதைக் கேட்டு நகைத்த நாகபாணன், ''சரி சரி! போய் நீராடிவிட்டு வா. தப்ப முயன்று உயிரிழக்காதே. உன் தாய்க்கு நீ ஒரே பிள்ளை என்று கேள்வி. அவளுக்காகவாவது நீ உயிருடன் இருக்கவேண்டும்'' என்று சொல்லிச் சென்றுவிட்டான் மகாக்ஷத்ரபன்.

அவன் சென்றதும் சில விநாடிகள் கழித்து உடையில் தன் கோடரியை மட்டும் மறைத்து எடுத்துக் கொண்டு கீழே சென்றவன் அங்கிருந்த காஷ்டானனைக் கண்டு, ''காஷ்டானனா! நீ நீராடி ஆகிவிட்டதா?'' என்று வினவினான்.

''நான் தூங்கு மூஞ்சியல்ல'' என்றான் காஷ்டானன்.

''புரிகிறது, நன்றாக விழித்துக் கொண்டிருக்கிறாய்'' என்ற சதகர்ணி, ''சித்தரஞ்சனியைக் கூப்பிடு'' என்றான்.

''நீ பார்க்கக் கூடாது அவளை!''

''ஏன்?''

''நான் அவளை மணம் செய்துகொள்ளப் போகிறேன்.''

''இன்றிரவு மரணத்தைவிட மோசமான நிலையில் இருப்பாய்'' என்று கூறிய காஷ்டானன் அவனை விட்டுச் சென்றான்.

அதற்குப் பிறகு அங்கு நிற்காமல் நதிக்கரைக்குச் சென்றுவிட்ட சதகர்ணி நதியில் அமிழ்ந்தும் நீந்தியும் நீராடினான். பிறகு தான் உடுத்தியிருந்த ஆடைகளைப் பிழிந்து அணிந்துகொண்டு ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்திரத்தை இரைந்து சொன்னான் கோட்டை வரையில் கேட்கும் படியாக. அவன் கூச்சலைக் கேட்ட கோட்டையிலிருந்த வீரர்கள் உப்பரிகையிலிருந்தும் கோட்டை மாளிகையின் வாயிலிலிருந்தும் வேடிக்கை பார்க்கத் துவங்கினார்கள்.

zeevaa

இதனால் ஆங்காங்கு பேச்சும் குழப்பமும் ஏற்பட்டதால் சித்தரஞ்சனியும் வெளியில் வந்தாள். ஆற்றங்கரையில் உட்கார்ந்து கதிரவனை இரைந்து துதித்துக் கொண்டிருந்த சதகர்ணியைப் பார்த்த சித்தரஞ்சனி சிந்தனை மிகுந்தவளாய் ஆற்றங்கரைக்கு வந்து அவன் பக்கத்தில் நின்றாள். அவள் வந்ததைக் கவனித்த சதகர்ணி, ''சித்தரஞ்சனி! வா! உட்கார். சண்டிகா தேவியைப் பற்றிப் பாடு'' என்றான். அவள் உட்காரத் தயங்கியதும் கையைப் பிடித்து அவளை உட்கார வைத்து, ''உம் பாடு'' என்று சொன்னதுடன் நிற்கவில்லை அவன். தனது வலது கையை முஷ்டியாகப் பிடித்துக் கட்டை விரலுக்கிடையில் சிறிது துவாரம் விட்டு இடது கையால் முஷ்டியைப் பிடித்துத் தனது வாயால் துவாரத்தில் வலுவாக ஊத, குழலூதும் ஒலி கிளம்பியது பலமாக. அதில் சித்தரஞ்சனியின் பாட்டையே ஊதினான் சதகர்ணி. மிகுந்த ஆபத்தான சமயத்தில் அவன் எதற்காகப் பாட்டை ஊதுகிறான் என்ற நினைப்புடன் நின்றுகொண்டிருந்த சித்தரஞ்சனி அவன் ஊதலால் துன்பத்தையே அடைந்தாள்.

குழலூதிய பிறகு எழுந்த சதகர்ணி மேலும் பல விசித்திர செயல்களில் இறங்கினான். கோட்டை வீட்டுக்கு வந்ததும் சித்தரஞ்சனி கொடுத்த மாற்றுடையை அணிந்து கோடரியை மடியில் மறைத்துக் கொண்டு மகாக்ஷத்ரபன் இருக்கு மிடத்தைத் தேடிச் சென்றான். அவனை வரவேற்ற மகாக்ஷத்ரபன், ''இன்றைக்கு மிகுந்த உற்சாகத்திலிருக்கிறாய்'' என்றான்.

''உற்சாகமா!'' என்று வினவினான் சதகர்ணி ஏதுமறியாதவன் போல.

''ஆம். சூரிய ஸ்தோத்திரம், பாட்டு எல்லாம் பலம். ஆமாம், குழலூதினாயே ஏது குழல்?'' என்றும் விசாரித்தான்.

zeevaa

''கையே குழல்'' என்ற சதகர்ணி அவன் முன்பே முஷ்டி பிடித்து ஊத ஆரம்பித்தான்.

''போதும் போதும் நிறுத்து'' என்று நாகபாணன் கேட்டும் நிறுத்த மறுத்த சதகர்ணி, மகுடிபோல் ஊதி, ''நீ நாகம் தானே? ஆடு நாகபாணா!'' என்றும் கூறினான்.

மகாக்ஷத்ரபன் லேசாக நகைத்தான். அந்த நகைப்பில் கடுமை இருந்தது. அன்று அவன் வகுத்த திட்டம் பயங்கர மானது. அதிலிருந்து கௌதமிபுத்ரன் தப்ப முடியா தென்பதை நினைத்ததால் மிகுந்த அச்சத்தின் வசப்பட்டாள் சித்தரஞ்சனி. அன்றைய இரவின் பயங்கரத்தைத் தன்னால் தடுக்க முடியுமா என்றும் நினைத்தாள். தடுக்க முடியவில்லை அவளால். அன்றிரவில் முன்னதாகவே படுத்து உறங்கி விட்டான், சதகர்ணி. யாரும் தன்னை எழுப்ப வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டான். அன்று நள்ளிரவில் அவன் அறைக்குள் நுழைந்த இரு வீரர்கள் கட்டிலில் கிடந்தவன்மீது பெரிய போர்வையை வீசினார்கள். அடுத்து இருவரும் படுத்திருந்தவனை அந்தப் போர்வையிலேயே சுற்றிக் கயிறு கொண்டு கட்டினார்கள். படுத்திருந்தவன் முனகலை நிறுத்த மூச்சையும் அழுத்திப்பிடித்தான் ஒருவன். சதகர்ணியைக் கட்டிய அந்த மூட்டை நள்ளிரவு தாண்டியதும் அஞ்சன்வேல் நதியிலிருந்து படகில் பயணம் செய்தது முகத்துவாரத்தை நோக்கி.

படகு போவதைப் பார்த்துக்கொண்டு நதிக்கரையில் நின்ற சித்தரஞ்சனி மயக்கமுற்றுச் சாய்ந்தாள். அவளை நாகபாணன் தனது கைகளால் தாங்கிப் பிடித்தான். ''சதகர்ணி! உனக்குச் சித்தரஞ்சனியுமில்லை. அபராந்தாவுமில்லை. இப்பொழுது உன் சண்டிகாதேவி பேசுவாளா பார்ப்போம்'' என்று கறுவினான்.

தேவி பேசினாள்.

zeevaa

அத்தியாயம் 14

அசரீரி

கௌதமிபுத்ர சதகர்ணியைப் போர்வையைப் போர்த்திக் கயிறு கொண்டு மூட்டையாகக் கட்டிப் படகில் அனுப்பி விட்டதால் பெரிய தொல்லையொன்று தீர்ந்து விட்டதென்ற உற்சாகத்திலிருந்த நாகபாணன், சித்தரஞ்சனி மயக்கமுற்றுத் தன் கைகளில் சாய்ந்துவிட்டதைக் கண்டதும் ஒரு விநாடி அனுதாபத்தின் வசப்பட்டாலும், 'போர்க் காலங்களில் இத்தகைய விபரீதங்கள் சகஜம்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். ஆகவே சற்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு சித்தரஞ்சனியைத் தனது இரு கைகளில் தாங்கிய வண்ணம் கோட்டை வீட்டை நோக்கி நடந்து அங்கிருந்த தோழிகளிடம் சித்தரஞ்சனியை ஒப்படைத்து அவளைக் கவனிக்குமாறும், அவளுக்குச் சுரணை வந்ததும் அவளுடைய தந்தையான க்ஷத்ரபனை விட்டு அவளுக்கு ஆறுதல் சொல்லச் செய்யுமாறும் பணித்தான்.

சித்தரஞ்சனியைத் தாங்கிப் பிடித்து அழைத்துக் கொண்டு அவளது அறைக்குச் சென்று அங்கிருந்த பஞ்சணையில் அவளைப் படுக்க வைத்த பணிப்பெண்களில் ஒருத்தி அவள் முகத்தில் குளிர் நீர் தெளிக்க, இன்னொருத்தி அருகில் உட்கார்ந்து தனது முந்தானையால் விசிறத் தொடங்கினாள். இந்தச் சைத்தியோபசாரங்களால் சிறிது நினைவு திரும்பிய சித்தரஞ்சனி ஒருமுறை அருகிலிருந்த பணிப்பெண்களை

zeevaa

நோக்கித் திருதிருவென விழித்துவிட்டு, ''படகு என்ன வாயிற்று?'' என்று வினவினாள்.

''மரக்கலத்தை நோக்கிச் சென்றுவிட்டது. இன்னும் இரண்டு நாழிகைக்குள் மரக்கலத்தை அடைந்துவிடும்'' என்றாள் ஒரு பணிப்பெண்.

''மரக்கலம் எப்போது புறப்படுமாம்?'' என்று இன்னொரு கேள்வியையும் வீசினாள் சித்தரஞ்சனி.

''எனக்குத் தெரியாது'' என்று முந்தானையால் விசிறிய பணிப்பெண் சொன்னதன்றி, ''அம்மணி! நீங்கள் மிகவும் பலவீனமாயிருக்கிறீர்கள். மீதி இரவை விழித்துக் கழிக்க வேண்டாம். சற்று உறங்குங்கள்'' என்றும் கூறினாள்.

சித்தரஞ்சனி அவளுக்கு பதிலேதும் சொல்லாமல், பஞ்சணையிலிருந்து எழுந்து சற்றுச் சமாளித்துக் கொண்டு தட்டுத் தடுமாறி சாளரத்தை நோக்கி நடந்து அதன்மூலம் வெளியே நோக்கினாள். எதிரே தாபோல் மலைக்காடும், அதை ஒட்டி ஓடிய வாசிஷ்ட நதியும், அது கடலில் கலந்த முகத்துவாரமும் தெளிவாக அவள் கண்களுக்குத் தெரிந்தன. கடலில் எட்ட நின்று காற்றில் ஆடி நின்ற மரக்கலம் ஓரளவு கண்ணுக்குப் புலப்பட்டாலும், மரக்கலப் பக்கப் பகுதிகள் நிலவிலும் திட்டமாகவோ தெளிவாகவோ, தெரியா விட்டாலும், கௌதமிபுத்ரனைத் தாங்கிய படகு மட்டும் சிறிது தெரிந்ததன்றி, கப்பலிலிருந்து தொங்கவிடப் பட்ட இரு கயிறுகளில் பெரிய நீண்ட மூட்டையொன்று பிணிக்கப் பட்டு ஏற்றப்புட்டதும் புலனானதால் கண்ணைத் தனது இரு கைகளாலும் இறுக மூடிக்கொண்ட சித்தரஞ்சனி, 'சண்டிகா தேவி! நீதான் அவரைக் காப்பாற்ற வேண்டும்' என்று உள்ளூரப் பிரார்த்தனையும் செய்தாள். அடுத்து எதையோ நினைத்துக்கொண்டு அந்த அறையிலிருந்து வெளியேற முயன்று கதவை நோக்கி வேகமாகச் சென்றாள். வாயிற் படியில் கைகளைப் பக்கத்துக் கட்டைகளில் ஊன்றி அவள்

zeevaa

தந்தை க்ஷத்ரபன் நின்று கொண்டிருந்தான். ''எங்கே இவ்வளவு அவசரமாகப் போகிறாய்?'' என்று சற்று கடுமையாகவே விசாரித்தான்.

''மரக்கலத்துக்குப் போகப் போகிறேன்'' என்றாள் சித்தரஞ்சனி தந்தையை அலட்சியமாக ஏறெடுத்து நோக்கி.

''யாரைப் பார்க்கவோ?'' என்று சற்றுச் சினத்துடன் விசாரித்தான் க்ஷத்ரபன்.

''என் கணவரை.'' சித்தரஞ்சனி இதையும் மிக அலட்சியமாகச் சொன்னாள்.

''நான் உன் தந்தை.'' நினைப்பூட்டினான் க்ஷத்ரபன்.

''வளர்ப்புத் தந்தைதானே?''

''இருந்தாலென்ன?''

''பெற்ற பாசமிருக்காது. நீங்கள் அன்று என்னை வாசிஷ்டி நதி முகத்துவாரத்தில் அறைந்த பின்பு அதை நன்றாகவே உணர்ந்து கொண்டேன்.''

''இப்பொழுதும் அந்த அறை கிடைக்காதென்பது என்ன நிச்சயம்?''

''கிடைக்கலாம். அதைப்பற்றிக் கவலையில்லை'' என்று சித்தரஞ்சனி சொன்னதும் கையை ஓங்கிக்கொண்டு வந்த க்ஷத்ரபனை, ''க்ஷத்ரபா! பெண்ணாயிருந்தாலும் வளர்ந்த பின்பு தொட்டு அடிக்கும் பழக்கம் தர்ம விரோதமானது'' என்ற சொற்களைக் கேட்டுத் திரும்பிய க்ஷத்ரபன் அச்சத்திற்குள்ளானான். பின்னால் நின்ற மகாக்ஷத்ரபனான நாகபாணன், ''க்ஷத்ரபா! பெண்களை அன்பினால் வளைக்க வேண்டும். அடியினால் முடியாது. சரி, நீ கிளம்பு'' என்றான்.

''எங்கு போக?'' என்று வினவினான் க்ஷத்ரபன்.

''மரக்கலம் புறப்படு முன்பு கௌதமிபுத்ரனை ஒருமுறை பார்த்துப் பேசுவோம்'' என்றான் நாகபாணன்.

zeevaa

''பேசுவதற்கு என்ன இருக்கிறது?'' என்று வினவினான் க்ஷத்ரபன்.

''வா சொல்கிறேன்!'' என்று அவனை அழைத்துக் கொண்டு வெளியே சென்ற நாகபாணன் வாயிற்படியில் சற்றே திரும்பி, ''சித்தரஞ்சனி! பொழுது விடிந்ததும் நீ சுதந்திரமாக எங்கு வேண்டுமானாலும் போகலாம். கௌதமி புத்ரனுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது. எதிரியானாலும் தைரியசாலி. வீரன். அவனுக்குத் தீங்கு எதுவும் விளைவிக்க நான் இஷ்டப்படவில்லை. ஆனால் இந்த இடத்திலிருந்து அவனை அகற்றாவிட்டால் இத்தனை நாட்கள் திட்டம் போட்டுத் தாபோல் மலைப்பகுதியிலிருந்த மக்களை விரட்டி தமது படைகளை இறங்கச் செய்த ஏற்பாடு தவிடு பொடியாகிவிடும். நமது நலனையும் சிந்தித்துப் பார்'' என்று கூறிவிட்டுச் சென்றான்.

சித்தரஞ்சனியை இப்படிச் சமாதானப்படுத்திவிட்டு க்ஷத்ரபனை அழைத்துக்கொண்டு வெளியே வந்த நாகபாணன், ''க்ஷத்ரபா! மரக்கலத்துக்குப் போய் வந்ததும் நாளைக்கு உன்னிஷ்டப்படி காஷ்டானனுக்குச் சித்தரஞ் சனியை மணமுடித்துக் கொடுத்து முடித்துவிடுகிறேன். கவலைப்படாதே'' என்று கூறிவிட்டு, ''நீ போய் மரக்கலத்தில் கௌதமிபுத்ரனைச் சரியான காவலில் வைத்துவிட்டு வா. நான் பொழுது விடிந்ததும் வந்து அவனுடன் பேசிய பிறகு மரக்கலம் புறப்படட்டும்'' என்றான்.

''நீங்களும். வருவதாகச் சொன்னீர்களே?'' என்று கேட்டான் க்ஷத்ரபன்.

''இங்கு சில அலுவல்கள் இருக்கின்றன. அவற்றை முடித்து விட்டு வருகிறேன்'' என்று நாகபாணன் சொல்லி விட்டு, ''நீ புறப்படு! எதிரிக்கு எந்தவிதத் தீங்கும் கூடாது. நினைவிருக் கட்டும்'' என்று எச்சரிக்கை செய்தும் அனுப்பினான்.

zeevaa

நாகபாணனுக்குத் தனது எதிரியிடம் ஏற்பட்ட கருணைக்குக் காரணம் புரியாமலும், அதைப்பற்றிக் கசந்து கொண்டும் க்ஷத்ரபன் புறப்பட்டான், வாசிஷ்டி நதியின் படகுத் துறையை நோக்கி. அங்கிருந்த படகொன்றை எடுத்துக்கொண்டு துடுப்புகளை வேகமாகத் துழாவி மரக்கலத்தை நோக்கிச் சென்றான்.

மகாக்ஷத்ரபரும் க்ஷத்ரபரும் சென்ற பிறகு தோழிகளை அனுப்பிவிட்டு மீண்டும் பஞ்சணையில் படுத்த சித்தரஞ்சனி தூக்கம் வராததாலும் துன்பம் நெஞ்சை அழுத்தியதாலும் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தாள். விடிவதற்கு நாலைந்து நாழிகைகள் இருக்கும்பொழுது எழுந்திருந்து வாசிஷ்டி நதியை நோக்கிச் சென்றாள். அவளைத் தடை ஏதும் செய்யவேண்டாமென்று நாகபாணன் உத்தர விட்டிருந்ததால் யாரும் அவளைத் தடை செய்யவில்லை. நேராக நதிக்கரைக்குச் சென்ற சித்தரஞ்சனி நதியில் இறங்கி நீராடினாள். பிறகு அங்கிருந்த படகுக்காரன் ஒருவனை அழைத்துத் தன்னை எதிர்க்கரையில் விட்டுவிடும்படி பணிக்கவே அவன் மறுமொழி ஏதும் சொல்லாமல் படகை அவிழ்த்து அவள் ஏறியதும் துடுப்புக்களைக் கொண்டு படகைத் துழாவி எதிர்க்கரைக்குச் செலுத்தினான். எதிர்க் கரையை அடைந்ததும் ஈரச் சேலையுடனேயே மலையில் ஏறிச் சென்ற சித்தரஞ்சனி நேராகச் சண்டிகையின் குகை இருப்பிடம் சென்றாள். அங்கிருந்த செடிகளிலிருந்த மலர்களில் இரண்டைத் தலையில் சொருகிக்கொண்டு இன்னும் சில மலர்களை எடுத்து மடியில் கட்டிக்கொண்டு பாறையை நகர்த்திக் குகைப் படிகளில் இறங்கிச் சென்றாள். சண்டிகையின் சந்நிதானத்தை அடைந்ததும் அங்கு அம்மன் காலடியில் இருந்த குங்குமத்தை எடுத்து நெற்றியில் தீட்டிக் கொண்டு நன்றாக மண்டியிட்டுத் தலை தரையில் தொட வணங்கினாள். பிறகு மண்டியிட்ட நிலையிலேயே கண்களை இறுக மூடிக்கொண்டு சண்டிகையைத் துதித்தாள். தேவியின்

zeevaa

தோத்திரங்களை மனத்திலேயே நீண்ட நேரம் ஸ்மரித்த பிறகு, ''தேவி! உன் முன்பு சாதவாகனருக்குத் திருமணமான என்னை வேறொருவனுக்கு மண முடிக்க ஏற்பாடு நடக்கிறது. இது உன் திருவுளத்துக்குச் சம்மதந்தானா?'' என்று இரைந்து கேட்டாள்.

''தேவி! நீ பேசக்கூடியவள் என்று அவர் சொன்னாரே! ஏன் வாளாவிருக்கிறாய்? நீ கல்லானாலும் கடவுள்தானே! அநீதிகள் நடக்கும்போது நீ எப்படி வாயை மூடிக் கொண்டிருக்கலாம். பேசு தாயே'' என்று இரைந்து கேட்டாள் சித்தரஞ்சனி. அடுத்துப் பழைய அதே சித்தரஞ் சனியை மெதுவாக இசைக்கவும் தொடங்கினாள். அந்த இசையின் விளைவாகவோ என்னவோ திடீரென்று பெரும் காற்றொன்று எங்கிருந்தோ கிளம்பியது. அதன் வேகத்தால் குகையின் ஒரு பகுதி ஊழியின் பெரு ஊதல்போல் ஊதவும் தொடங்கியது. திடீரென்று குகை வாயிலிருந்து புஷ்பங்கள் சில காற்றால் கொண்டுவரப்பட்டுப் படிகளிலும் சந்நிதி முன்பும் சிதறப்பட்டன.

இதனால் குகை வாயிலைத் தான் வழக்கப்படி மூடவில்லையென்பதை உணர்ந்த சித்தரஞ்சனி திரும்பி நோக்கினாள். வாயில் திறந்தது திறந்தபடியிருந்தாலும் அங்கு யாரும் காணவில்லை. இருப்பினும் அதைப்பற்றிக் கவலைப் படாத சித்தரஞ்சனி மீண்டும் தேவியை நோக்கிக் கண்களில் நீர் சுரக்க வேண்டினாள். ''தேவி! அவரை மரக்கலத்திலிருந்து எப்படியாவது நீதான் தப்ப வைக்க வேண்டும். என்ன காரணமென்று எனக்கே புரியவில்லை. இத்தனை ஆபத்திலும் எனக்கு மனக்கலக்கம் ஏதுமில்லை. என் மனம் கல்லாகி விட்டதா? அவர் துன்பத்தினால் ஏன் என் மனம் சலித்துச் சிதறவில்லை?'' என்று ஏக்கம் நிறைந்த குரலில் வினவினாள்.

zeevaa

அந்தச் சமயத்தில் அசரீரியொன்று ஒலித்தது, ''உன் கணவனுக்கு ஆபத்து ஏதுமில்லை. நீ நினைக்கும்போது உன்னிடம் வருவான்'' என்று.

வியப்பினாலும் வியப்பினால் ஏற்பட்ட அதிர்ச்சியினாலும் சிலையென உட்கார்ந்தபடி இருந்துவிட்ட சித்தரஞ்சனி நாற்புறமும் திரும்பிப் பார்த்தாள். எங்கும் யாரையும் காணோம். பேசியது தேவியாகத்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்ததால், ''சண்டீ! நீ கல்லல்ல, கல் உருவத்தில், எங்களுக்காகக் குடி கொண்டிருக்கும் ஜகன்மாதா. உன் கடாட்சம் இருந்தால் ஆகாதது என்ன இருக்கிறது? அவரை எப்படியும் நல்லபடி என்னிடம் அனுப்பி வை'' என்று மன்றாடினாள். அந்த நினைப்புடனும் நிச்சலமான பக்தியுடனும் மீண்டும் படிகளில் ஏறி மேலே வந்தாள். மேலே வந்ததும் காற்றிலாடிய மரங்கள் பலபல வென அவள் தலைமீது பூமாரி பொழிந்தன. தனது ஈரச் சேலையை உலர்த்திக் கொள்ள ஒருபுறமாகப் பக்கத்திலிருந்த செடிகளின் மறைவுக்குப் போன சித்தரஞ்சனி மெதுவாகச் சேலையின் ஒரு பகுதியை மட்டும் இறுகச் சுற்றிக் கொண்டு இன்னொரு தலைப்பைக் கட்டிவிட இடம் பார்த்தாள். அந்தத் தலைப்பின் நுனியை மறைவிலிருந்த கையொன்று பற்றிச் சற்று மேலே இருந்த மரக்கிளையில் கட்டிவிட்டது. அடுத்துத் தொடர்ந்த நிகழ்ச்சி அவளைப் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியதா? பரவசத்துக்கு உள்ளாக் கியதா? அவளுக்கே புரியவில்லை, அந்த ஈர ஆடையுடனிருந்த அழகியைப் பின்புறமிருந்து கௌதமிபுத்ரன் அணைத்த பின்புதான் அவள் உண்மையை ஓரளவு உணர்ந்தாள். உணர்ந்தது அவள் மட்டுமல்ல, மரக்கலத்தில் நாகபாணனும் உணர்ந்து கொண்டான். சண்டிகாதேவியின் சித்தம் எப்படியெல்லாம் பலன் தரும் என்பதும் மகாக்ஷத்ரபனுக்கு விளக்கமாகவே புரிந்தது.

zeevaa

அத்தியாயம் 15

மூட்டையில் இருந்த மணவாளன்

செடி மறைவுக்குச் சென்று சேலையின் ஒரு பக்கத்தை உடலில் சுற்றி, இன்னொரு பகுதியை உலர்த்த அந்தப் பகுதியின் தலைப்பைப் பக்கத்திலிருந்த மரக்கிளைமீது கட்ட முயன்ற சமயத்தில், தனது கையிலிருந்த தலைப்பைப் பின்னாலிருந்த கரமொன்று வாங்கி மரக்கிளையில் கட்டி விட்டதும், அதைத் தொடர்ந்து இரு கைகள் பின்னாலிருந்த வண்ணம் தனது பூவுடலை அணைத்து விட்டதையும் உணர்ந்த சித்தரஞ்சனி, அப்படித் துணிகரமாகத் தன்னை அணைக்கக் கூடியவன் கௌதமிபுத்ரனைத் தவிர வேறு யாரும் இருக்க முடியாதென்ற தீர்மானத்தினாலும், ஏற்கெனவே அவன் கைகளின் தன்மையையும் திடத்தையும், வாகையும் உணர்ந்திருந்ததாலும், எந்த எதிர்ப்பையும் காட்டாமலும் இருந்த இடத்தைவிட்டு அகலாமலும் அப்படியே நின்றுவிட்டாள்.

சேலையின் ஒரு பகுதியை மார்பையும் அவள் சுற்றிக் கட்டியிருந்ததால் அவள் நாணத்தையும் கண்ணியத்தையும் உணர்ந்த கௌதமிபுத்ரன் தான் அணைத்த அந்த புஷ்ப உடலின் மிருதுத் தன்மையும் கலந்தே இருந்ததைப் புரிந்து கொண்டு, ''எந்தப் பெண்ணையும் ஆசை மெதுவாக்குகிறது. ஸ்பரிசம் கெட்டிப்படுத்துகிறது'' என்ற இயற்கையை வியந்த வண்ணம், பின்புறத்தில் வெளேரென்று தெரிந்த முதுகின்

zeevaa

zeevaa

மேற்புறத்தில் தனது உதடுகளை ஊன்றினான். சித்தினிகளின் அழகையும் மிஞ்சும் சித்தரஞ்சனியைப் பின்புறம் இறுக அணைத்ததால் அவள் உடல் ஒரு விநாடி அச்சத்தால் ஸ்தம்பித்து அடுத்த விநாடி ஆசையால் சிறிது நெகிழ்ந்து விட்டதால் தன்னை அவள் புரிந்துகொண்டு விட்டாள் என்பதால் அவன் தனது உடலைக் கொண்டு கடினமாகவே அவள் உடலை நெருக்கினான்.

அவள் முன்கழுத்தை நோக்கித் தனது உதடுகளைப் புரட்டிய கௌதமிபுத்ரன் மெதுவாக அழைத்தான், "பெண்ணே!" என்று.

அவள் மெதுவாக மதுரமாக நகைத்து, "நான் பெண் ணென்பதை இப்பொழுதுதான் புரிந்து கொண்டீர்களா?" என்று கேட்டாள்.

"பெண்ணென்று புரியாமலா இப்படி...?" என்று சொற்களை முடிக்காமல் விட்டான் சதகர்ணி.

முடிக்காமல் விட்ட சொற்களில் மறைந்து கிடந்த முழுமையைப் புரிந்துகொண்ட சித்தரஞ்சனி, "பேச்சை ஏன் அரைகுறையாக விட்டீர்கள்?" என்று முணுமுணுத்தாள்.

கௌதமிபுத்ரன் அவள்மீது நன்றாக இழைந்து அவள் காதுக்கருகில் உதடுகளைக் கொண்டுபோய், "சொல்லட்டுமா?" என்று கேட்டான்.

"உம், சொல்லுங்கள்" என்றாள், அவள். அவன்மீது நன்றாகச் சாய்ந்தும் கொண்டாள்..

"சித்தரஞ்சனி!..." அவன் துவங்கினான்.

"உம்."

"அரைகுறையிலிருக்கும் இன்பம் முழுமையில் கிடையாது."

zeevaa

"அப்படியா!"

"ஆம். ஒரு பொருளை நாம் எதிர்பார்ப்பதில் இருக்கும் வேகம் அது கைக்கெட்டிய பின் இருப்பதில்லை."

"ஓகோ!"

"பூர்த்தியைவிடப் பூர்த்திக்குச் செல்லும் பாதை கடினமாயிருந்தாலும் இன்பமானது."

"கவியைப் போல் பேசுகிறீர்கள்" என்றாள் சித்தரஞ்சனி.

கௌதமிபுத்ரன் சொன்னான்: "உணர்ச்சியிலிருந்து விளைவது கவிதை. உணர்ச்சி ஊட்டுவதற்குத் தக்க பொருள் வேண்டும். தக்க நிகழ்ச்சி வேண்டும். இரண்டும் என் கண்முன் இருக்கின்றன. நிகழ்ச்சியிலிருந்து நெகிழ்ச்சி உண்டாகிறது. நெகிழ்ச்சியிலிருந்து கவிதை உரு எடுக்கிறது" என்று கூறிய கௌதமிபுத்ரன் சித்தரஞ்சனியைத் தனது இரு கைகளாலும் திடீரெனத் தனக்கு எதிர்ப்புறத்தில் திருப்பிக் கொண்டு சற்று எட்டப் பிடித்து அவளை நோக்கினான்.

மார்புவரை இறுக அவள் சுற்றியிருந்த ஈரச் சேலையையும் அவள் மார்பகம் மீற முயன்று கொண்டிருந்தது. அதன் விளை வாகச் சேலையால் இறுக்கப்பட்ட இடத்தின் விளிம்புகள் சற்றே புடைத்திருந்தன. பிறைச் சந்திர வடிவத்தில், முழங் கால்களுக்குக் கீழே சேலையில்லாததால் இரண்டு பவளத் தூண்கள் இருப்பது போன்ற பிரமையை அவை அளித்தன. பவளத் தூண்களுக்குப் பிரிந்த தாமரை இதழ்கள் போன்ற விரல்கள் பேரழகை ஊட்டின. இந்த அழகுகளிலிருந்து சற்றே அவள் முகத்தை ஏறெடுத்து நோக்கிய சதகர்ணி, அவள் முகம் சற்று அண்ணாந்து இருந்ததையும் அம்புஜக் கண்கள் மூடியிருந்ததையும், செம்பருத்தி இதழ்கள் போன்ற அதரங்கள் மட்டும் லேசாக விரிந்திருந்ததையும் கண்டான். அந்த இதழ்களின் ஏக்கம் அவனுக்குப் புரிந்திருந்ததால்

zeevaa

அவளை முன்புறத்திலும் நன்றாகத் தழுவித் தனது இதழ்களை அவள் இதழ்களோடு இணையவிட்டான்.

இணைந்த இதழ்கள் இழைந்தன. உடல்கள் ஒன்றின. அவன் கைகளைப் போலவே அவள் கைகளும் எழுந்து அவன் கழுத்தை வளைத்தன. அவன் முரட்டுக் கன்னத்தோடு தனது வழுவழுத்த கன்னத்தையும் அவள் இழைத்தாள். பிறகு மெல்லச் சரிந்தாள் நிலம் நோக்கி. அப்படிச் சரிந்ததால் மேலே கிளையில் கட்டிய சேலை கிழிந்தது சர்ரென்று. அதையும் பொருட்படுத்தாமல் தரையில் கிடந்தாள் அவள். நிலமோ கினியெனக் கிடந்து சித்தத்தை அள்ளும் சித்தரஞ்சனியின் முன்பு மண்டியிட்டு உட்கார்ந்த கௌதமிபுத்ரன் அவளை நன்றாகவே கண்களால் பருகினான். பிறகு மெள்ள அவள்மீது குனிந்து, ''சித்தரஞ்சனி! பொழுது புலர்ந்து விட்டது...'' என்றான் ரகசியமாக.

சித்தரஞ்சனி தனது கண்களை முழுக்க விரிக்காமல் அரைப் பார்வையாக அவனைப் பார்த்தாள். ''அதனா லென்ன?'' என்றும் கேட்டாள். ''சண்டிகையும் வரம் கொடுத்து விட்டாள்'' என்றும் சொன்ன அவள், ''ஆமாம், அசரீரியை நீங்கள் கேட்கவில்லையே'' என்றும் வினவினாள்.

''இல்லை.''

''ஏன்?''

''சரீரியும். அசரீரியாக முடியும்,'' என்று புதிர் போட்டான் அவன்.

''எனக்கு விளங்கவில்லை'' என்றாள் அவள்.

''அஹம் பிரும்மாஸ்மி என்று கேட்டிருக்கிறாயா?'' என்றான் சதகர்ணி.

''இப்பொழுதென்ன வேதாந்தம்?'' என்றாள் அவள்.

zeevaa

‘‘சற்று முன்பு அசரீரியாயிருந்தேன். சரீரியாக மாறினேன். எல்லாம் உனக்காக’’ என்றான் சதகர்ணி.

‘‘விளங்கவில்லை எனக்கு’’ என்றாள் சித்தரஞ்சனி

‘‘நீ எதிர்க்கரையிலிருந்து படகில் இங்கு வந்ததைக் கவனித்தேன். நீ போகுமிடம் தெரியுமாதலால் முன்னமே சென்று சண்டிகையின் திவ்ய மங்கள விக்ரகத்துக்குப் பின்னால் மறைந்தேன். உனக்கு வரமும் அளித்தேன். நீ அங்கிருந்து புறப்பட்டதும் நானும் புறப்பட்டு உன்னைத் தொடர்ந்தேன். நீ திரும்பியும் பார்க்கவில்லை என்னை. ஆகவே உன்னைத் தொடர்ந்தேன். செடி மறைவில் உனக்கு உதவினேன். இப்பொழுது செடி மறைவில்...’’ என்று நடந்ததை விளக்கினான்.

‘‘செடி மறைவில்?’’ என்றும் அவள் கேட்டாள்.

‘‘மேலும் உதவுவேன்’’ என்றான் சதகர்ணி.

எந்த உதவியைப் பற்றி அவன் பிரஸ்தாபிக்கிறானென்பதைப் புரிந்துகொண்ட சித்தரஞ்சனி பேச்சை வேறு திசையில் திருப்பி, ‘‘அசரீரியின் குரல் உங்கள் குரல் மாதிரி இல்லையே?’’ என்று கேட்டாள்.

‘‘குயில் மாதிரி கூவுவேன். காக்கை மாதிரி கத்துவேன். குழல் ஊதுவேன்...’’ என்று மேலும் ஏதோ சொல்லப்போன சதகர்ணியை இடைமறித்து, ‘‘ஆமாம், நதியின் எதிர்க் கரையில் குழல் ஊதினீர்கள் எதற்காக?’’ என்று சித்தரஞ்சனி கேட்டாள்.

‘‘எனது புரவியை அழைக்க. என் குழலைக் கேட்டதும் எதிர்க்கரையில் தலையைக் காட்டியது. அங்கேயே தங்கும் படி சைகை செய்தேன். அங்கேயே இருந்தது. அதனால் தான் இப்புறம் வர முடிந்தது’’ என்றான் சதகர்ணி.

zeevaa

கௌதமிபுத்ரன் ஜகஜ்ஜாலப் புரட்டன் என்பதைச் சித்தரஞ்சனி சந்தேகமற உணர்ந்து கொண்டாள். "ஆமாம்! உங்களைத்தான் மூட்டையாகக் கட்டிக்கொண்டு போனார்களே! எப்படித் தப்பினீர்கள்?" என்று வினவினாள்.

"அதைப்பற்றி இப்பொழுதென்ன?" என்ற கௌதமி புத்ரன் அவள் பக்கத்தில் தரையில் படுத்து அவளைத் திருப்பித் தன்னுடன் அணைத்துக் கொண்டான்.

அவள் பேச்சிழந்து கிடந்தாள். அதே சமயத்தில் கடலில் நின்ற மரக்கலத்தில் பேச்சு பலமாக நடந்து கொண்டிருந்தது. "நீங்கள் அனைவரும் முட்டாள்கள்" என்று நாகபாணன் சீறிக் கூவினான். அன்று க்ஷத்ரபன் மிகுந்த புத்திசாலித் தனத்துடன் நடந்து கொண்டிருந்தான். மகாக்ஷத்ரபர் வரும்வரையில் மூட்டையைப் பிரிக்க வேண்டாமென்று உத்தரவிட்டுத் தளத்தில் கிடந்த மூட்டையைக் காலால் ஒரு முறை உதைத்தான். மூட்டைக்குள்ளிருந்து முனகல் பலமாகக் கேட்டது.

"மாப்பிள்ளையாகக் கனவு காண்பவன் கதியெல்லாம் இப்படித்தான். க்ஷத்ரபன் மாப்பிள்ளையாவது அத்தனை சுலபமா?" என்று க்ஷத்ரபன் இரைந்தான். "ஹூம், ஹூம்" என்று மூட்டைக்குள்ளிருந்து முனகல் மீண்டும் மீண்டும் கேட்டது.

"இன்னொரு முறை முனகினாயோ என் கத்தியை முட்டைக்குள் பாய்ச்சி விடுவேன்" என்று கூவினான் க்ஷத்ரபன்.

பொழுது விடியும் நேரத்தில் நாகபாணனும் மரக்கலத்துக்கு வந்து சேர்ந்தான். மூட்டை கட்டியபடியே இருந்ததைப் பார்த்து, "இன்னும் ஏன் மூட்டையை அவிழ்க்கவில்லை?" என்று கோபத்துடன் வினவினான் நாகபாணன்.

zeevaa

''மூட்டையை அவிழ்க்க உத்தரவில்லையே?'' என்றான் க்ஷத்ரபன்.

''சரி சரி; அவிழ்த்துவிடு'' என்று நாகபாணன் உத்தர விட்டதும் மரக்கல மாலுமிகள் மூட்டையை அவிழ்த்தனர். மூட்டைக்குள்ளிருந்து எழுந்தவனைப் பார்த்ததும் நாகபாணன் மிகுந்த சீற்றத்தை அடைந்தான். அடுத்த விநாடி மூட்டைக்குள் இருந்து எழுந்த காஷ்டானன் கை கால்களை உதறிச் சரிப்படுத்திக் கொண்டு வேகமாக க்ஷத்ரபன் மீது பாய்ந்து அவன் குரல் வளையைப் பிடித்துக் கொண்டான்.

zeevaa

அத்தியாயம் 16

மணமகள் தேவை

பொழுது புலர வேண்டிய வேளையின் காரணமாக வானிலிருந்த சந்திரன் கர்ப்ப ஸ்திரீயின் முகம் போல் ஒளியிழந்து கிடந்த நேரத்தில், நக்ஷத்திரங்களும் எங்கோ ஒன்றாகத் தேடக்கூடிய நிலையில் மறைந்து கொண்டிருந்த சமயத்தில், மேலைக்கடலின் இயற்கையழகு கண்ணையும் மனத்தையும் பறிக்கும்படியாக இருந்த நேரத்தில், மந்தமான ஒளி எங்கும் பரவி நின்ற காலத்தில், அந்த இயற்கை அழகையும் அழிக்கக்கூடிய நிகழ்ச்சியின் விளைவாக எதற்கும் அசையாத நாகபாணன் கூட அதிர்ச்சியை அடைந்தான்.

கோட்டையிலிருந்து கொண்டு வரப்பட்ட மூட்டையிலிருந்து கௌதமிபுத்ரனுக்குப் பதில் காஷ்டானன் எழுந்ததையும், அடுத்து நடக்கப் போவது என்ன என்பதைத் தான் தீர்மானிக்கும் முன்பாக காஷ்டானன் கை கால்களை உதறிக் கொண்டு க்ஷத்ரபன்மீது பாய்ந்து அவன் குரல் வளையைப் பிடித்துவிட்டதையும், அடுத்த நிமிடம் க்ஷத்ர பனைக் கீழே தள்ளி காஷ்டானன் அவன் மீது உட்கார்ந்து குரல்வளையைத் திருக முயன்றதையும், க்ஷத்ரபன் மூச்சு திணறித் திண்டாடியதையும் கண்ட நாகபாணன் சில விநாடிகள் செயலற்று விட்டானானாலும், செயற்பட்ட போது மிகப் பயங்கரமாகச் செயல்பட்டான். தனது காலின் ஒரே உதையில் காஷ்டானனை க்ஷத்ரபன் உடலிலிருந்து

zeevaa



16. மணமகள் தேவை!

zeevaa

அப்புறம் சென்று விழச்செய்தான். அடுத்துத் தனது இடது கையால் க்ஷத்ரபனின் இடது கையைப் பிடித்துத் தூக்கி நிறுத்தி வலது கையால் அவன் முகத்தில் ஓங்கிக் குத்தவே க்ஷத்ரபன் இரண்டு அடிகள் பின்னுக்குச் சென்று மல்லாந்து காஷ்டானன் பக்கத்தில் விழுந்தான்.

அப்பொழுதும் காஷ்டானன் தனது பக்கத்தில் விழுந்த க்ஷத்ரபனைப் பிடிக்கத் தனது கையை உயர்த்தியபோது, ''க்ஷத்ரபன்மீது அந்தக் கை விழுந்தால் அதை உடனடியாக வெட்டி விடுவேன்'' என்று நாகபாணன் அதட்டவே, காஷ்டானன் தனது கொலை முயற்சியை விட்டு மெதுவாக எழுந்து நின்று க்ஷத்ரபனைக் கொலைப் பார்வையாகப் பார்த்தான். க்ஷத்ரபனும் மெதுவாகத் தனது பெரிய சரீரத்தைத் தூக்கிக் கொண்டு எழுந்து நின்று, ''இத்துடன் இது முடியவில்லை, காஷ்டானா?'' என்று சீறினான்.

''எந்தச் சமயத்திலும் உன்னைச் சந்திக்கச் சித்தமாயிருக் கிறேன்'' என்று காஷ்டானனும் தனது உக்கிரத்தைக் காட்டினான்.

அவர்கள் இருவரும் சுயநிலைக்கு வருவதற்குள் நிதானத்தை அடைந்துவிட்ட மகாக்ஷத்ரபனான நாகபாணன், ''உங்களிருவருக்கும் அந்தக் கஷ்டமிருக்காது'' என்று மிக மெதுவாகச் சொன்னான்.

அந்த மெதுவான போக்கிலும் நாகம் சீறுவது போன்ற விஷம் இருப்பதைக் கவனித்த இருவர் முகத்திலும் பேய் அறைந்த அதிர்ச்சி தெரிந்தாலும், அதிலிருந்து முதலில் மீண்ட காஷ்டானன், ''குற்றம் என்னுடையதல்ல'' என்று சொற்களின் வேகத்தை அடக்கிக் கொண்டு பேசினான்.

''குற்றம் என்னுடையதுமல்ல. மகாக்ஷத்ரபர் உத்தரவைத் தான் நான் நிறைவேற்றினேன்'' என்று க்ஷத்ரபன் தனது கட்சியை எடுத்துச் சொன்னான்.

zeevaa

நாகபாணன் அந்த இருவரையும் இகழ்ச்சியுடனும் வெறுப்புடனும் நோக்கிவிட்டு, முடிவில் க்ஷத்ரபனை நோக்கி, ''இந்த ஆள் மாறாட்டம் எப்படி ஏற்பட்டது?'' என்று வினவினான்.

''எனக்குத் தெரியாது'' என்றான் க்ஷத்ரபன்.

அடுத்து காஷ்டானனை நோக்கினான் நாகபாணன். ''இந்த மூட்டைக்குள் நானாக நுழைந்து கொள்ளவில்லை'' என்று காஷ்டானன் சொன்னான்.

நாகபாணன் கண்கள் மீண்டும் க்ஷத்ரபன் மீது திரும்பின. ''கட்டிலில் படுத்திருந்தவனைக் கட்டிக் கொணர்ந்தேன். படுத்திருந்தது யாரென்று தெரியாது. காஷ்டானன் யாரென்பதை அறிவிக்கவில்லை'' என்று காஷ்டானனின் மீது குற்றம் சாட்டினான் க்ஷத்ரபன்.

''வாயில் துணி அடைத்திருந்தால் எப்படி என்னை அறிவித்துக் கொள்ள முடியும்? இங்கு வரும்போதும் வந்த பின்னும் எத்தனை தடவை முனகினேன். மூட்டையைத் திறந்து பார்க்கக்கூட க்ஷத்ரபனுக்கு மூளையில்லையா?'' என்று கேட்டான் காஷ்டானன்.

நாகபாணன் க்ஷத்ரபனைப் புன்முறுவலுடன் நோக்கி விட்டு, ''காஷ்டானா! இவன்தான் தெரியாமல் உன்னைக் கொண்டு வந்து விட்டான். ஆனால் நீ எதற்காக அவனைக் கொல்ல முயன்றாய்?'' என்று காஷ்டானனை விசாரித்தான்.

காஷ்டானன் முகத்தில் மீண்டும் சினம் உதயமாயிற்று; ''மகாக்ஷத்ரபரே! மூட்டையிலிருந்தபோது என் மாமனாராக வேண்டியவர் எத்தனை முறை என்னை உதைத்தார்? எத்தனை கேவலமாகப் பேசினார்! 'மாப்பிள்ளையாகக் கனவு காண்பவன் கதியெல்லாம் இப்படித்தான்' என்றார். 'க்ஷத்ரபன் மாப்பிள்ளையாவது அத்தனை சுலபமா' என்றார். நான் முனகினேன், நான் யாரென்பதை அறிவிக்க

zeevaa

இன்னொரு முறை முனகினால் மூட்டைக்குள் கத்தியைப் பாய்ச்சி விடுவதாகப் பயமுறுத்தினார். பிறகு நான் முனகக் கூட இல்லை. மூட்டையிலிருந்து விடுதலையான பிறகு மாமனாருக்குச் சரியான பாடம் கற்பிப்பதென்று தீர்மானித்தேன். மற்றவை நீங்கள் அறிந்ததே'' என்று தனது கதையை முடித்தான் காஷ்டானன்.

நாகபாணன் நீண்ட நேரம் மரக்கலத்தின் பாய்மரத்தில் சாய்ந்தபடியே சிந்தனையில் இறங்கினான். பிறகு கேட்டான். ''காஷ்டானா! நீ எப்படி சாதவாகனன் கட்டிலுக்கு வந்து சேர்ந்தாய்?'' என்று.

காஷ்டானன் முகத்தில் குழப்பம் தெரிந்தது. ''திட்டமாகத் தெரியவில்லை. ஆனால் ஊகிக்க முடியும். நான் இரவு முற்றிய சமயத்தில் கோட்டை நந்தவனத்தில் நடந்து கொண்டிருந் தேன். ஏதோ சிந்தனையுடன் ஒரு புதரின் முன்பிருந்த சிறு மரத்தில் சாய்ந்து கொண்டிருந்தேன். மரத்தின் மீதிருந்து ஏதோ கல்லோ கட்டையோ விழுந்திருக்க வேண்டும். நான் மூர்ச்சையானேன். பிறகு என்னை நீங்கள் கட்டிலிலிருந்து தூக்கிப் படகில் கிடத்திய போது தான் சற்று சுரணை வந்தது'' என்று நடந்ததை விவரித்தான் காஷ்டானன்.

நாகபாணன் காஷ்டானனை அருகில் வரச் சொல்லி அவன் தலையைப் பார்த்தான். நடுமண்டையில் பெரிய காயம் தெரிந்தது. ஆனால் அதன்மீது ஏதோ களிம்பும் பூசப் பட்டிருந்தது. அதைக் கண்ட நாகபாணன், ''காஷ்டானா! நீ இப்பொழுது உயிருடனிருப்பது கௌதமி புத்ரனால். உன்னை மண்டையில் லாகவமாக அடித்துக் காயத்துக்குக் களிம்பும் போட்டு ரத்தத்தை நிறுத்திவிட்டான்'' என்று சொல்லிவிட்டு, ''உன்னைக் காப்பாற்ற மட்டும் கௌதமி புத்ரன் உனக்கு சிகிச்சை செய்யவில்லை. உன் மண்டையில் குருதி பெருகினால் உன்னைப் போர்த்தியிருந்த

போர்வையில் ரத்தக்கறை தெரியும். அது என்னவென்று நாம் பார்ப்போம். பிறகு உண்மை விளங்கிவிடும். பிறகு அவன் தப்புவதும் குதிரைக் கொம்பு. இதை உணர்ந்தே மிக சாமர்த்தியமாக நடந்து கொண்டிருக்கிறான் சாதவாகனன். நாம் இப்பொழுது மகாபுத்திசாலியும் மகாவீரனுமான எதிரியுடன் போராடுகிறோம். இதை நீங்கள் புரிந்து கொள்வது நல்லது'' என்று கூறினான். மேலும் சொன்னான்: ''க்ஷத்ரபா! உடனடியாக நாம் சித்தரஞ்சனியின் திருமணத்தை நடத்திவிட வேண்டும். காஷ்டானனுக்கு அவளை மணமுடிக்க உடனே நாள் அறிவிப்போம்'' என்று.

அத்துடன் தீர்க்க சிந்தனையுடன் நூலேணியில் இறங்கிக் கோட்டையை நோக்கிப் படகில் கிளம்பினான் மகாக்ஷத்ரபன். படகில் போகும்போதே அவனுக்குப் பலவித யோசனைகள் கிளம்பி அவன் சிந்தையைச் சிதற அடித்துக் கொண்டிருந்தன. 'க்ஷத்ரபன் சித்தரஞ்சனி திருமண நாளையும் குறிப்பிட்டால் அதைத் தடுக்க சாதவாகனன் கண்டிப்பாய் வருவான். அவன் வரும்போது அவனை வரவேற்க நான் சித்தமாக இருப்பேன். எதற்கும் கோட்டையை அடைந்ததும் அவளைக் காவலில் வைக்கிறேன்' என்று எண்ணிக் கொண்டே கோட்டையை அடைந்த நாகபாணன் சித்தரஞ்சனியை உடனடியாக அழைத்து வருமாறு பணிமக்களுக்கு உத்தரவிட்டான்.

சற்று நேரத்திற்கெல்லாம் வந்த பணிமகளொருத்தி, ''நேற்றிரவு நதிக்கரை சென்ற சித்தரஞ்சனி திரும்பவில்லை'' என்று அறிவித்தாள்.

''நதிக்கரையிலிருந்து திரும்பவில்லை?'' நாகபாணன் சீறினான்.

''இல்லை.''

zeevaa

"எங்கு போனாள்?"

"அக்கரைக்குச் சென்றதாகப் படகோட்டி சொன்னான்."

"யாரும் தேடவில்லை?"

"இல்லை."

"ஏன்?"

"எங்கு போனாலும் அரசகுமாரியைத் தடை செய்ய வேண்டாமென்றும், விசாரிக்கவேண்டாமென்றும் தாங்கள் உத்தரவிட்டதாகச் சொன்னார்கள்."

தான் அளித்த சுதந்திரத்தை சித்தரஞ்சனி நன்றாக உபயோகப்படுத்திக் கொண்டதை உணர்ந்த நாகபாணன் தனது வாழ்வில் முதன்முதலாகப் பூர்ணமான குழப்பத்தில் ஆழ்ந்தான். அன்று நீராடியபோதும், உணவருந்திய போதும் சிந்தனையிலேயே காலம் கழித்தான். எதிர்க்கரையிலிருந்து சென்றுவிட்ட மக்களுக்குப் பிசாசு பயம் இருக்கும் வரையில் தான் தனது திட்டத்துக்குப் பயனுண்டு என்பதை உணர்ந் திருந்தான். எப்படியும் கூடிய சீக்கிரம் எனது படைகளைத் தாபோல் பகுதியில் இறக்கிவிட்டாலொழியத் தனது சாம் ராஜ்யக் கனவு பலிக்காதென்பதையும் புரிந்து கொண்டதால் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும் தீர்மானித்தான். எப்படியும் சித்தரஞ்சனியைக் கோட்டைக்குக் கொண்டு வந்து விடுவது முக்கியம் என்ற முடிவுக்கும் வந்தான்.

அன்று மாலையில் இது சம்பந்தமான சிந்தனையில் ஈடுபட்டிருக்கையில், க்ஷத்ரபனும் காஷ்டானனும் மரக்கலத் திலிருந்து கோட்டைக்கு வந்து நாகபாணனைப் பார்த்துத் தலை வணங்கினார்கள். காஷ்டானன் சொன்னான், "மாமனார் என்னை மன்னித்துவிட்டார்" என்று.

zeevaa

''மாப்பிள்ளையும் என்னை மன்னித்து விட்டார்'' என்றான் க்ஷத்ரபன்.

''இனி கல்யாணத்திற்கு நாள் வைக்கலாம்'' என்றான் காஷ்டானன்.

நாகபாணனுக்கு உள்ளூர கோபம் வந்தாலும் அதை அடக்கிக்கொண்டு, ''காஷ்டானா! உன்னை மாமனார் உதைத்ததைப் பற்றிக் கோபமில்லையா?'' என்று வினவினான்.

''மூட்டைக்குள்ளிருப்பது நான் என்று தெரிந்திருந்தால் உதைத்திருக்க மாட்டார்'' என்றான் காஷ்டானன்.

''க்ஷத்ரபா! உன்னை இவன் குரல்வளையைப் பிடித்துக் கொல்ல முயன்றானே?'' என்று நாகபாணன் க்ஷத்ரபனை நோக்கிக் கேள்வி ஒன்றைத் தொடுத்தான்.

''அறியாமையால் ஆத்திரத்தில் செய்தார். ஆத்திரக் காரனுக்குப் புத்தி மட்டு'' என்று வாதாடினான் க்ஷத்ரபன்.

சாதாரண சமயமாயின் யாருக்குப் புத்தி மட்டு என்று கேட்டு க்ஷத்ரபன்மீது பாய்ந்துவிடக் கூடிய காஷ்டானன் அன்று மௌனமாக நிலத்தில் பார்வையைச் செலுத்தி வெட்கத்துடன் நின்றான்.

அவன் நின்ற நிலையை நோக்கிய நாகபாணன், ''மனைவிக்காக மாமனாரிடம் உதை வாங்கியதையும் பொருட்படுத்தாத வீரன் இந்த காஷ்டானன்'' என்று உள்ளூர சொல்லிக் கொண்டான்.

அப்பொழுது மெதுவாக காஷ்டானன், ''மகாக்ஷத்ரபரே! முகூர்த்த நாளை குறித்து விடலாமே?'' என்று கேட்டான்.

''அதற்கு முக்கியமான ஒருவர் தேவை'' என்றான் நாகபாணன்.

zeevaa

‘‘ஜோஸ்யர்தானே! இதோ அழைத்து வருகிறேன்’’ என்றான் காஷ்டானன்.

‘‘அவர் அத்தனை முக்கியமல்ல’’ என்றான் நாகபாணன்.

‘‘தாரை வார்த்துக் கொடுக்க இதோ தந்தை இருக்கிறார்’’ என்று க்ஷத்ரபனைக் காட்டினான் காஷ்டானன்.

‘‘அவரைவிட முக்கியமானவர் வேண்டும்’’ என்றான் நாகபாணன்.

‘‘மாமனாரைவிட முக்கியமானவரா!’’ வியப்பைக் காட்டினான் காஷ்டானன்.

‘‘ஆம்.’’

‘‘யாரது அத்தனை முக்கியம்?’’

‘‘பெண்.’’

‘‘பெண்ணா?’’

‘‘ஆம்.’’

‘‘மணமகளா?’’

‘‘ஆம்.’’

‘‘அவளுக்கென்ன?’’

‘‘அவள்தான் தேவை. அவளைக் காணவில்லை’’ என்ற நாகபாணன் நகைத்தான்.

zeevaa

அத்தியாயம் 17

காஷ்டானனுக்குப் புதிய பதவி!

திருமணத்திற்கு மணமகள் தேவையென்றும் அவளைக் காணவில்லையென்றும் கூறிவிட்டு, நாகபாணன் நகைத் ததைக் கண்ட க்ஷத்ரபனும், காஷ்டானனும் அந்த நகைப்பை ரசிக்க முடியாததாலும், நாகபாணனை எதிர்த்து ஏதும் பேசும் துணிவில்லாததாலும் அதிர்ச்சியுற்று ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு பல விநாடிகள் நின்று விட்டாலும், காஷ்டானன் மட்டும் சிறிது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, ''அவள் எப்படிக் காணாமல் போனாள்? அவளைத் தப்ப விட்டது யார்?'' என்று வினவினான் சிறிது சினத்தையும் ஏமாற்றத்தையும் குரலில் காட்டி.

மாப்பிள்ளையின் தைரியத்தை க்ஷத்ரபனும் வரவழைத்துக் கொண்டு, ''அவள் தப்புவதற்கு யார் காரணம் என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும்'' என்று கூறினான்.

''கண்டுபிடித்துத் தகுந்தபடி தண்டிக்கவும் வேண்டும்'' என்றான் காஷ்டானன்.

நாகபாணன் இதழ்களில் வெறுப்பும் இகழ்ச்சியும் கலந்த புன்னகை தாண்டவமாடியது. ''தண்டனை என்ன என்பதை நீங்களே தீர்மானித்துவிடலாம்'' என்றான் நாகபாணன் சொற்களிலும் நகைச்சுவை ஒலிக்க.

zeevaa

''சிறையில் போட்டுச் சித்ரவதை செய்யலாம்'' என்று க்ஷத்ரபன் தண்டனையைக் குறிப்பிட்டான்.

நாகபாணன் அப்பொழுதும் சிறிதும் மசியாமல் சர்வ சாதாரணமாகச் சொன்னான், ''அப்படியானால் நீங்கள் இருவரும் இப்பொழுதே சிறைக்குப் போகலாம், சித்திர வதைக்கு நான் ஏற்பாடு செய்கிறேன்'' என்று.

காஷ்டானன் முகத்திலும் க்ஷத்ரபன் முகத்திலும் திகில் மிக அதிகமாகப் பரவியதால், க்ஷத்ரபன் பேசாவிட்டாலும் ''நாங்களா?'' என்று கேட்டான் காஷ்டானன்.

''நாங்கள் சிறைக்குப் போகவேண்டிய காரணம்?'' என்று க்ஷத்ரபனும் குரலில் திகிலைக் காட்டினான்.

நாகபாணன் தனது ஆசனத்திலிருந்து, மெதுவாக எழுந்து நின்றுகொண்டு அவர்கள் இருவரையும் வெறுப்புடன் நோக்கிவிட்டு, ''என்னுடைய கட்டளைகளை நீங்கள் ஒழுங்காக நிறைவேற்றியிருந்தால் இத்தனை நேரம் சாதவாகனன் நமது மரக்கலத்தில் அபராந்தாவை நோக்கிச் சென்றுகொண்டிருப்பான். இன்னும் இரண்டு நாட்களில் நமது சிறைச்சாலையில் கட்டுண்டு கிடப்பான். இங்கு நாம் நிம்மதியாக நமது திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக் கலாம். சித்தரஞ்சனிக்கும் திருமணத்தை முடித்திருப்பேன். ஆனால்...'' என்று சிறிது பேச்சை நிறுத்திய நாகபாணன் க்ஷத்ரபன்மீது தனது கண்களை நாட்டி, ''சாதவாகனனுக்குப் பதில் இந்த முட்டாளைக் கட்டிக்கொண்டு வந்தாய் மரக்கலத் துக்கு. மரக்கலத்தை அடைந்த பின்பாவது மூட்டையை அவிழ்த்துப் பார்த்தாயா? அதுவும் இல்லை. மூட்டையி லிருந்து சாதவாகனன் என்று நம்பிச் சித்தரஞ்சனி சுதந்திரமாக உலாவ அனுமதித்தேன். இத்தனை விவகாரத்துக்கும் எனது திட்டங்கள் உடைந்ததற்கும் சித்தரஞ்சனி காணாமற் போனதற்கும் நீதான் முதல் காரணம்'' என்று சீறினான்.

zeevaa

zeevaa

அடுத்துக் காஷ்டானனை நோக்கி, ''சித்தரஞ்சனி காணாமற் போனதற்கு நீயும் காரணம். உன்னை யார் மரத்தடியில் நின்று மண்டையில் அடிவாங்கிக் கொள்ளச் சொன்னது?'' என்று அவனையும் காரணமில்லாமல் தூற்றிவிட்டு, ''இன்று மாலைக்குள் சித்தரஞ்சனியைப் பிடித்து வாருங்கள். இல்லாவிட்டால் நீங்கள் குறிப்பிட்ட சிறைத் தண்டனையும், சித்திரவதையும் உங்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கும்'' என்று மிரட்டவும் செய்தான்.

நாகபாணன் கோபத்தைச் சிறிது குறைக்க, ''கவலைப்பட வேண்டாம் பிரபு! சித்திரஞ்சனியை நானே பிடித்து வருகிறேன்!'' என்று காஷ்டானன் கூறினான்.

''சாதவாகனனை நான் பிடித்து வருகிறேன். அவனைச் சிறைச்சாலையில் தள்ளி நானே சித்திரவதை செய்கிறேன்'' என்று கூறினான் க்ஷத்ரபன்.

அவர்கள் சபதத்திலோ திறமையிலோ சிறிதும் நம்பிக்கை யில்லாத நாகபாணன், ''இவர்களைப்போல் நூறு பேர் இருப்பதற்குப் பதில் கௌதமிபுத்ரன் ஒருவன் என்னிட மிருந்தால் எனது சாம்ராஜ்யத்தை மகாராஷ்டிரத்தில் நிலைக்கச் செய்ய அதிக காலம் பிடிக்காது'' என்று எண்ணிப் பெருமூச்சு விட்டான். அவர்களைவிட இது விஷயத்தில் தானே நேரிடையான முயற்சி எடுக்க வேண்டிய அவசியத் தையும் புரிந்துகொண்டால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவும் தீர்மானித்து, தனது மரக்கல மாலுமிகள் இருவரைக் கோட்டைக்கு வரும்படி செய்தியனுப்பினான்.

இதற்கிடையில் சித்தரஞ்சனியை எப்படியாவது பிடித்து வரும் நோக்கத்துடன் கோட்டையிலிருந்து நாலைந்து வீரர்களுடன் படகில் புறப்பட்ட காஷ்டானனும், க்ஷத்ரபனும் வாசிஷ்டியின் சங்கமத் துறையில் வந்து இறங்கினார்கள். காஷ்டானனையும் இரு வீரர்களையும்

zeevaa

தாபோல் மலையின் வடக்குப் பகுதியில் ஏறவிட்டு, தான் மட்டும் மற்ற மூன்று வீரர்களைத் துணைகொண்டு தென் பகுதியில் ஏறினான். அப்படி இருபுறத்திலும் இரு பிரிவுகளாக ஏறினால் ஒருபுறம் தாபிலேசுவரர் கோவிலும், இன்னொரு புறத்தில் சண்டிகையின் குகையும் இருந்ததால் அவர்கள் இரண்டு இடங்களில் எங்கிருந்தாலும் பிடித்துவிடலாம் என்ற நிச்சயத்துடன் திட்டமிட்ட க்ஷத்ரபன் தென்பகுதியிலிருந்த தாபிலேசுவரர் கோவிலை நோக்கிச் சென்றான்.

அன்று காலை மலையின் சூழ்நிலை மிக ரம்யமாயிருந்தது. நன்றாகச் சூழந்து கிடந்த பனிக் கூட்டம் ஆங்காங்கு மலையுச்சிப் பாறைகளில் தொக்கி சூரிய கிரணங்களை லேசாகத் தடுத்து அனுப்பியதால் அங்கங்கு சின்னஞ்சிறு வானவிற்கள் தோன்றி மலைக் காட்டு வண்ணமலர்களுடன் போட்டி போட்டன. எதிரே வருபவர்கூடத் தெரியாத அளவுக்குப் பனி சூழ்ந்து கிடந்ததால் மிகுந்த எச்சரிக்கையுடன் மலையின் தென்பகுதியில் ஏறிச் சென்ற க்ஷத்ரபன் தாபிலேசுவரர் கோயிலை அடைந்தபோது உள்ளே சுவாமிக்கு அபிஷேகம் நடந்து கொண்டிருக்கிறது. பூஜாரி தீபாராதனை காட்டியபோது பக்கத்திலிருந்த ஒருவர் அடித்த மணியோசை பெரிதாக ஒலித்துக் காட்டுப் பகுதி முழுவதையும் ஊடுருவிச் சென்றதைக் கண்ட க்ஷத்ரபன் பூஜாரியைப் பிடித்தால் சாதவாகனன் அகப்பட்டுவிடுவான் என்று நினைத்து, பூஜை முடியட்டுமென்று காத்திருந்தான் கோவில் வாயிலுக்கு வெளியே. தன்னுடன் வந்த வீரர்களையும் வாயில் பக்கத்திலிருந்த கருங்கல் பிரகாரத்தில் உட்கார வைத்துப் பூஜாரி வந்ததும் அவரைப் பிடிக்கச் சித்தமாயிருக்கும்படி உத்தரவிட அவர்களும் வாயிற்படிக்கு இரு பக்கத்திலும் உட்கார்ந்து பூஜாரி வெளியே வரும் சமயத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

zeevaa

பூஜாரி அன்றைக்கென்று நீண்ட நேரம் அர்ச்சனை செய்துகொண்டே இருந்ததால் கொஞ்சம் நேரத்தில் வெளியே வருவதாகக் காணோம். இதனால் பொறுமை இழந்த க்ஷத்ரபன், "யாரையா பூஜாரி! சீக்கிரம் வெளியே வா" அதிகாரக் கூச்சலிட்டான்.

உள்ளே மந்திரங்களைப் பெரிதாக உச்சாடனம் செய்த வண்ணம் அர்ச்சனையைப் பலமாகச் செய்துகொண்டிருந்த பூஜாரி அந்தக் கூச்சலைச் சிறிதும் லக்ஷியம் செய்தவராகத் தெரியவில்லை. மீண்டும் ஒருமுறை க்ஷத்ரபன் கூச்சலிடத் துவங்குமுன் பெரிய வெண்கல மணியுடன் வெளியே வந்த ஒரு மனிதன், "அர்ச்சனை நடக்கும்போது கூச்சலிடாதே" என்று எச்சரித்தான். அப்படி அவன் சொல்லிக் கொண்டே அந்தப் பெரிய மணியைத் தூக்கிப் பிடித்த விதத்திலிருந்து, மீண்டும் கூச்சலிட்டால் அந்த மணி தனது தலையில் மோதிவிடும் என்பதை உணர்ந்த க்ஷத்ரபன், "பூஜாரியுடன் அவசரமாகப் பேச வேண்டும்" என்று சிறிது குரலைத் தாழ்த்திக் கூறினான்.

"கொஞ்சம் பொறு. முடிவாக மங்கள ஆரத்தி எடுத்ததும் அவரே வெளியே வருவார். அப்பொழுது பேசலாம்" என்றான் அந்த மனிதன்.

"பொறுப்பதற்கில்லை" என்றான் க்ஷத்ரபன்.

"அப்படியானால் மாலையில் வா" என்றான் அந்த மனிதன்.

அவனை முன்பார்த்திராததால் யாரோ புது மனிதன் வந்திருப்பதாக நினைத்த க்ஷத்ரபன், "நீ இந்த மலைக்குப் புதிதா?" என்று வினவினான்.

"உன்னைப் பார்த்தால்தான் புதிதாக இருக்கிறது" என்றான் அந்த மனிதன்.

zeevaa

''இதற்கு முன் நான் உன்னைப் பார்த்ததில்லை'' என்றான் க்ஷத்ரபன்.

''நீ பார்க்காத மனிதர்களெல்லாம் இந்த ஊருக்குப் புதிதா?'' என்று இகழ்ச்சியுடன் கேட்டான் அந்த மனிதன்.

அவன் காட்டிய அலட்சியத்தையும் பேச்சிலிருந்த தாஷ்டீகத்தையும் கவனித்த க்ஷத்ரபன் சற்று சிந்தனையில் இறங்கி, ''பூஜாரி வயோதிகராயிற்றே என்று பார்க்கிறேன். இல்லாவிட்டால் உன்னையும் அவரையும் கை கால்களைக் கட்டித் தூக்கிக் கொண்டு போய்விடுவேன்'' என்று சீறினான்.

சீற்றம் மிகுந்த அவன் சொற்களைக் கேட்ட அந்தப் புது மனிதன் பெரிதாக நகைத்தான். ''பூஜாரி வயோதிகரா, என்னய்யா உளறுகிறாய்? இந்தக் கோவில் பூஜாரியை நீ பார்த்ததில்லையா?'' என்று வினவினான் நகைப்பின் ஊடே.

''பூஜாரி வயோதிகரில்லையா?'' என்று க்ஷத்ரபன் கேட்டான்.

''இல்லை.''

''சிறு பிள்ளையோ?''

''இல்லை.''

''எதற்கும் இல்லை இல்லை என்று என்னய்யா பதில்?''

''வாலிபர்'' என்ற அந்த புது மனிதன், ''இன்றைக்கு பூஜாரி சகஸ்ர நாமார்ச்சனை செய்கிறார். ஆகையால் நேரமாகும். விசேஷ பூஜை'' என்றான்.

''இன்றைக்கு என்ன விசேஷம்?''

''விவாஹம்.''

''யாருக்கு?''

zeevaa

''பூஜாரிக்குத்தான்.''

''அவர் விவாகத்திற்கு அவரே பூஜை செய்கிறாரா?''

''ஆம்.''

''இதென்னய்யா விசித்திரம்?'' என்ற க்ஷத்ரபன் சட்டென்று மூச்சை இறுக்கப் பிடித்துக் கொண்டான். உள்ளிருந்த பூஜாரி மங்கல ஆரத்தியை ஏந்தி வந்து எல்லோருக்கும் காட்டினார். எல்லோரும் கண்களில் தீபத்தை ஒத்திக் கொண்டதும், விபூதிப் பிரசாதமும் கொடுத்தார். க்ஷத்ரபனைப் பார்த்ததும் புன்முறுவல் செய்து, ''வர வேண்டும்'' என்று முகமன் கூறினார்.

க்ஷத்ரபன் வாயைத் திறக்கவில்லை. விவரிக்க இயலாத வியப்பினாலும் பிரமையாலும் பூஜாரிமீது வைத்த கண்ணை வாங்கவில்லை. நல்ல பட்டுகளிரண்டை இடுப்பிலும், மார்பிலும் அணிந்து, பட்டை பட்டையாக விபூதியை உடல் முழுவதும் தீட்டிக்கொண்டு, விபூதிப் பிரசாதம் கொடுத்த கௌதமிபுத்ரனை நோக்கி, ''கௌதமிபுத்ரா! இதென்ன புது வேடம். உனக்குத் திருமணமென்றால் பெண் யார்?'' என்று வினவினான்.

''வேறு யார்? தங்கள் வளர்ப்புச் செல்விதான்'' என்ற கௌதமிபுத்ரன் விபூதியை வாயிற்படியின் இருபுறங்களிலும் நின்றிருந்த வீரர்களுக்கும் கொடுத்தான். விபூதியை வாங்கிக் கொண்ட வீரர்கள் விழித்தார்கள் என்ன செய்வதென்று அறியாமல்.

கௌதமிபுத்ரன் வாயிற்படிக்கு அருகில் நின்ற புது மனிதனை நோக்கி, ''சேனாதிபதி! உள்ள நிலையை இவருக்கு விளக்கி அனுப்பிவிடு'' என்று உத்தரவிட்டான். அவன் உத்தரவிட்டு உள்ளே திரும்புவதற்குள் சற்றுத் தூரத்தில் பேரரவம் கேட்கவே கௌதமிபுத்ரன் நின்ற இடத்திலேயே

zeevaa

நின்றான். சுமார் நாலைந்து மலைவாசிகள் காஷ்டானனைப் பலவந்தமாக இழுத்து வந்தார்கள். அவர்களில் ஒருவன் சொன்னான், ''இவர் சண்டிகை குகையில் நாலைந்து வீரருடன் நுழைய முற்பட்டார். அங்கு ஹோமம் நடக்கிற தென்று சொன்னோம், கேட்கவில்லை. பலவந்தமாக இழுத்து வந்தோம்'' என்று.

காஷ்டானனுக்கிருந்த எரிச்சலில், ''டேய் பூஜாரி! நாளைக்கு நீ பூஜை செய்வதை நான் பார்த்துவிடுகிறேன்'' என்று கூச்சலிட்டவன் சற்று நிதானித்து பூஜாரி அருகில் வந்து, ''சாதவாகனா! நீயா பூஜாரி! இதென்ன வேஷம்?'' என்று கேட்டான்.

''பூஜை செய்வது வேஷமா?'' என்று கேட்டான் சதகர்ணி.

''உண்மையான பக்தி மனத்திலிருந்தால் போதாதா? உடம்பு முழுவதும் விபூதி பூசவேண்டுமா?'' என்று வினவினான் காஷ்டானன்.

கௌதமிபுத்ரன் புன்முறுவல் செய்தான். ''சில வியாதி களுக்கு உள்ளுக்கு மருந்து கொடுத்தால் போதும். சில வியாதி களுக்கு உள்ளுக்கும் மருந்து கொடுத்து வெளியிலும் தைலம் பூச வேண்டும். அப்படித்தான் பக்தியும். அவரவர் பக்கு வத்தைப் பொறுத்தது'' என்றான் புன்முறுவலின் ஊடே.

அதற்குப் பிறகு கௌதமிபுத்ரன் பேச்சை வளர்த்தாமல், ''காஷ்டானா! இன்று இரவு பூஜை முடிந்த பிறகு எனக்குத் திருமணம். அதில் உனக்கும் பங்கு உண்டு'' என்றான்.

''எனக்கு என்ன பங்கு?''

''மாப்பிள்ளைத் தோழன். இதுவரையில் நீ கண்டிராத அளவுக்கு உனக்கு மரியாதை செய்கிறேன்.''

zeevaa

''எனக்கு மரியாதையும் வேண்டாம், மண்ணாங்கட்டியும் வேண்டாம்.''

''உன்னிஷ்டம்'' என்று சொல்லி உள்ளே செல்ல முயன்ற சாதவாகனனை ''நில்'' என்று கூச்சலிட்டு நிறுத்தி, ''சித்தரஞ்சனி எங்கே?'' என்று வினவினான் காஷ்டானன் கோபத்துடன்.

மணியுடன் நின்றிருந்த சேனாதிபதி சொன்னான். ''சாதவாகன மகாராணியாகப் போகிறவரை பெயர் சொல்லி அழைப்பது பெரும் குற்றம்'' என்று.

''அவள் என் மனைவி'' என்று கூவினான் காஷ்டானன்.

அடுத்து அவன் கூவவில்லை. சேனாதிபதியின் கையிலிருந்த மணி காஷ்டானன் தலைமீது இறங்கிவிட்டது. அந்தச் சமயத்தில் பெண்கள் பலர் புடைசூழ சர்வாலங்கார பூஷிதையாகச் சித்தரஞ்சனி அங்கு வந்துகொண்டிருந்தாள்.

zeevaa

அத்தியாயம் 18

திருமணத் தருணம்

நல்லதும் பொல்லாததும் கர்மவினையால் விளைகின்றன. நல்லது ஏற்படும்போது மனிதன் தனது சாமர்த்தியத்தினால் ஏற்பட்டதாக நினைக்கிறான். தனது சக்திக்கு அப்பாற்பட்டுப் பொல்லாதது விளையும்போது, அதற்குக் காலம், விதி என்ற சொற்களை உபயோகப்படுத்துகிறான். தன் சிந்தனைக்கு அப்பாற்பட்ட ஊழ்வினையால் அனைத்தும் ஏற்படுகின்றன என்ற ஞானமோ, எதற்கும் காரண காரியங்கள் உண்டு என்ற நினைப்போ மனிதனுக்குக் கிடையாது. சில வேளைகளில் தன்னால் எதையும் மாற்றிவிட முடியும் என்ற ஆணவமும் மனிதனுக்கு ஏற்படுகிறது. அப்படித்தான் காஷ்டானனும் நினைத்தான். தன்னுடனும் க்ஷத்ரபனுடனும் வந்திருக்கும் வீரர்களைக் கொண்டு, சித்தரஞ்சனியின் திருமணத்தை எப்படியும் தடுத்துவிடலாம் என்ற தைரியத்தில் 'அவள் என் மனைவி' என்று கூச்சலிடும் துணிவையும் பெற்றான். மனிதன் இஷ்டப்படி சகலமும் நடப்பதனால், காஷ்டானன் தன்னுடன் வந்திருந்த வீரர்களைக் கொண்டும் க்ஷத்ரபன் அழைத்து வந்த வீரர்களைக் கொண்டும் நிலைமையை அடியோடு மாற்றியிருக்கலாம். ஆனால் தெய்வ சித்தம் முற்றும் மாறாக இருக்கவே, கௌதமிபுத்ரனால் சேனாதிபதி என்று அழைக்கப்பட்டவன் கையிலிருந்த பெரிய மணி, காஷ்டானன் தலையில் வேகமாக இறங்கவே, திடீரெனப் பக்திவசப்பட்டவன்போல் காஷ்டானன் தரையில் குப்புற

zeevaa

zeevaa

விழுந்து, கர்ப்பக் கிரகத்தை நோக்கி நமஸ்காரம் செய்யும் பாவனையில் செயலற்றுக் கிடந்தான்.

சேனாதிபதியின் இந்தச் செய்கையை அடுத்து க்ஷத்ரபனும் அவனது வீரர்களும் தங்கள் வாட்களை உருவுவதற்கு முன்பாக, சேனாதிபதி ஒரே எட்டில் க்ஷத்ரபனை அடைந்து அவன் அங்கியைக் கையால் பற்றித் தன்னிடம் இழுத்துக் கொண்டு மணியையும் அவன் தலைக்குமேல் ஓங்கி, ''க்ஷத்ரபன் உயிரோடு உங்களுக்குத் தேவையானால் வாட்களைக் கீழே போடுங்கள். பூஜை முடிந்ததும் சண்டையிடத் தேவைக்குமேல் சந்தர்ப்பம் தருகிறேன்'' என்ற சேனாதிபதி க்ஷத்ரபனிடமிருந்த வாளையும் குறுவாளையும் எடுத்துத் தனது கச்சையில் செருகிக் கொண்டான். இந்தத் திடீர் மாற்றத்தால் வாட்களைக் கீழே போட்ட வீரர்களைச் சற்று ஒதுக்குப்புறமாக நிற்கச் சொல்லிவிட்டு அந்த வாட்களைப் பொறுக்கிக் கோவில் திண்ணையில் வைக்கும்படி அந்த வீரர்களில் ஒருவனுக்கு உத்தரவிட்டான்.

காஷ்டானன் தரையில் விழுந்து கிடந்ததாலும் க்ஷத்ரபன் கதியும் அதோகதியாயிருந்தபடியாலும் சாக வீரர்கள் சேனாதிபதி இட்ட பணிகளை ஒழுங்காக நிறைவேற்றவே, தாபிலேசுவரர் கோவிலுக்கு முன்பு அசம்பாவிதம் ஏதும் ஏற்படவில்லை. சேனாதிபதி க்ஷத்ரபனைப் பிடித்த வண்ணமே காஷ்டானனை எழுப்புமாறும் அவனுக்குச் சைத்தியோபசாரங்கள் செய்யுமாறும் அவன் வீரர்களுக்கே உத்தரவிட்டான். அதையொட்டி இருவீரர்கள் காஷ்டானனை மெதுவாகத் தூக்கி உட்கார வைத்துத் தலையைப் பரிசோதித்து அதில் காயம் ஏதும் ஏற்படாததைப் பார்த்துப் பெரும் வியப்படைந்து, ''தலையில் காயம் ஏதுமில்லை'' என்று கூறினார்கள் சேனாதிபதியை நோக்கி.

zeevaa

''சுபமான கல்யாணச் சமயத்தில் ரத்தம் சிந்த நான் இஷ்டப்படவில்லை. லேசான அதிர்ச்சியே காஷ்டானனுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தூணில் அவனைச் சாத்தி வையுங்கள்; உள்ளிருந்து அபிஷேக ஜலம் வரும். அதனால் கண்களைத் துடைத்தால் மாப்பிள்ளைத் தோழன் சுயநினைவு அடைவான்'' என்று சொன்னான் சேனாதிபதி.

அந்தச் சமயத்தில் உள்ளிருந்து கௌதமிபுத்ரன் குரல் கொடுத்தான், ''வஜ்ரபாகு!'' என்று.

''மன்னவா! இங்கு இருவர் சிறைப்பட்டிருக்கிறார்கள். ஒருவர் நினைவிழந்து கிடக்கிறார். இவர்களை விட்டு எப்படி வருவேன்? தாங்களே இங்கு வருவது நல்லது'' என்றான் சேனாதிபதி வஜ்ரபாகு.

''அவர்கள் ஆயுதங்களைக் கோயிலுக்குள் வைத்துவிட்டு அவர்களை விடுதலை செய்துவிடு. அவர்களும் இந்தச் சுபமுகூர்த்தத்தில் பங்கு கொள்ளட்டும்'' என்று கௌதமி புத்ரன் உள்ளிருந்தே உத்தரவிட சேனாதிபதி க்ஷத்ரபனைத் தனது பிடியிலிருந்து விடுதலை செய்தான். ''க்ஷத்ரபரே! நான் விட்டுவிட்டதால் நீங்கள் தப்பிவிடலாமென்று நினைக்க வேண்டாம். நீங்கள் மன்னர் அனுமதியில்லாமல் இந்தத் தாபோல் மலையைக் கடக்க முடியாது'' என்று எச்சரித்து விட்டு, க்ஷத்ரபன் வீரர்களில் ஒருவனை நோக்கி, ''அந்த வாட்களை எடுத்துக் கோவிலுக்குள் அடுக்கு'' என்று உத்தரவிட்டான்.

சேனாதிபதி வஜ்ரபாகு, கௌதமிபுத்ரன் ஆணைப்படி க்ஷத்ரபன் மீதிருந்த பிடியைத் தளர்த்தினானேயொழிய சேனாதிபதி எந்த சமயத்திலும் மணியால் க்ஷத்ரபன் மண்டையை உடைத்துவிடுவானென்ற அச்சத்தில் எதிரி வீரர்கள் சேனாதிபதியின் சொற்களைக் கட்டளைகளாகவே ஏற்று நடந்துகொண்டனர். உள்ளே சந்நிதியிலிருந்த

zeevaa

கௌதமிபுத்ரன் தாபிலேசுவரர் மீது புஷ்பங்களையும் வில்வ பத்ரங்களையும் இறைத்து வேதகானம் செய்துவிட்டு முடிவாகத் தீபாராதனையைக் காட்டிவிட்டு வெளியே வந்தபோது, வாயிலில் இருந்த நிலையைக் கவனிக்காமல் தூரத்தே பெண்களும் ஆண்களும் பெருங்கூட்டமாகப் புடைசூழ வந்துகொண்டிருந்த சித்தரஞ்சனியைக் கவனித்தான்.

மலையின் மனோகரச் சூழ்நிலையில், மரமல்லி மரங்கள் உதிர்த்திருந்த நீண்ட புஷ்பங்கள் விரித்திருந்த நடை பாவாடையில் நடந்து, கதிரவன் கிளம்பிவிட்டதால் மரக் கூட்டத்தையும் பிளந்துகொண்டு விழுந்திருந்த கம்பிக் கிரணங்கள் ஆங்காங்கு மேலே விழுந்ததால் புதுப்புதுக் கோடுகள் தவழும் அழகில் புகுந்து, காட்டு மலர்களைக் கொண்டு விட்டுவிட்டுத் தொடுக்கப்பட்ட மாலையைக் கழுத்தில் அணிந்து பாதத்திலிருந்து இரண்டு புதுச் சிலம்புகள் ஒலிக்க, இடை துவள, உடல் அசைய, சித்தினி ஜாதிப் பெண்ணைப்போல் சித்தரஞ்சனி நடந்துவந்த ஒய்யாரத்தில் மதிமயங்கி நின்றான் கௌதமிபுத்ரன்.

அன்று சித்தரஞ்சனி திருமணத்துக்கென்று படாடோப மான புடவை ஏதும் கட்டவில்லை. தங்க ஆபரணங்களையும் காணோம். தலைக்குழலை அவள் கொண்டையிட்டுப் புஷ்பச் சரங்களால் சுற்றியிருந்த அழகும், கழுத்திலிருந்த மாலை அவள் நடையில் அசைந்து அசைந்து மார்பு இரண்டையும் தொட்டுக் காட்டிக் காட்டிப் புரண்ட சிங்காரமும், இயற்கையாகவே தீட்டியது போலிருந்த கண்களும், நகைகளை அர்த்தமறச் செய்தாலும் காதில் மட்டும் இரண்டு சிறு குண்டலங்களை அவள் அணிந்திருந்தாள்.

zeevaa

அவள் தாபிலேசுவரர் கோவிலை ஏறெடுத்துப் பார்க்காமல் தரையை நோக்கியே நடந்து வந்ததால் கோயில் முகப்பி லிருந்த காட்சி எதையும் அவள் கவனிக்கவில்லை. அவளைச் சூழ்ந்து வந்த மங்கையரும் மற்ற ஆண் மக்களும் அந்த மலைவாசிகளைப்போல இருக்கவே 'இவர்கள் எங்கிருந்து வருகிறார்கள்?' என்று க்ஷத்ரபன் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். மணியடிபட்டு விழுந்த காஷ்டானன் கூட கௌதமிபுத்ரன் தெளித்த அபிஷேக நீரால் சுயநிலை அடைந்தாலும், நடுத்தலையில் எழும்பியிருந்த இடத்தைத் தடவிப் பார்த்துக்கொண்டு, தூர வந்த கூட்டத்தைக் கோயில் தூணில் சாய்ந்த வண்ணம் பார்த்துப் பார்த்துப் பொருமிக் கொண்டிருந்தான்.

கூட்டம் மெள்ளக் கோவிலை அணுகியதும் கௌதமி புத்ரன் சேனாதிபதியை நோக்கி, ''க்ஷத்ரபருக்கும் காஷ்டானனுக்கும் அபிஷேக தீர்த்தத்தைக் கொடும்; உள்ளே வெள்ளி வட்டிலில் வைத்திருக்கிறேன்'' என்று கூறிவிட்டுப் பட்டு வேஷ்டியும் உத்தரீயமுமாக வெளியே வந்து நின்று கொண்டான். அப்பொழுது க்ஷத்ரபனைப் பார்த்து, ''க்ஷத்ரபரே! அதோ வரும் கூட்டம் இந்த மலையிலிருந்த சிறு கிராமங்களைச் சேர்ந்தவர்களில் ஒரு சிறு பகுதி. சிறிது சிறிதாக இந்த மலைக் கிராமங்களுக்கு மக்கள் மீண்டும் வந்து கொண்டிருக்கிறார்கள்'' என்று சொன்னான்.

க்ஷத்ரபன் முகத்தில் திகில் படர்ந்தது. ''அப்படியானால் பிசாசு...'' என்று ஏதோ துவங்கினான் க்ஷத்ரபன்.

''அதற்குத்தான் இரண்டு நாட்களாக சண்டிஹோமம் நடக்கிறது. அதோ பாருங்கள். சண்டி குகைப் பக்கத்திலிருந்து ஹோமப் புகை ஆகாயமளாவிச் செல்கிறது'' என்று தூரத்தே சுட்டிக் காட்டினான் சேனாதிபதி.

zeevaa

தூரத்தே எழுந்த பெரும்புகையைக் கவனித்த க்ஷத்ரபன் மகாக்ஷத்ரபனின் தந்திரத்தை கௌதமிபுத்ரன் உடைத்து விட்டதைச் சந்தேகமறப் புரிந்துகொண்டான். சித்தரஞ்சனியைச் சூழ்ந்து வந்த பெண்கள் மலைவாசிகளாதலால் தலையிலும் கழுத்திலும் மாலைகள் அணிந்திருந்தார்கள். மலை ஜாதிகள் திருமணச் சமயங்களில் பாடும் பாட்டையே பாடிக் கொண்டும் வந்தார்கள். அந்தப் பாட்டின் கடுமையிலும் ஒரு சுகமிருந்தது. அவர்கள் கைகளில் போட்ட தாளங்களிலும் லயசுத்தமிருந்தது. ஆடியது பெண்கள் மட்டுமல்ல, பின்னால் வந்த ஆண்களும் ஆடிக் கொண்டு வந்தார்கள்.

அவர்கள் உற்சாகத்தைக் கண்ட க்ஷத்ரபன் அந்தத் திருமணத்தை எப்படியும் தடுக்க வேண்டுமென்று உறுதி கொண்டானானாலும் வழி தெரியாமல் திருதிருவென்று விழித்தான். காஷ்டானனுக்கு மயக்கம் நன்றாகத் தெளிந்து விட்டதால் அவனும் எழுந்துகொண்டான். அந்தக் கோவிலை அணுகும் வரையில் நிலத்தை நோக்கி நடந்து வந்த சித்தரஞ்சனி வாயிலை அடைந்ததும் தலையை நிமிர்ந்து நோக்கிப் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளானாள். தனது வளர்ப்புத் தந்தையும் தன்னை அடைய மனக்கோட்டை, கட்டிய காஷ்டானனும் வாயிலின் இருபுறங்களிலும் நின்றதைக் கண்டு அதிர்ச்சியடைந்தாலும், அவர்கள் இருவருக்கும் மத்தியில் கௌதமிபுத்ரன் வாயிற்படியைத் தலையால் தொட்டு விடுபவன்போல் நின்றிருந்ததைக் கவனித்ததும் அதிர்ச்சியை உதறிக்கொண்டு தாபிலேசுவரர் கோவில் வாசலை நோக்கி நடந்தாள். அவளைச் சூழ்ந்து வந்தவர்களும் கோவில் முன்பாகப் பரவலாக நின்றார்கள்.

''தேவி! இங்கு உன்னை யாரும் தடுக்க முடியாது. படிகளில் ஏறி வா'' என்றான் கௌதமிபுத்ரன்.

zeevaa

''சித்தரஞ்சனி! படியில் காலை வைக்காதே. உன் தந்தை உத்தரவிடுகிறேன்'' என்றான் க்ஷத்ரபன்.

''இவனை நீ மணந்தால் மகாக்ஷத்ரபர் உன்னை லேசில் விடமாட்டார்'' என்று எச்சரித்தான், காஷ்டானன்.

இவற்றால் சிறிது சஞ்சலப்பட்ட சித்தரஞ்சனி என்ன செய்வதென்று அறியாமல் நின்ற இடத்திலேயே நின்று தனது மான்விழிகளை நாற்புறமும் செலுத்தினாள். அவளுக்குத் துணிவை அளிக்கக் கௌதமிபுத்ரனே படிகளில் இறங்கி வந்து, அவள் கையைப் பிடித்து, ''சித்தரஞ்சனி! அஞ்சுவதற்கு ஏதுமில்லை. வா உள்ளே'' என்று அழைத்துச் செல்ல முயன்றான்.

அவள் இரண்டாவது படியில் காலை வைக்கு முன்பு, ''கௌதமிபுத்ரா! இன்னும் ஓர் அடி எடுத்து வைத்தாலும் பிணமாகி விடுவாய். மணக்கோலம் பிணக்கோலமாகி விடும்'' என்று எச்சரிக்கைக் குரலொன்று ஒலித்தது.

அதைத் தொடர்ந்து கோயிலின் பக்கத்திலிருந்து வெளியே வந்து நாகபாணன் தனது கையிலிருந்த குறுவாளைக் கௌதமிபுத்ரன் இதயத்தை நோக்கிக் குறி வைத்திருந்தான். அடுத்த கோவிலுக்குப் பின்னாலிருந்தும் முன்னாலிருந்த மரங்களின் மறைவிலிருந்தும் விற்களில் வாளிகளைப் பூட்டிய ஐம்பது வீரர்கள் தோன்றினார்கள்.

நாகபாணனின் எச்சரிக்கைக் குரலைக் கேட்டதுமே சித்தரஞ்சனி துடித்துப் போனாள். அதிர்ச்சியும் அச்சமும் காரணமாகத் தன்னியல்பாகக் கௌதமிபுத்ரனை அணைத்தாள். அவனோ நிலைமையின் ஆபத்தை உணர்ந்திருந்த போதிலும் சித்தரஞ்சனியின் ஆலிங்கனத்தால் சிறிதளவு சிலிர்த்துப் புன்முறுவலும் செய்தான்.

நாகபாணன் கௌதமிபுத்ரன்மீது வைத்த கண்களை வாங்காமலே கூறினான்: ''புனிதமான இந்த ஆலயத்துக்கு

zeevaa

முன்பாக ரத்தம் சிந்த நான் விரும்பவில்லை. ஆகையால் எந்த நடவடிக்கையிலும் இறங்க வேண்டாம்'' என்று. அத்துடன் வீரர்களை நோக்கி, ''உங்கள் வாட்களை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று அதட்ட வீரர்கள் கோவிலுக்குள் புகுந்து தங்கள் வாட்களை ஏந்தி வந்தார்கள்.

நாகபாணன் அடுத்து உத்தரவிட்டான்: ''சித்தரஞ்சனி! பேசாமல் கோட்டைக்குத் திரும்பு. இன்று உனக்குத் திருமணம் நிச்சயமாக நடக்கும். நான் தேர்ந்தெடுக்கிற மாப்பிள்ளைக்கு'' என்று.

நாகபாணன் வில்லவர்கள் கணைகளைப் பூட்டி நிற்க, க்ஷத்ரபனும் காஷ்டானனும் மற்ற வீரர்களுடன் வாட்களை ஏந்திப் போருக்குச் சித்தமாக, மெள்ள அந்தக் கூட்டம் கோயிலை நெருங்கியது. சில நிமிடங்களில் திருமணக் கூட்டம் ஒருபுறமாக ஒதுக்கப்பட்டது. சித்தரஞ்சனியின் கையை கௌதமிபுத்ரன் கையிலிருந்து பிரிக்க நெருங்கிய க்ஷத்ரபன் அவள் கையைப் பிடித்துப் பலவந்தமாக இழுக்க முயன்றான்.

''க்ஷத்ரபா! சாதவாகனனையும் அவன் சேனாதிபதியையும் நமது மரக்கலத்தில் ஏற்றிவிடு. மற்றவர்கள் கோட்டைக்கு வரட்டும்'' என்று உத்தரவிட்டுத் திரும்பினான் நாகபாணன். போருக்குப் பழக்கப்பட்ட ஐம்பது வீரர்களுக்கு முன்பாக மலைஜாதி மக்கள் ஏதும் செய்ய முடியாதென்பதையும், தான் எடுக்கும் எந்த நடவடிக்கையும் வீண் ரத்தக் களறியாக முடியுமென்பதையும் கௌதமிபுத்ரனும் உணர்ந்து கொண்டதால் எந்தச் செயலிலும் இறங்காமல் நின்றான்.

zeevaa

அத்தியாயம் 19

உயர்ந்த புகை மண்டலம்!

விளைந்த திருமணம்!

விற்களில் வாளிகளைப் பூட்டி ஐம்பது வீரர்களால் திருமணக் கூட்டத்தை அச்சுறுத்தி நிறுத்திவிட்டு, அடுத்துச் செய்ய வேண்டிய காரியங்களுக்கு உத்தரவையும் பிறப்பித்து விட்டு மிகுந்த அலட்சியமாகத் திரும்பிச் சென்றுவிட்ட நாகபாணனைப் பார்த்துக் கொண்டே தாபிலேசுவரர் கோவில் படிகளில் சித்தரஞ்சனியின் கையைப் பிடித்து வண்ணம் சிலையென நின்றுவிட்ட கௌதமிபுத்ரன், க்ஷத்ரபன் படிகளில் இறங்கி வந்து சித்தரஞ்சனியின் கையைத் தனது கையிலிருந்து விடுவிக்கக் கையை வைத்ததும், ''க்ஷத்ரபா! கையை எடு!'' என்று உக்கிரமான குரலில் கூறினான். அத்துடன் அங்கிருந்த திருமணக் கூட்டத்தை நோக்கி, ''மலைவாசிகளே! எனக்காக இந்த வீரர் கூட்டத்துக்கு நீங்கள் பலியாக வேண்டாம். சமாதானமாகச் சென்றுவிடுங்கள்'' என்று அவர்களுக்கும் உத்தரவிடக் கூட்டமும் மெள்ளக் கலையத் தொடங்கியது.

சாதவாகனன் இப்படி தன்னைத் தானே நிராதரவாக்கிக் கொண்டதைக் கண்ட க்ஷத்ரபன் எப்படியும் சித்தரஞ்சனியைத் தனது வீரர்களைக் கொண்டு சிறை செய்து அழைத்துப் போய்விடலாம் என்ற தைரியத்தில் அவள் கையை விடுதலை செய்து, ''சித்தரஞ்சனி! இனி நீ யார்

zeevaa

வலுக்கட்டாயமுமில்லாமல் வந்து விடலாம். பழைய மாப்பிள்ளையையே உனக்கு மகாக்ஷத்ரபர் மணமுடிப்பார்'' என்று சற்று கர்வத்துடன் கூறினான்.

அத்தனை விபரீத நிலையிலும் ஆபத்திலும் கௌதமி புத்ரன் புன்முறுவல் கொண்டு, ''க்ஷத்ரபரே! உமது மகளுக்கு இரண்டு மாப்பிள்ளைகள் உண்டா?'' என்று வினவினான்.

''இரண்டு மாப்பிள்ளைகளா! ஒருக்காலும் கிடையாது'' என்று திட்டமாகச் சொன்னான் க்ஷத்ரபன்.

''பழைய மாப்பிள்ளையென்று யாரையோ சொன்னீர்களே'' என்றான் கௌதமிபுத்ரன்.

''சொன்னேன்.''

''அப்படியானால் பழைய மாப்பிள்ளை புது மாப்பிள்ளை என்று இருவர் ஆகாதா?''

இதைக் கேட்டதும் கோட்டையிலிருந்து வந்த வீரர்கள் கொல்லென்று சிரிக்கவே, அவர்களை முகத்தில் உஷ்ணம் விரிய நோக்கிய க்ஷத்ரபன், ''இங்கு சிரிப்புக்கு இடமில்லை. செயலுக்குச் சித்தப்படுங்கள்'' என்றான்.

செயலுக்கு அவர்கள் சித்தமானார்களோ இல்லையோ கௌதமிபுத்ரனும், சேனாதிபதியும் ஒரே சமயத்தில் செயல்பட்டார்கள். க்ஷத்ரபனுடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டே சேனாதிபதியுடன் நயன பாஷையில் இறங்கிய சாதவாகன வாலிபன், சித்தரஞ்சனியின் இடையில் கையைச் செலுத்தி அவளை அரைத் தூக்காகத் தூக்கிக் கொண்டு கோவிலின் பிரகாரத் திண்ணைக்குத் தாவி விட்டான். சாதவாகனன் செயல்படத் துவங்கியதும் சேனாதிபதி வஜ்ரபாகு பிரகாரத் திண்ணைத் தூணில் சாய்ந்து கொண்டிருந்த காஷ்டானனை மின்னல் வேகத்தில் கையைப்

zeevaa

பிடித்துத் தூக்கிப் பாதுகாப்பாகத் தனக்கு முன்பாகப் பிடித்துக் கொண்டான்.

அப்பொழுது பேசினான் மிக உக்கிரமான குரலில் சாதவாகனன், ''யார் அம்பைத் தொடுத்தாலோ, குறுவாளை எறிந்தாலோ முதலில் பழைய மாப்பிள்ளை பலியாவான்'' என்று. அவனது சொற்களின் காரணத்தைப் புரிந்துகொண்ட சேனாதிபதி மெள்ள நகர்ந்து சாதவாகனனுக்கும் சித்தரஞ்சனிக்கும் முன்பாக நின்று வீரர்கள் வாளிகளுக்குப் பலியாக காஷ்டானனை அடிக்கடி அசைத்துக் காட்டினான். மெள்ள காஷ்டானன் காதில் குனிந்து, ''உனக்கு ஆபத்து ஏதுமில்லை, பேசாமல் இரு'' என்று மந்திரமும் ஓதினான்.

அந்த நிலையில் காஷ்டானன் தனது மாப்பிள்ளைப் பதவியை மறந்தான், நாகபாணனை மறந்தான், உயிர் ஒன்றே பிரதானமென்று அந்த நினைவிலேயே இருந்ததால் பலிக்குச் செல்லும் கிடாவைப்போல் தலையை ஒரு முறை ஆட்டிச் செயலற்று நின்றான். அப்பொழுதும் கோட்டை வீரர்கள் வாளிகளை எய்யச் சித்தமாக நிற்கவே, ''அம்பு வீசாதீர்கள். மகாக்ஷத்ரபர் என்னைக் கொல்ல உத்தரவிடவில்லை'' என்று கூவினான்.

திருமணத் தருணத்தில் முதல் திருப்பத்தால் ஏற்பட்ட மகிழ்ச்சியையும் துணிவையும் முற்றும் எதிர்பாராத இரண்டாவது திருப்பத்தால் இழந்த க்ஷத்ரபன், ''சாதவாகனா! இந்தச் சாகசத்தால் நீ தப்பிவிட முடியுமென்று நினைக்காதே. சித்தரஞ்சனியையும் காஷ்டானனையும் அனுப்பிவிடு. உன்னை நான் சிறை செய்யவில்லை'' என்று சமரசம் பேச ஆரம்பித்தான்.

''க்ஷத்ரபரே! என்னையும் சேனாதிபதியையும் சிறை செய்து மரக்கலத்துக்குக் கொண்டு போகாமல் நீர் அஞ்சன்வேல் திரும்பினால் உம்மை மகாக்ஷத்ரபர் என்ன

zeevaa

செய்வாரென்பது உமக்கே தெரியும். ஆகவே இந்தத் திருப்பத்தை அவரிடம் சொல்லிப் பரிகாரம் கேளும்'' என்று சொல்லிக் கொண்டே பின்னால் நகர்ந்து கோவில் வாயிற் படியைத் தாண்டிவிட்டான். பழைய மாப்பிள்ளையை இழுத்துக் கொண்டு சேனாதிபதியும் உட்புறம் சென்றதும் கோவிற் கதவு பெரும் சத்தத்துடன் வேகமாக மூடப்பட்டது.

இப்படி தந்திரமாகச் சாதவாகனன் அந்தச் சமயத்துக்குத் தப்பிவிட்டாலும் கோவிலைச் சுற்றி முற்றுகையிட்டு அவனை வெளிவரச் செய்துவிட முடியுமென்ற எண்ணத்தால் வீரர்களைக் கோவிலைச் சூழ்ந்து கொள்ளச் சொல்லி உத்தரவிட்டான் க்ஷத்ரபன். பிறகு தான் மட்டும் கோவில் படிகளில் ஏறி கதவைப் பலமாகத் தட்டி, ''சாதவாகனா! கதவைத் திறந்துவிடு. இல்லையேல் கதவை உடைத்து உட்புகுந்து விடுவேன்'' என்று இரைந்தான்.

கோவில் கதவில் பூட்டின் பெரிய துவாரத்தின் மூலம் உள்ளிருந்து பதில் வந்தது. ''முட்டாள்! கோவில் கதவை இடிப்பது தெய்வத்துக்குச் செய்யும் அபசாரமாகும். அந்த அபசாரத்துக்கு இந்த மலைவாசிகளும் சுற்றுப்புறமுள்ள கிராமவாசிகளும் உன்னையும் உனது வீரர்களையும் ஒழித்துக் கட்டிவிடுவார்கள். ஏற்கனவே பொய்ப் பிசாசைக் காட்டியதற்காக கிராமங்களில் கொந்தளிப்பு இருக்கிறது. பேசாமல் போய்விடு. திருமண நேரம் நெருங்கிவிட்டது'' என்று கௌதமிபுத்ரன் குரல் துவாரத்தின் மூலம் ஒலித்தது.

திகைத்து நின்றான் க்ஷத்ரபன். கௌதமிபுத்ரன் சொற்களில் உண்மை இருந்ததைப் புரிந்துகொண்டான். சற்று திரும்பிக் காட்டைப் பார்த்தான். சண்டி ஹோமாக்கினியின் புகை ஆகாயமளவில் எழுந்து மலை உச்சியை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அதைக் கண்ட க்ஷத்ரபன், கௌதமி புத்ரன் திட்டமிட்டுத் தங்களுக்கு எதிரே மலைமக்களையும் அடுத்த கிராமவாசிகளையும் கிளப்பிவிட்டதை நினைத்து,

zeevaa

''என்ன இருந்தாலும் எதிரி மகா சூக்ஷ்ம புத்தியை உடையவன்'' என்று அவனைப் பற்றி வியந்தான். கோவில் கதவை இடித்தால் பெரும் விபரீதமும் மக்கள் விரோதமும் ஏற்படும் என்ற நினைப்பால் கதவுக்கருகிலேயே நின்று விட்டான்.

சற்று நேரத்திற்கெல்லாம் உள்ளிருந்து பெருத்த குரலில் யாரோ மந்திரங்களை உச்சரித்தார்கள். உள்ளிருந்து புகையும் வெளியே வந்தது சிறிது. என்ன நடக்கிறது உள்ளே என்பதை அறிய கதவின் பூட்டுத் துவாரத்தின் மூலம் உள்ளே நோக்கினான் க்ஷத்ரபன்.

உள்ளே முன் மண்டபத்தில் தாபிலேசுவரர் சந்நிதிக் கெதிரில் சிறிது தீ மூட்டப்பட்டிருந்தது. சேனாதிபதி பக்கத்தில் உட்கார்ந்து அக்னியில் சுள்ளிகளை இட்டு நெய்யையும் சிறிது ஊற்றி மந்திரங்களைப் பெரிதாகச் சொல்லிக் கொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்தில் காஷ்டானன் உட்கார்ந்து தனது தலையில் எழுந்த முண்டை தடவிக் கொண்டிருந்தான். அவன் கழுத்திலும் ஒரு மாலை போடப்பட்டிருந்ததால் அவன் மாப்பிள்ளைத் தோழனாக் கப்பட்டதை க்ஷத்ரபன் புரிந்து கொண்டான்.

சேனாதிபதி உபாத்தியாயராகி மந்திரங்களைச் சொல்ல அக்னியை வலம் வந்த கௌதமிபுத்ரன் சித்தரஞ்சனியின் கையில் கங்கணம் கட்டி அவளுக்கு மாலையும் சூட்டினான். அக்னி சாட்சியாகவும் தாபிலேசுவரர் சாட்சியாகவும் கோவிலுக்குள்ளே கிரமப்படி விவாஹம் நடப்பதைக் கண்ட க்ஷத்ரபன் அதற்கு மேலும் பொறுக்காமல் நடப்பது நடக் கட்டுமென்று கதவைப் பலமாக உடைக்கத் தீர்மானித்தான். தாபிலேசுவரர் கோபத்தைவிட மகாக்ஷத்ரபர் கோபம் கொடியது என்ற காரணத்தால் எந்தப் பாதகத்துக்கும் துணிந்த க்ஷத்ரபன், ''இடித்துத் தள்ளுங்கள் கதவை. பிறகு தாபிலேசு வரருக்கு இதைவிட நல்ல கதவைச் செய்து சமர்ப்பித்துப்

zeevaa

பெரும் செலவில் கும்பாபிஷேகமும் செய்து வைப்போம்'' என்று வெறி பிடித்தவன் போல் கூவினான் வீரர்களை நோக்கி.

முதலில் சற்று பயந்து தயங்கிய வீரர்கள் க்ஷத்ரபனுக்குப் பயந்து அவன் கட்டளையை நிறைவேற்றக் கூட்டமாக வந்து தங்கள் தோள்களால் கதவை இடிக்கத் தொடங்கி அதற்குக் கதவு இடங்கொடாது போகவே இரண்டு பெரும் பாறைகளைத் தூக்கி வந்து கதவை உடைக்க முதல் பாறையை மோதியதுமே பிரளயம் விளைந்தது கோவில் முன்பாக.

உள்ளேயிருந்து துவாரத்தின் வழியாக பெரிதாகக் குழல் போல் ஊதினான் கௌதமிபுத்ரன். அடுத்த விநாடி அவன் புரவி எங்கிருந்தோ பாய்ந்து வந்தது. திடீரென மரங்களின் மறைவுகளிலிருந்து மலைக்கற்கள் சரமாரியாக வீரர்கள் மீது விழுந்தன. பெருங்கூட்டம் எங்கிருந்தோ மலைப்பாதையில் வரும் பேரரவம் கேட்டது. அந்தப் பேரரவத்தை அடுத்துக் கோவிலின் பெருங்கதவு திறக்கப்பட்டு அதனருகில் நின்ற க்ஷத்ரபன் கழுத்தில் வாளின் நுனி ஊன்றப்பட்டது. கோட்டை வீரர்கள் வாளிகளை ஒருமுறை பிரயோகித்து இரண்டாவது முறை நாண்களில் அம்புகளைப் பூட்டிக் கொண்டே கோவில் வாயிலை நெருங்கிய சமயத்தில் வாயிற்கதவு திறக்கப்பட்டு உள்ளிருந்து வீசப்பட்ட காஷ்டானன் உடல் வேகமாக வீரர்களை நோக்கிப் பறந்து வந்தது. காஷ்டானனைச் சில வீரர்கள் பிடித்து இறக்கி விட்டதும் பூர்ண போருடை அணிந்து கௌதமிபுத்ரனும் சேனாதிபதியும் வாட்களை ஏந்தி வெளியே வந்தனர்.

காஷ்டானன் வெளியே வந்து விழுந்ததாலும் க்ஷத்ரபன் சேனாதிபதியின் வாள் நுனியில் திணறியதாலும் போருக்குச் சித்தமாக வாளை உருவி சாதவாகனன் பிரளய காலருத்திரன் போல் நின்றதாலும் செய்வதறியாமல் நின்ற வீரர்களை

zeevaa

நோக்கிய கௌதமிபுத்ரன், ''க்ஷத்ரபரை விடுதலை செய்கிறேன். அவரையும் பழைய மாப்பிள்ளையையும் அழைத்துக் கொண்டு கோட்டைக்குச் செல்லுங்கள். நாளைக்கு மறுநாள் நான் நாகபாணனைச் சந்திப்பதாகக் கூறுங்கள். இனி நீங்கள் செல்லலாம்'' என்றான்.

மரங்களின் மறைவிலிருந்து பெரும் கூட்டமொன்று மீண்டும் வந்தது. அது திருமணக் கூட்டமல்ல. சிலர் கைகளில் கல்லும் மரக்கட்டைகளும் மற்றும் சிலர் கைகளில் வெட்டுக் கத்திகளுமிருந்தன. அவர்கள் முகங்களில் கொலைக்குறி இருந்தது. வில்லோ, அம்போ, வாட்களோ, பாதிப்பேரை அழித்தாலும், மிச்சம் பாதிப்பேர் தங்களை அழித்து விடுவார்களென்பதைப் புரிந்து கொண்ட க்ஷத்ரபன், வீரர்களைத் தன்னுடன் வரும்படி சைகை செய்து முன்னே சென்றான். அவனைத் தொடர்ந்தான் காஷ்டானன். அவனை எரிச்சலுடன் பார்த்த க்ஷத்ரபன், ''எதற்கு என் பின்னால் வருகிறாய்?'' என்று சீறினான்.

''நான் உங்கள் மாப்பிள்ளையாக வேண்டியவன்.''

''இல்லை.''

''இல்லையா?''

''இல்லை. நீ என்னைப் பிடித்த சனியன்'' என்று கூறி விட்டு வேகமாக நடந்தான் க்ஷத்ரபன்.

அவர்கள் சென்றதும் சித்தரஞ்சனியைத் தனது புரவியில் ஏற்றிவிட்டுக் கடிவாளத்தைத் தான் பிடித்துக் கொண்டு சண்டிகாதேவியின் குகைக் கோவிலை நோக்கி நடந்தான் கௌதமிபுத்ரன்.

zeevaa

அத்தியாயம் 20

ஹோமப் புகையா? யமப் புகையா?

சித்தரஞ்சனியைத் தனது புரவியில் ஏற்றிவிட்டுக் கடிவாளத்தைப் பிடித்த வண்ணம் சண்டிகாதேவியின் குகையை நோக்கி நடந்த கௌதமிபுத்ர சதகர்ணி சற்று எட்ட நடந்து வந்துகொண்டிருந்த சேனாதிபதி வஜ்ரபாகுவை அருகில் அழைத்து, "சேனாதிபதி! போர்களில் ஏற்படும் ஆனந்தத்தைவிட கோவில் பூஜையிலும் மந்திரங்களை ஓதுவதிலிருக்கும் ஆனந்தம் எத்தனை சாந்தியைத் தருகிறது பார்த்தாயா?" என்று வினவினான்.

வஜ்ரபாகு லேசாகப் புன்முறுவல் கொண்டு, "எனக்கு இப்பொழுது பதவி மாற்றம் தர உத்தேசிக்கிறீர்களா?" என்று வினவினான்.

சேனாதிபதி எதைக் குறிப்பிடுகிறான் என்பதை உணர்ந்து கொண்ட கௌதமிபுத்ரன், "எந்தப் பதவியைக் குறிப்பிடு கிறாய் சேனாதிபதி?" என்று விசாரித்தான் சற்றே ஏளனம் ஒலித்த குரலில்.

"புரோகிதர் பதவியை. முதலில் நீங்கள் பூஜாரியானீர்கள். அடுத்து என்னைப் புரோகிதனாக்கினீர்கள். இருவருமே புதுப் பதவிகளை வகிக்கலாம். மந்திர தந்திரங்களில் நீங்களும் எந்த விதத்திலும் குறைந்தவர்களாகத் தெரியவில்லை. தாபிலேசு வரருக்கு அபிஷேக ஆராதனைகளில் என்ன திறமையைக் காட்டினீர்கள்! நமது ராஜ்ய ஆஸ்தான குருகூட இத்தனை

zeevaa

ஸ்பஷ்டமாக மந்திரங்களை ஓதியதை நான் கேட்டதில்லை'' என்றான் வஜ்ரபாகு லேசாக விஷமக் குரலில்.

''என்னைப் பூஜாரியாகச் சொல்கிறாயா?'' என்று வினவினான் சதகர்ணி.

''சேனாதிபதி புரோகிதனாகும்போது மன்னர் பூஜாரியாவதுதான் தகும். இருவருமே கத்தி கேடயங்களை விட்டு மணியை எடுத்துக் கொள்ளலாம்'' என்று சொன்னான் வஜ்ரபாகு.

''எந்த ஆயுதத்தின் உபயோகமும் யார் கையிலிருக்கிறதோ அவனைப் பொறுத்தது. சுவாமிக்கு மணியடிக்க உன் கையில் மணியைக் கொடுத்ததால் நீ அதைக் காஷ்டானன் தலையில் அடிக்கிறாய்'' என்று கூறிக் குறுநகை கொண்டான் கௌதமிபுத்ரன்.

சேனாதிபதி பக்கத்திலிருந்த ஒரு மரக்கிளையை உடைத்து நடந்து கொண்டே, ''சுவாமிக்கு முதலில் மணியை அடித்துப் பார்த்தேன். பயனில்லை. காஷ்டானன் தலையில் அடித்தேன். உடனடியாகப் பயன் கிடைத்தது'' என்று கூறிய சேனாதிபதி, ''மன்னவா! ஒரு சந்தேகம்'' என்று கேட்டான்.

''கேள் சேனாதிபதி'' என்று ஊக்கினான் கௌதமிபுத்ரன்.

சற்று சிந்தித்துவிட்டுக் கேட்டான் சேனாதிபதி, ''சண்டிஹோமம் செய்து பிசாசை ஓட்டி விட்டதாகவும் இரண்டாவது ஹோமத்திற்குப் பிறகு பயம் ஏதுமில்லையென்றும் பொய் சொல்லி ஓடிவிட்ட மக்களைத் திரும்ப அழைத்தது எப்படி நியாயம்?'' என்று.

''பிசாசு என்று பயமுறுத்தி மக்களை அவர்கள் குடிசைகளிலிருந்து விரட்டித் தனது படைகளை இந்த மலைப் பகுதியில் இறக்கித் தளம் அமைக்கத் திட்டம் செய்தான் மகாக்ஷத்ரபன். அதே பிசாசு தந்திரத்தை நானும் கையாண்டு மக்களுடைய திகிலை அகற்றி அவர்களை இங்கு குடியேறச்

zeevaa

செய்தேன். இதில் தவறு ஏதுமில்லை. தந்திரத்தைத் தந்திரத்தால் அறுப்பதுதான் நியாயம்'' என்ற சதகர்ணி, ''தவிர பிசாசு இப்பொழுது நமது பக்கம் திரும்பிவிட்டது. மற்றவர்களை விட்டு இப்பொழுது என்னைப் பிடித்துக் கொண்டது'' என்று சொல்லிச் சித்தரஞ்சனி தொடையில் கையை வைத்தான் சாதவாகனன்.

திருமண மாலையணிந்து மணப்பெண் கோலத்திலேயே புரவிமீது வந்துகொண்டிருந்த சித்தரஞ்சனி புன்முறுவல் காட்டினாள். தன் தொடை மீது வைத்த கையைத் தனது கையொன்றால் பற்றி நெற்றித்தாள் தனது கோபத்தைக் காட்ட. ஆனால் அதற்கு மசியாத கௌதமிபுத்ரன் கையைச் சற்று மேலும் நகர்த்த சித்தரஞ்சனி சற்று பொய்க் கோபம் காட்டி 'உம்' என்று எச்சரிக்கை ஒலி கிளப்பினாள்.

''பிசாசுக்குக் கோபம் வருகிறது'' என்றான் சாதவாகனன் லேசாக நகைத்து.

''மகாராஜா!'' என்றான் சேனாதிபதி.

''என்ன சேனாதிபதி?''

''உங்களுக்கு அதிர்ஷ்டம் அதிகம்.''

''எப்படி?''

''பிசாசு கிடைத்தாலும் அழகான பிசாசாகக் கிடைக்கிறது. நீங்கள் சொல்கிறபடி கேட்கிறது... உங்களைத் திருமணம் செய்து கொள்கிறது. இந்த மாதிரி பிசாசு கிடைத்தால் எல்லோருமே பிசாசைத் திருமணம் செய்து கொள்வார்கள். அப்புறம் சாதாரணப் பெண்களுக்குத் திருமணம் ஆவது துர்லபமாகிவிடும்'' என்று சேனாதிபதி கூற மூவருமே நகைத்தார்கள்.

அப்படிப் பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டும் சண்டிகைக் குகைக்கு அருகில் வந்ததும் சித்தரஞ்சனி

zeevaa

புரவியைவிட்டு இறங்கினாள். எதிரே கொங்கணி வேதியர் பலர் காய்ந்த அரசுச் சுள்ளிகளைக் கொண்டு ஹோமம் செய்து கொண்டிருந்தார்கள். ஹோம குண்டத்தைச் சுற்றி ஆண்களும் பெண்களுமாகக் கிராமவாசிகள் ஏராளமாக நின்று கொண்டிருந்தார்கள். கௌதமிபுத்ரனைக் கண்டதும் அந்தக் கூட்டமே தலை வணங்கியதும் கௌதமிபுத்ரனும் அவர்களைத் தலை சாய்த்து வணங்கித் தனது அங்கியைக் களைந்து பழைய பட்டுத் துணியை இடுப்பில் கட்டிக் கொண்டு ஹோமாக்கினி முன்பு உட்கார்ந்தான்.

சித்தரஞ்சனியையும் உட்காரச் சொல்லி தான் மட்டும் ஹோமத்தில் ஈடுபட்டான். சிவந்த முகம் அக்கினியில் ஜொலிக்க உட்கார்ந்திருந்த சித்தரஞ்சனியை மக்களெல்லோரும் பார்த்து அவள் அழகைக் கண்டு பிரமித்து பரஸ்பரம் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பேசியதையெல்லாம் காதில் வாங்கிக் கொண்டிருந்த கௌதமிபுத்ரன் ஹோமம் முடிந்ததும் எழுந்து மக்களை நோக்கினான், மௌனமாக பல விநாடிகள். பிறகு பேசினான் மெதுவாக, ''பெருமக்களே! இன்றுடன் உங்களைப் பிடித்த பிசாசு ஓடிவிட்டது. சண்டிஹோமம் செய்யத் தீர்மானித்த மறுநாளுக்குப் பிறகு அதைக் காணோம். இனி வர நியாயமில்லை. ஆகவே நீங்கள் தைரியத்துடன் இருங்கள். மக்கள் சக்திக்கு முன்பு எந்தச் சக்தியும் பயன்படாது. ஆயுதம் பூண்ட எதிரி வீரர்கள் ஐம்பது பேர் உங்கள் சக்திக்கு முன்பு செயலற்று விட்டதை நீங்களே பார்த்தீர்கள். நான் சொன்னபடி நீங்கள் பேருக்கு விலகி மரக்கூட்டங்களில் மறைந்திருந்து வீசிய கற்கள் நல்ல போர்ப் பயிற்சியுள்ள ஐம்பது வீரர்களை விரட்டி விட்டதைக் கவனித்தீர்கள். அம்பும் கத்தியுந்தான் பயனளிக்கும் என்ற புரட்டை நீங்கள் இன்று நிரூபித்து விட்டீர்கள். இனிமேல் அஞ்சாமல் எல்லோரும் உங்கள் இல்லம் திரும்புங்கள்'' என்று கட்டளையிடும் தோரணையில் பேசினான்.

zeevaa

அவன் பேச்சைக் கேட்ட மக்களில் ஒரு வயோதிகன், ''நீங்கள் சொல்வது சரி. கல்லையும் கட்டையையும் கொண்டு பெரும் போர் நடக்குமா?'' என்று கேட்டான்.

அந்த வயோதிகனைக் கூர்ந்து நோக்கிய சதகர்ணி. ''பெரியவரே! ராமாயணத்தில் பெரும் ராட்சதப் படை வானர வீரர்கள் ஏந்திய கற்களாலும் மரங்களாலுமே அழிந்தது. உவமையைத் தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம். வானரர்களாக வந்தவர்கள் தேவர்கள். அந்த மகா வீரர்கள் தர்மத்தின் சக்தியை கல்லையும் மரத்தையும் கொண்டு நிரூபித்தார்கள். அது நமக்கும் படிப்பினை. இந்த மலை, இதைச் சேர்ந்த கிராமங்கள் உங்களுக்குச் சொந்தம். அதிலிருந்து உங்களை மகாக்ஷத்ரபர் விரட்டியது அநியாயம். அவர் கையாண்ட முறையும் தர்மமான முறையல்ல. அதை எதிர்த்து நிற்போம்'' என்று பதில் சொன்ன சதகர்ணி. ''இந்த ஹோமப் பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு இல்லம் செல்லுங்கள். உங்களை வரவழைக்க அவசியமிருந்தால்...'' என்று கூறி சேனாதிபதியைப் பார்த்தான்.

சேனாதிபதி தனது அங்கிப் பையிலிருந்து ஒரு சிறு வலம்புரிச் சங்கத்தை எடுத்துக் 'கிறீச்' சென்று பலமாக ஊதினான். ''இப்படி சங்கு ஊதப்படும், இதைக் கேட்டதும் விரைந்து வருங்கள்'' என்றான் சதகர்ணி.

''எதிரி இன்னும் அதிகப் படைகளைக் கொண்டு வந்தால்?'' என்று மற்றொருவன் வினவினான் கூட்டத்திலிருந்து.

''இந்த ஹோமப்புகை அவர்களைக் கவனித்துக் கொள்ளும். மேற்கொண்டு எதையும் கேட்காதீர்கள்'' என்று சொல்லிவிட்டு, ''மாலையில் வந்து பிரசாதம் வாங்கிச் செல்லுங்கள்'' என்றும் சொல்ல, கூட்டம் சிறிது சிறிதாகக் கலையத் தொடங்கியது. ''சேனாதிபதி! நாம் போஜனத்தை முடித்துக் கொள்வோம்'' என்றான் சதகர்ணி.

zeevaa

''ஏது சாப்பாடு?'' சேனாதிபதி கேட்டான்.

''தாபிலேசுவரருக்குப் பிரசாதம் செய்து வைத்திருக்கிறேன். நம் மூவருக்கும் அது போதும்'' என்றான் சதகர்ணி.

''மன்னவா! தங்களுக்குச் சமையலும் தெரியுமா?'' என்று கேட்டான் சேனாதிபதி.

''முதல் தரமாகச் சமைப்பேன்.''

''பூஜாரி உத்தியோகம் போனாலும் சமையல் உத்தியோகம் இருக்கிறது. மகாராஜா, உங்களுக்குக் குறைவு ஏதுமில்லை.''

இதைச் சொன்ன சேனாதிபதி நகைத்தான். சதகர்ணியும் ஹோம சாம்பலைத் திரட்டி வைக்கும்படியும் மாலையில் மக்களுக்கு விநியோகம் செய்யும்படியும் வேதியருக்குக் கூறி விட்டு சித்தரஞ்சனியுடனும் சேனாதிபதியுடனும் தாபிலே சுவரர் கோவிலுக்கு வந்து சேர்ந்தான். பிரசாதத்தை மற்ற இருவருக்கும் கொடுத்துத் தானும் உண்ட பின்பு தாபிலேசுவரர் சந்நிதியில் உட்கார்ந்த வண்ணம் தீர்க்க சிந்தனையில் இருந்தான்.

"என்ன யோசிக்கிறீர்கள்?" என்று கேட்டாள் சித்தரஞ்சனி.

''இன்றிரவு என்ன நடக்கும் என்பதைப் பற்றிச் சிந்திக்கிறேன்.''

அவனைத் தவறாகப் புரிந்துகொண்ட சித்தரஞ்சனி புன்முறுவல் செய்தாள். குறிப்பறிந்த சேனாதிபதி மெதுவாக எழுந்து அப்புறம் சென்றான். சதகர்ணி சொன்னான், ''சித்தரஞ்சனி! இன்றிரவு நீ நினைப்பது போல் இருக்காது. பெரும் ஆபத்தை நான் எதிர்பார்க்கிறேன்'' என்று.

''என்ன அப்பேர்ப்பட்ட அபாயம்?'' என்று கேட்டாள் சித்தரஞ்சனி.

zeevaa

''திட்டமாகச் சொல்ல முடியாது. மகாக்ஷத்ரபர் ஏமாறுபவர் அல்ல. இன்று ஏற்பட்ட தோல்வியையும் ஏற்று, கைகட்டிச் சும்மா உட்கார்ந்திருப்பவர் அல்ல'' என்று கூறிய சதகர்ணி குரலில் கவலையைக் காட்டினான்.

இங்கு சதகர்ணி பேசிக்கொண்டிருந்த அதே சமயத்தில் சதகர்ணியை அழித்துவிட பயங்கரமான ஒரு திட்டத்தை வகுத்துக் கொண்டிருந்தான் நாகபாணன். தன் எதிரில் நின்றுகொண்டிருந்த க்ஷத்ரபனையும் காஷ்டானனையும் நோக்கி, ''இன்னும் ஒரு சந்தர்ப்பம் தருகிறேன் உங்களுக்குச் சாதவாகனனை அழிக்க. அதிலும் நீங்கள் தோல்வியடைந் தால் உங்களிருவரையும் இந்த அஞ்சன்வேல் கோட்டையின் சதுக்கத்தில் தூக்குப் போடுவேன். சுறுக்குக் கயிற்றை உங்கள் இருவர் கழுத்திலும் என் கையாலேயே மாட்டி இறுக்கி உங்கள் விழி பிதுங்குவதைப் பார்ப்பேன்'' என்று கூறிவிட்டு, ''நான் சொல்வதை கவனமாகக் கேளுங்கள்'' என்று மிகவும் பயங்கரமான திட்டமொன்றை விவரிக்கலானான்.

திட்டத்தை விவரிக்குமுன்பு ஒரு கேள்வி கேட்டான். ''க்ஷத்ரபா! சண்டி ஹோமத்திலிருந்து எழுந்த புகையைக் கண்டாயா?'' என்று.

''கண்டேன். ஆகாயமளாவிப் போயிற்று. ஹோமம் நன்றாக நடந்திருக்க வேண்டும்'' என்றான் க்ஷத்ரபன்.

''அது ஹோமப் புகையல்ல'' என்றான் நாகபாணன்.

''வேறு எந்தப் புகை?'' காஷ்டானன் கேட்டான்.

''நம்மை அழிக்க வந்த யமப்புகை'' என்ற நாகபாணன் இகழ்ச்சி நிரம்பிய பார்வையைக் காஷ்டானன் மீது செலுத்தினான்.

zeevaa

அத்தியாயம் 21

அன்னையின் ரக்ஷை!
அக்கினிப் பரீட்சை!

திருமண தினத்தன்று இரவில் எந்தப் பெண்ணும் என்ன இன்பநிலையை எதிர்பார்ப்பாளோ அதை எதிர்பார்த்த சித்தரஞ்சனி கௌதமிபுத்ரன் பதிலால் பெரும் ஏமாற்றத்தையே அடைந்தாள். சண்டி ஹோமத்திற்குப் பிறகு தாபிலே சுவரர் கோவிலுக்கு வந்து உணவருந்திய பிறகு கோவில் உள்மண்டபத் தூணில் சாய்ந்தவண்ணம் கௌதமிபுத்ரன் ஏதோ தீவிர யோசனையில் இறங்கிவிட்டதைக் கண்ட புதுமணப் பெண்ணான சித்தரஞ்சனி அந்த யோசனை தன்னைப் பற்றியதாகத்தான் இருக்கும் என்ற மனப்பூரிப்பில் என்ன யோசிக்கிறீர்கள் என்று வினவியதும், குறிப்பறிந்து சேனாதிபதியும் அப்புறம் சென்றுவிட்டதையும் கவனித்ததும் தனது கையை அவனது கையோடு இன்னைத்துக் கொண்டாள். ஆனால் இரவு தான் எதிர்பார்த்ததுபோல் இருக்காது என்றும், பெருத்த அபாயத்தை எதிர்பார்ப்பதாகவும் சதகர்ணி சொன்னதும் ஏமாற்றத்தையும், ஏமாற்றத்தால் ஏற்பட்ட துன்பத்தையும் அடைந்த சித்தரஞ்சனி, ''என்ன அப்பேர்ப் பட்ட அபாயம்?'' என்று கேட்டதும் அவன் சொன்ன பதில் அவளைத் திகைக்க வைத்தாலும் அவள் அவன்மீது சாய்ந்து கொண்டு சொன்னாள், ''நாகபாணனை நீங்கள் அளவுக்கு அதிகமாக எடை போடுகிறீர்கள்'' என்று.

zeevaa

''இல்லை, சித்தரஞ்சனி! க்ஷஹரத இனத்தைச் சேர்ந்த நாகபாணன் அபராந்தா முழுவதையும் மகாராஷ்டிரத்தையும் கைப்பற்றியிருப்பவன். அவனைக் குறைவாக எடை போடுவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும். எத்தனையோ வெற்றிகளைக் கண்டிருக்கும் நாகபாணன் இந்த ஒரு தோல்வியைக் கண்டு அஞ்சமாட்டான். ஆகையால் நாம் எச்சரிக்கையுடனிருக்க வேண்டும்'' என்று கூறிய சதகர்ணி மீண்டும் கண்களை மூடி சிந்தனையில் ஆழ்ந்தான்.

அப்படியும் மனம் சமாதானப்படாததால் அவன் கையுடன் தனது கையை மேலும் பிணைத்துக் கொண்ட சித்தரஞ்சனி, ''முதல் கோணல் முற்றும் கோணல் என்றொரு தமிழ்ப் பழமொழி உண்டு'' என்றாள்.

''தெரியும் எனக்கு'' என்றான் சதகர்ணி.

''முதல் நாளே ஏற்படும் வாழ்க்கைத் தடங்கல் மேலும் தொடர்ந்தால்?'' என்று கேட்டாள் சித்தரஞ்சனி.

''தொடராது.'' இதைத் திட்டமாகச் சொன்னான் சதகர்ணி.

''அதை எப்படி அத்தனை திட்டமாகச் சொல்கிறீர்கள்'' என்று சித்தரஞ்சனி வினவினாள்.

''அபராந்தாவுக்கும் மகாராஷ்டிரத்துக்கும் தக்ஷிண தேசம் முழுமைக்குமே நான் சக்கரவர்த்தியாக வேண்டும் என்று என் தலையில் எழுதியிருக்கிறது'' என்ற சதகர்ணி, ''அதுமட்டு மல்ல சித்தரஞ்சனி, என் தாயின் ஆசையும் லக்ஷியமும் அதுதான்'' என்று அழுத்திச் சொன்னான்.

''உங்கள் தலையெழுத்தை நீங்கள் பார்க்க முடியாது. உங்கள் தாயின் ஆசையும் நிறைவேறுமென்பது என்ன நிச்சயம்? ஆசை நிராசையானால்?'' என்று கேட்டாள் சித்தரஞ்சனி. அவள் குரலில் துன்பம் தோய்ந்து கிடந்தது.

zeevaa

கௌதமிபுத்ரன் மெல்ல புன்முறுவல் கொண்டான். ''சித்தரஞ்சனி! சந்தேகம் மனிதனின் முதல் சத்ரு. தவிர என் தாயின் வாக்கு தெய்வ வாக்கு. அவள் சொன்னது இதுவரை பொய்யானதில்லை. என் தந்தை போர்க்களத்தில் இறப்பார் என்று அவள்தான் சொன்னாள். இந்தப் பிசாசு விஷயத்தை ஆராய என்னை அனுப்பியவரும் என் தாய்தான். இதோ என்னிடமிருக்கும் இந்த ரக்ஷையைப் பார்'' என்று கச்சையில் பத்திரப்படுத்தியிருந்த ரக்ஷையைக் காட்டினான்.

''இது என்ன செய்யும்?'' அதைக் கையில் வாங்கி வைத்துக்கொண்டு திருப்பித் திருப்பிப் பார்த்தாள் சித்தரஞ்சனி.

''ரக்ஷிக்கும். அதனால்தான் ரக்ஷை என்று சொல்கிறோம்'' என்றான் சதகர்ணி.

''என் தாயின் பெயர் கௌதமி பாலஸ்ரீ'' என்றும் சொன்னான்.

''அதனாலென்ன?''

''பெயருக்குத் தகுந்த சக்தியுள்ளவள், பாலா உபாசினி. சக்தியை உடையவள். அவள் கையினால் ரக்ஷை வாங்கிக் கொள்ள எத்தனையோ வீரர்கள் பிரதிஷ்டானாவுக்கு வருகிறார்கள். சாகர்களின் முன்னேற்றம் தடைப் பட்டதற்கு என் தாய்தான் என்று பிரதிஷ்டானாவில் அனைவரும் நம்புகிறார்கள். அவளைச் சாதாரணமாக நினைக்காதே. அவள் தெய்வம்'' என்று தாயை நினைத்து உணர்ச்சிவசப் பட்டான் கௌதமிபுத்ரன்.

சித்தரஞ்சனி அதற்குமேல் கேள்வி எதுவும் கேட்க வில்லை, கேள்வி எதுவும் பயன்படாது என்ற காரணத்தால். கண்களை மறுபடியும் மூடிவிட்ட சதகர்ணி நீண்ட யோசனைக்குப் பிறகே கண் விழித்தான்.

zeevaa

சித்தரஞ்சனி அதற்குமேல் ஏதும் பேசவில்லை. தூணில் அவன் பக்கத்தில் தானும் சாய்ந்து அவன் உடலுடன் தனது உடல் உராய சிந்தனை வசப்பட்டு உட்கார்ந்திருந்தாள். கண்ணை விழித்ததும் அவளைத் திரும்பிப் பார்த்த கௌதமிபுத்ரன் சித்தரஞ்சனி அருகில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து, ''சித்தரஞ்சனி! இன்றிரவில் நல்ல நிலவிருக்கும்'' என்றான்.

அவன் எதற்காக அதைச் சொல்கிறான் என்பதை அறியாத சித்தரஞ்சனி ''நீங்கள் பேசுவதெல்லாம் புதிராக இருக்கிறது. நிலவிருக்கும், இருந்தால் என்ன? அதனால் நமக்கென்ன பயம்?'' என்று கேட்டாள்.

''நாம் தூங்காதிருக்கலாம். நிலவில் பயணம் செய்யலாம். எத்தனையோ விதமாக இன்பமாக இரவைக் கழிக்கலாம்'' என்றான் சதகர்ணி.

சித்தரஞ்சனி பதிலேதும் சொல்லாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தாள். அந்தச் சமயத்தில் தலை நீட்டிய சேனாதிபதி, ''புரவிகள் சித்தமாயிருக்கின்றன'' என்று பணிவுடன் தெரிவித்துக் கொண்டான்.

''இன்னும் நேரமிருக்கிறது. சந்தியாகால பூஜை முடியட்டும்'' என்றான் சதகர்ணி, ''சித்தரஞ்சனி! எனது பட்டுகளை எடுத்து வை. நான் நீராடிவிட்டு வருகிறேன்'' என்றான்.

''இதுதான் என் வேலையா?'' என்று சீறினாள் சித்தரஞ்சனி.

''பூஜைக்கு உதவுவது மனைவியின் முக்கிய கடமை'' என்று சுட்டிக் காட்டினான் சதகர்ணி.

''பூஜை பாத்திரங்களைத் துலக்கட்டுமா? மணியை சுத்தம் செய்யட்டுமா?'' என்று எரிச்சலுடன் கேட்டாள் சித்தரஞ்சனி.

zeevaa

''பாத்திரம் மணி எல்லாம் சேனாதிபதியின் பொறுப்பு'' என்று கௌதமிபுத்ரன் சொல்லிவிட்டு, ''சேனாதிபதி! இங்கு நீ கவனித்துக் கொள்'' என்று எச்சரித்துவிட்டுத் தனது வாளை எடுத்துக்கொண்டு வெளியே சென்றான் சதகர்ணி.

கௌதமிபுத்ரன் மலைப்பகுதியில் கிளம்பிக் கொண்டிருந்த அதே சமயத்தில் நாகபாணனும் அஞ்சன்வேல் கோட்டையிலிருந்து கிளம்பிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவனைத் தொடர முற்பட்ட காஷ்டானனை நோக்கிய நாகபாணன், ''எங்கு வருகிறாய்?'' என்று வினவினான் எரிச்சலுடன்.

''தாங்கள் எங்கு போகிறீர்கள்?'' என்று காஷ்டானன் வினவினான்.

''போகும்போது எங்கே போகிறேனென்று கேட்கக் கூடாது என்று உனக்கு எத்தனை முறை சொல்லியிருக்கிறேன்.''

''கேட்காவிட்டால் நீங்கள் போகுமிடத்தைத் தெரிந்து கொள்வது எப்படி?'' என்று காஷ்டானனும் கேட்டான்.

பகலில் காஷ்டானன் காட்டிய முட்டாள்தனத்தை எண்ணிப் பார்த்த நாகபாணன் சினத்தின் எல்லையை அடைந்தான் அந்த மாலை நேரத்தில். பகல் காட்சி அப்பொழுதும் அவன் கண் முன்னால் நின்று கொண்டிருந்தது. க்ஷத்ரபன் காஷ்டானன் பின் தொடர ஐம்பது வீரர்களுடன் படகுகளில் திரும்பியதையும், அந்த வீரர்களில் சிலர் காயமடைந்து தள்ளாடி வந்ததையும் கோட்டை மீதிருந்தே கவனித்த நாகபாணன் தனது முயற்சி தோல்வியடைந்ததைப் புரிந்து கொண்டதால் வேகமாகக் கீழே இறங்கி வந்தான். க்ஷத்ரபன் தன்னை அணுகியதும் அணுகாததுமாக, ''எங்கே சித்தரஞ்சனி? எங்கே சாதவாகனன்?'' என்று வினாக்களை வீசினான்.

“தப்பி விட்டார்கள்” என்றான் க்ஷத்ரபன்.

“நீ அழைத்துப்போன ஐம்பது வீரர்கள்...” வாசகத்தை முடிக்கவில்லை நாகபாணன். முடிக்காத நிலையே அவன் வெறுப்பையும் சினத்தையும் காட்டியது.

க்ஷத்ரபன் பேசுமுன்பு காஷ்டானன் முன் வந்து, “அங்கு நடந்தது வீரர் போரல்ல” என்றான்.

“வேறென்ன போர்?” நாகபாணன் குரல் சாந்தமாயிருந்தது. அது மயானத்தின் சாந்தத்தை ஒத்திருந்தது.

“கிராமவாசிகள் எதிரியின் துணைக்கு வந்தார்கள். மரங்களின் மறைவிலிருந்தும் பெரும் கற்களை வீசினார்கள். பல வீரர்களின் மண்டைகள் உடைந்தன” என்று காஷ்டானன் விளக்கினான்.

“நீ என்ன செய்து கொண்டிருந்தாய்?”

“சேனாதிபதி தான் தப்ப என் உதவியைப் பெற்றுக் கொண்டான்.”

“உன் உதவியைப் பெற்றுக் கொண்டானா?”

“ஆம். தான் தப்ப என்னைத் தனக்கு முன்பாகப் பிடித்துக் கொண்டான். அதனால் வில்லவர் வாளிகளை எய்ய வில்லை.”

“ஓகோ!”

“பிறகு நான்...”

“இல்லை. சதகர்ணி என்னை மாப்பிள்ளைத் தோழனாக ஆக்கிக் கொண்டான்.”

“மாப்பிள்ளை யார்?”

“அவர்தான்.”

zeevaa

இதைக் கேட்டதும் பயங்கரமாக நகைத்த நாகபாணன், ''நன்று நன்று'' என்று நகைப்பின் ஊடே சிலாகிக்கவும் செய்தான்.

பிறகு சொன்னான் அவனுக்கும் ஒதுங்கி நின்ற க்ஷத்ரபனுக்கும், ''இன்னும் ஒரே ஒரு சந்தர்ப்பம் தருகிறேன். சதகர்ணியையும் சித்தரஞ்சனியையும் கூட்டிக் கொண்டு வா. அதில் நீங்கள் தோல்வியடைந்தால் உங்களைத் தூக்குப் போட்டு விடுவேன்'' என்று உறுமிவிட்டு, ''இரவு கோட்டையில் எனது அறைக்கு வாருங்கள்'' என்று உத்தரவிட்டு நடக்க முற்பட்டவனை க்ஷத்ரபன், ''அந்த சண்டிஹோமம் மக்களின் பயத்தை அகற்றி விட்டது'' என்று மெதுவாக சமாதானம் சொல்லத் துவங்கினான்.

''சண்டிஹோமம் அதற்காக மட்டும் ஏற்பட்டதல்ல. அந்தப் புகை யமப்புகை. க்ஷத்ரபா! கடற்கொள்ளைக்காரர்கள் தாங்கள் இருப்பிடத்தை சகாக்களுக்குத் தெரியப்படுத்தவும் இம்மாதிரி புகை கிளப்புவார்கள். அதைத்தான் செய்கிறான் சதகர்ணி. யாரையோ அழைக்கப் பார்க்கிறான். அது யார்? தனி மனிதனா! தனிப் படையா? எனக்குப் புரியவில்லை. ஆனால் நாம் சீக்கிரம் சாதவாகனனை அழிக்காவிட்டால் அவன் நம்மை அழித்துவிடுவான்'' என்று சொன்ன நாகபாணன் நேரே ஆற்றங்கரையை நோக்கிச் சென்றான். அங்கிருந்து ஒரு படகை எடுத்துக் கொண்டு தானே துடுப்புகளைத் துழாவி தனது கப்பலுக்குச் சென்றான்.

அன்று இரவின் ஆரம்பத்தில் திரும்பிக் கோட்டைக்கு வந்த நாகபாணன் தனது அறைக்கு க்ஷத்ரபனையும் காஷ்டானனையும் வரவழைத்து சாதவாகனனை அழிக்கப் பயங்கரத் திட்டமொன்றை விளக்கினான். ''நன்றாகக் கேளுங்கள். கௌதமிபுத்ரன் கிராமவாசிகள் அனைவரையும் மலைப்பகுதியில் குடியேற்றி விட்டால் நான்கு நாட்களில்

zeevaa

நான் இங்கு எதிர்பார்க்கும் நமது மரக்கலங்களில் வரும் நமது படைகளை நாம் மலைப்பகுதியில் இறக்கி தளம் அமைக்க முடியாது. ஆகவே இன்று நாளைக்குள் நாம் திட்டமான முடிவுகளைக் காணவேண்டும். சில வீரர்களுடன் க்ஷத்ரபர் சென்று மலைக்காட்டின் தனிப் பகுதி ஒன்றில் தீ வைக்கட்டும். அதை அணைக்க மக்கள் கூட்டமாக வருவார்கள். அப்பொழுது அவர்களை மடக்கி அழித்து விடுவோம். அந்தத் தீயைச் சமாளிக்கவும் மக்களைக் காப்பாற்றவும் கௌதமிபுத்ரன் விரைந்து வருவான். அந்த நேரத்தில் கோவிலுக்கு காஷ்டானன் சில வீரர்களுடன் சென்று சித்தரஞ்சனியையும் சேனாதிபதியையும் பிடித்து வரட்டும். ஒருவேளை கௌதமிபுத்ரன் தப்பினால் சித்தரஞ்சனியை வைத்து அவனைப் பிடிக்கலாம், ஆட்டை வைத்துப் புலியைப் பிடிப்பது போல'' என்று மகாக்ஷத்ரபன் கூறினான், குரூரமான புன்முறுவலும் கொண்டான்.

அவன் திட்டப்படியே க்ஷத்ரபர் இருபது வீரர்களுடனும் காஷ்டானனுடனும் கிளம்பினான் அக்கரைக்கு. அக்கரையில் இறங்கியதும் பத்து வீரர்களைக் காஷ்டான னுடன் கோவிலை நோக்கி அனுப்பிவிட்டு தான் பத்து வீரர்களுடன் மலைக்காட்டின் ஒதுக்குப்புறமான ஒரு பகுதிக்குச் சென்றான்.

தாபோல் மலையின் ஒரு தனிப்பகுதி அது. மரங்களில் மிக அடர்த்தியாயிருந்ததாலும் இரண்டு மூன்று பெரும் பாறைகள் மீது அவை தனிப்பட முளைத்திருந்ததாலும் காடு முழுவதும் தீப்பிடிக்காது என்ற முடிவுக்கு வந்தான் க்ஷத்ரபன். ''காடு முழுவதும் தீப்பிடிக்க விடாதே. அப்படி தீப்பிடித்தால் பேரழிவு ஏற்படும். பிறகு மக்கள் நம்மைத் தூற்றுவார்கள். அக்கம் பக்க நாடுகளும் இந்த மாதிரி நாசத்தைச் சகிக்க மாட்டார்கள்'' என்று எச்சரித்திருந்தான் நாகபாணன்.

zeevaa

அதை மனத்தில் கொண்ட க்ஷத்ரபன் பெரும் அக்னியை ஏற்படச் செய்வதும், பீதியை அளிக்க வல்லதும், ஆனால் மலைக்காடு முழுவதையும் கொளுத்தாததுமான அந்த தனிப் பகுதியைத் தனது திட்டத்துக்குத் தேர்ந்தெடுத்தான். அடுத்து பந்தங்களைக் கொளுத்த உத்தரவு பிறப்பித்தான். நான்கு பந்தங்களைக் கொளுத்திய நான்கு வீரர்களை நோக்கி, ''உம் வையுங்கள் தீயை, சற்று பட்ட கிளைகளாகப் பார்த்து'' என்று உத்தரவிட்டான்.

பந்தங்களை வீரர்கள் ஏந்தி உலர்ந்து கிடந்த சில கிளைகளை நோக்கி நடந்தார்கள். முதல் பந்தத்தின் ஜ்வாலை உலர்ந்த ஒரு கிளையுடன் சம்பந்தப்பட்டது. அடுத்து அந்தக் காட்டில் பிரளயாக்கினி பரவும் என்று நினைத்த க்ஷத்ரபன் குதூகலித்தான்.

zeevaa

அத்தியாயம் 22

இரண்டு ஓலைகள்!

சந்தியா கால பூஜைக்குத் தனது பட்டு வேஷ்டிகளை எடுத்து வைக்குமாறு சித்தரஞ்சனிக்கும் பாத்திரங்களைச் சுத்தப்படுத்துமாறு சேனாதிபதி வஜ்ரபாகுவுக்கும் உத்தர விட்டுக் கோவில் மண்டபத்திலிருந்து வெளிப் போந்த கௌதமிபுத்ரன், வாசிஷ்டி நதியின் முகத்துவாரத்தை நோக்கிச் செல்லாமல் மலையின் செங்குத்தான பாறைகளின் மறைவிலும் மரங்களின் மறைவிலும் நடந்து அஞ்சன்வேல் கரைக்கு நேர் இக்கரைக்கு வந்து நதியில் இறங்கி நீராடத் துவங்கினான். மலையின் புதர்களால் மறைக்கப்பட்ட ஓரிடத்தில் இறங்கிய சாதவாகனன் நீராடும் முகாந்திரத்தில் எதிர்க் கரையையும் கவனித்தான். அக்கரையில் கரையோர மாகச் சாக, யவன வீரர்களின் நடமாட்டம் மும்முரமாயிருப் பதையும், கோட்டைக்குள் சென்றும் மீண்டும் வெளி வந்தும் வீரர் பலர் அணி வகுத்துச் சித்தமாயிருப்பதையும் பார்த்து ஏதோ பலமான திட்டத்தை நாகபாணன் வகுக்கிறா னென்பதையும் புரிந்து கொண்டான். சிறிது நேரத்துக் கெல்லாம் நாகபாணன் அக்கரையில் தோன்றிப் படகொன்றை எடுத்துக் கொண்டு நதியின் முகத்துவாரத்தை நோக்கிச் செல்வதையும் பார்த்து ஏதோ கடுமையான ஏற்பாட்டைச் செயலாற்றுவதில் இறங்கியிருக்கிறா னென்பதையும் புரிந்து கொண்டதால் அதைப்பற்றிச் சிந்தித்த வண்ணமே அந்த மறைவான இடத்தில் நீராடியவன் நீண்ட

zeevaa


லதா

நேரம் நீராட்டத்தை முடிக்காமலே நீரில் அமிழ்ந்து கிடந்தான். கடைசியில் அவன் நீராட்டத்தை முடித்துக் கொண்டு உடல் துவட்டிப் பட்டுகளை அணிந்து விபூதியும் தரித்துக் கொண்டவன், நாகபாணன் படகை நோக்கிக் கொண்டே நின்று கொண்டிருந்தான். நாகபாணன் மரக்கலத்தில் ஏறியதையும், சிறிது நேரத்திற்கெல்லாம் படகில் இறங்கிக் கோட்டையை நோக்கித் திரும்பி வரத் துவங்கியதையும் பார்த்தான். அதனால் ஏற்பட்ட தீர்க்க சிந்தனையுடன் கோவிலுக்குத் திரும்பினான்.

அவன் முகத்தில் காணப்பட்ட கவலை கலந்த சிந்தனையைக் கவனித்த சித்தரஞ்சனி, ''ஏதாவது விசேஷம் உண்டா?'' என்று வினவினாள்.

''விசேஷம் இருப்பதாகத்தான் தெரிகிறது. எதையும் இரவு ஏறியதும் புரிந்துகொள்ளலாம்'' என்று பதில் சொன்ன சதகர்ணி நேராகத் தாபிலேசுவரர் கர்ப்பக் கிருகத்துக்குச் சென்று பூஜையைத் துவங்கினான். சேனாதிபதி துலக்கி வைத்திருந்த பாத்திரங்களிலிருந்து தீர்த்தத்தால் தாபிலேசு வரருக்கு அர்க்யம், பாதம், இத்யாதிகளைச் சமர்ப்பித்து விட்டுக் கனி வர்க்கங்களையும் நிவேதனம் செய்தான். அவன் விளக்கு தீபமெடுத்து ஆரத்தி சமர்ப்பித்த சமயத்தில் சேனாதிபதி மணியைக் காடே அதிரும்படி அடித்தான். தீபாராதனை செய்து கொண்டிருந்த சதகர்ணி, ''சேனாதிபதி! மணியை அடித்துக் கொண்டே இரு, அது அஞ்சன்வேலில் கேட்க வேண்டும்'' என்று உத்தரவிட, சேனாதிபதி தனது பலம் கொண்ட மட்டும் மணியைப் பிளந்து கட்டினான். பூஜையை முடித்து எல்லோருக்கும் பிரசாதத்தைக் கொடுத்த பிறகு, ''சேனாதிபதி! நீ சித்தரஞ்சனியை அழைத்துக் கொண்டு போய் சண்டிகை குகைக்கு அருகில் இருக்கும் மலைவாசிகளிடம் விட்டு, பத்துப் பதினைந்து மலை

zeevaa

வீரர்களை அழைத்து கொண்டு வா. அஞ்சன்வேல் கோட்டையை நான் கண்காணிக்கிறேன். தேவையிருந்தால் செயல்பட மலைவாசிகள் சிலரைச் சித்தப்படுத்தி வை'' என்று உத்தரவிட்டான்.

அதுவரை பேசாமலிருந்த சித்தரஞ்சனி, ''நான் எதற்காக மலைவாசிகள் இருப்பிடத்திற்குப் போக வேண்டும்?'' என்று வினவினாள்.

கௌதமிபுத்ரன் முகத்தில் கவலை படர்ந்தது. அந்தக் கவலை குரலிலும் ஒலிக்கச் சொன்னான் சாதவாகனன், ''அஞ்சன்வேல் கோட்டைக்குப் போகாதிருக்க'' என்று.

''நான் அங்கு போகப் போவதாக யார் சொன்னது?'' என்று கேட்டாள் சித்தரஞ்சனி.

''யாரும் சொல்ல வேண்டாம். உன்னைத் தூக்கிப் போக இன்றிரவு முயற்சி நடக்கும். அந்த முயற்சியை முறியடிக்கவே உன்னைப் பாதுகாப்பான இடத்துக்கு அனுப்புகிறேன். நீ போ சீக்கிரம். நானும் வருகிறேன். சண்டிகாதேவி குகைக்கு'' என்று திட்டவட்டமாகக் கூறினான் சாதவாகனன். மேலும் தொடர்ந்தான். ''உன்னைத் தூக்கிப் போய் என்னைப் பிடிக்கும் தூண்டில் மீனாக உன்னை உபயோகப்படுத்து வார்கள்'' என்று.

அதற்குமேல் அலட்சியத்துக்கு இடங்கொடாத கௌதமி புத்ரன் சேனாதிபதியுடன் சித்தரஞ்சனியை அனுப்பி வைத்தான். பிறகு தாபிலேசுவரர் கோவில் கதவை மூடி விட்டுத் தனது புரவியில் ஏறி முகத்துவாரத்தை நோக்கிப் பயணம் செய்தான். முகத்துவாரத்துக்குச் சிறிது முன்பாகவே இருந்த ஒரு பெரிய பாறையின் அருகில் வந்ததும் புரவியைப் பாறை மறைவில் நிறுத்திவிட்டுத் தான் மட்டும் பக்கத்திலிருந்த மரமொன்றின்மீது ஏறி அக்கரையைக் கவனிக்கலானான்.

zeevaa

இரவு முற்றி வெண்மதியும் விண்ணில் வலம் வரத் துவங்கியும் எந்தவித நடவடிக்கையும் கோட்டைப் பகுதியில் இல்லாததைப் பார்த்த சாதவாகனன் மரத்திலிருந்து இறங்க முற்பட்ட சமயத்தில் கோட்டைப் பகுதியில் திடீரென நடமாட்டம் ஏற்பட்டதையும், படகுகள் சில சித்தப்படுத்தப் பட்டதையும் கவனித்ததும் அங்கேயே சிறிது நேரம் உட்கார்ந்து கவனிக்கலானான். சாக வீரர்களைத் தாங்கிய இரு படகுகள் கிளம்பியதையும், ஒரு படகில் காஷ்டானனும் இன்னொரு படகில் க்ஷத்ரபனும் இருந்ததையும் பார்த்து அடுத்து நடப்பதை எதிர்பார்த்திருந்தான்.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது. மலைப்பகுதியில் எங்கும் நிம்மதி குடிகொள்ளத் துவங்கியது. கோட்டையிலிருந்து வந்த படகுகளிலிருந்தவர்கள் இரண்டு பிரிவாகப் பிரிக்கப் பட்டதும் திட்டத்தை ஓரளவு புரிந்துகொண்ட சாதவாகனன் மரத்தின் மீதிருந்து இறங்கிப் புரவியில் ஏறிச் சண்டிகா தேவியின் குகையை நோக்கி விரைந்தான். அவன் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் மலையில் ஏறத் துவங்கிய காஷ்டானனும் க்ஷத்ரபனும் அரவம் ஏதும் செய்யாமலும் மிகுந்த எச்சரிக்கையுடனும் தங்கள் தங்கள் பணிகளை நிறைவேற்றப் பிரிந்து சென்றார்கள்.

மகாக்ஷத்ரபனான நாகபாணன் கட்டளைப்படி மலைக் காட்டில் தீ வைக்க, தீ பரவாத தனித்த ஓர் இடத்தைத் தேர்ந் தெடுக்கக் கால் ஜாமமானாலும், இடத்தை நிர்ணயித்தவுடன் காய்ந்த நிலையில் தீ வைக்கத் தனது வீரர்களை ஏவினான். பந்தம் கொளுத்தப்பட்டுத் தீயைப் பட்டுப்போன கிளையில் அந்த வீரன் வைத்த பிறகு தீ திகுதிகுவென அந்தப் பகுதியில் பரவலாயிற்று. தீ நன்றாகப் பிடித்தவுடன் அந்தப் பகுதியில் தனது வீரர்களுடன் அகன்று சாதவாகனை எதிர்பார்த்து நின்றிருந்தான் க்ஷத்ரபன். ஆனால் தீ நன்றாகப் பரவியும்

zeevaa

சாதவாகனனோ மலைவாசிகளின் கூட்டமோ அந்தப் பக்கம் வராதுபோகவே பெரும் குழப்பத்திற்குள்ளானான். அந்தக் குழப்பத்தின் விளைவாக என்ன செய்வதென்று அறியாமல் தனது வீரர்களுடன் தாபிலேசுவரர் கோவிலை நோக்கிச் சென்றான். அங்கிருந்து தாபிலேசுவரர் கோவிலை அடையக் கிட்டத்தட்ட நடுநிசியாகி விட்டதால் கோவில் பகுதியில் நிசப்தம் நிரம்பிக் கிடந்தது. அதன் முன்பாக வீசிக் கிடந்த நிலவில்கூட ஒருவித பயங்கரமிருப்பதாக க்ஷத்ரபனுக்குத் தோன்றியதேயொழிய நிலவில் அழகிருப்பதாக அவனுக்குத் தெரியவில்லை. ஏதோ தன்னையும் மீறிப் பயங்கரம் உருவாகியிருப்பதாக நினைத்த க்ஷத்ரபன் ஒருமுறை கோவிலைச் சுற்றி வந்தான். அப்படியும் ஏதும் விளங்காது போகவே. "காஷ்டானன் என்ன ஆனான்? சித்தரஞ்சனியைச் சிறை செய்து கோட்டைக்குக் கொண்டு போய் விட்டானா?" என்று கேள்விகளை எழுப்பிக் கொண்டான். விடை ஏதும் கிடைக்காது போகவே தனது வீரர்களில் ஒருவனை அழைத்து, "கோவிலுக்குள் யாரிருப்பது பார்," என்று உத்தரவிட்டான்.

க்ஷத்ரபன் உத்தரவுப்படி வீரனும் கோவில் கதவைத் தட்டவே உள்ளிருந்து பதிலேதும் கிடைக்காததால் திரும்பி நோக்கினான் க்ஷத்ரபனை. க்ஷத்ரபன் அடுத்த உத்தரவு இடுவதற்குப் பதிலாகத் தானே படிகளில் ஏறிச் சென்று கதவில் தோளைக் கொடுத்துத் தள்ளினான். கதவு தாளிடாதிருந்ததால் திடீரென வேகத்துடன் திறக்கவே கோவிலின் முன் மண்டபத்தில் தடாலென விழுந்த, க்ஷத்ரபன், மெள்ள சமாளித்து எழுந்த பிறகு அங்கு யாரும் இல்லாததைக் கண்டு ஏதும் புரியாததால். "இந்தச் சனியன் பிடித்த காஷ்டானன் எங்கே?" என்று கூவினான். அவன் கூவலைக் கோவில் சுவர்கள் எதிரொலி செய்தன பயங்கரமாக. அதனால் சற்று பீதியடைந்த க்ஷத்ரபன் மெள்ள

zeevaa

கர்ப்பக்கிரகத்தை நோக்கிச் சென்றான். அங்கு இருந்த சிவலிங்கத்தின் ஆவுடையாரில் ஒரு பெரிய ஓலையிருந்தது. அதை எடுத்துக் கர்ப்பக்கிரக விளக்கில் படித்த க்ஷத்ரபன் ஏது செய்வதென்றறியாமல் திகைத்து நின்று விட்டான். ஓலையைப் பிடித்த கைகள் நடுங்கின. ''அடப்பாவி! படு மோசம் செய்துவிட்டாயே'' என்று துன்பத்துடன் கூவினான் க்ஷத்ரபன்.

காஷ்டானனும் அவனுடன் வந்த வீரர்களும் மாயமாய் மறைந்து விட்டனர். அவர்கள் ஒருவேளை அழிக்கப் பட்டார்களா என்பது தெரியவில்லை க்ஷத்ரபனுக்கு. என்ன செய்வதென்று அறியாமல் ஓலையைக் கையில் ஏந்திய வண்ணம் கோவிலுக்கு வெளியே வந்தான். எங்கிருந்தோ பறந்து வந்த அம்பு ஒன்று அவன் காலடியில் விழுந்ததும், அதிலும் ஒரு ஓலை கட்டப்பட்டிருந்ததையும் கவனித்த க்ஷத்ரபன் சுயநினைவை அடியோடு இழந்தான். பிறகு சமாளித்துக் கொண்டு அந்த ஓலையை எடுத்தான் அம்பிலிருந்து. அதில் முத்திரை வைக்கப்பட்டிருந்தது. நாகபாணனுக்கு விலாசமிடப்பட்டிருந்தது. முத்திரைகளை உடைத்து அதையும் படித்தான். வெகு சீக்கிரம் விபரீதம் மூளக் கூடிய நிலை சூழ்ந்து வருவதை உணர்ந்து கொண்டான் க்ஷத்ரபன்.

zeevaa

அத்தியாயம் 23

காஷ்டானனுக்கு இரு வழிகள்!

தாபிலேசுவரர் கோவில் கர்ப்பக்கிரகத்தில் லிங்கத்தின் பக்கத்திலிருந்த ஓலையைக் கண்டதும் க்ஷத்ரபன் சின மடைந்து காஷ்டானனைப் பற்றிய எரிச்சலுடன் கூவினா னென்றால், வாயிலுக்கு வந்ததும் தனது காலடியில் அம்பு மூலம் பறந்து வந்து கிடந்த ஓலையைப் படித்ததும் பெரும் பிரமிப்புக்குள்ளானானென்றால், அவற்றுக்கெல்லாம் காரணம் இருக்கவே செய்தது. முதல் ஓலையைக் காஷ்டானனே எழுதி இருந்ததையும். அதில், ''எதிரிகளிடம் சிக்கிக் கொண்டேன், தப்ப வழியில்லை'' என்று செய்தி பரம சுருக்கமாயிருந் ததையும் கண்ட க்ஷத்ரபன், இரண்டாவது ஓலையில் செய்தி விவரமாகவே தீட்டப்பட்டிருந்ததைப் பார்த்தான். ''மகாக்ஷத்ரபரே! நீர் இந்தப் பகுதியை விட்டுச் செல்ல நான்கு நாட்கள் தருகிறேன். அதற்குள் நீர் அஞ்சன்வேல் கோட்டையைவிட்டுச் செல்லாவிடில் நானே எனது வீரர்களுடன் வந்து அதைத் தாக்குவேன்- கௌதமிபுத்ரன்.'' என்ற வாசகத்தைப் படித்ததும் தான் அஞ்சன்வேல் திரும்புவதைத் தவிர வேறு வழியில்லை என்பதைப் புரிந்து கொண்டான் க்ஷத்ரபன். அப்படிப் புரிந்துகொண்டது பெரும் திகிலை அளித்தது க்ஷத்ரபனுக்கு. காரியத்தைச் சாதிக்காமல் தான் திரும்பினால் தன்னைத் தூக்குப் போட்டுவிடுவதாக மகாக்ஷத்ரபன் எச்சரித்தது நினைவிருந்ததாலும் மகாக்ஷத்ரபன் சொல்வது வீண் பயமுறுத்தல் இல்லையென்பதை க்ஷத்ரபன்

zeevaa

உணர்ந்திருந்ததாலும் திரும்பிச் செல்லத் தயங்கவே செய்தான். அப்படி தான் திரும்பிச் செல்லா விட்டாலும் உடன் வந்திருக்கும் வீரர்கள் தன்னைக் கட்டித் தூக்கிப் போய்விடுவார்களென்றும், தோல்வியை அவர்கள் வாயால் மகாக்ஷத்ரபரிடம் சொல்லும் பயத்தில் எதையும் அவர்கள் செய்யச் சித்தமாயிருப்பார்களென்றும் தீர்மானித்ததால் திரும்புவதைத் தவிர வேறு வழியில்லை என்பதைத் தீர்மானித்துக் கொண்டான். அப்பொழுது ஒரு புது யோசனையும் க்ஷத்ரபன் மூளையில் உதயமாகவே அவன் தனது வீரர்களை நோக்கி, ''வீரர்களே! காஷ்டானன் நம்மை மோசம் செய்து விட்டான். ஆனால் நாம் அஞ்சப் போவதில்லை. நீங்கள் காட்டுக்குள் சென்று எதிரியின் நிலையையும் காஷ்டானன் சிறை வைக்கப்பட்டிருக்கும் இடத்தையும் கண்டுபிடியுங்கள். அவனைச் சிறை மீட்டுச் செல்வோம்'' என்று உத்தரவிட்டான்.

க்ஷத்ரபன் மிக கம்பீரமான அதிகாரக் குரலில்தான் உத்தரவிட்டான். ஆனால் அவன் எதிரே நின்ற வீரர்கள் அசையாமல் பதுமைகள்போல் நின்றார்கள். அவர்கள் கற்சிலைகளைப் போல் நிற்பதைக் கண்ட க்ஷத்ரபன் சினம் அதிகமாகவே, ''நான் சொன்னது உங்கள் காதில் விழவில்லை?'' என்று சீறினான்.

அதற்கும் வீரர்கள் பதில் சொல்லாமல் இடித்த புளியைப் போல் நிற்கவே, ''ஏன், உங்களுக்கு வாயில்லையோ பேச? பதிலாவது சொல்லுங்கள். இல்லையேல்?'' என்று தனது வாட்பிடியின் மீது கையை வைத்தான். அப்பொழுது ஒரு வீரன் மட்டும் பேசினான். ''படைத் தலைவரே! எங்களை விரட்டிப் பயனில்லை. காஷ்டானனையும் அவருடன் சென்ற முதல் பத்து பேரையும் பிடித்த எதிரிக்கு நம்மை அழிப்பது பெரும் காரியமல்ல. இது சாதாரண பூமியல்ல, நாம் எதிருக்கு எதிர் போராடுவதற்கு. மலைக்காடு. எதிரி எங்கு

zeevaa

பதுங்கியிருப்பானென்று தெரியாது. நாங்கள் காட்டுக்குள் புகுந்தவுடன் மறைவிலிருக்கும் எதிரி, நம்மை ஒவ்வொருத் தராகவும் கொல்லலாம். பத்துப் பேரையும் ஒரே வழியாகவும் சூழ்ந்து தீர்த்துக் கட்டலாம். தவிர மலைவாசிகள்...'' என்று வாசகத்தை முடிக்கவில்லை அவன்.

முடிக்காத வார்த்தைகளையும் அவற்றின் பொருளையும் உண்மையையும் கூட க்ஷத்ரபன் புரிந்து கொண்டான். ஏற்கெனவே மரங்களின் மறைவுகளிலிருந்து, கற்களையும் கட்டைகளையும் வீசித் தனது வீரர் கூட்டத்தைச் சிதற அடித்த மலைவாசிகள், மலைக்காட்டின் ஒரு பகுதி எரிக்கப் பட்டதால், பழி வாங்கச் சித்தமாயிருப்பார்களென்பதையும் உணர்ந்து கொண்டதால் தனக்கு இரு பாதைகளே உண்டென்பதைச் சந்தேகமறப் புரிந்து கொண்டான். 'ஒன்று இங்கேயே சண்டையிட்டுச் சாகலாம், அல்லது அஞ்சன்வேல் சென்று தூக்கிலாடலாம். இந்த இரண்டைத் தவிர வேறு வழி கிடையாது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். விளைவு எதுவாயிருந்தாலும் வீரனான தனதுகடமை நிச்சயமாகத் தெரிந்தது அவனுக்கு. திரும்ப அஞ்சன்வேல் சென்று தோல்வியை அறிவிப்பதே தனது கடமை என்று தீர்மானித்துக் கொண்டு, ''சரி வாருங்கள், போகலாம்'' என்று வீரர்களை அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

தாபிலேசுவரர் கோவிலிலிருந்து க்ஷத்ரபன் தனது வீரர்களுடன் புறப்பட்டுச் சென்றதைச் சற்று எட்ட இருந்து மரத்தின் மறைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த கௌதமிபுத்ரன் தனது அருகில் நின்றிருந்த காஷ்டானனை நோக்கி, ''நீயும் அவர்களுடன் போவதானால் போகலாம்'' என்று கூறினான்.

காஷ்டானன் முகத்தில் கிலி முற்றும் படர்ந்து கிடந்தது. ''நான் எங்கிருந்தாலென்ன? அங்கு மகாக்ஷத்ரபர் தூக்கில்

zeevaa

போடுவார். இங்கு நீங்கள் என்னை வெட்டிப் போடலாம். எங்கு செத்தால் என்ன? சாவில் வித்தியாசம் என்ன வேண்டிக் கிடக்கிறது?'' என்று வெறுப்பும் கிலியும் கலந்த குரலில் பேசினான் காஷ்டானன்.

''காஷ்டானனா! சாவிலும் வித்தியாசங்கள் இருக்கின்றன'' என்று கௌதமிபுத்ரன் சுட்டிக் காட்டினான்.

''உயிர் போவதுதானே சாவு?'' என்று கேட்டான் காஷ்டானன்.

''இருந்தாலும் எப்படிப் போவது என்பதில் வித்தியாசங்கள் உண்டு.''

''என்ன வித்தியாசமோ?''

''காஷ்டானனா! போரில் உயிர் துறப்பது ஒருவகை. குற்றவாளியாகத் தண்டிக்கப்பட்டு வாளால் துண்டிக்கப் பட்டோ அல்லது கயிற்றில் தொங்கியோ சாவது ஒரு வகை. நாட்டுக்காக உயிர்த் தியாகம் ஒரு வகை. எதற்கும் பயனில்லாமல் உண்டு காலம் கழித்து இறப்பது ஒரு வகை. இந்தச் சாவுகளில் ஒரு வகை மீளாப் புகழ் அளிக்கும். இறந்த பின்னும் இறவா நிலையை அளிக்கும். மற்ற வகைச் சாவு புழு பூச்சிகள் சாவதைப் போல் பயனற்ற சாவு'' என்று மரண காரணங்களை விளக்கினான் கௌதமிபுத்ரன்.

ஆனால் காஷ்டானன், அந்தக் காரணங்களை ஒப்புக் கொண்டதாகத் தெரியவில்லை. அதைரியமுள்ளவர்களுக்கு இயற்கையாக இருக்கும் குயுக்தி வேலைசெய்ய ஆரம்பித்த தால் அவன் பதில் சொன்னான், ''சாதவாகனரே! போர்களில் யார் பக்கம் நாம் போரிடுகிறோம் என்பதையும் பொறுத்தது புகழும் அபவாதமும். துரியோதனன் பக்கத்தில் மடிந்த சகுனி, துச்சாதனன் முதலிய எல்லா வீரர்களையும் உலகம் இன்னும் தூஷித்துக் கொண்டிருக்கிறது. பாண்டவர் பக்கத்திலிருந்

zeevaa

தவர்கள் எல்லோருமே வாழ்த்தப்படுகிறார்கள். இராவணன் பக்கத்திலிருந்த மகாவீரர்களையெல்லாம் உலகம் தூற்றுகிறது. ஆகவே எல்லாச் சாவும் புகழை அளிக்காது. அதற்குச் சரியான பக்கத்திலும் சேர வேண்டும்'' என்று.

காஷ்டானன் புத்திக் கூர்மையையும் கோழைத்தனத்துக்கு அவன் சப்பைக் கட்டுக் கட்டுவதையும் கவனித்த கௌதமி புத்ரன் புன்முறுவல் கொண்டு, ''காஷ்டானனா, அப்படியா னால் சாதவாகனர் சாகர் போரில், நீ யார் பக்கம் இருக்க விரும்புகிறாய்?'' என்று வினவினான்.

''இதில் என் விருப்பம் என்ன இருக்கிறது?'' என்று வினவினான் காஷ்டானன்.

''ஏன் இல்லை? என் பக்கம் இருக்கலாம் அல்லது மகாக்ஷத்ரபன் பக்கமிருக்கலாம். வேறு இங்கு பக்கங்கள் ஏதுமில்லையே! சுலபமாக முடிவுக்கு வரலாமே'' என்றான் சதகர்ணி.

''நான் உங்கள் பக்கம் சேர்ந்தால்?'' என்று வினவினான்.

''சேரலாம்.''

''இல்லாவிட்டால்?''

''உனக்கு விடை தருகிறேன். பழைய பக்கம் போகலாம்.''

''உங்கள் பக்கம்தான் நான் இனி'' என்று முடிவாகச் சொன்னான் காஷ்டானன்.

''அப்படியானால் உனக்கு ஒரு பணி கொடுக்கிறேன். செய்வாயோ?'' என்று வினவினான் கௌதமிபுத்ரன்.

''கட்டளையிடுங்கள்'' என்றான் காஷ்டானன்.

''மறுக்காமல் செய்வாயா காஷ்டானனா?'' என்று கேட்டான் சாதவாகனன்.

zeevaa

''உயிர் போனாலும் செய்வேன்'' என்று சொன்னான் காஷ்டானன்.

''அப்படிப்பட்ட ஒரு பணிதான் இது'' என்ற கௌதமிபுத்ரன் புன்முறுவல் கொண்டான்.

கௌதமிபுத்ரன் தன்னை ஏதோ பெரும் சோதனைக் குள்ளாக்கப் பார்க்கிறான் என்று முடிவு செய்து கொண்ட காஷ்டானன், ''என்னதான் சொல்லுங்கள்'' என்றான்.

''காஷ்டானனா! அதோ போகும் க்ஷத்ரபன் வீரர்கள் அக்கரை அடைந்தவுடன் நீயும் இங்கிருந்து கிளம்பிக் கடலில் நிற்கும் மரக்கலத்துக்குச் செல்.''

''உம்.''

''அங்கு நாகபாணன் இருக்கிறான்.''

''அஞ்சாதே, அவனை நான் அதே மரக்கலத்தில், நாளை இரவில் சந்திப்பதாகச் சொல். நீ என் தூதனென்று சொல். உன்னை ஏதும் செய்யமாட்டான்.''

''உங்களுக்கு மகாக்ஷத்ரபரைத் தெரியாது.''

''நன்றாகத் தெரியும் காஷ்டானனா! மகாவீரன். க்ஷத்திரிய தர்மம் அறிந்தவன். தூதனைத் தொட மாட்டான். தவிர என் தூதனைத் தொடத் துணியமாட்டான்'' என்ற கௌதமி புத்ரன், ''வா காஷ்டானனா! வாசிஷ்டியின் முகத்துவாரத் துக்குப் போவோம்'' என்று காஷ்டானன் கையைப் பிடித்து அழைத்துச் சென்றான்.

காவுக்குச் செல்லும் ஆடுபோல் சென்றான் காஷ்டானன். சென்றபோது தீர்க்க சிந்தனையுடன் சென்றான். 'மகாக்ஷத்ரபர் எங்களை அஞ்சன்வேல் கோட்டைக்குத் தானே வரச்சொன்னார். அப்படியிருக்க மரக்கலத்திலிருப்

zeevaa

பதாக இவர் சொல்வது எப்படிச் சரியாகும்?' என்று சிந்தித்த வண்ணம் சென்றான்.

இத்தகைய சிந்தனைகளுடன் சென்ற காஷ்டானன் படகில் ஏறி, வந்தது வரட்டும் என்று படகை மரக்கலத்தை நோக்கிச் செலுத்தினான். மரக்கலத்தை அடைந்ததும் ஏற்கெனவே தொங்கிக் கொண்டிருந்த நூலேணியில் ஏறிய காஷ்டானனை நாகபாணனே கையைப் பிடித்துத் தூக்கி மரக்கலத்துக்குள் இறக்கினான். ''வா, என்னுடன்!'' என்று கூறி மரக்கலத்தின் நடுவிலிருந்த அறையை நோக்கி நடந்தான். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காஷ்டானனும் மகாக்ஷுத்ரபனைப் பின்பற்றினான்.

zeevaa

அத்தியாயம் 24

பூஜாரி எங்கே?

வாசிஷ்டி நதியின் முகத்துவாரத்தில் படகில் ஏறிய நிமிஷத்திலிருந்து மரக்கலத்தை அடையும்வரை பலப்பல சிந்தனைகளுடன் சென்ற காஷ்டானன், மகாக்ஷத்ரபனின் அசைவு ஒவ்வொன்றையும் கௌதமிபுத்ரன் எப்படி அறிந்து கொள்கிறான் என்ற வியப்புடனேயே சென்றான். நாகபாணன் தங்களுக்காக அஞ்சன்வேல் கோட்டையில் காத்திருப்பானென்று தானும் க்ஷத்ரபரும் எண்ணியதற்கு முற்றும் மாறாக மகாக்ஷத்ரபர் மரக்கலத்திலிருப்பதாகக் கௌதமிபுத்ரன் சொன்னதன்றி, செய்தியொன்றையும் தன்னிடம் சொல்லியிருப்பதை நினைத்து கௌதமிபுத்ரன் சொன்னது சரியாயிருக்குமானால் க்ஷத்ரபன் அஞ்சன்வேல் கோட்டைக்குச் சென்ற பின்பும் தூக்கிலாட மாட்டான் என்பது தவிர, தான் நாகபாணனிடம் செல்வதால் தன் உயிருக்கு ஆபத்து நேரிடலாமென்று நினைத்து அஞ்சினாலும் அப்படி எதுவும் நடக்காது என்று சதகர்ணி திடமாகச் சொன்னதால் சிறிது மனத்தையும் தேற்றிக் கொண்டான் காஷ்டானன். சதகர்ணி உறுதி கூறிவிட்டாலும் மகாக்ஷத்ரபனின் குணத்தை நன்றாக அறிந்திருந்த காஷ்டானன் தான் தூக்குக் கயிற்றுக்குள் தலையை விடுவதாகவே எண்ணினான். அத்தகைய எண்ணத்தால் ஏற்பட்ட கிலியுடன் மரக்கலத்தை அடைந்து நூலேணியில் ஏறியதும் தனது கையைப் பிடித்து நாகபாணனே தன்னைத்

zeevaa

zeevaa

தூக்கி மரக்கலத்தில் இறக்கிவிட்டதைக் கண்டதும் பாதி உயிரை அப்பொழுதே விட்டுவிட்டான் காஷ்டானன். பீதியின் விளைவாக அவன் கை வெடவெடவென நடுங்கலாயிற்று.

''உம்! கையை உதறாதே. கெட்டியாகப் பிடித்துக் கொள்'' என்று நாகபாணன் மிரட்டியதும் முன்னைவிட காஷ்டானன் கை அதிகமாக நடுங்கத் தொடங்கியதால் அவன் கையைத் தனது கையிலிருந்து விடுவித்து, ''வா என்னுடன்'' என்று அதட்டிவிட்டு மரக்கலத்தின் நடுவிலிருந்த அறையை நோக்கி நடந்தான் மகாக்ஷத்ரபன். காவுக்குச் செல்லும் ஆட்டைப் போல் மகாக்ஷத்ரபனைத் தொடர்ந்து காஷ்டானன் அறைக்குள் நுழைந்ததும் சுற்று முற்றும் பார்த்தான்.

அறையில் தங்கள் இருவரைத் தவிர வேறு யாருமில்லை யென்பதை அறிந்ததும் சிறிது ஆசுவாசப் பெருமூச்சு விட்டான் காஷ்டானன். அதைக் கவனித்த நாகபாணன் இகழ்ச்சி நகை உதடுகளில் விரிய, ''இங்கு யாரும் இல்லை நம் இருவரைத் தவிர'' என்று குரலிலும் இகழ்ச்சியைக் காட்டினான்.

''ஆம். யாருமில்லை'' என்று ஏதோ சொல்ல வேண்டு மென்பதற்காகப் பேசினான் காஷ்டானன்.

''வேறு யாரையாவது எதிர்பார்த்தாயா?'' மகாக்ஷத்ரபன் குரல் சாட்டையாலடிப்பது போல் ஒலித்தது.

''மகாக்ஷத்ரபருடன் மெய்க்காவலர்...'' என்று உளறினான் காஷ்டானன்.

''என் மெய்க்கு இப்பொழுது என்ன அபாயம் வந்து விட்டது? தவிர...''

''எசமான்?''

zeevaa

''உன்னைப் போன்ற புழுவிடமிருந்து என்னைக் காத்துக் கொள்ள மெய்க் காவலர் வேண்டுமா?''

''வேண்டாம். வேண்டாம்.''

''உன்னை இப்பொழுதே என் காலில் போட்டு நசுக்கி விட முடியாதா?''

''முடியும். முடியும்.''

இந்த பதிலைக் கேட்டதும் சற்றே சினத்தின் வசப்பட்ட நாகபாணன் வெறுப்பு நிரம்பிய குரலில், ''நான் சொல்வதை எல்லாவற்றையும் அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டிய அவசியமில்லை'' என்றான்.

''இல்லை, இல்லை'' என்று அதற்கும் ஒப்புக் கொண்ட காஷ்டானன், ''எசமான், தங்களை எதிர்த்தோ, ஆட்சேபித்தோ பேசுவது முறையாகாது'' என்று சொன்னான் பணிவு நிரம்பிய குரலில்.

''எதிரியுடன் சேருவது முறையாகுமா?'' என்று கேட்டான் மகாக்ஷத்ரபன்.

''ஒருகாலும் முறையாகாது'' என்ற காஷ்டானன் அதிக பணிவைக் காட்டினான்.

அடுத்து நாகபாணன் தொடுத்த கேள்வியைக் கேட்டதும், பாதிப் பிராணனே போய்விட்டது காஷ்டானனுக்கு. ''அப்படியானால் எதிரிக்காக ஏன் தூது வந்தாய்?'' என்று நாகபாணன் இடியெனச் சொற்களை உதிர்த்தான்.

அதைக் கேட்டுக் கால்கள் ஒன்றுக்கொன்று சிநேகம் செய்துகொண்டு படபடவென பரஸ்பரம் இடித்துக் கொள்ளவே, முட்டிகளைப் பிடித்து அவற்றைச் சமாதானம் செய்த காஷ்டானன், ''பிரபு! நான் தூதனாக வந்தது உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டான்.

zeevaa

நாகபாணன் மெதுவாகச் சிரித்தான். ‘‘வேறு எந்த தைரியத்தில் நீ இங்கு தனித்து வர முடியும்?’’ என்று பதில் கேள்வி தொடுத்தான். அந்தக் கேள்வியுடன் ஒரு பெரு மூச்சும் விட்டான் நாகம் சீறுவதுபோல.

அந்த மூச்சைக் கேட்டதுமே தனக்கு இனி விடிமோட்சம் கிடையாதெனத் தீர்மானித்த காஷ்டானன், ‘‘பிரபு! கௌதமிபுத்ரன் நான் தூது செல்லாவிட்டால் என்னைக் கொன்றுவிடுவதாக அச்சுறுத்தினான். அதனால் வந்தேன். இல்லாவிட்டால்...’’ என்று சொற்களை முடிக்காமல் விட்டான்.

‘‘இல்லாவிட்டால்? என்ன செய்து விடுவாய்?’’ என்று நாகபாணன் கேட்டு, ‘‘சரி, சதகர்ணி என்ன சொன்னான்?’’ என்று வினாவொன்றை சர்வ சகஜமாகத் தொடுத்தான்.

தலைக்கு மேல் ஓடிய வெள்ளம் சாண் போனால் என்ன முழம் போனால் என்ன என்ற முடிவுக்கு வந்ததால் சற்று தைரியத்தை வரவழைத்துக் கொண்ட காஷ்டானன், ‘‘மகாப் பிரபு! கௌதமிபுத்ரன் தங்களை இந்த மரக்கலத்தில் நாளை இரவு சந்திப்பதாகச் சொல்லச் சொன்னார்’’ என்று செய்தியைச் சொன்னார் கம்பீரமான குரலில்.

திடீரென்று காஷ்டானன் குரலில் காணப்பட்ட கம்பீரத்தைக் கண்ட மகாக்ஷத்ரபன், ‘கௌதமிபுத்ரன் பெயரே ஒரு மனிதனுக்கு எத்தனை துணிவை அளிக்கிறது? போர் நிகழும்போது அவன் கொடுக்கும் உற்சாகம் படைகளை எப்படித் தூண்டும்?’ என்று தனக்குள்ளேயே வியந்தான். அத்தகைய எதிரியைச் சமாளிப்பதில் தான் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டிய அவசியத்தையும் உணர்ந்தான். ஆகவே எதிரியின் பலாபலத்தை அறிய காஷ்டானனை நோக்கி, ‘‘காஷ்டானனா! கௌதமி

zeevaa

புத்ரனிடம் இப்பொழுது எத்தனை படைகள் இருக்கின்றன?'' என்று வினவினான்.

''படையா?'' என்று வியப்புடன் கேட்ட காஷ்டானன், ''பிரபு! கௌதமிபுத்ரனிடம் படை ஏது? இந்த மலைவாசிகள் கூட்டந்தானிருக்கிறது. போரில் நல்ல பயிற்சியுள்ள மகாவீரர்கள் அடங்கிய படைக்கு முன்பு இந்த வெட்டிக் கூட்டம் என்ன செய்ய முடியும்?'' என்றும் வினவினான்.

நாகபாணன் முகத்தில் சிந்தனை படர்ந்தது. ''அப்படியானால் சதகர்ணியின் படை வந்தது உனக்குத் தெரியாதா?'' என்று சந்தேகத்துடன் கேட்கவும் செய்தான்.

காஷ்டானன் முகத்தில் பெரும் பிரமை தட்டியது. ''மகாப் பிரபு! படையாவது வருவதாவது? எங்கிருந்து வரும்? நமது கண்பார்வையில் படாமல் எப்படி வரமுடியும் சதகர்ணிக்கு உதவிப் படை?'' என்று கேட்டான்.

நாகபாணன் தனது ஆசனத்திலிருந்து எழுந்து தீர்க்க சிந்தனையுடன் அறையில் குறுக்கும் நெடுக்கும் உலாவினான். திடீரென்று ஏதோ யோசித்துவிட்டுச் சட்டென்று நடையை நிறுத்தி, காஷ்டானன் அருகில் வந்து அவன் தோள்மீது கையை வைத்து, ''காஷ்டானனா! இப்பொழுது யார் தாபிலேசுவரர் கோயிலில் பூஜை செய்வது?'' என்று கேட்டான்.

''சாதவாகனர்தான்'' என்றான் காஷ்டானன்.

''பழைய பூஜாரி என்ன ஆனான்?'' என்று சாதாரணமாகக் கேட்டான் நாகபாணன்.

''தெரியவில்லை.''

''பரம்பரையாகக் கோவில் பூஜை செய்தவன் திடீரென்று மறைந்துவிட்டான்?''

zeevaa

"ஆம்."

"அதைப்பற்றி விசாரித்தானா கௌதமிபுத்ரன்?"

"இல்லை."

"இது விசித்திரமாகத் தோன்றவில்லையா உனக்கு?"

"இதில் விசித்திரமென்ன இருக்கிறது?" என்று பதில் சொன்ன காஷ்டானனன் குரலில் குழப்பம் தெரிந்தது. அந்தக் குழப்பம் திடீரென விலகியதால், "அப்படியானால் பூஜாரி?" என்று இழுத்தான்.

"பிரதிஷ்டானாவுக்குத்தான் அனுப்பப்பட்டான்." நாகபாணன் குரல் உறுதியுடன் ஒலித்தது.

"ஆகையால் சதகர்ணிக்கு உதவி கிடைத்துவிட்டதா?"

"தெரியவில்லை" என்ற மகாக்ஷத்ரபன், "பூஜாரி பிரதிஷ்டானாவை அடையவில்லை. அவன் இந்த எல்லையைவிட்டு நீங்கு முன்பு அவனைச் சிறை செய்து விட்டோம்" என்று கூறினான்.

"அப்படியானால் உதவிப் படை வர நியாயமில்லை."

"சொல்ல முடியாது. ஹோமப் புகையை வளர்த்திருக்கிறான் சதகர்ணி."

"அதனாலென்ன?"

"புகை படைகளை அழைக்கும் அடையாளம். சாதாரணமாக இதைக் கடற்கொள்ளைக்காரர்கள்தான் செய்வது வழக்கம்."

"அதை மற்றவர் செய்யக் கூடாதென்பதற்குத் தடை உண்டா?"

"தடை கிடையாது. தர்மவிரோதமாகக் கருதப்படுகிறது" என்ற நாகபாணன், "காஷ்டானனா! நீ ஒரு உதவி செய்ய வேண்டும்" என்று சொன்னான்.

zeevaa

‘‘உத்தரவிடுங்கள்’’ என்றான் காஷ்டானன்.

‘‘இங்கிருந்து திரும்பிப் போனதும் சதகர்ணியிடம் பூஜாரி எங்கேயென்று நான் கேட்டதாகச் சொல். அவன் உடனடியாக என்னைப் பார்க்க விரும்புவான். நாளை இரவில் பார்க்கும்போது பூஜாரியை இந்த மரக்கலத்திற்குக் கொண்டு வந்து விடுவதாகச் சொல். அவன் வரும்போது தனியாக வரச்சொல். ஏதாவது தந்திரத்தைக் கையாண்டாலோ அதிக வீரர்களுடன் வந்தாலோ, அவன் கண் முன்பாகவே பூஜாரியை இந்த மரக்கல நடுப் பாய்மரத்தில் தொங்க விடுவேனென்று சொல்’’ என்ற நாகபாணன் சொற்களைக் கேட்ட காஷ்டானன் வெலவெலத்துப் போனான். இதைச் சொன்னால் சதகர்ணி தனது தோலை உரித்துவிட்டால் என்ன செய்வதென்று கலங்கினான். ஆனால் வேறு வழியின்றி மகாக்ஷத்ரபன் சொற்படி செய்வதாக உறுதி கூறினான்.

அடுத்த சில நிமிடங்களுக்கெல்லாம் பழையபடி படகில் இறக்கப்பட்ட காஷ்டானன் தனது பதில் தூதைத் தெரிவிக்கத் துரிதமாகத் துடுப்புகளைத் துழாவி, படகை வேகமாகச் செலுத்தினான். அவன் திரும்பியபோது வெள்ளி முளைத்து விட்டதால் பொழுது விடியும் நேரம் நெருங்கிவிட்டதை உணர்ந்த காஷ்டானன் வெகு வேகமாகக் கோவிலை அடைய மலைமீது ஏறிச் சென்றான். அவன் கோவிலை அடைந்த சமயத்தில் கோவிலுக்குள் பூஜை நடந்து கொண்டிருந்தது. மணியும் பலமாக அடிக்கப்பட்டது. வாயிலில் அவனை வரவேற்க கௌதமிபுத்ரன் சித்தமாக நின்றிருந்தான். உள்ளே எட்டிப் பார்த்தான் காஷ்டானன். அவன் திகைப்பு சொல்லத்தரமல்லாததாயிருந்தது. உள்ளே தாபிலேசுவரர் முன்பு நின்று பூஜாரி பூஜை செய்து கொண்டிருந்தான்.

zeevaa

அத்தியாயம் 25

காஷ்டானனுக்குப் புதிய பதவி!

நாகபாணன் தன்னிடம் சிறையிருப்பதாகச் சொன்ன பூஜாரி கோவிலில் பூஜை செய்து கொண்டிருப்பதையும், அர்ச்சனை மந்திரங்களை மிக தாஷ்டீகமான குரலில் உச்சரிப்பதையும் கண்ட காஷ்டானன், தனக்கு அந்தச் சமயத்தில் ஏற்பட்டது அதிர்ச்சியா வியப்பா என்று நிர்ணயிக்க முடியாத நிலையை அடைந்ததால் அவன் குழப்பம் மிக அதிகமாயிற்று. பூஜாரி தன் கண்முன்னே இருந்ததால் நாகபாணன் செய்தி எத்தனை அனர்த்தமாகி விட்டதென்பதை உணர்ந்தான் காஷ்டானன். கௌதமி புத்ரன் மறுநாள் இரவில் மரக்கலத்துக்குச் செல்லும்போது வேறு யாரையாவது துணை கொண்டு வந்தால் பூஜாரி தூக்கிலிடப்படுவாரெனக் கூறுமாறு நாகபாணன் சொன்னதை எப்படிச் சொல்வது, எதற்காகச் சொல்வது, என்று திண்டாடினான் காஷ்டானன். அவன் திண்டாட்டத்தை கவனித்துப் புன்முறுவல் கொண்ட கௌதமிபுத்ரன் ''காஷ்டானனா! முதலில் பூஜாரியிடம் பிரசாதம் வாங்கிக் கொள். பிறகு நாகபாணன் தூது விஷயத்தைச் சொல்லலாம்'' என்று ஆறுதலாகப் பேசினான்.

அந்த ஆறுதலே தன் இதயத்தைக் குத்துவது போலிருந்ததால், ''சாதவாகனரே! பூஜாரி...'' என்று இழுத்தான்.

zeevaa

zeevaa

''அவருக்கென்ன?'' ஏதுமறியாதது போல் கேட்டான் சாதவாகனன்.

காஷ்டானன் தனது முகத்தில் மேலும் குழப்பத்தைக் காட்டினான். ''இங்கு எப்படி வந்தார்?'' என்று வினா ஒன்றை விடுத்தான் காஷ்டானன் குரலிலும் குழப்பம் தெரிய.

''இதுதானே தாபிலேசுவரர் கோவில்?'' என்றான் சாதவாகனன்.

''ஆம்.''

''இங்குதானே அவர் பூஜை செய்யும் வழக்கம்?''

''ஆம்.''

''அவர் இங்கு வருவதிலோ பூஜை செய்வதிலோ என்ன விசித்திரமிருக்கிறது?''

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்பதை அறியாததால் காஷ்டானன் கேட்டான், ''நீங்கள் பூஜை செய்தீர்கள் நடுவில் சில நாட்கள்?'' என்று.

''செய்தேன். பூஜாரி உடல் நலமில்லாததால்'' என்று சர்வ சகஜமாகப் பேசினான் சாதவாகனன்.

காஷ்டானன் விடவில்லை. ''உடல் நலமில்லா திருந்தாரா?'' என்று கேட்டான்.

''ஆம். ஏன், சந்தேகமா அதில்?''

''இல்லை.''

''உம்?''

''ஊருக்குப் போயிருந்ததாகச் சொன்னார்கள்.''

''சொன்னது யார்?''

zeevaa

“திட்டமாக யாருமில்லை. பராபரியாகக் காதில் விழுந்தது.”

இதைக் கேட்டு இளநகையை இதழ்களில் விரித்துக் கொண்ட சதகர்ணி, “பராபரியாக வேறென்ன காதில் விழுந்தது?” என்று கேட்டான் நகைப்பொலி தொனித்த குரலில்.

“எதிரியிடம் சிறைப்பட்டுவிட்டதாகக் கேள்விப் பட்டேன்” என்று திணறினான் காஷ்டானன்.

“ஆகவே இவரைத் தூக்கில் போடுவதாக நாகபாணன் சொன்னதை என்னிடம் சொல்ல அஞ்சுகிறீர்?” என்று கேட்ட சதகர்ணி நகைத்து, “வேறென்ன சொன்னார் மகாக்ஷத்ரபர்?” என்றும் வினவினான்.

“தங்களை மரக்கலத்தில் சந்திக்கச் சித்தமாயிருப்ப தாகவும், தாங்கள் தனித்து வராமல் துணைக்கு யாரை யாவது அழைத்து வந்தால்...” மேலே சொல்லவில்லை காஷ்டானன். பூஜாரி தன் கண்முன்னே இருந்ததாலும் அவரைத் தூக்குப் போடுவதாக நாகபாணன் செய்த மிரட்டலுக்கு அர்த்த மில்லையென்பதாலும் பேச்சைப் பாதியிலேயே நிறுத்தி விட்டான்.

அதற்குமேல் சதகர்ணி அவனிடம் பேச்சுக் கொடுக்காமல் கோவிலுக்குள்ளே வரும்படி சைகை செய்து முன்னால் சென்றான். பூஜாரி கற்பூரத் தட்டை எடுத்து ஆரத்தி காட்டியதும் அவர் கொண்டு வந்த கற்பூர ஜ்வாலையைக் கைகளால் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டான் கௌதமபுத்ரன். பூஜாரி கொடுத்த விபூதியையும் நெற்றியில் அணிந்து கொண்டான்.

காஷ்டானனுக்கும் தட்டைக் காட்டச் சொல்லி, கற்பூர ஜ்வாலையில் கட்டை விரலைக் காட்டி அதில் பிடித்த திருஷ்டிக் கரியை காஷ்டானன் நெற்றியில் தீட்டினான்.

zeevaa

''இது என் மதமல்ல... என்று காஷ்டானன் கூவியதைப் பொருட்படுத்தாது அவன் நெற்றியிலும் விபூதி தீட்டி, ''இன்று முதல் நீ சைவ மதம்'' என்று கூறினான்.

''எதற்காக நான் மதம் மாற வேண்டும்?'' என்று கேட்டான் காஷ்டானன்.

''என்னைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் என் மதத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்'' என்றான் சதகர்ணி.

''ஏன்?''

''மதம்தான் மனிதர்களைப் பிணைக்கும் பெரிய சக்தி.''

''என் மதத்திலேயே நான் இருந்தால் என்ன?''

''இனி நீ நாகபாணனிடம் போக முடியாது. போனால் பூஜாரி தப்பிய விஷயத்தைச் சொல்லும்படியிருக்கும். சொன்னால் உன்னை வெட்டிவிடுவான்'' என்ற சதகர்ணி. ''நீ என் பக்கத்திலிருப்பதே உனக்குப் பாதுகாப்பு'' என்று கூறி, ''நாளை இரவு நான் நாகபாணனைச் சந்தித்தவுடன் பெரிய நிகழ்ச்சிகள் விளையும்'' என்றும் எச்சரிக்கை தொனித்த குரலில் சொன்னான். பிறகு காஷ்டானனைக் கூட்டிக் கொண்டு சண்டிகாதேவி குகைக்குச் சென்றான்.

காலை நேரம் கடந்து கதிரவன் மேலே எழுந்து விட்டதால் காடு எங்கும் சூரியரச்மிகளால் புது மெருகு கொண்டது. திறந்திருந்த குகைக்குள்ளும் இரண்டு கிரணங்கள் பட்டையாகப் பாய்ந்து படிகளைத் தழுவிச் சென்றதால் கதிரவன் சண்டிகாதேவியின் திருவடிகளைத் தொட முயன்ற பிரமையை சிருஷ்டித்தான். குகைக்கு மேலிருந்த செடிகள் சில மலர்களைப் படிகளில் உதிர்த்திருந்ததால் கதிரவன் மலர்ப் பூஜையாகச் செய்ய முன் வந்ததுபோல் தோன்றியது. இந்தச் சூழ்நிலையில் குகையின் உள்ளிருந்து சித்தரஞ் சனியின் குரல் அமுதமயமாக ஒலித்தது. அந்த தேவி

zeevaa

கானத்தைக் கேட்டு மெய்மறந்து பல நிமிடங்கள் நின்று விட்ட சாதவாகனன், ''வா போவோம்'' என்று காஷ்டான னுக்கு உத்தரவிட்டு, படிகளில் இறங்கிச் சென்றான். காஷ்டானன் பின்தொடர்ந்தான்.

சண்டிகாதேவி முன்பு உட்கார்ந்து சங்கீத உபாசனையில் ஈடுபட்டிருந்த சித்தரஞ்சனி, தேவியை வணங்கிவிட்டு, தன்னைத் தாண்டி விழுந்த சதகர்ணியின் நிழலைக் கண்டதும் திரும்பினாள். காலையில் நீராடியதால் உலராத தலையில் ஜடை இடாமல் அடிமுடிச்சுப் போட்டு, மலர்களைக் கூந்தலின் பரப்பில் சொருகியிருந்த சித்தரஞ்சனியே ஒரு தேவதையாகக் காணப்பட்டாள். அவள் நெற்றியில் துலங்கிய குங்குமப் பொட்டும் விபூதிக் கீற்றும் கழுத்தில் தீட்டியிருந்த பூஜைப் பிரசாதமான சந்தனமும் அவளைத் தேவகன்னி கையாக அடித்திருந்தது.

தெய்வீகம் கலந்த அந்த அழகைப் பார்த்த கௌதமி புத்ரன் பேசும் சக்தியை இழந்து பல விநாடிகள் நின்று விட்டான். காஷ்டானன் உள்ளத்தில் அச்சம் கலந்த பிரமிப்பு உண்டாயிற்று. தான் மணக்க இருந்த சித்தரஞ்சனி தன்னை அடியோடு ஏறிட்டுப் பார்க்காததையும், சதகர்ணியைப் பார்த்ததும் வெட்கம் கலந்த பார்வையை வெளியிட்டதையும், கவனித்துக் கைக்குக் கிட்டாத அந்தக் கனியைப்பற்றி நினைப்பதும் உயிருக்கு அபாயம் என்ற எண்ணத்தால் தனது பார்வையைச் சண்டிகாதேவிமீது நிலைக்கவிட்டான். அதைக் கண்ட சதகர்ணி, ''சித்தரஞ்சனி! காஷ்டானன் நமது மதத்தில் சேர்ந்துவிட்டார். நமது படையில் ஒரு முக்கிய பதவி வகிப்பார்'' என்று சித்தரஞ்சனிக்குக் காஷ்டானன் மத மாற்றத்தை எடுத்துரைத்தான்.

''கட்சி மாறுகிறாரா?'' என்று கேட்டாள் சித்தரஞ்சனி.

zeevaa

''கட்சி மாறாவிட்டால் பதவி எப்படி கிடைக்கும்?'' என்று கேட்ட சதகர்ணி, ''நமது படைகளுக்கு இவர் தலைவர்'' என்று சொன்னான்.

காஷ்டானன் பிரமை உச்சக் கட்டத்தை அடைந்தது. ''நான் உங்கள் படைத் தலைவனா?'' என்று வியப்புடன் கேட்டான்.

''ஆம்.''

''வஜ்ரபாகு இருந்தாரே?''

''அவர் வேறு அலுவலாகத் தலைநகரம் சென்று விட்டார். அவருக்குப் பதில் உன்னை நியமித்திருக்கிறேன். உனக்கு இதில் ஒரு அதிர்ஷ்டமிருக்கிறது'' என்றான் சதகர்ணி.

''என்ன அதிர்ஷ்டம்?'' என்று சந்தேகத்துடன் கேட்டான் காஷ்டானன்.

''சித்தரஞ்சனியின் உத்தரவுப்படி நீ நடந்துகொள்ள வேண்டும். அவள் உத்தரவை எனது உத்தரவுபோல் பாவித்து நட. உனக்கு எந்த ஆபத்தும் வராது'' என்றான் சதகர்ணி.

''ஆமாம், இங்கு படைகள் ஏது? மலைவாசிகள் கூட்டம் படையாகுமா?'' என்று கேட்டான் காஷ்டானன்.

''படையின் திறன் படைத்தலைவன் அளிக்கும் பயிற்சியைப் பொறுத்தது'' என்ற சதகர்ணி காஷ்டானனை நோக்கி, ''படைத்தலைவரே! நாளை இரவு நான் நாகபாணன் மரக்கலத்திற்குப் போகும்போது மூன்று மரக்கலங்கள் வடக்கிலிருந்து வரும். அவற்றுக்கு நாகபாணன் மரக்கலத் திலிருந்து தீபத்தால் அடையாளம் காட்டுவார்கள். அந்த அடையாளத்தைக் கவனித்து நான் திரும்பியதும் என்னிடம் சொல்லும்'' என்று கூறிவிட்டு, ''சித்தரஞ்சனி! இவருக்கு நமது படைகளைக் காட்டு'' என்று உத்தரவிட்டு எட்ட இருந்த தனது புரவியில் ஏறிக் கொண்டு கடற்கரையை நோக்கிச் சென்றான்.

zeevaa

தன்னைத் தொடரும்படி காஷ்டானனுக்குச் சலுகை செய்த சித்தரஞ்சனி மலையின் சரிவிலிருந்த ஒரு பாதை மூலம் மலையின் மறுபக்கத்தை நோக்கிச் சென்றாள். ஒரு ஜாமம் முழுவதும் பயணம் செய்த பிறகு மலையின் மறுபக்கச் சரிவில் நின்று தனது இனிய குரலில் இசைக்கத் தொடங்கினாள். அவள் குயில் சாரீரம் மேலே படிப்படியாக எழுந்து மேல் ஸ்தாயியை எட்டும் சமயத்தில் தடதட வென்று இரு புரவிகள் வரும் ஓசை கேட்டது. இரு வீரர்கள் மலையின் மறுபக்கச் சரிவின் அடர்ந்த காட்டிலிருந்து வேகமாக வந்து சித்தரஞ்சனிக்குத் தலை வணங்கினார்கள் "இவர் உங்கள் படைத்தலைவர். அழைத்துச் செல்லுங்கள்" என்று சித்தரஞ்சனி உத்தரவிட்டாள். புரவியிலிருந்து இறங்கிய இரு வீரரும் காஷ்டானனுக்கு இருபுறத்திலும் வந்து அவன் கைகளைப் பிடித்து அழைத்துச் சென்றார்கள். அவர்கள் பிடியில் அச்சத்துடன் சென்ற காஷ்டானன் திரும்பத் திரும்பத் தன்னைப் பார்த்த வண்ணம் பரிதாபமாகச் செல்வதைக் கண்ட சித்தரஞ்சனி புன்முறுவல் கொண்டாள். 'கௌதமிபுத்ரர் ராஜதந்திரம் இணையற்றது. அவரை யாரால் புரிந்துகொள்ள முடிகிறது?' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள். சதகர்ணியைப் போன்ற மகாவீரன் தனது மையலில் சிக்கியதைப் பற்றிப் பெருமையும் கொண்டாள். 'அடி சித்தரஞ்சனி! என்ன இருந்தாலும் நீ அதிர்ஷ்டசாலி!' என்று உள்ளூரத் தன்னைச் சிலாகித்தும் கொண்டாள்.

அத்தியாயம் 26

மரக்கல அறை நாடகம்

சித்தரஞ்சனியின் இசையால் ஈர்க்கப்பட்ட இரு வீரர்கள் இரு பக்கமும் வர அவர்களுடன் சென்ற காஷ்டானன், தான் உண்மையில் படைத்தலைவனா அல்லது சிறைப் பறவையா என்பதை உணராமலே பயணம் செய்தான். இரு வீரர்களும் மலையின் மறுபக்கச் சரிவில் சிறிது தூரம் சென்றதும் அடர்த்தியான ஒரு காட்டுக்குள்ளே நுழைந்து அக்காட்டின் மத்தியிலிருந்த ஒரு பெரிய சதுக்கத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அந்தச் சதுக்கத்தில் புரவிப் படைகளும், காலாட் படைகளும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுச் சதுக்கத்தை ஒட்டியிருந்த மரக்கூட்டங்களின் அடியில் தங்க வைக்கப்பட்டிருந் ததையும், அவ்வப்பொழுது புரவி வீரர்கள் வேகமாக வந்து வந்து தூரத்திலிருந்து மரக்குறிகள்மீது வேல்களை எறிந்து எறிந்து திரும்பிச் சென்றதையும், மரத்தண்டுமீது தாக்கி விழுந்து விட்ட ஈட்டிகள் அவ்வப்பொழுது அங்கிருந்த காலாட் படையினரால் அப்புறப்படுத்தப்பட்டதையும், இடையிடையே காலாட் படையினர் சதுக்கத்தில் நுழைந்து வாட்போர் புரிந்ததையும் கண்ட காஷ்டானன், அங்கு தங்கியிருந்தது மலைவாசிகள் கூட்டமல்லவென்பதையும் நன்றாகப் பயிற்சி பெற்ற படையே என்பதையும் புரிந்து கொண்டான். எங்கோ மறைவில் சாதவாகனன் படைகள் இருக்கின்றனவென்று நாகபாணன் சந்தேகித்தது எத்தனை

zeevaa

zeevaa

சரியென்பதையும் எண்ணிப் பார்த்து இரண்டு தரப்புகளும் எந்த நேரத்திலும் கை கலக்கலாம் என்று தீர்மானித்துக் கொண்ட காஷ்டானன், ''இந்தப் படைக்கு என்னை எதற்காகத் தலைவனாக நியமித்தார் கௌதமிபுத்ரர்?'' என்றும் வினவிக் கொண்டான்.

''இப்படி அவன் சிந்தனை வசப்பட்டு நிலைத்துச் சதுக்கத்தின் முகப்பில் நின்றுவிட்டதை கவனித்த வீரர்கள் இருவரில் ஒருவன் காஷ்டானனை நோக்கி, ''படைத் தலைவரே! தங்கள் படைகளைப் பார்க்க ஆசைப் படுவீர்கள் என்று நினைக்கிறேன்'' என்றான்.

''தாங்கள் அனுமதித்தால் படைகளின் அமைப்பையும் இப்பொழுதே பார்வையிடலாம்'' என்று பணிவுடன் கூறினான் இன்னொரு வீரன்.

''இந்தப் படையில் எத்தனை புரவிப்படை? எத்தனை காலாட்படை? யானைப்படை ஏதாவது உண்டா?'' என்று வினவினான் காஷ்டானன்.

''புரவிப் படை மூவாயிரம். காலாட்படை இரண்டா யிரம். யானைப்படை ஏதுமில்லை'' என்று விளக்கினான் முதலில் பேசிய வீரன்.

காஷ்டானன் மேலும் விவரம் கேட்கத் துவங்கி, ''காலாட் படையில் வில்லவர் எத்தனை பேர்? சாதாரணமாக வாளும் வேலும் தாங்கிப் போரிடுவோர் எத்தனை பேர்?'' என்று வினவினான்.

''வில்லவர் ஐநூறு பேர்தான் இருக்கிறார்கள். மற்றவர் வாளும் வேலும் தாங்கிப் போரிடுபவர்கள். ஆனாலும் புயல் வேகத்தில் முன்னேறித் தாக்கக் கூடியவர்கள்'' என்று இரண்டாவது வீரன் கூறினான்.

zeevaa

"மலைவாசிகள் என்ன ஆனார்கள்?" என்று காஷ்டானன் கேட்டான்.

"அவர்களில் சிலரை இந்தப் படையில் சேர்த்துப் பயிற்சி அளித்திருக்கிறோம். மீதி மக்களைச் சேர்க்கவில்லை. அவர்களை இந்த ரத்தக் களரியில் ஈடுபடுத்த மன்னருக்கு இஷ்டமில்லை" என்றான் முதல் வீரன்.

இப்படி விவரங்களைக் கேட்டுக்கொண்டே காஷ்டானன் அந்த இரு வீரர்களையும் முன்னால் செல்லவிட்டுத் தான் பின்னால் நடந்து படைகளைப் பார்வையிட்டான். ஆங்காங்கு சப்தித்த சின்னஞ்சிறு முரசுகள் மூலம் அவன் வரவு அறிவிக்கப்படவே படை வீரர்கள் அவனைத் தலை வணங்கி வரவேற்றனர். ஒவ்வொரு பிரிவினரிடமும் காஷ்டானன்தான் இனி தலைவன் என்பதை இரு வீரர்களும் அறிமுகப்படுத்தி வைத்தார்கள். அந்த அறிமுகத்தை மறு வார்த்தை பேசாமல் படைப் பிரிவுகள் ஏற்றுக்கொண்டதைப் பார்த்து வியப்பில் ஆழ்ந்த காஷ்டானன், சாதவாகன வாலிபனுக்குத் தனது வீரர்கள் மீதிருக்கும் பிடிப்பைக் கண்டு பிரமித்தான்.

படைகளைக் கிட்டத்தட்ட ஒரு ஜாமம் பார்வையிட்டதும் காஷ்டானனை அவனது இருப்பிடத்திற்கு வீரர்கள் இருவரும் அழைத்துச் சென்று ஒரு குடிசையைக் காட்டி, "இதுதான் படைத்தலைவர் தங்கும் பாசறை" என்று கூறினார்கள். குடிசை ஓரளவு பெரிதாகவே இருந்ததையும், பெரிய புரவியொன்று பக்கத்திலிருந்த மரத்தில் கட்டியிருந்ததையும் காஷ்டானன் கவனித்தான். குடிசைக்குள் ஆயுதங்கள் பல இருந்ததையும், வாள், பரசு, பிண்டிபலம் முதலிய ஆயுத வகைகள் குடிசைக்கு உள்ளே வரிசையாகச் சாத்தப்பட்டிருந் ததையும், ஒரு மூலையில் சிறு கயிற்றுக் கட்டில் இருந்ததையும் பார்த்த காஷ்டானன், 'மாளிகையில் கூட இத்தனை

zeevaa

சௌகரியங்கள் இருக்க முடியாது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

பிறகு குடிசையில் நுழைந்து தனது வாளைக் கச்சையி லிருந்து அவிழ்த்துக் கட்டிலில் வைத்துத் தானும் அமர்ந்தான். உடனடியாக எங்கிருந்தோ இரு பெண்மணிகள் வந்து அவனுக்கு உணவு பரிமாறினார்கள். அதற்குப் பிறகு, அவனிடம் உத்தரவு கேட்ட வீரர்களிடம், ''நீங்கள் சென்று வாருங்கள். நமது தலைவி உத்தரவு ஏதாவது இடும் பட்சத்தில் எனக்கு வந்து சொல்லுங்கள்'' என்று விடைகொடுத்து அனுப்பினான். பிறகு கட்டிலில் காலை நன்றாக நீட்டிப் படுத்துச் சிந்தனையில் இறங்கினான். அவன் எண்ண மெல்லாம் சித்தரஞ்சனியை நாடியே ஓடியது. தனக்கு மனைவியாக நிச்சயிக்கப்பட்ட சித்தரஞ்சனி இன்னொருத் தனுக்கு மனைவியாகி அவள் கணவனே தனக்கு வேலை தரும்படியான துர்பாக்கியத்தை எண்ணிப் பெருமூச்சு விட்டான். தான் கைப்பிடித்துத் தனது உத்தரவுப்படி நடக்க வேண்டிய சித்தரஞ்சனியை இன்னொருவன் கைப்பிடித்து அவளைத் தனக்குத் தலைவியாக நியமித்ததை நினைத்துப் பார்த்து, 'இதைவிட வெட்கக் கேடு ஏதுமில்லை' என எண்ணித் துக்கம் கலந்த மந்தகாசமும் செய்தான். எப்படியும் தான் மாலையில் கிளம்பிச் சாதவாகனன் சொன்னபடி புதிதாக வரும் மூன்று கப்பல்களைக் கவனிக்கக் கோவில் பக்கம் போகவேண்டிய அவசியத்தையும் நினைத்தான்.

இத்தகைய எண்ணங்களால் காலம் வெகு துரிதமாக ஓடவே மாலையும் நெருங்கி வந்தது. காஷ்டானனும் தனக்கென நிறுத்தப்பட்டிருந்த புரவிக்குச் சேணமிடச் சொல்லி, தன்னை அழைத்து வந்த வீரர்களில் ஒருவனை உடன் வரக் கட்டளையிட்டுப் பழையபடி மலையின் கடற்புற முகப்புக்கும் பயணமானான். அவனும் அந்த இன்னொரு வீரனும் தாபிலேசுவரர் கோவிலுக்கு வந்தபோது

zeevaa

கோவிலில் பூஜை நடந்து கொண்டிருந்தது. சந்நிதிக்கெதிரே சித்தரஞ்சனி மண்டியிட்டு முகம் நிலத்தில் தொட ஈசுவரனை வணங்கிக் கொண்டிருந்தாள். "ஆபத்தை நோக்கிச் சென்றிருக்கிறார். அவர் நலமாக வந்து சேர உன் அனுக்கிரக மிருக்கட்டும்" என்று வாய் விட்டுப் பிரார்த்தித்தாள்.

காஷ்டானனும் ஈசுவரனுக்குத் தலை வணங்கி, "உங்கள் பிரார்த்தனை நிறைவேறும், கவலை வேண்டாம்" என்று ஆறுதல் சொன்னான்.

சித்தரஞ்சனி சரேலெனத் திரும்பினாள் சினத்துடன், காஷ்டானனைப் பார்த்ததும், "நீயா?" என்று அலட்சியம் ஒலித்த குரலில் கேட்டாள்.

"ஆம் சித்தரஞ்சனி" என்றான் காஷ்டானன்.

"இங்கிருப்பவர்கள் என்னைத் தலைவி என்று அழைக்கிறார்கள்" என்று உஷ்ணத்துடன் சுட்டிக் காட்டினாள் சித்தரஞ்சனி.

"தலைவியாரே!" என்று மிகுந்த மரியாதையுடன் அழைத்தான் காஷ்டானன்.

சித்தரஞ்சனியின் முகத்திலிருந்த சீற்றம் மறைந்து அதன் இடத்தை மந்தகாசம் ஆக்ரமித்துக் கொண்டது. "மகிழ்ச்சி படைத் தலைவரே!" என்ற சித்தரஞ்சனி, "இங்கு எதற்காக வந்தீர்?" என்று வினவினாள்.

"நாகபாணனுக்கு மூன்று புது மரக்கலங்கள் இன்று வரக்கூடுமென்று தலைவர் சொன்னார். அவற்றைக் கண் காணிக்கும்படி உத்தரவிட்டிருக்கிறார்" என்று அறிவித்தான் காஷ்டானன்.

"நல்லது. அப்படியே செய்யுங்கள். உதவி ஏதாவது தேவையாயிருந்தால் இதை ஊதுங்கள் மெதுவாக" என்று கூறித் தனது மடியிலிருந்த சின்னஞ்சிறு வெண் சங்கை

zeevaa

எடுத்துக் கொடுத்தாள். அதற்குப் பிறகு அங்கு நிற்க வில்லை சித்தரஞ்சனி, கோவில் படிகளில் இறங்கிக் காட்டுக்குள் மறைந்து விட்டாள்.

அவள் பேச்சின் தோரணையையும் அவள் சென்ற மிடுக்கையும் கவனித்த காஷ்டானன், 'க்ஷத்ரபரே! உமது வளர்ப்புப் பெண்ணை இப்பொழுது பார்த்தால் என்ன சொல்வீர்கள்?' என்று உள்ளுக்குள் கேட்டுக் கொண்டான். 'பெண்ணை அடக்கத் தகப்பனுக்கு சக்தியில்லை. மாலை சூட வேண்டிவனும் அவளைக் கோட்டை விட்டான். மாப்பிள்ளையாக வேண்டிய நான் மதம் மாறி எதிரியின் கையாளாக ஆகிவிட்டேன். கௌதமிபுத்ரன் இங்கு தலை காட்டிய சில நாட்களுக்குள்ளாக எத்தனை திடீர் மாறுதல்கள்!' என்று எண்ணங்களை ஓட்டினான். பிறகு கோவிலிலிருந்து புரவியில் கிளம்பிக் கடற்கரைக்கு முன்பு பெரிதாக எழுந்திருந்த ஒரு பாறையின் மறைவில் புரவியை நிறுத்தி விட்டுக் கீழே இறங்கி மலைப் பாறையி லிருந்து கடலைக் கவனித்தான்.

நாகபாணன் மரக்கலம் தன்னந்தனியே நின்றிருந்தது கடலில், அதன் ஒற்றை விளக்கு வீசிய வெளிச்சத்தில் கோட்டையிலிருந்து அடிக்கடி படகுகள் வந்து போவதையும் அவற்றிலிருந்த வீரர்கள் சிலர் மரக்கலத்திலேயே தங்கி விட்டதையும் பார்த்தான். கிட்டத் தட்ட நடுநிசி நெருங்கிய சமயத்தில் மூன்று புது மரக்கலங்கள் வடக்கிலிருந்து வருவதையும் அவை மகாக்ஷத்ரபர் மரக்கலத்திலிருந்து சிறிது எட்டவே நங்கூரம் பாய்ச்சி நின்றுவிட்டதையும் கவனித் தான். அந்த சமயத்தில் நாகபாணன் மரக்கலத்திலிருந்து இரண்டு பந்தங்கள் எழுந்து குறுக்கும் நெடுக்குமாக மும்முறை ஆடின. அதைக் கண்டதும் மூன்று மரக்கலங் களிலிருந்தும் ஒவ்வொரு படகு இறக்கப்பட்டுக் கரையை நோக்கி வந்து அதிலிருந்த சிலர் கரைக்கு வந்து சேர்ந்தனர்.

zeevaa

அவர்களில் ஆஜானுபாகுவான ஒரு மனிதன் மலைக் காட்டுக்குள் புகுந்தான். அங்கிருந்த ஒரு பெரிய பாறையில் ஏறி நின்று கைகளை ஆட்டினான். அடுத்த சில விநாடிகளில் அவன் மறைந்தான் காஷ்டானன் கண்களிலிருந்து. பிறகு கரைக்கருகே தோன்றிப் படகொன்றை எடுத்துக் கொண்டு நாகபாணன் மரக்கலத்தை நோக்கிச் சென்றான்.

இதுவரையில்தான் காஷ்டானன் கண்டது. அவன் காணாதது பெரும் நாடகம். அந்த நாடகம் நாகபாணன் மரக்கலத்தில் அவன் அறையில் நடந்து கொண்டிருந்தது. மரக்கலத்தின் அறையிலிருந்த சாளரத்தின் மூலம் புதிதாக வந்த மரக்கலங்களையும், அவற்றிலிருந்து கரைக்குச் சென்றவர்களையும் பார்த்த நாகபாணன் அறைக்குள்ளே யாரோ வந்த அரவம் கேட்டு. "உன்னுடன் எத்தனை வீரர்கள் வந்திருக்கிறீர்கள்?" என்று வினவினான் தலையைத் திருப்பாமலே. கேள்விக்குப் பதிலேதும் வராமற் போகவே சினத்துடன் திரும்பியவன் முகத்தில் உணர்ச்சிகள் உறைந்து போயின. கௌதமிபுத்ரன் கதவை மூடி முதுகை அதில் சாய்ந்த வண்ணம் புன்முறுவல் தவழ நின்றிருந்தான்.

zeevaa

அத்தியாயம் - 27

கருடா சுகமா?

கௌதமிபுத்ரனைக் கண்டதும் நாகபாணன் முதலில் பெரும் பிரமிப்பை அடைந்தானானாலும் வெகு சீக்கிரம் தனது வியப்பை உதறிக் கொண்டு, ''எங்கள் வேஷம் உனக்கு நன்றாகப் பொருந்தியிருக்கிறது'' என்று கூறி விட்டுத் தனது ஆசனத்திலிருந்து எழுந்திருக்க முயன்றான்.

அவன் முயற்சியை முளையிலேயே கிள்ள முயன்ற கௌதமிபுத்ரன், ''மகாக்ஷத்ரபர் நிலையில் நான் இருந்தால் உட்கார்ந்த இடத்தைவிட்டு அசைய மாட்டேன்'' என்று எச்சரிக்கை ஒலித்த குரலில் பேசினான்.

நாகபாணன் முகத்தில் மெள்ளச் சீற்றம் உதயமாயிற்று. ''என் நிலைக்கு என்ன இப்பொழுது?'' என்று வினவவும் செய்தான் சினம் மிகுந்த குரலில்.

''இதைவிட ஆபத்தான நிலையில் யாரும் இருக்க முடியாது. நீ உட்கார்ந்திருக்கிறாய் நாகபாணா. நான் நின்றிருக்கிறேன். எனது இடையிலுள்ள குறுவாளை எந்த விநாடியிலும் உன் மீது வீசிவிட முடியும். ஆனால் கொலை செய்ய நான் வரவில்லை'' என்றான் கௌதமிபுத்ரன்.

''வேறு எதற்கு வந்தாய்?'' என்ற நாகபாணன் கேள்வியில் கோபம் இருந்தது.

zeevaa

zeevaa

‘‘உன்னை இந்த மரக்கலத்தில் இன்று சந்திப்பதாகச் சொல்லியிருந்தேன். அந்த வாக்கைக் காப்பாற்ற வந்தேன்.’’

‘‘மகாராஷ்டிரத்திலிருந்து எனது மரக்கலங்கள் இன்று வருமென்பது உனக்கு எப்படித் தெரியும்?’’

‘‘பெரிய சாம்ராஜ்யத்தை நிறுவ விரும்புபவன் கண்கள் எங்கும் இருக்கும். எனது ஒற்றர்கள் வட கொங்கணத்திலும் மகாராஷ்டிரத்திலும்கூட இருக்கிறார்கள்.’’

‘‘சாம்ராஜ்யதிபதியாக உத்தேசமா?’’

‘‘அந்த விருப்பம் எல்லோருக்கும் உண்டு. நீ இங்கு வந்ததும் உன் அரசை விஸ்தரிக்கத்தானே?’’

இதைக் கேட்ட நாகபாணன் சிறிது சிந்தனையில் இறங்கினான். பிறகு கேட்டான், ‘‘இந்தப் புது மரக்கலங்களின் தலைவனை என்ன செய்தாய்? அவன் உடைகளை நீ அணிந்திருக்கிறாய்?’’ என்று.

நாகபாணன் கேள்வியைக் காதில் வாங்கியதும் முகத்தில் பொய் வருத்தத்தைப் படரவிட்டுக் கொண்ட கௌதமி புத்ரன், ‘‘அந்தத் தலைவனும் கரையில் இறங்கி மலைப் பாறை மறைவிலிருந்து சைகை செய்து தனது வீரர்களைக் காட்டுப் பகுதிகளில் இறக்கியிருக்கக் கூடாது. ரகசியமாக மரக்கலங்கள் வந்தாலும் கரையிலிருப்பவர்கள் கண்காணிப் பார்களென்பதைப் புரிந்துகொண்டிருக்க வேண்டும். எந்த யோசனையுமின்றித் தலைவன் காட்டுக்குள் வந்ததால் அவனைக் கட்டிப் போட்டு அவன் உடையை நான் அணிய வேண்டியதாயிற்று. தவிர எனது உடையை அவனுக்குப் போட்டிருக்கிறேன். அந்த உடையைப் பார்த்து அவனை நானென்று நினைத்து அவன் வீரர்களே கொன்று போட்டாலும் போடலாம். அப்படியே ஏதாவது ஏற்பட்டால்

zeevaa

பொறுப்பு நானல்ல'' என்று நடந்ததை அப்படியே விளக்கினான்.

அவன் விளக்க விளக்க உள்ளூர ஆத்திரமடைந்தாலும் அதை வெளிக்குக் காட்டாத நாகபாணன், ''இங்கு நீ தனிமையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாயே, எப்படித் தப்புவதாக உத்தேசம்?'' என்று வினவினான்.

''இங்கு நாமிருவருமே தனிமையில் இருக்கிறோம். ஒருவரிடம் ஒருவர் தனிமையில் அகப்பட்டுக் கொண்டிருக் கிறோம். எனக்கு ஆபத்து நேரிடுமுன்பு நீ உயிருடனிருக்க மாட்டாய். நமது இருவர் உயிரும் பரஸ்பரம் பிணைக்கப் பட்டிருக்கிறது'' என்று சுட்டிக் காட்டிய கௌதமிபுத்ரன் சற்று முன்னால் நகர்ந்து இடது கையைப் பின்புறம் செலுத்திக் கதவைத் தாளிட்டுவிட்டு, ''நாகபாணா! நீ ரகசியமாகப் படைகளைக் கோட்டையில் திரட்டியிருப்பது எனக்குத் தெரியும். இந்த மரக்கலங்களில் கரையில் இறங்கிய சில வீரர்களைத் தவிர இரண்டாயிரத்துக்குக் குறைவில்லாத படை வீரர்கள் வந்திருப்பதும் எனக்குத் தெரியும். நானும் சித்தமாயிருக்கிறேன். போரிடுவதானாலும் சரி, அல்லது நீ உன் படைகளுடன் கோட்டையை விட்டுப் போய்விடுவ தானாலும் சரி இரண்டுக்கும் நான் ஒப்புதல் தருவேன்'' என்று கூறிவிட்டு நட்ட நடு அறைக்கு நகர்ந்தான்.

இத்தனைக்கும் மகாக்ஷத்ரபன் உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு நகரவில்லை. நன்றாக நிமிர்ந்து கௌதமி புத்ரனைப் பார்த்தான். ''உன்னிடமிருப்பது மலைக்காட்டு மக்கள். போரில் பயிற்சியில்லாதவர்கள். பயிற்சியற்ற அவர்கள் எனது படையுடன் எப்படிப் போராட முடியும்?'' என்று வினவினான்.

''இது அவர்கள் பூமி. இதைக் காப்பது அவர்கள் கடமை. உரிமையென்று வந்தால் இவர்கள் உயிரைக் கொடுக்கச்

zeevaa

சித்தமாயிருப்பார்கள். நீ சிருஷ்டித்த போலிப் பிசாசுக்குத் தான் பயந்தார்களேயொழிய போருக்கு பயப்பட மாட்டார்கள். தவிர...''

''சொல் சதகர்ணி.''

''தவிர நீ ஏதுமறியாதவன்போல் நடித்தாலும் நான் படைகளை வரவழைத்திருப்பது உனக்குத் தெரியும். ஹோமப் புகையை மற்றவர் நம்பினாலும் நீ நம்ப மாட்டாய் என்பது எனக்குத் தெரியும். நீ எந்தவிதச் சேதமுமின்றி இங்கிருந்து திரும்பிச் செல்ல அனுமதி தருகிறேன்.''

இதைக் கேட்ட நாகபாணன் நகைத்தான் பெரிதாக. ''அனுமதி கொடுக்கிறாயா! நாகபாணனுக்கு அனுமதி கொடுக்கிறேனென்று சொல்லிப் பிழைத்தவன் கிடையாது'' என்று கூவினான் நகைப்பின் ஊடே. அடுத்துத் தனக்கு எதிரிலிருந்த சாளரத்தின் மூலம் ஏதோ சைகை காட்டினான்.

பிறகு நடந்தது பிரளயம். கௌதமிபுத்ரன் ஒரே பாய்ச்சலில் நாகபாணனை அணுகித் தனது குறுவாளை அவனது மார்பில் ஊன்றி, ''பேசாமல் என்னுடன் வா'' என்று ரகசியமாகச் சொல்லி, அவனைக் கதவு நோக்கி அழைத்துச் சென்றான். ''நாம் இப்பொழுது ஒன்றாக, நண்பர்களாக கரைக்குச் செல்வோம். மறுத்தால் நீ உடனே பிணமாகி விடுவாய். பிறகு நான் போரிட்டு மடிவேன். உனக்கு எது இஷ்டமோ அதைச் செய்யலாம்'' என்று கூறி நாகபாணன் கழுத்தில் கையைப் போட்டுக் கொண்டு கதவைத் திறந்து வெளியே நடக்க முற்பட்டான். கதவைத் திறக்குமுன்பு, ''என் இடது கைதான் உன் கழுத்தைச் சுற்றியிருக்கிறது. வலது கை குறுவாளின் அருகிலேயே இருக்கிறது'' என்றும் எச்சரித்தான்.

இப்படி நாகபாணனும் கௌதமிபுத்ரனும் அன்யோன்ய மாக நடந்து வந்ததால் மாலுமிகள் யாரும் அவர்களை

zeevaa

அணுகவில்லை. மரக்கலப் பலகையை அணுகியதும் நூலேணியும் தொங்கவிடப்பட்டது. நூலேணியில் முதலில் நாகபாணனை இறங்கச் சொல்லி, பின்னால் இறங்கிய கௌதமிபுத்ரன் படகின் துடுப்புகளைத் தானே ஏந்தித் துழாவிப் படகைச் செலுத்தினான்.

இத்தனைக்கும் இதழ்களில் புன்முறுவலைத் தவழ விட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த நாகபாணனின் நெஞ்சுரத்தைக் கண்டு வியந்த கௌதமிபுத்ரன், ''நாகபாணா! நாளைவரை இங்கு அமைதி நிலவும். நாளை மாலைக்குள் உங்கள் படைகள் திரும்பிச் செல்லாவிட்டால் எனது படைகள் தாக்குதலில் இறங்கும். இதைச் சொல்லவே நான் வந்தேன். சீக்கிரம் ஒரு நல்ல முடிவுக்கு வந்துவிடு நாகபாணா! இல்லையேல் எனது புதுப் படைத் தலைவன் படைகளுடன் வருவான்'' என்றான்.

நாகபாணன் புருவங்கள் கேள்வி கேட்பதற்கு அறிகுறியாகச் சற்றே உயர்ந்தன. ''புதுப் படைத் தலைவனா! அவன் யார்?'' என்று வினவினான்.

''காஷ்டானன்.'' இதை சர்வசகஜமாகச் சொன்னான். சாதவாகனன்.

''என்ன காஷ்டானனா!'' என்று பிரமிப்புடன் கேட்டான் மகாக்ஷத்ரபன்.

''ஆம்.''

''அவனா உன் படைத் தலைவன்?''

''ஆம்.''

''அவனைக் கொண்டா என்னைத் தாக்கப் போகிறாய்?''

''ஆம்.''

''உனக்குச் சித்தப்பிரமை ஏதுமில்லையே?''

zeevaa

"இருப்பதாகத் தெரியவில்லை. ஏன் கேட்கிறாய்?"

"அந்தக் கோழையை வைத்துக்கொண்டு போரிட முடியுமென்று நினைக்கிறாயா? அதைவிட நீ தற்கொலை செய்துகொள்ளலாமே?" என்றான் நாகபாணன்.

இதற்கு நேரிடையாகப் பதில் சொல்லவில்லை சாதவாகனன். "புராணம் படித்திருக்கிறாயா நாகபாணா?" என்று கேட்டான்.

"படித்திருக்கிறேன்."

"ராமன் காகாசுரன் மீது புல்லைத்தான் பிரயோகித்தான். அது பிரம்மாஸ்திரமாயிற்று."

"அப்பொழுது காஷ்டானன் புல்லா?"

"இல்லை. பிரம்மாஸ்திரம். பொறுத்திருந்து பார்" என்று சாதவாகனன் கூறினான்.

இதற்குள் வாசிஷ்டியின் முகத்துவாரம் வந்துவிடவே, கரையோரமாகப் படகைச் செலுத்திய கௌதமிபுத்ரன் கரையில் முன்னதாகக் குதித்து நாகபாணனைக் கையைப் பிடித்துக் கரையில் இறக்க முற்பட்டான். தன்னிடம் நீட்டிய கையை இரும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்ட நாகபாணன் தனது இன்னொரு கையை மேலே தூக்கி ஆட்டினான்.

அதைத் தொடர்ந்து தடதடவென்று பல வீரர்கள் விரைந்து வரும் ஒலி கேட்டது. சில விநாடிகளுக்குள்ளாகச் சுமார் இருபது வீரர்கள் உருவிய வாளுடன் படகை நெருங்கி விட்டார்கள். நாகபாணன் மிகுந்த உற்சாகத்திலிருந்தான். "சாதவாகனா! உன் துணிவுக்கும் ஓர் எல்லையிருக்க வேண்டும். நாகபாணனை மிகக் குறைவாக எடை போட்டு விட்டாய்" என்று கூறிய மகாக்ஷத்ரபன் வீரர்களை நோக்கி,

zeevaa

''இவனைக் கொல்ல வேண்டாம். சிறை செய்து கோட்டைக்குக் கொண்டு செல்லுங்கள்'' என்று உத்தர விட்டான். அடுத்து நகைத்தது நாகபாணனல்ல. கௌதமி புத்ரன் நகைத்தான். நாகபாணனுக்கு ஏதும் புரியாததால் ''சொல்வது உங்கள் காதில் விழவில்லை?'' என்று வீரர்களை நோக்கிச் சீறினான்.

''வீரர்கள் இயங்க எனது உத்தரவு தேவை'' என்று சொல்லிக் கொண்டே பின்னாலிருந்து வந்தான். காஷ்டானன். தனக்குப் பைத்தியம் பிடிக்கவில்லை என்பதை நிச்சயம் செய்துகொள்ளத் தலையை இருமுறை ஆட்டிக் கொண்டான் நாகபாணன்.

போதாக்குறைக்கு காஷ்டானன் முன்னால் வந்து, ''மகாக்ஷத்ரபரே! உங்கள் வாளைக் கொடுத்து விடுங்கள். உங்களை பலவந்தமாகச் சிறைப்படுத்த நான் விரும்ப வில்லை'' என்றான். கையையும் நீட்டினான்.

அத்து மீறிய உணர்ச்சிகளாலும் பிரமிப்பினாலும் வாழ்க்கையில் முதன் முதலாகச் செயலிழந்து நின்றான் நாகபாணன். ''காஷ்டானனா! உனக்கு எங்கிருந்து இத்தனை துணிவு வந்தது?'' என்று கேட்டான்.

''எல்லாம் இருக்கும் இடத்தைப் பொறுத்தது'' என்ற கௌதமிபுத்ரன், ''சிவபிரான் தலையிலிருந்த நாகம் 'கருடா சுகமா' என்று கேட்கவில்லை?'' என்று உவமை காட்டினான்.

zeevaa

அத்தியாயம் 28

உணர்ச்சியின் வினை

சாதவாகனனைச் சிறை செய்யத் தான் உத்தரவிட்டதைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் வீரர்கள் பதுமைகள் போல நின்றுவிட்டதையும், தனது உத்தரவில்லாமல் வீரர்கள் இயங்க மாட்டார்களென்று கூறிக்கொண்டு காஷ்டானன் வெளியே வந்ததையும், தன்னைச் சிறை செய்யப் போவதாக அந்தக் கோழை சொல்லித் தனது வாளைக் கொடுத்து விடும்படி கேட்டதையும் பார்த்த மகாக்ஷத்ரபனான நாகபாணன், அதிர்ச்சியைவிட வியப்பை அதிகமாக அடைந்த தால், தன்னைக் கண்டாலே நடுங்கி வந்த காஷ்டானனுக்கு அத்தனை துணிவு எப்படி வந்தது என்பதைக் கேட்டதற்கு, சாதவாகனன் சொன்ன பதில் மிகவும் பொருத்தமாயிருந் ததைப் புரிந்து கொண்டான். கௌதமிபுத்ரனிடம் இருப்பது தான் அந்தத் துணிவு வந்ததற்குக் காரணம் என்பதை உணர்ந்து கொண்ட நாகபாணன் வாளைக் கொடுக்கும்படி இரண்டாவது முறை காஷ்டானன் கை நீட்டியதும் பெரிதாக நகைத்தான். காஷ்டானன் அழைத்து வந்துள்ள இருபது பேரைவிடப் பன்மடங்கு அதிகமான வீரர்கள் புதிய மரக்கலங்களிலிருந்து வந்து காட்டுக்குள் பதுங்கியிருக் கிறார்களென்ற நினைப்பால், ''காஷ்டானனா! சிறைப்படப் போவது நானல்ல, நீயும் இந்தச் சாதவாகனனுந்தான்'' என்று கூறித் தனது ஒரு கையைத் தலைக்கு மேலே தூக்கி

zeevaa

zeevaa

ஆட்டினான். தனது மடியிலிருந்து ஒரு சங்கை எடுத்து பலமாகவும் ஊதவும் செய்தான்.

அவன் செய்கை எதையும் தடை செய்யாத கௌதமி புத்ரன், ''மகாக்ஷத்ரபரே! இந்தச் செய்கை எதுவும் பயனளிக் காது. உமது வாளைக் காஷ்டானனிடம் கொடுத்து விடுவது நல்லது'' என்று சர்வசாதாரணமாக உபதேசம் செய்தான்.

நாகபாணன் தனது எதிரியை வியப்பு ததும்பிய கண்களால் நோக்கி, ''ஏன் பயனளிக்காது? மூன்று மரக்கலங் களிலும் வந்த வீரர்களில் ஒரு பகுதியினர் காட்டுக்குள் ஒளிந்திருக்கிறார்கள். எதற்கும் எந்த விநாடியிலும் செயல் பட அவர்களுக்குச் சைகையும் செய்யப்பட்டிருக்கிறது'' என்று அவன் சுட்டிக் காட்டுவதற்கும், காட்டிலிருந்து வீரர்கள் பலர் விரைந்து வருவதற்கும் சமயம் சரியாயிருக்கவே, ''பார்த்தாயா கௌதமிபுத்ரா! எந்த ஏற்பாட்டுக்கும் ஓர் எதிர் ஏற்பாடு உண்டு! அதுவும் நாகபாணன் புத்தி சற்று எச்சரிக்கையாக எதையும் முன் கூட்டியே சிந்திக்கவல்லது'' என்று சற்றுப் பெருமிதத்துடன் கூறினான். ''அதோ வரும் வீரர்களின் தலைவனிடம் உன் வாளைக் கொடுத்து விடு. இந்தப் பைத்தியம் காஷ்டானனையும் அடங்கி நடக்கச் சொல். உங்களிருவரையும் கோட்டையில் விசாரிக்கிறேன்'' என்றும் சொன்னான்.

நாகபாணனின் வீராப்புக்கு கௌதமிபுத்ரன் பதிலேதும் சொல்லவில்லை. ''நாகபாணரே! உமது விருப்பம்போல் செய்கிறேன். ஆனால் நீர் தப்புக் கணக்குப் போடுகிறீர். வரப்போவது தலைவனல்ல...'' என்று இழுத்தான்.

''வேறு யார்?'' சினத்துடன் எழுந்தது நாகபாணனின் கேள்வி.

''தலைவி'' என்றான் சாதவாகன வாலிபன்.

zeevaa

அடுத்து நாகபாணன் பேசவில்லை. விரைந்து வந்த வீரர்களை அடுத்து சித்தரஞ்சனி பெரியதொரு புரவியில் வேகமாக வருவதையும், அவள் கையில் நீண்ட வாளொன்று இருப்பதையும் பார்த்துப் பிரமை பிடித்து நின்ற மகாக்ஷத்ரபன், "யார்! சித்தரஞ்சனியா?" என்று வினவினான் பிரமிப்பு குரலிலும் விரிய.

அவன் கேள்வியைத் தொடுத்து முடிக்கு முன்பாகப் புரவியை அவன் எதிரே நிறுத்தித் தரையில் குதித்த சித்தரஞ்சனி, எதிரே நின்ற மூவரையும் மாறி மாறிப் பார்த்தாள். கடைசியில் காஷ்டானனை நோக்கி, "எதற்காகச் சங்கை ஊதி என்னை அழைத்தீர்கள்? நாகபாணர் ஒருவரைச் சிறை செய்ய உங்களால் முடியாதா?" என்று சீற்றத்துடன் கேட்டாள்.

"படைத் தலைவர்மீது கோபித்துப் பயனில்லை சித்த ரஞ்சனி. சங்கை ஊதி உன்னை அழைத்தவர் நாகபாணர்" என்ற கௌதமிபுத்ரன், "மகாக்ஷத்ரபர் உன்னிடந்தான் வாளைக் கொடுப்பேனென்று பிடிவாதம் செய்கிறார். அதற்காகத்தான் சங்கை ஊதி உன்னை வரவழைத்தார். வாளை வாங்கிக்கொள்" என்றான். மரியாதைக்கு அறிகுறியாக நாகபாணனை நோக்கித் தலையையும் தாழ்த்தினான்.

நாகபாணன் புத்தியில் நடந்த விஷயம் மிகத்தெளிவாக விளங்கலாயிற்று. தங்கள் சங்கைப் போலவே கௌதமிபுத்ரன் தனது படைத் தலைவர்களுக்கும் சங்குகளைக் கொடுத்திருக் கிறானென்றும், தனது படையைத் தான் அழைக்கும்போ தெல்லாம் எதிரிப்படை வருகிறதென்றும் புரிந்து கொண்ட தால் உடனடியாக ஏற்படும் எந்தச் சண்டையிலும் குழப்பம் ஏற்படுமென்பதை உணர்ந்து கொண்டான். ஆனால் இத்தனை ஆபத்திலும் அவன் சிறிதும் கலங்காமல் தனது

வாளை எடுத்து, ‘‘சித்தரஞ்சனி! இந்தா வாளைப் பெற்றுக் கொள்’’ என்று கூறித் தனது வாளை உறையிலிருந்து எடுத்து நீட்டினான். அவள் கையில் வாளைப் பெற்றுக் கொண்ட பிறகும் மிக நிதானமாகவே நின்றாள். ‘‘அடுத்து என்ன சாதவாகனா!’’ என்று வினவினான் கௌதமிபுத்ரனை நோக்கி.

‘‘நாகபாணா! வீரனான உன்னைக் கொல்லவோ, சிறையில் அடைத்துச் சித்திரவதை செய்யவோ எனக்கு மனம் இடங்கொடுக்கவில்லை. சித்திரவதை செய்வது எங்கள் தர்மமும் அல்ல. உனது படைகளை அழைத்துக் கொண்டு இந்தப் பகுதியிலிருந்து இரண்டு நாட்களில் நீ போய் விடுவதாகப் பிராமணம் செய்தால் நீ இப்பொழுதே செல்லலாம். இல்லையேல் உன்னைச் சிறைசெய்து அழைத்துப் போவதைத் தவிர வேறு வழியில்லை’’ என்று சாதவாகனன் கூறினான்.

நதிக்கரையில் படகின் அருகிலிருந்தே இந்த உரையாடல் நடந்து கொண்டிருந்ததாலும், விடியும் நேரமும் மெதுவாக நெருங்கிக் கொண்டிருந்ததால் சந்திர வெளிச்சமும் மிகவும் மங்கிவிட்டதாலும் நதியின் முகத்துவாரத்தில் புகுந்த கடலலைகள் மெதுவாக அடங்கத் தொடங்கியிருந்தன. நதியின் அலைகளும் மிக மந்தமாயிருந்தன. எங்கும் பக்ஷி ஜாலங்கள் உதயகால ராகத்தைப் பலபடி ஒலிக்கத் தொடங்கின. அந்த கீதங்களைச் சித்தரஞ்சனி அனுபவித்துக் கொண்டிருந்த சமயத்தில் நாகபாணன் சரேலென்று திரும்பிக் கரையிலிருந்து நதியில் வேகமாகக் குதித்துவிட்டான். நதிக்கரையை நோக்கி ஓடிய காஷ்டானனையும் மற்ற வீரர்களையும் தடுத்த கௌதமிபுத்ரன், ‘‘நாகபாணன் தப்பிச் செல்லட்டும்’’ என்றான்.

‘‘ஏன்?’’ காஷ்டானன் குரல் சினத்துடன் ஒலித்தது.

zeevaa

''அவனிடம் வாளில்லை, நிராயுதபாணியை வேட்டை யாடுவது தர்மமல்ல'' என்றான் கௌதமிபுத்ரன்.

''இந்த தர்மத்தை நாகபாணன் பார்க்கமாட்டான்'' என்றான் காஷ்டானன்.

''நாகபாணன் தர்மமல்ல நமது தர்மம். தவிர இனி உடனடியாகப் போர் ஏற்படும். அதற்கு நம்மைச் சித்தம் செய்து கொள்வது நல்லது'' என்று கூறிக்கொண்டே திரும்பி ஆற்றுப் பகுதியை கவனித்தான்.

ஆற்றின் கோட்டைப் பகுதியிலிருந்து சுமார் நாற்பது படகுகள் முகத்துவாரத்தை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு படகிலும் பத்து வீரர்களுக்குக் குறையாமல் இருந்ததையும், அவர்கள் பூரண ஆயுதங்களை ஏந்தியிருந்ததையும் கௌதமிபுத்ரன் கவனித்தான். அதே சமயத்தில் நாகபாணனின் மரக்கலத்திலிருந்தும் வீரர்களைத் தாங்கிய படகுகள் கரையை நோக்கி வரத் தொடங்கின. கௌதமிபுத்ரன் புதிதாக உருவாகிய அந்தச் சூழ்நிலையைக் கவனித்து, ''நாகபாணன் போருக்குச் சன்னத்தமாகி விட்டான். சித்தரஞ்சனி, நாகபாணன் வாளை என்னிடம் கொடுத்துவிடு. நீ உன் வீரர்களுடன் தாபிலேசுவரர் கோவிலுக்குப் போய்விடு. காஷ்டானனா! உன் வீரர்களில் நான்கு பேர் மட்டும் என்னுடன் இங்கு இருக்கட்டும். நீ சண்டிகாதேவி ஆலயத்துக்கருகில் நமது புரவிப் படையுடன் காத்திரு. நான் அழைக்கும்போது வேகமாகப் புரவிகளைச் சரிவில் செலுத்தி வா'' என்று உத்தரவிட்டான். சித்தரஞ் சனியின் கையிலிருந்த நாகபாணனின் வாளைத் தனது இடது கையில் வாங்கிப் பிடித்துக் கொண்டான். வலது கையில் தனது வாளை ஏந்தி இரண்டு கைகளிலும் வாட்களுடன் எதிரிகளை எதிர்பார்த்து நின்றான்.

zeevaa

அவனைத் தனியே விட்டுச் செல்ல மனமில்லாத சித்த ரஞ்சனி சிறிது தாமதித்தாள். பத்து வீரர்களைக் கொண்டு நாகபாணனைச் சமாளிக்க உன்னால் முடியுமா?'' என்று கவலையுடன் கேட்டாள்.

''இந்தப் பத்து வீரர்கள் கூடத் தேவையில்லை. நீ போ சித்தரஞ்சனி! நான் சில நாழிகைகளில் திரும்பி விடுவேன்'' என்று கூறினான் கௌதமிபுத்ரன்.

இருப்பினும் கவலையுடன் நின்றாள் சித்தரஞ்சனி. ''நீ போ சித்தரஞ்சனி! இப்பொழுது எந்த ஆபத்துமில்லை. சண்டை இன்று பிற்பகலுக்கு மேல்தான் துவங்கும். அதோபார்'' என்று நதியைச் சுட்டிக் காட்டினான்.

கோட்டையிலிருந்து வந்த படகுகள் திடீரெனத் திரும்பிக் கோட்டையை நோக்கிச் சென்றன. நாகபாணன் கப்பலிலிருந்து வந்த படகுகள் முகத்துவாரத்தை நோக்கி வராமல் கடலின் கரையை நோக்கி வடக்குத் திசையில் சென்றன. நாகபாணன் இருந்த இடம் தெரியவில்லை. கரையில் நின்ற வண்ணம் ஆற்றுப் பகுதியை உற்று நோக்கிக் கொண்டிருந்த கௌதமிபுத்ரன் திடீரென மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டான்.இக்கரையிலிருந்து பாதி தூரத்தில் திடீரென நாகபாணனின் உடல் நீர்மட்டத்துக்கு மேல் எழுந்து மீண்டும் சுழன்று நீரில் மூழ்கியது. அடுத்து பெரும் சுறா மீன் ஒன்று மேலெழுந்தது. அதன் வாய் முழுவதும் ரத்தமாயிருந்தது. அடுத்து அதுவும் நீரில் அமிழ்ந்து மறைந்தது. நீரின் மேற்பகுதியில் குருதி குமிழியிட்டு வந்து கொண்டிருந்தது. அருணோதயத்தின் சிவந்த கதிர்கள் அந்தக் குருதிக்குத் தனி மெருகைக் கொடுத்தன. கௌதமிபுத்ரன் பிரமை பிடித்துத் தலை குனிந்து கரையிலேயே நின்றான். பின்னால் வந்த சித்தரஞ்சனி அவனது தோளின்மீது ஆதரவாகக் கையை வைத்ததுகூட அவனுக்கு எந்தவித

zeevaa

உணர்ச்சியையும் அளிக்கவில்லை. ''நாகபாணனைப் போரிட்டு முடிக்க வந்தேன். என்னை அவன் ஏமாற்றி விட்டான்'' என்று முணுமுணுத்த கௌதமபுத்ரன் துன்பப் பெருமூச்சு விட்டான்.

சித்தரஞ்சனி இருமுறை அவனை அழைத்தும் அவன் பதில் ஏதும் சொல்லவில்லை. நாகபாணனின் துர்மரணத்தைக் கேட்டால், வீரமாதாவான தனது தாய் என்ன நினைப்பாள் என்று எண்ணி உள்ளூரப் பொருமினான். இந்த உணர்ச்சி வெள்ளத்தில் சூழ்நிலையை அறவே மறந்தான். அவன எண்ணமெல்லாம் பிரதிஷ்டானாவிலிருந்த கௌதமி பாலஸ்ரீயை வட்டமிட்டுக் கொண்டிருந்தன. ''மகனே! உன்னைப் போரில் வெற்றிவாகை சூடிய வீரனாக எதிர்பார்த்தேன். சந்தர்ப்பத்தால் வெற்றி கிட்டிய சாதாரண மனிதனாக உன்னை எதிர்பார்க்க வில்லை'' என்று பாலஸ்ரீ தன்னை நோக்கிக் குற்றம் சாட்டுவதாகத் தோன்றியது சாதவாகனனுக்கு. இதனால் தளர்ந்த மனத்துடன் மலையேறத் திரும்பியவன் செயலற்று நின்று விட்டான். அவன் நிலைமை தலைகீழாக மாறியிருந்தது.

zeevaa

அத்தியாயம் - 29

சமரும் சங்கீதமும்!

நாகபாணன் சுறாவினால் கடிக்கப்பட்டு துர்மரண மடைந்து விட்டார் என்ற நினைப்பில், தனது வெற்றி அர்த்தமற்றதாகி விட்டதென்ற எண்ணத்தில், இதற்கு வீர மாதாவான தனது தாய் என்ன சொல்வாளோ என்ற துன்பத்தில் சிக்கி உணர்ச்சி வசப்பட்ட கௌதமிபுத்ரன், மலையில் சிறிது ஏறித் திரும்பி நோக்கியதும் நிலைமை தலைகீழாக மாறிவிட்டதென்பதைப் புரிந்து கொண்டா னென்றால் அதற்குக் காரணம் இருக்கவே செய்தது. நதியின் மத்தியப் பகுதியில் குமிழியிட்டுக் குருதியும் நதியின் நீருமாகக் கலந்து வெந்நீரைப் பரப்பவிட்ட சமயத்தில் சரேலென்று நாகபாணன் நீர்மட்டத்துக்கு மேலே கிளம்பியதையும், அவன் கையில் பிடித்திருந்த குறுவாளில் ரத்தமும் சதையும் கலந்திருந்ததையும் கவனித்த கௌதமி புத்ரன் மரணமடைந்தது சுறாவே என்பதையும் சூரனான நாகபாணன் அல்லவென்பதையும் புரிந்துகொண்டதால், நதியின் அந்தப் பகுதியை உற்றுப் பார்த்துக் கொண்டே நின்றான் நீண்ட நேரம். இருமுறை நீருக்கு மேல் சுறாவின் பெரிய வாலைக் கட்டிப் பிடித்து எழுந்த நாகபாணன் இருமுறை அதன் முதுகுப் பகுதியில் குறுவாளால் திரும்பத் திரும்பக் குத்தினான். பிறகு மீண்டும் நீரில் மூழ்கி அதன் அடிப் பகுதியிலும் அவன் அடுத்தடுத்துக் குத்தியிருக்க வேண்டும். உடலின் இருபுறத்திலும் குத்தப்பட்ட அந்தப்

zeevaa



zeevaa

பெரிய சுறா திடீரென நீர்மட்டத்தில் மிதக்கலாயிற்று. ஆயினும் அத்துடன் எழுந்து அதைக் கையால் அணைத்துக் கொண்ட நாகபாணன் மீண்டும் நதியில் அழுந்தத் துவங்கி யதைக் கண்டதும் கௌதமிபுத்ரன் தனது மேலங்கியைக் சுழற்றிச் சித்தரஞ்சனியிடம் கொடுத்துவிட்டு, “இரு, நான் நாகபாணனைக் கரைக்குக் கொண்டு வருகிறேன். அவன் கை களைத்துவிட்டது. இப்பொழுது உதவாவிட்டால் இறந்து விடுவான்” என்று கூறிவிட்டு அவள் பதிலுக்குக் காத்திராமல் நதியின் நீரில் குதித்து மூழ்கி நீந்தினான். குதித்தபோதே நாகபாணன் மறைந்த இடத்தைக் குறி வைத்துக் கொண்டானாதலால் அந்தத் திக்கில் வேகமாக நீந்தி அதனருகில் வந்ததும் தலையைத் தூக்கி இருபுறமும் பார்த்தான். மீண்டும் சரேலென மூழ்கி நாகபாணன் அமிழ்ந்த இடத்தை அணுகி அவன் உடலைத் தனது கையில் பற்றி மேல்மட்டத்துக்குக் கொண்டு வந்து அவனை இழுத்துக் கொண்டே எதிர்க்கரையை நோக்கி நீந்திச் சென்றான். கரையை அணுகியதும் தான் கரையிலேறி நாகபாணனையும் இழுத்துக் கரையில் கிடத்தினான்.

நாகபாணன் உடலில் பல இடங்களில் சுறாவின் பற்கள் பட்டிருந்ததால் காயம் பலமாயிருந்தது. கையொன்றிலும் தொடைகளிலும் காயங்கள் பலமாயிருந்தன. அந்தக் காயங்களில் கரையிலிருந்த மணல் கலந்ததால் பெரிதும் ஏற்பட்ட எரிச்சல் காரணமாக ஒரு முறை நாகபாணன் முனகினான். பிறகு அசைந்து வேதனை நிறைந்த ஒலிகளை வாயிலிருந்து எழுப்பினான். கடைசியாக மெதுவாகக் கண் விழித்துப் பார்த்து பிரமையடைந்து, “இது கனவு, கனவு தான்” என்று சொல்லி மறுபடியும் கண்களை மூடிக் கொண்டான்.

அவன் முகத்தைத் தனது கையொன்றால் துடைத்த கௌதமிபுத்ரன், “மகாக்ஷத்ரபர் அஞ்ச வேண்டியதில்லை.

zeevaa

மெள்ள எழுந்திருந்தால் உங்கள் வீரர்களிடம் ஒப்படைக் கிறேன்'' என்று கூறி மெதுவாக அவனை எழுப்பித் தனது கையால் உடலை அணைத்துத் தலையைத் தோளில் சாத்திக் கொண்டு நடக்கலானான். பாதி நடையும் பாதி இழுத்தும் நாகபாணனை அழைத்துச் சென்ற கௌதமிபுத்ரனைக் கோட்டைப் பகுதியிலிருந்து விரைந்து வந்த சுமார் பத்து வீரர்களின் தலைவன். ''மகாக்ஷத்ரபருக்கு என்ன நேரிட்டு விட்டது? இத்தனை காயங்கள் விளைத்தது யார்?'' என்று வினவினான்.

கௌதமிபுத்ரன் தலையைத் தூக்காமலே நிலத்தை நோக்கிய வண்ணம், ''மகாக்ஷத்ரபருக்கு இத்தனை காயங்களை விளைவிக்கக் கூடியவன் பிறந்திருக்கிறானா? விளைவித்த பின் அவன் உயிருடன்தான் இருக்க முடியுமா?'' என்று கேள்விகளைத் தொடுத்தான்.

வீரர்கள் தலைவன் முகத்தில் குழப்பம் தெரிந்தது ''அப்படியானால் இந்தக் காயத்தை விளைவித்தவர் யார், எங்கிருக்கிறார்?'' என்று வினவினான் அவன்.

''நதியின் அடியிலிருக்கிறானோ அல்லது முகத்துவாரத் துக்கு அலைகளால் உருட்டப்பட்டானோ, சொல்ல முடியாது'' என்றான் கௌதமிபுத்ரன்.

''நீ யார்?'' என்று அடுத்த கேள்வியைத் தொடுத்தான் வீரர்கள் தலைவன்.

தலையை நிமிர்ந்து பார்த்த கௌதமிபுத்ரன் கேள்வி கேட்ட தலைவனும் மற்ற வீரர்களும் நடை, உடை, தோற்றம் எல்லாவற்றிலும் புதிதாக இருப்பதைக் கண்டு அவர்கள் வெளியூரிலிருந்து நாகபாணனால் வரவழைக்கப் பட்டவர்களாக இருக்க வேண்டுமென்று தீர்மானித்தான். ஆகவே சொன்னான்: ''நான் யாரென்பது இப்பொழுது முக்கியமல்ல. முதலில் மகாக்ஷத்ரபரை கவனிக்க வேண்டும்.

zeevaa

இவரைக் கோட்டைக்கு அழைத்துச் செல்ல ஒரு புரவியைக் கொடுங்கள்'' என்றான். வீரர்கள் தலைவன் நாகபாணன் இருந்த நிலையைக் கண்டதும் பதிலேதும் பேசாமல் தன் வீரர்கள் ஒருவனுக்குக் கண்காட்ட அவன் விரைந்து பக்கத்திலிருந்த தோப்புக்குச் சென்று அதிலிருந்து புரவி யொன்றை இழுத்து வந்தான். புரவிமீது நாகபாணனை மெதுவாக ஏற்றி அதன் முதுகில் படுக்க வைத்த கௌதமி புத்ரன், ''நாகபாணரை ஜாக்கிரதையாக அழைத்துச் செல்லுங்கள்'' என்று கூறிவிட்டுச் சற்றே திரும்பத் தொடங்கினான். அந்தச் சமயத்தில் சுரணை அடைந்துவிட்ட நாகபாணன் சாதவாகனன் தோளைத் தனது கையால் பிடித்தான். அதனால் திரும்பி நோக்கிய சாதவாகனனை உடன் வரும்படி சைகையும் செய்தான். பிறகு வீரர்கள் தலைவனை நோக்கி ஏதோ சைகை செய்ய, மற்ற வீரர்களைச் செல்லும்படி கட்டளையிட்டான் வீரர்களின் தலைவன். கௌதமிபுத்ரன் வீரர்கள் தலைவனைப் புரவியின் ஒரு புறத்தில் இருக்கச் சொல்லித் தான் மறு பக்கம் வந்து புரவி மீதிருந்த நாகபாணனை பத்திரமாகப் பிடித்துக் கொண்டான். அடுத்து அந்தப் புரவி பக்கத்திலிருந்த தோப்பில் நுழைந்தது. தோப்பின் ஊடே சிறிது தூரம் சென்றது. சற்று வேதனைப் பெருமூச்சு விட்டான் நாகபாணன். கௌதமிபுத்ரன் நாகபாணனை மெதுவாகத் தடவிக் கொடுத்து ரத்தத்தை நிறுத்திச் சில நரம்புகளை அழுத்திவிட்டு மெதுவாகப் புரவியை நடத்திச் சென்றான். இப்படி ஒரு நாழிகை பயணம் செய்ததும் கோட்டையின் பின்புறத் திட்டி வாசல் கதவுக்கருகில் வீரர்கள் தலைவன் நின்று, ''இனி புரவி உள்ளே போக முடியாது. நாம்தான் மகாக்ஷத்ரபரைத் தூக்கிச் செல்ல வேண்டும்'' என்று கூற, கௌதமிபுத்ரன் மெதுவாக நாகபாணனைப் புரவியிலிருந்து இறக்கிப் பாதி உடலைத் தான் பிடித்துக்கொண்டு மீதிப் பாதையை வீரர்கள் தலைவனைப் பிடித்துக் கொள்ளச் சொல்லித் திட்டி வாசல்

zeevaa

கதவை இருமுறை தட்டக் கதவு திறந்தது. நாகபாணன் உடலை இருவர் தாங்கி வருவதைக் கண்டதும் திட்டி வாசல் காவலர் கலவரமடைய, அவர்களைப் பேச வேண்டா மென்று கௌதமிபுத்ரன் சைகை செய்து வீரர்கள் தலைவன் உதவியால் கோட்டையிலிருந்த மகாக்ஷத்ரபனின் அறைக்கு அவனைக் கொண்டுபோய் அங்கிருந்த கட்டிலில் கிடத்தினான். பிறகு வீரர்கள் தலைவனை நோக்கி, ''மகாக்ஷத்ரபர் காயமடைந்திருப்பது யாருக்கும் தெரிய வேண்டாம். மருத்துவம் எனக்குத் தெரியும். சிறிது சுடுநீரும், ஒரு துண்டும், மருத்துவரிடமிருந்து காயக்களிம்பும் கொண்டு வா'' என்று உத்தரவிட்டான். அவன் செல்லத் தொடங்கியதும், ''அறையை மூடிவிட்டுச் செல். யாரும் நாகபாணரைப் பார்க்க முடியாதென்று திட்டம் செய்து வை'' என்று உத்தரவிட்டான்.

அவன் சொற்படி சகலமும் நடந்தது. கதிரவனும் தனது இளங்கதிர்களை எங்கும் பரப்பினான். கௌதமிபுத்ரன் வீரன் கொண்டு வந்த சுடுநீரால் நாகபாணனின் காயங்களுக்கு ஒத்தடம் கொடுத்தான். பிறகு களிம்பைக் காயம் பட்ட இடங்களில் மெதுவாகத் தடவினான். இருப்பினும் களிம்பு தனது சுபாவத்தைக் காட்டியதால் சற்றே எரிச்சல் எழவே, நாகபாணன் இம்சைப்பட்டு அசைந்தான். இம்சை சுரணையை முற்றும் திரும்பக் கொணர்ந்துவிட்டதால் கண்களை நன்றாகவே திறந்தான். அப்பொழுதும் களிம்பைத் தடவிக் கொண்டிருந்த கௌதமிபுத்ரனை நோக்கிப் புன்முறுவல் செய்தான். கௌதமிபுத்ரன் நாகபாணனைப் பார்க்காமலேயே தனது பணியில் ஈடுபட்டிருந்ததால் எதிரியின் முகத்தில் மாறுபட்டு எழுந்திருந்த உணர்ச்சிகளை கவனிக்கவில்லை. களிம்பைப் பூசி முடித்ததும் துண்டில் கைகளைத் துடைத்துக் கொண்டு நாகபாணன் கண்களைத் திறந்திருப்பதைக் கண்டு மனச் சாந்தியை முகத்திலும் புன்முறுவலை உதடுகளிலும் பரவ விட்டுக் கொண்டான்.

zeevaa

நாகபாணன் மெல்லத் தனது கையொன்றைத் தூக்கி எட்ட இருந்த ஒரு பெரிய பெட்டியைக் காட்டினான். அதைத் திறந்து பார்த்த கௌதமிபுத்ரன் அதில் புத்தம் புது உடைகள் பல இருந்ததைப் பார்த்து நாகபாணன் கருத்தை அறிந்து தனது ஈரச்சராயை அவிழ்த்து அதிலிருந்த புது உடைகளிலொன்றை அணிந்துகொண்டான். நாகபாணன் மறுபடியும் வேறு ஓர் இடத்திலிருந்த தலைப்பாகையைக் காட்டினான். அதையும் அணிந்துகொண்ட கௌதமி புத்ரன் அறைக் கோடியிலிருந்த நிலைக் கண்ணாடியில் தனது உருவத்தைப் பார்த்தான். உடை அவனது தோற்றத்தை அறவே மாற்றியிருந்தது. தலைப் பாகை பாதி முகத்தை மறைத்துவிட்டதால் பழையகால மருத்துவன் போல் காட்சியளித்தான் கௌதமிபுத்ரன்.

நாகபாணனின் கருத்து நன்றாகப் புரிந்து விட்டது கௌதமிபுத்ரனுக்கு. ஆயினும் நாகபாணனை அணுகி, ''இது எதற்கு?'' என்றான்.

''நீ இங்கிருந்து தப்பித்துச் செல்ல'' என்ற நாகபாணனின் குரல் தழுதழுத்துக் கிடந்தது.

அவன் உணர்ச்சிகளின் எழுச்சியைக் கவனித்த சாதவாகனன் எந்த மனிதனிடமும் நல்ல குணங்கள் இருக்கத் தான் செய்கின்றன என்று உள்ளூர சொல்லிக்கொண்டான். அடுத்து நாகபாணன் சாதவாகனனை அழைத்து, ''இன்று பகல் இங்கேயே இருந்துவிடு, இரவில் போகலாம்'' என்றான்.

கௌதமிபுத்ரன் புன்முறுவல் செய்து, ''முடியாது நாகபாணரே! நான் பகலுக்குள் திரும்பாவிடில் விபரீதம் விளையும்'' என்று கூறிவிட்டு, ''என்னைப் பற்றிக் கவலைப் பட வேண்டாம். என்னுடன் வந்த வீரர் தலைவனை அழைத்துப் போகிறேன்'' என்றான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் முழு மருத்துவ வேடத்துடன் வீரர்கள் தலைவனுடன் புறப்பட்டான் சாதவாகனன். நாகபாணன் முன்னதாக இட்ட கடுமையான உத்தரவால்

zeevaa

அவனை யாரும் தடை செய்யவில்லை. அவனைத் தன்னைப்போல பாவித்து நடக்க வேண்டுமென்று நாகபாணன் திட்டம் செய்திருந்ததால் கௌதமிபுத்ர மருத்துவன் அனைவராலும் வணங்கப்பட்டான். நாகபாணன் அறையிலிருந்து புறப்படு முன்பாக, ''நாகபாணரே! நாம் எப்பொழுது சந்திக்கலாம்?'' என்று கேட்டான்.

''பௌர்ணமி தினத்தில்'' என்றான் நாகபாணன்.

''நல்லது'' என்றான் கௌதமிபுத்ரன்.

''அன்றும் சித்தரஞ்சனி பாடட்டும்'' என்றான் நாகபாணன்.

''ஏன்?''

''பௌர்ணமி அன்றுதான் பாடத் துவங்கினாள். அந்தப் பாட்டிலேயே இந்தக் கதைக்கு முடிவு கட்டுவோம்?''

புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையசைத்தான் கௌதமி புத்ரன்.

அவன் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் உள்ளே நுழைந்த க்ஷத்ரபன், மகாக்ஷத்ரபர் சாளரத்தருகே நின்றிருப்பதையும் அவர் தூரத்தே எதையோ பார்ப்பதையும் கவனித்து உள்ளே நுழைந்து, ''மகாக்ஷத்ரபர் எதையோ பார்க்கிறார்'' என்று சொல்லிக் கொண்டே நாகபாணனை அணுகி வெளியே தனது கண்களை ஓட்டினான்.

தூரத்தே ஆற்றங்கரையை நோக்கி மருத்துவர் ஒருவர் நடந்து கொண்டிருப்பதைப் பார்த்து, ''இந்த மருத்துவர் உங்களுக்கு முன்னமே பழக்கமா?'' என்று கேட்டான் க்ஷத்ரபன்.

''நம் எல்லோருக்கும் பழக்கம்'' என்றான் நாகபாணன்.

''அவன் நடையைப் பார்த்தால் போர் வீரன் நடை போலிருக்கிறது.''

zeevaa

"ஆம். வீரர்களான மருத்துவர்கள் இல்லையா?"

"இருப்பார்கள். ஆனால் இந்த மருத்துவரை நான் எங்கோ பார்த்திருக்கிறேன்."

இதைக் கேட்ட மகாக்ஷத்ரபன் நகைத்தான். "க்ஷத்ரபா, உன் மூளையும் வேலை செய்யத் துவங்கி விட்டது!" என்றும் கூறினான், நகைப்பின் ஊடே.

அடுத்து ஏதோ புரிந்ததற்கு அறிகுறியாகத் துடித்து வெளியே செல்ல முயன்ற க்ஷத்ரபனைத் தடை செய்த நாகபாணன், "அவனை யாரும் தடை செய்ய வேண்டாம்" என்றான் கடுமையாக.

"அவன்..."

"மகாவீரன்..."

"ஆனால் எதிரி."

"என் உயிரைக் காப்பாற்றியவன்."

"அவனா?"

"ஆம். பகைவனிடமும் கருணை காட்டுபவன். லட்சத்தில் ஒருவன்."

"நமது வீரம்..?" என்று எதையோ சொல்ல முற்பட்ட க்ஷத்ரபனைத்திரும்பிப் பார்த்த நாகபாணன், "பௌர்ணமியன்று தீர்மானிக்கப்படும்" என்றும் சொன்னான்.

"பௌர்ணமி அன்றா?" என்று வினவினான் க்ஷத்ரபன் ஆவலுடன்.

"ஆம். அன்று சங்கீதத்துடன் சமர் துவங்கும், சங்கீதம் உன் மகளுடையது. சமர் உன் சமர்த்தைப் பொறுத்தது" என்ற நாகபாணன் இகழ்ச்சி நகை கொண்டு க்ஷத்ரபனை நோக்கினான்.

zeevaa

அத்தியாயம் 30

பதினேழு நாட்கள்!

மகாக்ஷத்ரபனான நாகபாணன் சொற்களைக் கேட்டும் இகழ்ச்சிப் புன்முறுவலைக் கண்டும் எந்தவித சமாதானத்தையும் அடையாத க்ஷத்ரபன், கட்டிலில் ரண காயங்களுடன் கிடந்த தனது தலைவனை நீண்ட நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டே நின்றான். பிறகு மெதுவாக, ''மகாக்ஷத்ரபர் இரும்பு மனம் இளகிக்கொண்டு வருவதாகத் தெரிகிறது'' என்று சொன்னான்.

நாகபாணன் லேசாக நகைத்து, ''தன்னந்தனியாக வந்து தானாகவே சிக்கிக்கொண்ட எதிரியைத் திரும்பிச் செல்ல அனுமதித்தது தவறு என்கிறீர்?'' என்று வினவினான்.

''சிக்கிய எதிரியைத் தப்ப விடுவதால் எந்த அனுகூலம் கிடைக்கும்?'' என்று க்ஷத்ரபன் வினவினான்.

''திடீர் படையெடுப்பு ஏற்பட்டிருக்காது'' என்றான் நாகபாணன் சிரித்துக் கொண்டே.

''திடீர் படையெடுப்புக்கு ஏற்பாடு செய்யச் சாதவா கனனுக்கு அவகாசம் ஏது?''

''எந்த ஏற்பாடும் செய்யாமல் நம்மிடம் தலையைக் கொடுக்கச் சாதவாகனனை முட்டாள் என்று நினைக் கிறீரா?''

zeevaa

zeevaa

இதற்குச் சில விநாடிகள் பதில் சொல்லாத க்ஷத்ரபன், ''சிக்கிய எதிரியைக் கொன்றிருந்தால் என்ன ஆகும்?'' என்று வினவினான் கொடுமை நிறைந்த குரலில்.

''சரித்திரம் நம்மைக் கொன்றுவிடும்'' என்று நாகபாணன் பெருமூச்செறிந்தான். மேலும் சொன்னான்: ''நான் சரித்திரத்தில் எப்படியும் ஜீவிப்பேன். எப்படி ஜீவிப்பேன் என்பதுதான் கேள்வி. சிக்கிய எதிரியைப் போகவிட்டுச் சமரில் நேருக்கு நேர் சந்தித்து வெற்றியடைந்த, அல்லது களத்தில் வீர மரணமடைந்த, வீரனாக ஜீவிக்கலாம். அல்லது என்னைக் காப்பாற்றிய எதிரி தனியாகச் சிக்கியபோது கொலை செய்து நன்றி கெட்ட கொலைகாரனாகச் சரித்திரத்தில் இடம் பெறலாம். பிந்திய நிலையை அடைய நான் விரும்பவில்லை. இது உமக்குப் புரியாது க்ஷத்ரபரே! ஆகையால் போர் வரும்போது அதற்குச் சித்தமாக இரும்... இன்னும் இரண்டு நாட்களில் அமாவாசை வருகிறது. ஆகவே உமக்குப் பதினேழு நாட்கள் இருக்கின்றன. அதற்குள் ஆற்றைக் கடக்கவும் எதிரியைச் சந்திக்கவும் ஏற்பாடுகள் செய்யும்'' என்றும் உத்தரவிட்டான்.

க்ஷத்ரபன் நீண்ட நேரம் சிந்தனை வசப்பட்டுச் சாகர்களின் தலைவன் முன்பே தலை குனிந்து நின்றான். கௌதமிபுத்ரன் தனது பிடியிலிருந்து தப்பிச் சென்றதையும், தப்பிச் செல்ல மகாக்ஷத்ரபன் அனுமதித்ததையும் அவனால் ஜீரணிக்க முடியவில்லை. போரில் தர்மா தர்மங்களைப் பார்ப்பது கெட்டிக்காரத்தனமல்லவென்று உண்மையாகவே நம்பினான் க்ஷத்ரபன். சிந்து நதி தீரத்தில் நடந்த போர்களில் தயை தாட்சண்யம் பார்க்காமல் ஆயிரக்கணக்கானவர் களைக் கொன்ற க்ஷத்ரபனுக்கு, மன்னிப்பு, கருணை முதலிய குணங்களைப் புரிந்து கொள்வது மிகவும் கஷ்டமாயிருந்தது. பல பயங்கரமான போர்களை நடத்தி சாம்ராஜ்யத்தை

zeevaa

அமைத்த மகாக்ஷத்ரபனான நாகபாணன் குணம் பெரும் மாறுதலுக்கு உட்பட்டு விட்டதை நினைத்து உள்ளூர பொருமிக் கொண்டு நின்ற க்ஷத்ரபனை நோக்கிய நாகபாணன், ''க்ஷத்ரபரே! நான் சிறிது உறங்குகிறேன். நீர் போய்ப் படைகளை நிலப் பாதுகாப்புக்கும் கடல் பாதுகாப்புக்கும் வகுத்து அமைத்து நிறுத்தும், மீண்டும் நாளைக்காலையில் பேசுவோம்'' என்று கூறிக் கண்களை மூடினான். க்ஷத்ரபன் அதற்குமேல் அங்கு நிற்கவில்லை. திடீரென்று அவன் மனத்தில் ஒரு யோசனை பளிச்சிடவே அதை நிறைவேற்றத் தீர்மானம் செய்து கொண்டு வெளியே சென்றான்.

அவன் வெளியே சென்றதும் சாக இன மருத்துவர் இரு பணிப் பெண்களுடன் உள்ளே நுழைந்து நாகபாணன் காயங்களைப் பரிசோதித்தார். ''ஏற்கனவே காயங்களுக்கு மருத்துவம் நடந்திருக்கிறது. வெறும் களிம்புதானே கேட்டார்கள் என்று நினைத்தேன். கோட்டையில் இன்னொரு மருத்துவர் இருக்கிறாரா?'' என்று வியப்புடன் வினவினார் நாகபாணனை நோக்கி.

''இங்கு உங்களுக்குப் போட்டி யாரும் கிடையாது. மருத்துவம் பார்த்தவர் எதிர்க்கரையிலிருந்து வந்தார்'' என்றான் நாகபாணன் இதழ்களில் இளநகை கூட்டி.

''இங்கு நானிருக்க அங்கிருந்து மருத்துவரை வரவழைப் பானேன்?'' என்று கேட்ட மருத்துவரின் முகத்தில் வருத்தம் தெரிந்தது.

''நான் வரவழைக்கவில்லை. அவராகத்தான் வந்தார்'' என்றான் நாகபாணன்.

''நீங்கள் காயமுற்றிருப்பது அவருக்கு எப்படித் தெரியும்?'' மருத்துவர் விசாரித்தார்.

zeevaa

''அவர்தான் என்னைத் தூக்கி வந்தார்.''

''உங்களைத் தூக்குவதானால் நல்ல பலசாலியாயிருக்க வேண்டும்.''

''நல்ல பலசாலிதான்.''

''வீரனாகவும் இருக்க வேண்டும்''

''வீரன்தான்.''

''வீரமும் மருத்துவமும் எப்படிச் சேர முடியும்?'' என்ற மருத்துவர், ''சரி, எப்படியிருந்தாலென்ன? உங்களைப் பிழைக்க வைத்துவிட்டான்'' என்றும் சொன்னார். அவர் குரலில் வருத்தம் ஒலித்தது.

''கவலைப்பட வேண்டாம். வெகு சீக்கிரம் உங்கள் மருத்துவத்துக்கு நிரம்ப வேலை இருக்கும்'' என்ற நாகபாணன், ''பதினேழு நாட்கள் பொறுத்திருங்கள்'' என்று கூறினான்.

மருத்துவருக்கு ஏதும் புரியாததால் குழப்பமடைந்தார். ''பதினேழுநாட்களில் என்ன விசித்திரம் ஏற்பட்டு விடும்?'' என்று கேட்டார் குழப்பத்துடன்.

''போர் நடக்கும். கையிழந்தவர், காலிழந்தவர், எலும்பு முறிந்தவர் இப்படிப் பலவிதமான பேர்கள் தங்களுக்குக் கிடைப்பார்கள். காயமுற்றவர் தொகையும் கணிசமா யிருக்கும். போதும் போதுமென்னும் வரையில் நீங்கள் மருத்துவம் செய்யலாம். குற்றுயிரும் குலை உயிருமாகப் பலர் கிடைப்பார்கள்'' என்றான் நாகபாணன்.

அதைக் கேட்ட மருத்துவர் முகத்தில் சந்துஷ்டி நிலவியது. ''நன்று நன்று'' என்று மருத்துவர் கொக்கரித்து, ''அனை வரையும் நான் கவனித்துக் கொள்கிறேன். அப்புறம் நீங்கள் கவலைப்பட அவசியமிருக்காது'' என்று குதூகலித்தார்.

zeevaa

“மருத்துவரே...” என்று மெள்ள அழைத்தான் நாகபாணன்.

“பிரபு!”

“நமது வீரர்கள்!”

“என்னிடம் வந்த பிறகு யாரும் கவலைப்பட அவசியமில்லை.”

“கைகால் முறிந்தவர்களை என்ன செய்வீர்?”

“கைகால் போனவர்கள் இருந்தாலென்ன, போனாலென்ன? இருப்பதால் அவர்களுக்கும் கஷ்டம், நமக்கும் தொல்லை” என்று எரிச்சலுடன் பேசினார் மருத்துவர்.

நாகபாணன் உள்ளூர நகைத்துக் கொண்டான். “இதற்கு முன்பு போர் முனைகளில் இருந்திருக்கிறீர்களா?” என்று வினவினான்.

“அங்கு எனக்கென்ன வேலை?” என்று மருத்துவர் வினவினார்.

“வேறெங்கு வேலை?”

“போர் முனையிலிருந்து தப்பி வந்தவர்களை நான் கவனித்துக் கொள்வேன்.”

“அப்படியா?”

“ஆம். வெகு காயமுற்று வந்தால் இரும்பைப் பழுக்கக் காய்ச்சிக் காயத்தில் சொருகுவேன்.”

இதைக் கேட்ட நாகபாணனே அச்சமுற்று, “ஐயோ!” என்று குரலெழுப்பினான்.

“குருதியை நிறுத்த காயத்திலுள்ள ரத்தக் குழாய்களைத் தீய்த்துவிட வேண்டும். அதற்கு வழி நான் சொன்னதுதான், ரண சிகிச்சையின் முதல் படியே இது தான்” என்று மருத்துவர் விளக்கினார்.

zeevaa

''மருத்துவரே! ஒரு சந்தேகம்'' என்றான் நாகபாணன்.

''கேளுங்கள் பிரபு'' என்றார் மருத்துவர்.

''மருத்துவரே...!''

''உம்?''

''போரில் இறப்பது நல்லதா, ரணசிகிச்சையில் பிழைப்பது நல்லதா?''

மருத்துவர் நாகபாணன் கட்டிலின் முகப்பில் உட்கார்ந் தார். ''பிரபு! எனது சொந்தக் கருத்தைச் சொல்லட்டுமா?'' என்று மெதுவான குரலில் ரகசியம் பேசுபவர் போல் கேட்டார்.

நாகபாணன் கண்கள் நகைத்தன. ''சொல்லுங்கள் மருத்துவரே'' என்று உதடுகள் பேசின.

மருத்துவர் நாகபாணனை நோக்கிக் குனிந்து, ''பிரபு! ரண சிகிச்சையில் பிழைப்பதை விட போரில் இறந்து விடுவதே மேல். நானாயிருந்தால் அந்தக் காய்ச்சின இரும்புக்குப் பலியாவதை விட தற்கொலை செய்து கொள்வேன். இதையெல்லாம் உத்தேசித்துதான் நமது பெரியவர்கள் வீர சொர்க்கமடைய, அதாவது போரில் மடிந்துவிட, உபதேசம் செய்திருக்கிறார்கள்'' என்று மருத்துவ இம்சையையும், வீர தத்துவத்தையும் இணைத்து விளக்கம் கொடுத்தார்.

நாகபாணன் அத்துடன் உரையாடலை முடித்து, ''மருத்துவரே! எது எப்படியிருந்தாலும் காயமடைந்த வீரர்களுக்கு மருத்துவம் பார்ப்பது நமது கடமை. அதற்கு வேண்டிய இட வசதி மருந்து வசதி சகலத்தையும் செய்து கொள்ளுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

மகாக்ஷத்ரபனுக்குத் தலைவணங்கி வெளியே சென்ற மருத்துவர், போர் என்றால் சண்டையில் பிராணன்

zeevaa

போகாதவர்களெல்லாம் தனது பிராணனை வாங்குவார்களென்பதை அறிந்திருந்ததால் அதற்காக ஏற்பாடுகளைப் பெரிய அளவில் செய்யத் தமது மருத்துவத்தைக் கோட்டையின் பெரிய மாளிகையொன்றில் வைத்துக் கொள்ள முடிவு செய்தார். அதைப்பற்றி க்ஷத்ரபரைச் சந்தித்துப் பேசவும் செய்தார். மகாக்ஷத்ரபர் சொன்னதைப் பற்றி விளக்கி, ''நமது தரப்பில் காயப்படுபவர் கணிசமாக இருக்குமோ?'' என்று வினவினார்.

''யார் சொன்னது அப்படி?'' என்று சீறினான் க்ஷத்ரபன்.

''யாரும் சொல்லவில்லை, சிகிச்சைக்கு மருந்து சித்தம் செய்ய வேண்டுமே என்பதற்காகக் கேட்டேன்'' என்றார்.

''அதிகமாகக் காயமடைந்தவர் இருக்க மாட்டார்கள்'' என்றான் க்ஷத்ரபன்.

''ஏன்? போய்விடுபவர் அதிகமாக இருக்குமோ?'' என்று வினவினார் மருத்துவர்.

''அதைப் பற்றி உமக்கென்ன கவலை?'' என்று சீறினான் க்ஷத்ரபன்.

''போகிறவர்களைப் பற்றி யாருக்குத்தான் கவலை? இருந்தால்தான் தொல்லை'' என்று அலுத்துக் கொண்ட மருத்துவர், ''எதற்கும் மருந்துகளையும் மருத்துவ மனையையும் நான் சித்தப்படுத்துகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

அவர் சென்றதை வெறுப்புடன் பார்த்த க்ஷத்ரபன் ஆற்றங் கரையை நோக்கி நடந்தான். அங்கிருந்த படகொன்றை எடுத்துக்கொண்டு எதிர்க்கரைக்குச் சென்று கரையை அடைந்ததும் முந்திய இரவில் வந்து கடற்கரையை அடைந்த மலைப்பகுதியில் பாசறை அமைத்திருந்த படைகளை நோக்கிச் சென்றான். அங்கு படைகள் தங்கியிருந்த இடத்தில்

zeevaa

படைகளைக் காணோம். பாசறை இருந்த இடமும் சூன்யமாயிருந்தது. அங்கு நின்ற வண்ணமே சுற்றுமுற்றும் நோக்கினான் க்ஷத்ரபன். எங்கும் யாரும் தென்படவில்லை. சிறிது நேரத்திற்கெல்லாம் எட்ட இருந்த மலைச்சரிவில் இரு புரவிகள் வேகமாக வந்து மரங்களின் மறைவில் நின்றன. அதிலிருந்து குதித்த இருவர் யாரென்று தெரியாததால் மெள்ள அவர்கள் இருந்த மறை விடத்தை நோக்கிச் சென்றான். ஒரு புதரின் மறுபுறத்திலிருந்து இருவர் பேசும் குரல் கேட்டது. ''ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுக்கக் கூடாதா?'' என்று ஒலித்தது சித்தரஞ்சனியின் குரல்.

''இன்னும் பதினேழு நாட்கள் இருக்கின்றன. அத்தனை நாள் எப்படிப் பொறுக்க முடியும்?'' என்று ஒலித்தது சாதவாகனன் குரல்.

அவர்களுக்குத் தானிருப்பதை அறிவுறுத்த ஓர் அடி எடுத்து வைத்த க்ஷத்ரபன் சட்டென்று நின்று விட்டான். அதே சமயத்தில் மரக்கலங்களை இயக்கி வந்த யவனன் கடல் மணலில் நடந்து வந்துகொண்டிருந்தான். என்னதான் சாதவாகனனிடம் தனக்குப் பகையிருந்தாலும் தனது வளர்ப்பு மகளும் ஆபத்திலிருக்கிறாள் என்ற நினைப்பால் சட்டென்று இன்னொரு மறைவுக்குச் சென்றான் க்ஷத்ரபன். தன்னை எதிர்நோக்கி இருக்கும் ஆபத்தை உணராமல் பாழுங்கிணற்றை நோக்கி வரும் யானைபோல் நடந்து மதோன்மத்தமாக நடந்து வந்தான் யவனன்.

zeevaa

அத்தியாயம் 31

சபலமும், சபதமும்!

ஸஹ்யாத்ரி மலைத் தொடரின் தாபோல் மலைப் பகுதி மாலைக் கதிரவனின் மஞ்சள் கதிர்களால் ஊடுருவப்பட்டு மயக்கமான நிலையை சிருஷ்டித்திருந்தது. காட்டுமர இலைகளின் இடுக்குகளில் புகுந்த கதிர்கள் சிலை பாறைகளுக்கும் மரத்தின் புஷ்பங்களுக்கும் தனி மெருகைப் பூசியதால் புஷ்பங்களும் பாறைகளும் தங்கள் இயற்கை வண்ணங்களை லேசாக மாற்றிக் கொண்டாலும் அந்த மாற்றமே அவற்றுக்குத் தனிச் சிறப்பை அளித்திருந்தது. கடலின் அலைகள்கூட அந்த மஞ்சள் நிறக் கதிர்களை ஏற்று நீல நிறத்தை லேசாக மாற்றிக் கொண்டதல்லாமல் தரையில் மோதிய தங்கள் திரைகளையும் முழு வெளுப்பிலிருந்து மஞ்சளும் வெளுப்பும் கலந்த புது மெருகைக் கூட்டியதால், மஞ்சள் பூசி அரைவாசி குளித்துவிட்ட பருவ மங்கையின் உடல் நிறத்தைப் பெற்றிருந்தன அலை ஓரத் திரைகள்.

இந்தச் சமயத்தில் வெகுவேகமாகப் புரவிகளில் வந்திறங்கிய சித்தரஞ்சனியும் கௌதமிபுத்ரனும் நன்றாக மறைக்கப்பட்டிருந்த ஒரு புதரின் அருகாமைக்கு வந்ததும் சாதவாகன வாலிபன் அந்தச் சித்தினியைத் தனது வலிய கைகளால் மிக முரட்டுத்தனமாகக் கட்டினான். அந்த முரட்டுத் தழுவலால் தனது உடல் வலியெடுத்த போதிலும் அந்த வலியும் தனக்குத் தேவையாயிருப்பதை உணர்ந்த

zeevaa

சித்தரஞ்சனி. ''சற்றுப் பொறுங்கள்'' என்று கூறி அவன் கைகளிலிருந்து விலக முயல்வதுபோல் பாசாங்கு செய்தாள்.

அந்தப் பாசாங்கை உணரவே செய்த சாதவாகனன், ''எதற்காகப் பொறுக்க வேண்டும்?'' என்று கேட்டு அவள் கழுத்தில் தனது உதடுகளைப் புதைத்தான்.

அவள் உடலெங்கும் விவரிக்க இயலாத உணர்ச்சிகள் மின்னல் வேகத்தில் பாய்ந்து சென்றதாலும், கௌதமி புத்ரன் கைகள் மேலும் அவள் உடலைப் பல இடங்களில் ஆராய்ச்சி செய்யத் தொடங்கியதாலும் அவள் உணர்ச்சி வேகத்தில் திணறிக்கொண்டே, ''ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுக்கக் கூடாதா?'' என்று மெதுவாகக் கேட்டாள். அப்படிக் கேட்டாளேயொழிய அவனை ஆறப் பொறுக்க விடாமல், தனது இடது கையால் தனது தோளில் புதைந்து கிடந்த அவன் தலையின் குழல்களைக் கோதினாள். குழலின் ஒரு பகுதியைத் தூக்கி அவன் பின் கழுத்தில் தனது இதழ்களையும் ஊன்றினாள்.

அந்த நிலையில் முகத்தை அவள் கழுத்தில் புரட்டிய அந்த வாலிபன், ''பொறுக்கவா சொல்கிறாய் சித்தரஞ்சனி!'' என்று மெதுவாகக் கேட்டான். காதுக்கருகில் ஒலித்த அந்தச் சொற்கள் அவள் வேகத்தைத் தூண்டவே செய்ததால் அவள் பதிலேதும் சொன்னாளில்லை. அவள் கைகள் அவன் கழுத்தை இறுக வளைத்தன. பிறகு தலையைப் பிடித்துக் கழுத்திலிருந்து கீழே இழுத்தன வேகமாக. இப்படி மார்புக்கருகில் இழுக்கப்பட்ட அவன் தலை அவள் மீது புரண்டது. ''சித்தரஞ்சனி! சித்தரஞ்சனி!'' என்று உதடுகள் முணுமுணுத்தன.

''என்ன?'' என்ற ஒற்றைச் சொல் மந்திரத்தை மோகனாஸ்திரமாக வீசினாள் சித்தரஞ்சனி.

zeevaa

அந்தக் கேள்வியே அழைப்பு என்பதைப் புரிந்து கொண்ட கௌதமிபுத்ரன், ''நமக்குத்தான்...'' என்று ஏதோ துவங்கினான்.

''உம்?'' தழுதழுத்த குரலில் கேட்டாள் அவள்.

''திருமணம் ஆகிவிட்டதே?'' என்றான் அவன் ஏதோ புதிய விஷயத்தைச் சொல்பவன்போல்.

''ஆம்.''

''ஆகவே... ஏன்...''

''என்ன... ஏன்?''

''காக்க வேண்டும்?''

இதற்கு அவள் பதில் சொல்லவில்லை. அவளை அப்படியே கௌதமிபுத்ரன் கைகளில் தூக்கிக் கொண்டான். நிதானமற்ற புத்தியுடன் அவளைப் பாறையில் கிடத்தி அவள் பக்கத்தில் உட்கார்ந்தான்.

''இன்னும் வெளிச்சம் இருக்கிறது'' என்றாள் அவள் வேறு திக்கில் பார்வையைச் செலுத்தி.

அவன் அவள் முகத்தைத் தன்னை நோக்கித் திரும்பி, ''இருந்தாலென்ன?'' என்று கேட்டான்.

அவள் நகைத்தாள். ''இது சரியல்ல'' என்றாள் மெதுவாக.

''எது சரியல்ல?'' என்று முரட்டுத்தனமாய்க் கேட்ட சாதவாகனன் அவள் கச்சையைக் சிறிது தளர்த்த முயன்றான்.

அவள் அவனது கைகளை இறுகப் பிடித்தாள். ''இங்கு யாராவது வரலாம்'' என்று சுட்டிக் காட்டினாள்.

''யாரும் வரமாட்டார்கள்.''

''ஏன்?''

zeevaa

“நாகபாணன் தனது படைகளை மலையின் வடபுறத்துக்கு அனுப்பிவிட்டான்.”

இதைக் கேட்ட சித்தரஞ்சனி நகைத்தாள். “உங்களுக்கு நன்றாக உதவியிருக்கிறார் நாகபாணர்!” என்று ஏளனக் குரலில் சொன்னாள் சித்தரஞ்சனி நகைப்பின் ஊடே.

இந்த உரையாடலைப் புதரின் மறுபுறத்திலிருந்து கேட்ட க்ஷத்ரபன் திகைத்தான். தங்கள் படைகள் எதுவும் அங்கில்லாத காரணத்தைப் புரிந்து கொண்டதால், “நாகபாணர் இதை ஏன் என்னிடம் சொல்லவில்லை?” என்றும் தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். அதனால் பக்கத்திலிருந்த செடியைச் சற்று அழுத்திப் பிடித்ததால் அதன் கிளையொன்று பட்டென்று உடையவே இன்னொரு பக்கத்திலிருந்த சித்தரஞ்சனி, “அதைக் கேட்டீர்களா?” என்று வினவி எழுந்திருக்கவும் முயன்றாள்.

அவளை மெதுவாக எழுந்திருக்கவிட்ட சாதவாகனன் தானும் மெதுவாக எழுந்திருந்து புதரைச் சற்றே விலக்கிப் பார்த்தான். கடற்கரையில் யவனன் வேகமாக நடந்து கொண்டிருப்பதைக் கவனித்ததும், “நாகபாணனுக்குப் புது மரக்கலங்களைக் கொண்டு வந்த யவனன் வருகின்றான்” என்று சித்தரஞ்சனியிடம் சுட்டிக் காட்டினான்.

“இவனைத்தானே நீங்கள் கட்டிப் போட்டு இவன் உடையில் மகாக்ஷத்ரபரின் மரக்கலம் சென்றீர்கள்?” என்று கேட்டாள் சித்தரஞ்சனி.

“ஆம். இவனேதான்.”

“எப்படித் தப்பினான்?”

“நானே அவனைத் தப்ப வைத்தேன்.”

“ஏன்?”

zeevaa

''அசந்திருப்பவனுடன் போரிடுவதும் கொல்வதும் அதர்மம் என்ற காரணத்தால்.''

''நீங்கள் நாகபாணரிடம் சிக்கியிருந்தால் என்ன ஆகும் தெரியுமா?'' என்று சித்தரஞ்சனி வினவினாள்.

''தெரியும். இன்று என்னைத் தப்ப வைப்பதே நாகபாணர்தான்'' என்றான் சாதவாகனன்.

இதைக் கேட்ட சித்தரஞ்சனி பிரமை பிடித்த கண்களைச் சாதவாகனன் மீது திருப்பினாள். நாகபாணன் அப்படி யாருக்கும் தயை காட்டுபவன் அல்லவென்பதை உணர்ந் திருந்த சிவரஞ்சனிக்குச் சாதவாகனன் சொன்னதை நம்பவே முடியவில்லை. அவள் கண்களிலிருந்த அவநம்பிக்கையைக் காணவே செய்த சாதவாகனன், ''சித்தரஞ்சனி! எந்த வீரனிடத்திலும் நல்ல குணம் உண்டு. மனித சிருஷ்டியே நல்லதும் பொல்லாததும் கலந்ததுதான். நாகபாணன் கொடுமைகள் பல இழைக்கலாம். ஆனால் மகாவீரன். சிக்கிய எதிரியை அழிக்க அவன் இஷ்டப்படவில்லை. ஆகவே என்னைப் போக விட்டான்'' என்று நடந்த விவரங்களைச் சொன்னான்.

அவன் விவரித்ததைக் கேட்ட சித்தரஞ்சனி பெரும் வியப்புக்குள்ளானாள். ''சரி, வாருங்கள். நாம் போவோம்'' என்று தனது புரவியை நோக்கி நடந்தாள்.

''இரு போகலாம். அதோ வரும் யவனனுடன் பேசி விட்டு வருகிறேன்'' என்றான் சாதவாகனன்.

''என்ன பேசப் போகிறீர்கள்?'' என்று சித்தரஞ்சனி கேட்டாள்.

''அவனைத் திருப்பி மரக்கலத்துக்கு அனுப்பி விடுகிறேன்.''

zeevaa

''ஏன்?''

''நாகபாணர் என்னுடன் தர்மப் போர் நிகழ்த்த விரும்புகிறார். அதற்கு நான் இடைஞ்சலாக இருக்கக் கூடாது. அவருடைய தலைவர்களை அழித்து அவரை பலவீனப் படுத்தக் கூடாது'' என்று அவன் சொல்லிக் கொண்டேயிருக் கையில் புதரை விலக்கிக் கொண்டு, க்ஷத்ரபன் அவர்கள் முன்பு தோன்றினான்.

''க்ஷத்ரபா!'' என்று வியப்புடன் கேட்டான் சாதவாகனன்.

''தந்தையா!'' என்றாள் சித்தரஞ்சனி.

ஆம் என்பதற்கு அறிகுறியாகத் தலையசைத்த க்ஷத்ரபன், ''சாதவாகனரே! மகாக்ஷத்ரபருக்குச் சமதையான எதிரி நீர். நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் அதர்மமாக அழிக்க இஷ்டப்படவில்லை. நீங்கள் சொல்லுங்கள். நான் யவனனை அழைத்துச் செல்கிறேன்'' என்று கூறிக்கொண்டேயிருக் கையில் மலைச்சரிவு கடல் மணலைத் தொடுமிடத்தில் ஒரு விபரீதம் நடந்துகொண்டிருந்தது. எந்த எதிர்பார்ப்பையும் எதிர்பார்க்காமல் மதோன்மத்தனாய் நடந்து கொண்டு வந்த யவனனை அக்கம்பக்கங்களிலிருந்து நான்கு வீரர்கள் தாக்கினார்கள். எதிர்பாராத அந்தத் தாக்குதலால் யவனன் ஒரு விநாடி திகைத்தானானாலும், அடுத்த விநாடி தன்மீது பாய்ந்த வீரர்களை உதறிவிட்டு, கையில் வாளை உருவிக் கொண்டு நாலைந்து வீரர்களையும் ஒருவனாகச் சமாளிக்க முயன்றான். சிறிது நேரத்தில் இரண்டு மூன்று வீரர்கள் காயமடைந்த பின்னும் சண்டை ஓயவில்லை. யவனன் தனது வீரர்கள் அந்த இடத்தை வீட்டு அகற்றப்பட்டார்க ளென்பதை அறியாததால், ''யாரங்கே! வாருங்கள். இந்தக் கொசுக்களை அடித்துப் போடுங்கள்'' என்று கூவினான். அவன் சொற்களைக் கேட்டதுபோல் பத்துப் பதினைந்து வீரர்கள் வரத்தான் செய்தார்கள். அவர்கள் தலைவனும்

zeevaa

பெரிய ஒரு புரவியை மலைச்சரிவில் துரத்தி வந்தான். யவனன் இருந்த இடத்தை அணுகியதும் பெரிதாக நகைத்த தலைவன், ''யவனர் தலைவனே! வாளைக் கீழே போட்டுவிடு'' என்று உத்தர விட்டான்.

வந்தவீரர்களை நோக்கித் தனது கண்களைச் சுழல விட்ட யவனன் தனது வீரர்கள் அல்லவென்பதைப் புரிந்து கொண்டதால் தலைவனை நோக்கி, ''காஷ்டானனா! இவர்கள் யார்?'' என்று வினவினான்.

''எனது வீரர்கள்.''

''அப்படியானால் நமது வீரர்கள் தானே?''

''இல்லை.''

''இல்லையா?'' யவனன் குரலில் பிரமிப்பு உச்ச ஸ்தாயியிலிருந்தது.

''இல்லை!''

''நீ யார்?''

''நான் சாதவாகனர் படைகளுக்குத் தலைவன்.''

''கட்சி மாறிவிட்டாயா?''

''ஆம். நல்ல கட்சிக்கு மாறிவிட்டேன்'' என்ற காஷ்டானன் தனது வீரர்களை நோக்கி, ''ஏன் நிற்கிறீர்கள்? இவனைப் பிடித்துக் கட்டுங்கள்'' என்று கூவினான்.

அடுத்த உத்தரவுக்கு வீரர்கள் காத்திருக்கவில்லை. யவனன் மீது பாய்ந்து அவனைக் கீழே தள்ளினார்கள். காஷ்டானன் கீழே விழுந்து கிடந்த எதிரி மீது தனது கையிலிருந்த பெரிய வேலை உயர்த்தினான்.

யவனன் தனது உயிர் போய்விட்டது என்று எண்ணிய சமயத்திலும் பயங்கரமாக நகைத்தான். அந்த நகைப்பை

zeevaa

அடுத்துக் காஷ்டானன் கையிலிருந்த ஈட்டி பலமான ஒரு வாளால் அகற்றப்பட்டது. அதை அகற்றியவண்ணம் புரவியில் அமர்ந்திருந்த சாதவாகனன். ''காஷ்டானனா! தனிப்பட்ட எதிரியைக் கொல்வது அதர்மம். அவனை விட்டு விடு'' என்று கூறிவிட்டு க்ஷத்ரபனை நோக்கி, க்ஷத்ரபரே! யவனனை அவன் படைகளிருக்குமிடம் அழைத்துச் செல்லுங்கள். பௌர்ணமியன்று சந்திப்போம்'' என்று கூறி விட்டுத் தனது புரவியைத் திருப்பிக்கொண்டு சித்தரஞ்சனி பின்தொடர மலைக்காட்டுக்குள் ஏறிச் சென்றான். வேண்டாவெறுப்பாக க்ஷத்ரபனையும் யவனனையும் விட்டுத் தனது வீரர்களுடன் திரும்பினான் காஷ்டானன்.

அவர்கள் அனைவரும் சென்றபிறகு தனிமையில் விடப் பட்ட க்ஷத்ரபனும் யவனனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு நின்றனர். ''இந்தப் போர் முறை எனக்குப் புரியவில்லை'' என்றான் யவனன்.

''உமக்குப் புரியாது, இது பாரதத்தின் போர்முறை'' என்றான் க்ஷத்ரபன். மதிப்பு நிறைந்த கண்களுடன் மலை மீது சென்று கொண்டிருந்த சாதவாகனனைப் பார்த்தான். யவனன் பிரமித்து நின்றான்.

இதற்குள் இருளும் நன்றாக மூண்டுவிடவே சித்த ரஞ்சனியின் புரவியோடு தனது புரவியை இணைத்த சாதவாகனன், ''சித்தரஞ்சனி! உன் தகப்பன் சமயத்தில் வந்து சேர்ந்தான்'' என்றான் எரிச்சலுடன்.

''உங்களுக்கொரு உதவி புரிந்தார்.''

''என்ன உதவி?''

''உங்கள் தாயிடம் அனுமதி பெற்ற பிறகுதான் என்னை அடைவதாகச் சபதம் செய்திருப்பதாகச் சொன்னீர் களல்லவா?''

''ஆம் சொன்னேன்.''

zeevaa

"அதை மீற இருந்தீர்களா...?"

"உம்!"

"என் தந்தை வந்து உங்கள் சபதத்தைக் காப்பாற்றினார்" என்ற சித்தரஞ்சனி நகைத்தாள். அடுத்த விநாடி புரவியிலிருந்து இரு வலிய கைகளால் தூக்கப்பட்ட அந்த வனதேவதை சாதவாகனன் புரவி மீது சாதவாகனனுக்கு முன்பு உட்கார்ந்திருந்தாள். புரவி தனது முழு வேகத்தைக் காட்டியது. புரவி மட்டுமல்ல, அவளுக்குப் பின்னால் அவள் உடலுடன் ஒட்டி உட்கார்ந்திருந்த சாதவாகனனும் ஒரு கையில் கடிவாளத்தை ஏந்திய வண்ணம் இன்னொரு கையால் அவளை இறுக்கித் தனது வேகத்தையும் காட்டினான். புரவி வாயு வேகத்துடன் மலைக் காட்டினூடே விரைந்தது. சாதவாகனன் உணர்ச்சிகளும் எல்லை மீறி விரைந்துகொண்டிருந்தன. அவன் சபலம் சபதத்தைச் சுக்குநூறாக உடைத்துக் கொண்டிருந்தது.

zeevaa

அத்தியாயம் 32

இருவர் திட்டங்கள்!

சித்தரஞ்சனியை அவள் புரவியிலிருந்து தூக்கித் தனது புரவியில் தனக்கு முன்பாக உட்கார வைத்துக்கொண்டும், இடதுகையால் அசுரத்தனமாக அவளை அணைத்துக் கொண்டும், வலது கையால் புரவியின் கடிவாளங்களை இழுத்தும் தளர்த்தியும் கொடுத்துக் கொண்டும் சாதவாகனன் சென்றதையும், அரசகுமாரியின் புரவி கடிவாளம் நிலத்தில் புரண்டு வரச் சாதவாகனன் புரவிக்கு ஈடு கொடுத்து ஓடியதையும் இரண்டொரு விநாடிகளே பார்த்த க்ஷத்ரபன், யவனனுடன் மலைப்பகுதியின் வேறு பகுதிக்குச் சென்று விட்டானானாலும், அவன் எண்ணம் மட்டும் தனது வளர்ப்பு மகளையும் அவளைத் தூக்கிச் சென்ற புது மாப்பிள்ளையையும் சுற்றியே சுழன்று கொண்டிருந்ததால் பக்கத்தில் வந்த யவனனுக்கு அரைகுறையாகவே பதில் சொல்லிக்கொண்டு நடந்தான்.

சென்ற நாட்களில் நடந்த நிகழ்ச்சிகளுள் நாகபாணன் திட்டங்களில் எத்தனை திருப்புமுனைகள் ஏற்பட்டு விட்டன என்பதை நினைத்து வியப்புக் கடலில் மூழ்கியிருந்தான் க்ஷத்ரபன், 'சித்தரஞ்சனியின் இனிமைக் குரலை உபயோகப் படுத்தி அவளைப் பிசாசாக்கித் தாபோல் மலைவாசிகளை வெளியேறச் செய்து அந்த மலைப்பகுதியைத் தங்கள் படைகளால் ஆக்கிரமித்து அங்கு தளம் அமைக்கத்

zeevaa

திட்டமிட்ட மகாக்ஷத்ரபரின் திட்டம் தவிடுபொடியாகி விட்டதை உணர்ந்து க்ஷத்ரபன், 'சித்தரஞ்சனியை நாங்கள் பிசாசாக்கி மலைவாசிகளை விரட்டினோம். ஆனால் அந்தப் பிசாசையே காதலியாக்கிக் கொண்டு மலைவாசிகளைத் திரும்பவும் வரவழைத்தான் சாதவாகனன். உதவிக்காக மற்ற மரக்கலங்களும் அதிக வீரர்களும் வந்தார்கள் நமக்கு. சாதவாகனனோ தனது படைப் பிரிவு ஒன்றை வரவழைத்து அவற்றைக்கொண்டே மலைவாசிகளையும் வீரர்களாக்கி விட்டான். இவன் வந்த நாளிலிருந்து மகாக்ஷத்ரபருக்கு உறக்கமில்லை. எனக்கும் தொல்லை' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். இதற்கிடையே தான் சித்தரஞ் சனிக்காக ஏற்பாடு செய்திருந்த காஷ்டானன் எதிரியின் படைத் தலைவனாகி விட்டதை நினைத்து, ''சீ! வெட்கங் கெட்டவன்'' என்று அவனைத் தூற்றினான். ''காஷ்டானன் மானமுள்ளவனாயிருந்தால் தனக்கு மனைவியாகப் போகிறவளை ஸ்வீகரித்துக் கொண்ட எதிரியிடம் கடைசி வரை போரிட்டு மடியவல்லவா வேண்டும்?'' பழைய மாப்பிள்ளையைக் கண்டிக்கவும் செய்தான்.

இந்தக் கடைசி வார்த்தைகளை க்ஷத்ரபன் சற்று வாய் விட்டுச் சொல்லவே, அவன் பக்கத்தில் நடந்துகொண்டிருந்த யவனன் கேட்டான், ''யார் எதற்காக மடிய வேண்டும்?'' என்று.

''காஷ்டானன்'' என்றான் சலிப்புடன் க்ஷத்ரபன்.

''எதிரியின் படைத்தலைவனா?'' என்று கேட்டான் யவனன்.

''ஆம்.''

''அவன். சாகவேண்டுமென்றால் போரில்தானே சாக வேண்டும்?''

zeevaa

''இல்லை, தற்கொலை செய்துகொள்ளலாம்.''

''எதற்காக?''

''அவனுக்கு மனைவியாக வேண்டியவள் இன்னொருத்தனிடம் போய்விட்டாள்.''

''அதனாலென்ன? அவளுக்கு இவரிடம் பற்றில்லாதிருக்கலாம். இது ஒரு பெரிய விஷயமா?''

க்ஷத்ரபன் உடனடியாக பதில் சொல்லவில்லை. கடைசியில், ''யவனரே! நீர் நினைப்பதுபோல் அத்தனை அல்ப விஷயமல்ல'' என்று சொன்னான்.

''ஏனில்லை! கேவலம் பெண் விஷயந்தானே? ஒருத்தி போனால் இன்னொருத்தி கிடைக்கிறாள். அவள் போனால் என்ன? ராஜ்யமா போய்விட்டது?'' என்று சர்வ சகஜமாகப் பேசினான் யவனன்.

''ஒரு பெண் நம்மைவிட்டுப் போனால் ராஜ்யமல்ல, சாம்ராஜ்யமே போய்விட்டது போலத்தான்'' என்றான் க்ஷத்ரபன்.

''பெண் அனுபவப் பொருள். ஒன்று போனால் வேறொன்று கிடைக்கும். அதற்காகப் பிராணனையா விட முடியும்?'' என்று யவனன் கேட்டான்.

க்ஷத்ரபன் சிறிது சிரித்துவிட்டு, ''உங்கள் நாட்டில் ஹெலன் என்ற பெண்ணுக்காகப் பெரும் போரே நடந்ததாமே?'' என்று வினவினான்.

''நடந்தது. அதைவிட முட்டாள்தனம் வேறில்லை. எத்தனை பேர் சாவு?'' என்று அலுத்துக் கொண்டான் யவனன்.

அவன் தத்துவத்தை நினைத்து வியந்தான் க்ஷத்ரபன். பெண்ணுக்கு அதிக மகத்துவத்தை அளிப்பது தவறு என்ற

zeevaa

யவனன் எண்ணம் அனைவருக்கும் இருந்தால் எத்தனை போர்கள் தவிர்க்கப்பட்டிருக்கும் என்றும் சிந்தித்தான். என்ன சிந்தித்தாலும் பெண் இனத்தை இழிவாக நினைக்க வராததால் மேற்கொண்டு பேச இஷ்டப்படாத க்ஷத்ரபன், ''யவனரே! வாரும், உமது படைகளைப் பார்வையிடுவோம்'' என்று அவனை அழைத்துத் தாபோல் மலையின் வடக்குப் பகுதிக்குச் சென்றான்.

மலையின் சரிவுகளிலும் குகைகளிலும் பாசறை அமைத்துத் தாங்கியிருந்த யவன வீரர்கள் சுமார் இரண்டா யிரம் பெயரைப் பார்த்தான். பயங்கரமான வாள்களும், வேல்களும் அக்கம் பக்கத்திலிருக்கப் படுத்துக் கிடந்த அந்த இரண்டாயிரம் வீரரும், எந்த நிலையிலும் போராடக் கூடியவர்கள் என்பதை உணர்ந்த க்ஷத்ரபன், தங்கள் வெற்றியில் சிறிது நம்பிக்கையும் கொண்டான். இந்த இரண்டாயிரம் வீரர்களும் தங்களிடமிருக்கும் மூவாயிரம் வீரர்களும் இணைந்தால் வலு மிக அதிகமென்று தீர்மானித் தாலும் சாதவாகனன் போர்த் தந்திரம் எப்படியிருக்கு மென்பது புரியாததால் வெற்றி பற்றிச் சிறிது சந்தேகமும் கொண்டான்.

இப்படி அவன் சிந்தனையில் இறங்கியிருந்த சமயத்தில் நாகபாணனும் கோட்டையில் அடுத்து வரும் போரைப் பற்றிச் சிந்தாக்கிராந்தனாயிருந்தான். யவனர்களும் சாகர்களும் கொண்ட தனது படை பலத்தைப் பற்றி அவனுக்குச் சிறிதும் சந்தேகமில்லை. அஞ்சன்வேல் கோட்டையிலிருந்து படகுகள் மூலம் மூவாயிரம் போர் வீரரை முகத்துவாரத்தில் இறங்கச் செய்துவிட்டு, யவனர் படையை மலையின் வடக்குப் பகுதியிலிருந்து குறுக்கே வராவிட்டால் இரண்டுக்கும் இடையில் சாதவாகனன் படைகளைச் சிக்க வைக்கலாமென்று தீர்மானித்தான். அப்படி முகத்துவாரத்

zeevaa

திலிருந்து மலைமேல் ஏறிச் செல்லும் படையையும் மலைமீதிருந்தே குறுக்கே வரும் யவனர் படையையும் ஏக காலத்தில் சமாளிப்பதானால் இருபுறத் திலும் சாதவாகனன் போராட வேண்டியிருக்கு மென்றும், அப்படிப் போராடினால் அவன் படை இரண்டாகப் பிரிய நேரிடுமென்றும் கணக்குப் போட்டான் நாகபாணன், 'அப்படி ஏற்படும்போது தான் ஒரு சிறிய படையுடன் மலையின் மேற்புறத்திலிருந்து இறங்க முடியுமானால் சாதவாகனனை முறியடிக்கலாம்' என்று தீர்மானித்தான். இப்படியொரு திட்டத்தை வகுத்துக் கொண்டதால் சற்று மன நிம்மதியுடன் படுக்கையில் புரண்டான் மகாக்ஷத்ரபன்.

அந்த இரவில் சாதவாகனனும் புரண்டான். பஞ்சணை மீதல்ல, கருங்கல் தரையில், கரடு முரடான ஒரு மலைப் பாறையில், அருகேயிருந்த சித்தரஞ்சனியை அவன் கைகள் அழுந்தப் பிடித்திருந்தன. அந்தக் கட்டழகியின் சரீரத்தைக் கட்டாந்தரை துன்புறுத்தாதிருப்பதற்காகவோ என்னவோ அவள் உடலைத் தனது மார்புமீது தூக்கிப் போட்டிருந்தான் கௌதமிபுத்ரன். அவள் அவன் மார்புமீது செயலற்றுக் கிடந்தாள். ''சித்தரஞ்சனி'' என்று மெதுவாக அழைத்தான் சாதவாகனன்.

''ஏன்?'' என்றாள் சித்தரஞ்சனி மிக மெதுவாக.

''மரக்கட்டை போலிருக்கிறாயே?'' என்றான் சாதவாகனன்.

''இரும்பைக்கூட வளைக்க நீங்களிருக்கிறீர்களே...'' என்றாள் அவள்.

''இரும்பை வளைக்கலாம். மரக்கட்டையை வளைக்க முடியாது'' என்றான் சாதவாகனன்.

zeevaa

அவள் மெதுவாக நகைத்து அவன் மார்புமீது கிடந்த படியே தனது கைகளால் அவனது கழுத்தை வளைத்தாள். அவன் கைகளும் அவளைச் சுற்றி வந்தன. அந்த நிலையில் அவன்கேட்டான், ''மரக்கட்டையில் கொடி முளைக்குமா?'' என்று.

''மரக்கட்டையைக் கொடி வளைக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்றாள் சித்தரஞ்சனி.

''கொடி கொத்தி ஏறக் கொழுகொம்பு வேண்டுமென்பது பழைய கதை; பழைய நியாயம். மரக்கட்டையே மலர்க் கொடியாக மாறுவது புதுக் கதை; புது நியாயம்'' என்ற சாதவாகனன், கழுத்தைச் சுற்றிய அவள் கைகளைத் தடவினான்.

அவள் உணர்ச்சி வெள்ளத்தில் மிதக்கத் தொடங்கினாள். அவன் கைகள் சோதித்த இடங்கள் அவளை நிலை கொள்ளாது அடித்தன. அவள் இருமுறை முனகினாள். சற்று அவன் உடல்மீது தவழ்ந்து அவன் காதுக்கருகில், தனது உதடு களைக் கொண்டு சென்று, ''பிரபு! நீங்கள் அரண்மனைப் பஞ்சணையில் படுக்க வேண்டியவர், இந்தப் பாறையில் படுத்திருக்கிறீர்களே!'' என்றாள்.

அவன் அவள் கழுத்தில் தனது உதடுகளைப் புதைத்து ''சித்தரஞ்சனி! நீ உடனிருந்தால் பாறையும் பஞ்சணை யாகும். நீ இல்லாவிட்டால் பஞ்சணையும் பாறை யாகும்'' என்று சொற்களை உதிர்த்தான். அத்துடன் ஒருமுறை பெருமூச்செறிந்தான். ''சித்தரஞ்சனி! ஒரு நாள் ஓடிவிட்டது. இன்னும் பதினாறு நாட்கள். பதினேழாவது நாள் நமக்கு இரு வெற்றிகள்'' என்றான்.

''இரண்டு வெற்றிகளா?'' தனது உதடுகளை அவனது உதடுகளுடன் இணைத்தாள்.

zeevaa

''ஆம் சித்தரஞ்சனி! இங்கு நான் நாகபாணனைச் சந்திக்கும்போது எனது சேனாதிபதி வஜ்ரபாகு இன்னொரு படைப்பிரிவுடன் வடக்கு கொங்கணத்தில் நுழைந்து விடுவான். நாகபாணன் ஒரே சமயத்தில் அரசின் இரு பகுதிகளை இழப்பான். பிறகு சிந்துநதிப் பகுதியில் அவனை முறியடிப்பதோ சாக சாம்ராஜ்யத்தை நிர்மூலமாக்கு வதோ பெரிய காரியமல்ல'' என்று பேசினான்.

சித்தரஞ்சனி பிரமித்தாள். ''என்ன திட்டத்துடன் வேலை செய்திருக்கிறீர்கள்?'' என்றாள் மகிழ்ச்சியுடன்.

''எதையும் திட்டமில்லாமல் நான் செய்வதில்லை சித்த ரஞ்சனி. தாபோல் மலைப் போர் எனது முதல் வெற்றி. பிறகு தொடர்ச்சியாக வெற்றிதான்'' என்றான் திட்டமாக.

''இந்தப் போருக்கும் திட்டமிட்டுவிட்டீர்களா?'' என்று கேட்டாள் சித்தரஞ்சனி.

''அந்தத் திட்டம் வகுக்கப்பட்டு நாட்கள் பல ஆகின்றன. அதை நிறைவேற்றும் சிறிய பணிதான் பாக்கி'' என்றான் சாதவாகனன். அத்துடன் சித்தரஞ்சனியைத் தனது இரு கைகளாலும் தூக்கித் தனக்கு மேலே குழந்தையைப் பிடிப்பது போலப் பிடித்துக்கொண்டு, ''அடி சித்தரஞ்சனி! உன்னைச் சந்தித்த பிறகு எனது புத்தி மிகக் கூர்மையுடன் வேலை செய்கிறது'' என்றான்.

அவள் அவனைப் பார்த்தபடி நகைத்தாள். ''ராட்சஸனா யிருக்கிறீர்களே? இறக்குங்கள் என்னை'' என்று சொன்னாள் நகைப்பின் ஊடே.

அவளை மெதுவாகத் தனது பக்கத்தில் இறக்கிவிட்டுத் தான் எழுந்து உட்கார்ந்தான். பிறகு அவள் உடலைத் தலையிலிருந்து கால்வரை தடவிக் கொடுத்து. ''சித்த ரஞ்சனி! நீதான் இந்தத் தாபோல் மலை என்று வைத்துக் கொள். இதுதான் எனது போர்த்திட்டம்'' என்று கூறி விட்டுத்

zeevaa

திட்டத்தை அவள் அழகிய சரீரத்தில் சிருஷ்டித்துக் காட்டினான்.

எத்தனை நுட்பமாக அவன் போர்த் திட்டத்தை வகுத்திருக்கிறான் என்பதை அறிந்த சித்தரஞ்சனி அவன் புத்திக் கூர்மையை வியந்தாள். இப்படியொரு புருஷன் தனக்குக் கிடைத்ததைப் பற்றிப் பெருமகிழ்ச்சியும் நியாய மான கர்வமும் கொண்டாள். அவள் படுத்தபடியே கேட்டாள், ''நான் தாபோல் மலையென்றால் என் மீதா போர் நடக்கப் போகிறது?'' என்று வினவினாள் நாணப் புன்முறுவல் காட்டினாள். அவன் நகைத்துவிட்டுச் சொன்னான், ''இந்தப் போருக்குப் பிறகு அது. அதுவும் தர்மப் போர் தான். அறத்தின் வழியில்தான் நடக்கும்'' என்று. அத்துடன் அவளைப் பார்த்து, ''இன்று நீ பேச்சுக் கொடுத்து என் ஆணையைக் காப்பாற்றிவிட்டாய். நீ உத்தமி'' என்றான் சாதவாகனன். அவன் குரலில் அன்பும் பெருமிதமும் இணைந்து பிரவாகித்தது.

zeevaa

அத்தியாயம் 33

வெற்றி மணி

சித்தரஞ்சனியின் அழகிய உடல்மீது தனது போர்த் திட்டத்தை விளக்கிக் காட்டிய கௌதமிபுத்ரன் தனது கைவிரலால் அவளது கழுத்திலிருந்து வயிறுவரை ஒரு கோட்டை இழுத்துக் காட்டி, ''இப்படி ஒரு சிறு படையை மலைமீதிருந்து கீழே இறக்கப் பார்க்கிறான் நாகபாணன். இன்னொரு படை உன் காலிலிருந்து அதாவது கடற்புறத் திலிருந்து மேலே ஏறிவரும். இன்னொரு பகுதி உன் இடையி லிருந்து குறுக்கே வந்து வயிறு இருக்கும் பகுதியுடன் இணையும். இந்த மூன்று பகுதிகளுக்குள் நம்மை சிக்க வைப்பது நாகபாணன் திட்டம்'' என்று கூறினான்.

அவன் ஆள்காட்டி விரல் தனது உடலில் பல பகுதிகளில் பட்டதால் சிறிது உணர்ச்சி வசப்பட்டாலும் அடுத்து வரும் போரிலிருந்த சிரத்தையின் காரணமாக, ''நாகபாணன் மனத்திலிருக்கும் திட்டம் உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று வினவினாள்.

''நாகபாணனிடம் நம்மைவிட படைபலம் அதிக மிருக்கும். ஏற்கனவேயுள்ள படையைத் தவிர மரக் கலங்களில் புதுப்படைகளை வரவழைத்திருக்கிறான். அவற்றை மலைச்சரிவின் வடக்குப் பகுதியில் நிறுத்தியிருக் கிறான். இன்னொரு பகுதி கோட்டையிலிருக்கிறது. கோட்டைப் படைகள் நேராக நதிக்குக் குறுக்கில் வந்தால்

zeevaa

மலைவாசிகள் அம்பும் வேலும் எறிந்து கொன்றுவிடுவார்கள். ஆகவே அப்படை சிறிது சிறிதாக இரவு நேரத்தில் ஆற்றின் ஓட்டத்தோடு ஓட்டமாக முகத்துவாரத்துக்கு அனுப்பப் படும். அங்கிருந்து பல பிரிவுகளாக மலைமீது ஏறிவரும். அப்பொழுது வடக்குப் பகுதியிலிருக்கும் யவனர் படை மலை மார்க்கத்தில் குறுக்கே வந்து இணையும், அதற்கு நடுவில் நாம் சிக்கினால் இருபக்கங்களிலும் கத்தரிக்கப் படுவோம். அதே சமயத்தில் நாகபாணன் ஒரு சிறு படையை மலை மீது நாம் அறியாமல் பின்புறமாக ஏற்றி உச்சியிலிருந்து இறக்கி பின்புறமாகத் தாக்குவான். அனுபவசாலியான ஒரு படைத்தலைவன் செய்யக்கூடியது இதுதான்'' என்று எதிரியின் திட்டத்தை எடுத்து விளக்கினான்.

இதைக் கேட்ட சித்தரஞ்சனி பிரமித்தாள். சிறிதும் அப்பழுக்கில்லாத இந்தத் திட்டத்தை எதிர்ப்பதும் தடுப்பதும் அத்தனை சுலபமல்ல வென்றும் நினைத்தாள். அதனால் கேட்டாள், ''இந்தத் தாக்குதலை நாம் எப்படிச் சமாளிப்பது?'' என்று.

''எதிரி எதிர்பார்ப்பதை நாம் செய்யக்கூடாது. அவன் முற்றும் எதிர்பாராத விதத்தில் அவன் படைகளை நாம் சமாளிக்க வேண்டும்'' என்றான் சாதவாகனன்.

''எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள்?'' என்று வினவினாள் சித்தரஞ்சனி. அவள் குரலில் கவலை பெரிதும் ஒலித்தது.

சாதவாகனன் அவள் கவலையைக் கண்டு புன்முறுவல் செய்தான். ''சித்தரஞ்சனி: என்னிடம் உனக்கு நம்பிக்கை யில்லை போல் தெரிகிறது'' என்றான் புன்முறுவலின் ஊடே.

''எதிரியின் படை பலம்...'' என்று நீட்டினாள் சித்தரஞ்சனி.

''அதிகம்'' நகைப்பொலி தோன்ற பதில் சொன்னான் சாதவாகனன்.

zeevaa

‘‘அதனால்தான் கவலையாயிருக்கிறது.’’

‘‘சித்தரஞ்சனி! படைபலம் மாத்திரம் போர்களில் வெற்றியளிப்பதில்லை. புத்தி பலமும் வேண்டும். அதற்கு இங்கு குறைவில்லை.’’

அவன் ஏதோ தற்பெருமை பேசுகிறான் என்று நினைத்த சித்தரஞ்சனி அன்று அவன் அவளைத் தழுவிய போது அவனை இரும்புப் பிடியாகத் தழுவினாள். ‘அன்றிரவில் அடிக்கடி பெருமூச்சும் விட்டாள். மறுநாள் முதற்கொண்டு அவன் காட்டிய அலட்சியமும் அவள் கவலையைப் பன்மடங்கு அதிகப்படுத்தியதால் வேதனை நிரம்பிய உள்ளத்துடன் நாட்களைக் கழித்தாள்.

மறுநாள் காலையிலிருந்து படையெடுப்பைப்பற்றி சாதவாகனன் அடியோடு மறந்துவிட்டதுபோல் தோன்றியது அவளுக்கு. மறுநாட்காலை எழுந்து நீராட்டத்தை முடித்துக் கொண்ட சாதவாகனன் பூஜாரிக்குச் சொல்லியனுப்பி அவருடன் ரகசியமாகப் பேசினான். அன்று முதல் தாபிலே சுவரருக்கு அபிஷேக ஆராதனைகள் தடபுடலாக நடந்தன. சாதவாகனன் உத்தரவுப்படி காஷ்டானன் ஆலயமணியைப் பெரிதாக அடித்தான். சண்டிகா தேவிக்கும் பூஜைபுனஸ் காரங்கள் அமர்க்களமாக நடந்தன. இதையெல்லாம் கவனித்த நாகபாணன் ஒற்றர்கள் விஷயத்தை நாகபாணனுக்குச் சொல்ல, ‘‘சாதவாகனன் தெய்வ பலத்தால் நம்மை முறியடிக்கப் பார்க்கிறான் போலிருக்கிறது!’’ என்று ஏளனமாகக் கூறினான்.

எப்படியும் இந்தப் பூஜைகள் இரண்டு மூன்று நாட்களுக்கு மேல் நீடிக்காதென்றும் படை அணிவகுப்பு நடக்குமென்று நினைத்த நாகபாணன் ஏமாற்றமே அடைந்தான்.

நாள் செல்லச் செல்ல பூஜை மணிதான் அதிகமாகக் கேட்டதேயொழிய போர்ச் சங்குகளோ தாரைகளோ

zeevaa

ஒலிக்கவில்லை. இரவிலும் தாபிலேசுவரர் கோவிலுக்கருகில் பூர்ண நிம்மதி நிலவியதை கவனித்த நாகபாணன், 'போர் நடக்குமா? சாதவாகனன் சித்தரஞ்சனியை அழைத்துக் கொண்டு ஓடிவிடுவானா?' என்று சந்தேகமும் கொண்டான். 'சே சே! ஒரு நாளும் அவன் ஓடமாட்டான். மகாவீரன். தன்னந்தனியாக இங்கு வந்தவன்' என்று சாதவாகனனுக்கு அனுகூலமாக சமாதானமும் சொல்லிக் கொண்டான். இருப்பினும் சாதவாகனன் போக்கு அவனுக்குப் புரியாத புதிராகவே இருந்தது.

அவனுக்கு மட்டுமல்ல. அவனது படைவீரரும் ஏதும் புரியாமல் திண்டாடினார்கள். சாதவாகனன் அடிக்கடி மலைக்குப் பின்புறத்தில் நிறுத்தப்பட்டிருந்த தனது படைப் பிரிவுக்குச் சென்று அங்கிருந்த தலைவர்களுடன் அதிக நேரத்தைக் கழித்து வந்தான். சில வேளைகளில் சித்தரஞ் சனியையும் அழைத்துச் சென்று, ''நீ இந்தப் படைகளுக்குத் தலைவியானதால் இவர்களை நடத்துவது உன் பொறுப்பு'' என்று கூறினான்.

''படைகளை நடத்தி எனக்குப் பழக்கமில்லையே'' என்றாள் சித்தரஞ்சனி.

''பௌர்ணமியன்று போர் துவக்கத் திட்டமிட்டிருக் கிறான் நாகபாணன். அன்று நள்ளிரவில் நீ பழையபடி பிசாசாகிவிடு. பழைய சப்த ஸ்வர ராகத்தை இறைந்து பாடு. மும்முறை பாடு. அது முடிந்ததும் உனது புரவியில் ஏறித் தாபிலேசுவரர் கோவிலுக்கு வந்து கதவை மூடித் தாளிட்டுக் கொள்'' என்று கூறினான்.

அவன் போக்கு அவளுக்கு அடியோடு புரியவில்லை யென்றாலும் காஷ்டானன் மந்த புத்திக்கு அது விளங்கியது. காஷ்டானனை மறுநாள் சந்தித்து, ''தளபதி! நமது படைகளை நான்காகப் பிரித்துவிடு. எதிரி படைகள் வரும் போது அவை நான்கு பிரிவுகளாக எதிரியைத் துண்டிக்கட்டும். நான் ஒரு

zeevaa

சிறு பிரிவுடன் தாபிலேசுவரர் கோவிலுக்கு அருகில் இருப்பேன். நான் சங்கு எடுத்து ஊதும்போது பொழுது புலரும். போரும் முடிந்துவிடும்'' என்று தனது திட்டத்தைத் தெரியப்படுத்தினான்.

பௌர்ணமி தினமும் நெருங்கிக் கொண்டிருந்தது. கோட்டைப்பகுதியிலும் கடற்பகுதியிலும் எதிரி நடமாட்டம் அதிகமாயிருந்தது. எதிரி வீரர்கள் அணிவகுத்து நடந்தார்கள். வீரர்களுடன் கூடிய படகுகள் நதியின் முகத்துவாரத்துக்கும் மரக்கலங்களுக்கும் போய் போய் வந்து கொண்டிருந்தன. பௌர்ணமி தினமும் வந்தது. முதல் ஜாம முடிவிலேயே எதிரியின் படகுகள் முகத்துவாரத்துக்குத் துரிதமாக வரத் தொடங்கின. அவற்றிலிருந்து இறங்கிய வீரர்கள் மலையடிவாரத்தில் மறைந்தனர். வடக்குப் பகுதியிலிருந்த யவனர் படை அணிவகுத்துப் பெரும் சுவர்போல் சித்தமாக நின்றிருந்தது. இரண்டாவது ஜாமம் முடிந்து நடுநிசியும் வந்தது. பூர்ண சந்திரன் ஜகஜ்ஜோதியாக வானவீதியிலும் வலம் வரத் தொடங்கினான். மலையிலும் கடலிலும் அவன் வெண்மை ஒளி படர்ந்தாலும் அன்று என்னமோ ரம்மியமான சூழ்நிலைக்குப் பதில் ஒரு பயங்கரத்தையே சிருஷ்டித்திருக்கிறது. அந்த சமயத்தில் சித்தரஞ்சனியின் மென்மையான குரல் இசைக்கத் தொடங்கி வரவர அதன் ஒலி வன்மை பெற்று மலைப்பகுதி முழுவதும் ரீங்காரம் செய்தது.

அந்த ரீங்காரம் விளைவித்ததையொட்டி இரு சங்கங்கள் ஒலிக்க நாகபாணன் படை மலையடிவாரத்திலிருந்து க்ஷத்ரபன் தலைமையில் மலைமீது ஏறத் துவங்கியது. பாதிப் புரவிப்படையும் பாதி காலாட்களாகவுள்ள படையை க்ஷத்ரபன் நடத்திச் சென்றான். முதலில் காலாட்களை ஏறச் சொல்ல அவர்களுக்குப் பின்புறத்தில் புரவிப் படையின் வேலெறிவோரைப் பாதுகாப்பாக ஏவினான். அதே

zeevaa

சமயத்தில் மலையின் வடக்குப் பகுதியிலுள்ள யவனர் படை யவனன் தலைமையில் குறுக்கே புகுந்தது. சற்று தூரம் எந்த இடைஞ்சலின்றி இரு படைகளும் முன்னேறின. இரண்டும் சந்திக்க சிறிது தூரமே இருந்த சமயத்தில் சித்தரஞ்சனி மூன்றாம் முறை தனது குரலைப் பெரிதாக உரத்திப் பாடினாள்.

அந்தப் பாட்டு முடியுமுன்பாகவே எங்கிருந்தோ படைகள் மலைமீதிருந்து இறங்கும் ஒலி கேட்கவே யவனன் தனது படையைச் சிறிது நிறுத்தினான். நிறுத்தி அவன் ஒழுங்காக அணிவகுப்பதற்குள்ளாகவே சாதவாகனின் படை நான்காகப் பிரிந்து அவன் படையை மூன்று இடங்களில் மூன்று பகுதிகள் ஊடுருவ, ஒரு பகுதி மட்டும் மலையேறி வந்த க்ஷத்ரபன் படைமீது பாய்ந்தது.

மலைமீதிருந்து வந்த புரவிப் படைகளின் வேகத்தாலும் உக்கிரத்தாலும், இத்தகைய தாக்குதலை எதிர்பாராததாலும் யவனன் படை சிறிது திணறினாலும் சமாளித்துக் கொண்டு திரும்பித் தாக்கியது. யவன வீரர்களில் பெரும் கேடயங் களும் கனமான வாட்களும் ஓரளவு சேதத்தை விளைவித் தாலும் சாதவாகனர்களின் வேல்களுக்கும் வில்லவர்கள் தொடுத்த கணைகளுக்கு இலக்கானதால் யவனர்களைக் கலைத்துப் பிரித்து நாசமாக்கத் தொடங்கின. பிரிக்கப்பட்ட படை திரும்பவும் சேர முடியாததால் தனித்தனியே போரிட்டன. மலைமீது ஏறிவந்த காஷ்டானன் படையும் தங்கள்மீது திடீரெனப் பாய்ந்த காஷ்டானன் படையால் சிறிது தடைப்பட்டாலும் காஷ்டானன் மீதிருந்த கோபத்தில் க்ஷத்ரபன் தனது உத்தேச மாப்பிள்ளையைக் கொல்லும் நோக்கத்துடன் தனது புரவிமீது வாளைப் பெரிதாக ஓங்கிக்கொண்டு வந்தாலும் திடீரென எங்கிருந்தோ பாய்ந்த வேல் அவன் மார்பில் தைக்க அவன் புரவியிலிருந்து சாய்ந்து விட்டான்.

zeevaa

இப்படித் தனது படை கலகலத்துப் போனதை மலை மீதிருந்த தனது சிறிய படையுடன் பார்த்த மகாக்ஷத்ரபனான நாகபாணன் சித்தரஞ்சனி தாபிலேசுவரர் ஆலயத்தை நோக்கித் தன்னந்தனியாக ஓடி வருவதைக் கண்டு தனது படையுடன் அவளை மறித்துத் தூக்கிப் போக இறங்கினான். சித்தரஞ்சனி வெகுவேகமாகக் கோவிலுக்குள் ஓடிக் கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டாள். ''அந்தக் கதவை உடையுங்கள். நமது திட்டங்களுக்கு யமனாக வந்த அந்தப் பிசாசை ஒழித்து விடுகிறேன்'' என்று இரைந்த வண்ணம் கோவிலுக்கு முன்பு தோன்றினான் நாகபாணன். அவன் வீரர்களில் இருவர் இறங்கி அவன் ஆணையை நிறைவேற்ற முற்பட்டபோது எங்கோ இருந்து, ''கோவிலை நாசம் செய்பவன் நாசமாகிவிடுவான்'' என்று ஒரு குரல் எழுந்தது. அடுத்த கணத்தில் தனது பெரிய புரவிமீது கௌதமிபுத்ரன் போர்க்கோலம் பூண்டு நாகபாணனை நோக்கி வந்தான். அடுத்த விநாடி தாபிலேசுவர் கோவில் ரணகளமாயிற்று சாதவாகனன் வீரர்கள் நாகபாணன் வீரர்களைச் சூழ்ந்து கொண்டார்கள். சாதவாகனனை நோக்கி நாகபாணனே எதிர்த்து வந்தான். அவன் வேகமான வாளை தனது வாளால் அனாயாசமாகத் தடுத்தான். கௌதமிபுத்ரன் தனக்கு உதவ வர முயன்ற வீரர்களை, ''இந்தச் சண்டையில் எங்கள் மத்தியில் யாரும் வரவேண்டாம்'' என்று உத்தரவிட, மற்ற வீரர்கள் அகலவே இருவரும் உக்கிரமாகப் போரிட்டார்கள். பல போர்களில் வாகை சூடிய நாகபாணன் தனக்கு இணையாக ஒரு வீரனைச் சந்தித்துவிட்டதால் உற்சாகத் துடனும் உக்கிரத்துடனும் போராடினான். அவன் உக்கிரம் அனைத்தையும் நிதானத்துடன் போரிட்ட சாதவாகனன் சந்தித்தான். சாதவாகனன் வாள் தனது வாளின் பாதுகாப்பை மீறி அடிக்கடி தனது கண்முன் தோன்றுவதைக் கண்டான் நாகபாணன். மிகத் தந்திரமும் சாமர்த்தியமும் கொண்ட

zeevaa

எதிரியைத் தான் சந்தித்துவிட்டதை உணர்ந்து கொண்டான் மகாக்ஷத்ரபன். அந்த ஆத்திரத்தில் மும்முரமாக வாளைச் சுழற்றியவன் இரண்டாவது முறை சாதவானகன் வாள் தனது வாளை அந்தரத்தில் பறக்கவிட்டதைக் கண்டதும், ''சாதவாகனா! முடித்துவிடு என்னை'' என்று கூவினான்.

பதிலுக்கு சாதவாகனன் தனது சங்கை எடுத்து ஊதவே மலைவாசிகள் சாரி சாரியாக வந்தனர். மலையெங்கிலும் ஆங்காங்கு நடந்த போர் மெள்ள குறையத் தொடங்கின. மலை பல இடங்களிலும் செவ்வாடை புனைந்து நின்றது.

காஷ்டானன், யவனன் படைப் பிரிவுகள் பெரும் சேதத்துடன் பின்வாங்கிக் கொண்டிருந்தன. ''நாகபாணா! போர் முடிந்து விட்டது. மீதிப் படைகளை அழைத்துக் கொண்டு நீ போய்விடு. இங்கு உன் தளத்துக்குப் பதில் நான் தளம் அமைக்கிறேன். இங்குள்ள மலைவாசிகள் இனி சுதந்திரமாக வாழ்வார்கள்'' என்று கூறினான் சாதவாகனன்.

போர் நிறுத்தத் தாரைகள் எங்கும் சப்திக்க சித்தரஞ்சனி கோவில் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். நாகபாணன் அவளை ஒரு முறை நோக்கினான் உஷ்ணத் துடன். பிறகு நிராயுதபாணியாக மலைச்சரிவில் இறங்கிச் சென்றான். கோவிலின் படிகளில் ஏறிச் சென்ற சாதவா கனனைப் பெருமிதத்துடன் நோக்கினாள் சித்தரஞ்சனி. அடுத்த கணம் நாகபாணன் வாளால் காயப்படுத்தப் பட்டிருந்த அவன் உடலை அனைவர் முன்னிலையிலும் தழுவினாள்.

பொழுது மெதுவாகப் புலர்ந்தது. முண்டங்களும் குற்றுயிரும் குலை உயிருமாகக் கிடந்த சடலங்களும் நிரம்பி குருதியால் சிவந்த ஆடை பூண்ட தாபோல் மலையை அருணனும் தனது சிவந்த கிரணங்களால் தழுவி அதிகச் சிவப்பை எங்கும் பரப்பினான்.

zeevaa

போரின் கோலம் எங்கும் விரிந்து கிடந்தது. படகுகள் துறைமுகத்தில் யாருமில்லாத அனாதைகளாக ஆடிநின்றன. மலையில் காயமுற்றோரின் அவலக் குரல் எங்கும் கேட்டது. படுகாயமடைந்த புரவிகள் இட்ட ஓலம் பயங்கரத்தை விளைவித்தது. சற்று நேரத்திற்கெல்லாம் தாபிலேசுவரர் ஆலயமணி அடித்தது. எது நின்றாலும் பூஜை நிற்கக் கூடாது என்று பூஜாரி பூஜாதிரவியங்களுடன் ஆலயத்துக்குள் நுழைந்தார். அடுத்து பூஜை மணியை அடித்தார். அதுவே தங்கள் வெற்றிமணி என்று சித்தரஞ்சனி நினைத்தாள், பூரித்தாள்.

zeevaa

அத்தியாயம் 34

கடைசிக் கோரிக்கை!

அருணோதய காலத்தில் எங்கும் அவலக் குரல் கேட்டுக் கொண்டிருந்த சூழ்நிலையில் சாதவாகனன் அருகில் நின்ற சித்தரஞ்சனி, பூஜாரி பூஜை பாத்திரங்களுடன் தாபிலேசுவரர் கோவிலுக்கு வந்ததைப் பார்த்து, ''இது பூஜை செய்யும் சமயமா?'' என்று உள்ளூர நினைத்தாலும் அதை வாய்விட்டுச் சொல்லாமல் பெருமூச்செறிந்தாள். அவள் பெருமூச்சின் காரணத்தை உணர்ந்துகொண்ட சாதவாகனன், ''எதை முன்னிட்டும் பூஜை நிற்க முடியாது சித்தரஞ்சனி. வெற்றியோ தோல்வியோ மரணமோ ஜீவிதமோ எல்லாமே அவனிஷ்டப்படி நடக்கிறது'' என்று விளக்கம் சொன்னான்.

சித்தரஞ்சனி அப்பொழுதும் சமாதானத்தை அடைந்தாள் இல்லை. எதிரிகள் நாசத்துக்கும் தோல்விக்கும் சாதவாகனன் திட்டங்களே காரணமென்பதை உணர்ந்திருந்ததால், ''இந்தப் போர்த் திட்டத்தைக் கடவுளா தயாரித்தார்? படைகளை அவரா நடத்தினார்?'' என்று விசாரித்தாள்.

''அவனன்றி ஒரணுவும் அசையாது என்று நீ கேள்விப் பட்டதில்லையா சித்தரஞ்சனி?'' என்று வினவினான் சாதவாகனன்.

''கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படியானால் நீங்கள் திட்டம் வகுப்பானேன்? அவனே வகுத்திருக்கலாமே'' என்றாள் அவள்.

zeevaa

''அவன்தான் வகுத்தான்.''

''என் உடலில் திட்டம் தீட்டியது அவனா!''

''ஆம்.''

''உங்கள் புத்தி?''

''அதை இயக்குபவனும் அவன்தான்.''

''அப்படியானால்?''

''புத்தி கர்மவசப்படி இயங்குகிறது. கர்மாவைத் திசை திருப்பும் சக்தி ஆண்டவனைத் தவிர வேறு யாருக்கும் கிடையாது'' என்று தத்துவம் பேசிய சாதவாகனன். ''சித்தரஞ்சனி! நான் இங்கு தன்னந்தனியாக வந்தேன். நாகபாணன் அப்பொழுதே என்னை அழித்திருக்கலாம் அழிக்க அவன் புத்தி வேலை செய்யவில்லை. உன்னைப் பிசாசாக்கி மலைவாசிகளைப் பயமுறுத்தி விரட்டிவிட்டான். கோழைகள், சாமான்ய ஜனங்கள் என்று நினைத்தவர்கள் வீரர்கள் ஆனார்கள். இந்த தாபோல் மலையில் நடந்த விசித்திரங்களே ஆண்டவன் இருக்கிறான், அவனால் இந்த உலகம் அசைகிறது என்பதை நிரூபித்தன. நான் அவன் ஆயுதங்கள். அவ்வளவுதான்'' என்றான்.

சித்தரஞ்சனி மேற்கொண்டு பேசவில்லை. இந்த வேதாந்த விசாரத்துக்கு அவள் சித்தமாக இராததால், ''அடுத்து ஆண்டவன் என்ன செய்யப் போகிறான்?'' என்று வினவினாள்.

''கடமைக்கு நம்மைத் தூண்டிவிடப் போகிறான்'' என்று சதகர்ணி சொல்லிக் கொண்டிருக்கையில் உள்ளே மணியைப் பெரிதாக அடித்தார் பூஜாரி.

பூஜாரி காட்டிய தீபாராதனையில் ஜொலித்த தாபிலேசுவரர் பிம்பத்தை வெளியிலிருந்தே தரிசித்து

zeevaa

கைகூப்பிச் சிரம் தாழ்த்திய சாதவாகனன், ‘‘ஈசுவரனை வணங்கு சித்தரஞ்சனி. அவனில்லாவிட்டால் இன்று நாமில்லை’’ என்று கூற அவளும் வணங்கினாள். மீண்டும் பூஜாரி அடித்த கோவில் மணி மலைப் பகுதியெங்கும் ஊடுருவிச் சென்றதால் அதைத் தங்கள் வெற்றி மணியாகக் கருதி உள்ளம் பூரித்த சித்தரஞ்சனி, ‘‘தாபிலேசுவரர் உங்கள் வெற்றிக்கு மணியோசை காட்டுகிறார்’’ என்றாள்.

சாதவாகனன் முகத்தில் பரிபூர்ணமான சாந்தம் நிலவியது. ‘‘எனது வெற்றியாவது? அவன் வெற்றிக்கு அவன் அடித்துக் கொள்கிறான் மணியை’’ என்று சொன்னான்.

இதனால் எரிச்சல் கொண்ட சித்தரஞ்சனி, ‘‘பூஜாரி தான் அடிக்கிறார் மணியை’’ என்று கடுமையாகவே பேசினாள்.

சாதவாகனன் கேட்டான், ‘‘பூஜாரியின் கை எப்படி ஆடுகிறது?’’ என்று.

‘‘இப்படிப் பேசினால் எனக்குக் கோபம் வரும்’’ என்று சீறினாள் சித்தரஞ்சனி.

‘‘கோபம் மனித பலவீனங்களில் ஒன்று’’ என்று கூறிய சாதவாகனன் ரத்தக் கறைபடிந்த தனது வாளை நோக்கி, ‘‘சித்தரஞ்சனி! இதைக் கழுவிவிட்டு வருகிறேன்’’ என்றான்.

‘‘கவலைப்படாதீர்கள். தேவையானால் தாபிலேசுவரரே கழுவுவார்’’ என்று சித்தரஞ்சனி சொல்லி ஏளன நகையும் கூட்டினாள். ‘‘நீங்கள் இத்தனை பாசாங்குக்காரரர் என்பது இன்றுவரை எனக்குத் தெரியாது’’ என்று கூறினாள்.

பதிலுக்குப் புன்முறுவல் செய்த சாதவாகனன், ‘‘சித்தரஞ்சனி! வெற்றி மமதையை அளிக்கக்கூடாது. அகங்காரம் மனிதனை அழித்துவிடும். இந்த வெற்றி நமக்குப் பணிவை அளிக்க வேண்டும். கடமையையும் உணர்த்த வேண்டும்’’ என்றான். ‘‘அடுத்து மலைவாசிகளைக் கொண்டு

zeevaa

மலையைச் சுத்தம் செய்ய வேண்டும்'' என்று கூறிவிட்டு அப்பொழுது போரை முடித்துக்கொண்டு மலையேறி வந்த காஷ்டானனை நோக்கி, ''தளபதி! நிலைமை எப்படியிருக்கிறது?'' என்று வினவினான்.

''யவனன் படையில் பாதி அழிந்துவிட்டது. மீதிப் பேருடன் அவன் பின்வாங்குகிறான். நாகபாணன் படைகளில் முக்கால்வாசி நாசம்'' என்று அறிவித்தான் தளபதி.

''பின்வாங்கும் படையைத் துரத்த வேண்டாம். காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை ஏற்பாடாகட்டும். மறைந்த தலைவர்கள் சடலம் கிடைத்தால் எனக்குத் தெரியப்படுத்து'' என்று சாதவாகனன் கூறினான்.

''மறைந்த தலைவர்களா? அவர்களை நாம் ஏன் தேட வேண்டும்?'' என்று காஷ்டானனன் கேட்டான்.

சாதவாகனன் சிறிது நேரம் மௌனமாயிருந்தான். ''காஷ்டானனா! நமக்கொரு கடமை இருக்கிறது'' என்று சொன்னான் துக்கம் தோய்ந்த குரலில்.

சாதவாகனன் துக்கத்தைக் காஷ்டானனும் கவனித்தான். சித்தரஞ்சனியும் கவனித்தாள். அதற்குக் காரணம் புரியாததால் இருவரும் சாதவாகனனை வியப்பு நிரம்பிய விழிகளால் நோக்கினார்கள். சாதவாகனன் மெதுவாகப் பேசினான்: ''காஷ்டானனா! இந்தச் சித்தரஞ்சனியை வளர்த்து எனக்குக் கொடுத்தவர் எனது மாமனார். அவர் சடலத்தைக் கண்டு பிடி. அவருக்குக் கௌரவமான அடக்கம் செய்வது எனது கடமை.''

இதைக் கேட்ட சித்தரஞ்சனியின் கண்களில் நீர் உதயமாகத் தொடங்கியது. ''எனது தந்தை...'' என்று சொன்ன குரல் தழுதழுத்தது.

zeevaa

''வேல் பாய்ந்து விழுந்து விட்டார். இல்லாவிட்டால் என்னை வெட்டியிருப்பார்'' என்றான் காஷ்டானன்.

அதற்குமேல் பேச்சை வளர்த்தாத சாதவாகனன், ''காஷ்டானனா! க்ஷத்ரபர் விழுந்த இடத்துக்கு எங்களை அழைத்துச் செல்'' என்று கூறி, ''சித்தரஞ்சனி! நீயும் உடன் வா'' என்று சொல்லி, காஷ்டானன் முன் செல்ல அவனைப் பின்பற்றி நடந்தான்.

காஷ்டானன் தனது புரவியைத் தாபிலேசுவரர் கோவிலுக்கு முன்பே நிறுத்திவிட்டு மலைச்சரிவில் சென்றான். மலையில் பாதி தூரம் இறங்குவதற்கே குறுக்கே கிடந்த மனித சடலங்களின் காரணமாகவும் விழுந்த கிடந்த புரவிகளின் காரணமாகவும் மிகவும் கஷ்டமாயிருந்ததாலும் அந்தத் தடைகளை நீக்க இரண்டு மூன்று வீரர்களை ஏவினான். அவர்களும் மெதுவாக வழி செய்து கொடுக்க சாதவாகனன் சுற்றுமுற்றும் இருந்த நாசத்தைக் கவனித்ததால் சிறிது வருத்தமுற்றுப் பின்னால் நடந்து சென்றான்.

க்ஷத்ரபன் விழுந்த இடத்தைக் காஷ்டானன் திட்டமாக அறிந்திருந்ததால், அந்த இடத்திற்கு நேராக வந்து நின்று சிறிது சுற்றும்முற்றும் நோக்கினான். எந்த இடத்தில் க்ஷத்ரபன் விழுந்தானோ அந்த இடத்தில் அவன் சடலத்தைக் காணாத தால் வியப்புடன் சுற்றுமுற்றும் தேட ஆரம்பித்தான். அந்த இடத்தை ஆராய்ந்த சாதவாகனன் மலைப் பாறையில் ரத்தக் கறை கோடிட்டதுபோல் போகவே அந்த அடையாளத்தைப் பின்பற்றிச் சென்றான். எட்ட இருந்த புதருக்கருகில் புஸ்புஸ் என்று ஏதோ சத்தம் கேட்கவே அங்கு சென்று புதரை விலக்கிப் பார்த்த சாதவாகனன், மார்பில் பாய்ந்த வேலுடன் ரத்த வெள்ளத்தில் பெருமூச்சு விட்டுக் கொண்டு க்ஷத்ரபன் மரணாவஸ்தையில் இருப்பதைப் பார்த்து அவனருகில் உட்கார்ந்து அவன் உயிர் பிரியவில்லையென்பதால் சிகிச்சை

zeevaa

செய்ய முடியுமா என்று பார்த்தான். அப்பொழுது க்ஷத்ரபன் உதடுகள், "சித்தரஞ்சனி" என்ற சொல்லை உதிர்த்தது மிகவும் பலவீனமாக.

சாதவாகனனுக்குப் பின்னால் உட்கார்ந்திருந்த சித்தரஞ்சனி தந்தையின் அருகில் உட்கார்ந்து அவன் காதில், "அப்பா!" என்றாள்.

க்ஷத்ரபன் மெதுவாகக் கண்களை விழித்தான். மார்பிலிருந்த வேலைக் காட்டி, "இன்னும் சில நிமிடங்கள்தான் சித்தரஞ்சனி!" என்று அவள் கையைப் பற்றிக் கொண்டான். பிறகு கௌதமிபுத்ரனைப் பார்த்து, "என் சித்தரஞ்சனிக்குத் தகுந்தவன்" என்று முனகினான். "என்னை..." என்று ஏதோ சொன்னான்.

"என்ன செய்ய வேண்டும்? எதுவாயிருந்தாலும் செய்கிறேன்" என்றான் சாதவாகனன்.

க்ஷத்ரபன் கோட்டைப் பக்கம் விழித்தான். "அங்கு அடக்கம்" என்றவன் மேற்கொண்டு பேசவில்லை. அவன் உடல் ஒருமுறை நடுங்கி நின்றுவிட்டது. சித்தரஞ்சனியின் கண்கள் நீரால் மங்கின, உதடுகள் துடித்தன. வேலை நீக்கினான் சாதவாகனன்.

"காஷ்டானனா! இவரிஷ்டப்படி இவரைக் கோட்டையில் புதைத்துவிடு. நீயும் சித்தரஞ்சனியும் போய்ச் சடலத்தை அடக்கம் செய்து வாருங்கள்" என்று கூறிவிட்டு எழுந்தான்.

அன்று பிற்பகல் கோட்டையில் நின்று தாபோல் மலையைக் கவனித்துக் கொண்டிருந்த நாகபாணன் சித்தரஞ்சனியும் காஷ்டானனும் ஒரு படகில் வந்து இறங்கியதையும், அதிலிருந்த ஒரு சடலத்தை நான்கு வீரர்கள் சுமந்து வந்ததையும் கவனித்து வியப்பின் எல்லையை எய்தினான். "சித்தரஞ்சனியைத் தனியாக அனுப்பச்

zeevaa

சாதவாகனனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா?'' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டு படகுத் துறைக்கு விரைந்தான்.

நன்றாகப் போர்த்தப்பட்ட சடலத்தை நான்கு வீரர் தாங்கி வர அதற்கு முன்னால் வந்த சித்தரஞ்சனியையும் காஷ்டானனையும் நெருங்கி வந்து நின்றான்.

''விலகி நில்'' என்று அதிகார தோரணையில் காஷ்டானன் நாகபாணனுக்குச் சைகை காட்டினான். நாகபாணன் நகரவில்லை!

zeevaa

அத்தியாயம் 35

நாகபாணன் பிரமை

பரம கோழையும் தன்னைப் பார்த்தாலே நடுங்கிக் கொண்டிருந்தவனுமான காஷ்டானன் தன்னை விலகி நிற்கும்படி அதிகார தோரணையில் கட்டளையிட்டதைக் கண்ட நாகபாணன் அதிர்ச்சியின் எல்லையை அடைந்த தன்றி, தான் நின்ற இடத்தைவிட்டு இம்மிகூட நகராமல் காஷ்டானனை உற்று நோக்கி, ''உனக்குப் பைத்தியம் ஏதுமில்லையே?'' என்று வினவினான் ஏளனம் நிரம்பிய குரலில்.

காஷ்டானன் அந்த ஏளனத்தைப்பற்றிச் சிறிதும் கவலைப் பட்டதாகவோ, நாகபாணனைக் கண்டு அஞ்சியதாகவோ தெரியவில்லை. ஆகவே மிக நிதானமும் கண்டிப்பும் நிறைந்த குரலில், ''பைத்தியம் எனக்கில்லை. உங்களுக்கு இருக்கக் கூடாதென்று எண்ணுகிறேன். தவிர உங்களுக்கு ஓரளவு நன்றியறிவும் நாகரிகமும்கூட இருப்பதால் தவறில்லை'' என்று பேசினான்.

நாகபாணன் நிதானத்தை மெல்ல இழக்கலானான். ''நன்றியறிவா! நாகரிகமா! என்ன உளறுகிறாய்?'' என்று வினவினான் நாகபாணன்.

அப்பொழுதும் நிதானத்தை இழக்காமலே பேசிய காஷ்டானன், ''நீங்கள் தோல்வியுற்ற பிறகு உங்களைச் சாதவாகனர் சிறை செய்திருக்கலாம். கொன்றுகூட

zeevaa

இருக்கலாம். ஆனால் ஆயுதமிழந்து துர்ப்பலமாகிவிட்ட எதிரியைக் கண்ணியமாக நடத்தினார். சுதந்திரமாகப் போகவும் அனுமதித்தார். அதற்கு உங்களுக்குச் சிறிது நன்றியிருக்கலாமென்று நினைத்தேன். இதோ நாங்கள் கொண்டுவந்திருக்கும் சடலம் தங்கள் படைத்தலைவர் க்ஷத்ரபருடையது. அவரது கடைசி வேண்டுகோளின்படி அவரை இங்கு அடக்கம் செய்ய வந்திருக்கிறோம். அதைத் தடை செய்யாதிருப்பதுதான் நாகரிகம். அது தங்களுக்கு இருப்பதாக நம்பித்தான் சாதவாகனர் எங்களை இங்கு அனுப்பியிருக்கிறார். உங்களுக்காகப் பிசாசாக நடித்தவளும் சாதவாகன மகிஷியுமான சித்தரஞ்சனி தனது வளர்ப்புத் தந்தையின் இஷ்டத்தை நிறைவேற்ற வந்திருக்கிறாள். இவற்றையெல்லாம் தாங்கள் சிந்திப்பது நல்லது'' என்று புத்தி சொல்லும் முறையில் பேசினான்.

காஷ்டானன் அறிவுரைகளை வழங்க வழங்க நாகபாணன் சினம் உச்சநிலையை அடைந்ததால், ''காஷ்டானனா! நீ பேசுவது யாருடன் என்று புரிந்துகொண்டு பேசுவது நல்லது. இந்தக் கோட்டை இன்னும் என் வசம் இருக்கிறது'' என்று சுட்டிக் காட்டினான்.

''அதனால்?'' காஷ்டானன் கேட்டான்.

''நான் இஷ்டப்பட்டாலொழிய இந்தச் சடலத்தை இங்கு அடக்கம் செய்ய முடியாது'' என்றான் நாகபாணன்.

''அப்படியானால் உங்களை இங்கிருந்து வெளியேற்றிய பிறகு க்ஷத்ரபர் சடலத்தை அடக்கம் செய்கிறேன். அதுவரை இந்தப் பழைய வழக்கப்படி தைலக்காப்பிட்டு வைக்கிறோம்'' என்று கூறிவிட்டு, ''மகாராணி! திரும்புங்கள். வீரர்களே திரும்புங்கள் மீண்டும் எதிர்க்கரைக்கு'' என்று உத்தரவிட்டுத் தானும் நதிக்கரையைநோக்கித் திரும்பினான்.

zeevaa

க்ஷத்ரபர் சடலத்தைத் தாங்கிய நால்வரும் காஷ்டானன் உத்தரவுப்படி திரும்ப முயன்றனர். அந்தச் சமயத்தில் மகாக்ஷத்ரபர் முற்றும் எதிர்பாராத நிகழ்ச்சியொன்று ஏற்பட்டது. நான்கு படகுகளில் யவன வீரர்களை அழைத்துக்கொண்டு யவனர் தலைவன் அஞ்சன்வேல் கோட்டைத் துறையில் வந்து இறங்கினான். தனக்குப் பலம் வலுத்துவிட்டதைக் கண்ட நாகபாணன் ''காஷ்டானனா! ஒருவிதத்தில் எனது நாகரிகத்தைக் காட்டுகிறேன். நீயும் உன் வீரர்களும் திரும்பிச் செல்லலாம். க்ஷத்ரபன் சடலத்தைக் கீழே வைத்துவிட்டுச் செல்லுங்கள். அதை நான் அடக்கம் செய்கிறேன்'' என்று கூறினான் தைரியம் சொற்களில் உதிர்க்க.

அதுவரை ஏதும் பேசாமல் மௌனமாயிருந்த சித்த ரஞ்சனி தனது முக்காட்டை நீக்கி, ''நாகபாணா! உன் பாவக்கரங்களால் என் தந்தைக்கு சமாதி வேண்டாம். என்னை அவர் வளர்த்ததற்கு என் கையால் நானே அவரை அடக்கம் செய்கிறேன்'' என்று கூறிக் கனல் கக்கிய விழிகளால் நாகபாணனை நோக்கினாள்.

அவளைப்பற்றிச் சிறிதும் அஞ்சாத நாகபாணன், ''உன்னைத் திரும்பி அனுப்பப் போவதாக யார் சொன்னது?'' என்று வினவினான்.

''பெண்ணை உபயோகப்படுத்தி இங்கு வெற்றி சம்பாதிக்க முயன்ற வீரனென்று உன்னை அறிவேன். ஆனால் இந்த மாதிரி துக்க சமயத்தில் ஓர் அபலையிடம் வீரம் காட்டும் கயவனென்று உன்னை நான் இதுவரை நினைக்கவில்லை. காஷ்டானனரே! வீரர்களே! வாருங்கள் என்னுடன்'' என்று உத்தரவிட்டுத் திரும்பினாள்.

''அவனை நகரவிடாதீர்கள்'' என்று நாகபாணன் அங்கு வந்துவிட்ட யவனத் தலைவனுக்கு உத்தரவிட்டான்.

zeevaa

யவனர் தலைவனின் முகத்தில் தெரிந்தது அதிர்ச்சியா வியப்பா என்று புரியவில்லை நாகபாணனுக்கு. தான் உத்தரவிட்ட பிறகும் யவனனோ அவனது வீரர்களோ சற்றும் அசையாமல் நிற்பது மட்டும் புரிந்ததால், ''ஏன் நிற்கிறீர்கள்? நான் இட்ட உத்தரவு காதில் விழவில்லை?'' என்று சீற்றம் மிகுந்த சொற்களை உதிர்த்தான்.

யவனன் முகத்தில் சற்று குழப்பம் உதயமாயிற்று. ''மகாக்ஷத்ரபரே! நாம் தோல்வியுற்றோமா வெற்றி பெற்றோமா?'' என்று வினவினான் குரலில் ஒலிக்க.

''ஏன்? அதிலும் சந்தேகமிருக்கிறதா?'' என்று கேட்டான் நாகபாணன்.

''இங்கு வரும்வரையில் இல்லை.''

''இங்கு வந்தபிறகு?''

''சந்தேகம் வந்துவிட்டது?''

''என்ன சந்தேகம்?''

''யார் உத்தரவை நிறைவேற்றுவது என்று தெரிய வில்லை.''

''இங்கு என்னைத் தவிர உத்தரவிட வேறு யார் இருக்கிறார்கள்?'' என்று கறுவினான் நாகபாணன்.

''இங்கு இல்லை...'' என்று இழுத்தான் யவனன்.

''வேறு எங்கு இருக்கிறார்கள்?''

''அக்கரையில்...'' இதைச் சொன்ன யவனன், ''மகா க்ஷத்ரபரே! என்னை இங்கு அனுப்பியது சாதவாகனர். நம் இருவர் படைகளையும் முறியடித்த மகாவீரன்'' என்றும் சொன்னான்.

zeevaa

நாகபாணன் சிறிது குழம்பினான். ‘‘என்ன உத்தர விட்டான் சாதவாகனன்?’’ என்று கேட்டான் சினம் சொற்களில் கொந்தளிக்க.

‘‘நமது படைத்தலைவர்... இந்த க்ஷத்ரபர், இவர் உடலை அடக்கம் செய்ய தடை யாராவது செய்தால் அவர்களைச் சிறை செய்து கொண்டு வருமாறும், இந்த மகாராணிக்கு யாராவது தீங்கு செய்ய முயன்றால் அவர்களைக் கொன்று விடுமாறும் கௌதமிபுத்ரர் உத்தரவிட்டிருக்கிறார்...’’ என்று இழுத்தான் யவனன்.

‘‘உத்தரவை நிறைவேற்றாவிட்டால், இங்கு வந்திருக்கும் இந்த எனது அடிமை, புது மகாராணியை நாம் சிறை செய்து இங்கு வைத்துக் கொண்டால்?’’ என்று நாகபாணன் கேட்டான். மேலும் சொன்னான்: ‘‘யவனர் தலைவரே! இது நமக்கு நல்ல சமயம். சமரில் எதுவும் நியாயம். தானாக வந்த இவளையும் கோழை காஷ்டானனையும் நாம் சிறை செய்து எதிரியுடன் சமரசம் பேசினால்...?’’

வார்த்தையை முடிக்கவில்லை மகாக்ஷத்ரபனான நாகபாணன். இடிஇடி என்று பெரிதாக நகைத்தான் யவனர் படைத்தலைவன். ‘‘நாகபாணரே! உம்மைப் புத்திசாலி யென்று நினைத்தேன். எதிரிகளை எடை போடக்கூடிய சாமர்த்தியசாலியென்று நினைத்தேன். தோல்வி உமது புத்தியை மழுங்க அடித்துவிட்டது’’ என்று யவனன் கூறினான் நகைப்பின் ஊடே. பிறகு நாகபாணனைக் கவனிக்காமல், ‘‘சாதவாகனர் படைத்தலைவரே! நீங்கள் க்ஷத்ரபரை அடக்கம் செய்யுங்கள். மகாராணி! மகாக்ஷத்ரபரின் அபராதத்தை மன்னித்து விடுங்கள்’’ என்று காஷ்டானனை நோக்கிக் கூறினான். ‘‘உம், சடலத்தை எடுத்து வாருங்கள்’’ என்று சடலம் தாங்கிய வீரர்களுக்கும் உத்தரவிட்டுக் கோட்டைப் பகுதியை நோக்கி நடக்க முற்பட்டான்.

zeevaa

''நில் யவனா!'' என்று ஏகவசனத்தில் பேசிய நாகபாணன், ''இங்கு எனது உத்தரவின்றி எதுவும் நடக்க முடியாது. இந்தக் கோட்டை இன்னும் என் வசத்தில் இருக்கிறது'' என்று சீறி, ''டேய்! யாரங்கே?'' என்று கோட்டை மாளிகைப் புறத்தை நோக்கிக் கூறினான். அடுத்த விநாடி யவன வீரர்களின் பிடியில் இருந்தான் நாகபாணன். ''மகாக்ஷத்ரபரே! உமது படையில் மீதியுள்ள பகுதியும், எனது படையின் பாதியும் சாதவாகனரின் பெரும்படையிடம் சிக்கியிருக்கிறது. இங்கு ஏதாவது முறைகேடாக நடந்தால் அந்தப் படைகளை அழித்து விடுவதாக சாதவாகனர் சொல்லச் சொன்னார்'' என்று ஒரு பெரிய அதிர் வெடியை எடுத்து வீசினான் யவனர் தலைவன். ''பேசாமல் வாரும். உமது பிடிவாதத்தால் உமது படைகளைக் காவு கொடுப்பதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. எனது யவனர்கள் அழிவதை நான் விரும்பவில்லை'' என்று அதிகாரத்துடன் கூறிவிட்டு நடந்தான். காஷ்டானனும் சடலத்தைத் தாங்கியவர்களும் சித்தரஞ்சனியும் யவனனைத் தொடர்ந்தார்கள்.

சித்தரஞ்சனி தனது வளர்ப்புத் தந்தையின் சடலத்தைக் கோட்டை நந்தவனத்தில் அடக்கம் செய்ய ஏற்பாடு செய்தாள். வீரர்கள் தோண்டிய குழியில் சடலம் இறக்கப் பட்ட பிறகு சித்தரஞ்சனி தனது மடியிலிருந்து பிடி அரிசியை எடுத்து அதன் மீது தூவினாள். காஷ்டானன் வீரர்கள் ஆயுதங்களைத் தாழ்த்திக் காலமான தலைவருக்கு அஞ்சலி செலுத்தினார்கள். யவனனும் பழைய தலைவனுக்குத் தலை வணங்கினான்.

அடுத்து சித்தரஞ்சனி கண்களில் நீரை உகுத்த வண்ணம் ஆற்றங்கரையை நோக்கி நடந்தாள். காஷ்டானன் அவளைப் பின்தொடர வில்லை. யவனனும் நின்ற இடத்திலேயே நின்றான்.

zeevaa

"ஏன் நிற்கிறீர்கள்?" என்று சீறினான் நாகபாணன்.

"இன்னும் ஒரு விஷயம் அறிந்துவரச் சொன்னார் சாதவாகனர்" என்றான் காஷ்டானன்.

"என்னிடமும் சொன்னார்" என்றான் யவனன்.

"இன்னும் எதை அறியவேண்டும்?" என்று வெறுப்பும் கோபமும் கலந்த குரலில் கேட்டான் நாகபாணன்.

காஷ்டானன் தேவையை மெதுவாகச் சொன்னான் நாகபாணன் முகம் மிஞ்சிய திகிலாலும் அதிர்ச்சியாலும் பிரமையை அடைய அவன் கல்லென சமைத்து நின்று விட்டான் பல விநாடிகள். "இதைவிட சாதவாகனன் என்னைக் கொன்று போடலாமே" என்று வெறுப்புடன் கூறினான்.

அத்தியாயம் 36

சொர்க்க பூமி

சாதவாகனன் மற்றொரு விஷயத்தை அறிந்து வரச் சொன்னதாகக் காஷ்டானன் கூறியதைப்பற்றித் தன்னிடமும் சொல்லியிருப்பதாக யவனனும் சொன்னதும் சில விநாடிகள் குழப்பமடைந்த நாகபாணன் அவ்விருவரும் சொன்ன பதிலைக் கேட்டதும் மிதமிஞ்சிய பிரமையையே அடைந் தான். ''தாங்கள் இதுவரை பல இடங்களில் கொள்ளை யடித்துச் சேமித்து வைத்திருக்கும் வெள்ளி, தங்க நாணயக் குவியல்களை எங்கு மறைத்து வைத்திருக்கிறீர்கள் என்று சாதவாகனர் அறிந்து வரச் சொன்னார்'' என்று காஷ்டானன் கூறியதும் ஒரு விநாடி பிரமை அடைந்த நாகபாணன்அடுத்த விநாடி வெறுப்பு மிகுந்த குரலில், ''இதை விட சாதவாகனன் என்னைக் கொன்று போடலாமே'' என்று வெறுப்புடன் கூறியதும், ''தங்களைக் கொல்வதால் பயன் ஏதுமில்லை என்று சாதவாகனர் நினைக்கிறார்'' என்றான் காஷ்டானன்.

அதுவரை சினத்தைக் கூடியவரை அடக்கிக் கொண்டிருந்த நாகபாணன், ''எனது செல்வம் அனைத்தையும் எடுத்துக் கொண்ட பின் நான் ஏன் வாழ வேண்டும்?'' என்று கேட்டான்.

''பிராணன் உயர்ந்ததல்லவா?'' என்று கேட்டான் யவனன்.

zeevaa

''பணம் போன பின் பிராணன் இருந்து என்ன பிரயோசனம்? பணமில்லாதவன் பிணம் என்ற பழமொழி கேட்டதில்லையா?'' என்று சீறினான் மகாக்ஷத்ரபன்.

அப்பொழுது மீண்டும் மன்றாடிய யவனன், ''மகாக்ஷத்ர பரே! உமது உயிரை வைத்துக் கொள்ளவோ போக்கிக் கொள்ளவோ உமக்கு உரிமையுண்டு. ஆனால் சாதவா கனரிடம் சிக்கியிருக்கும் உமது படைப் பகுதியும் எனது படைப்பகுதியும் சேர்ந்த வீரர்கள் உமது பிடிவாதத்துக்காக உயிர் விடுவதை விரும்பவில்லை'' என்று சுட்டிக் காட்டினான்.

''எனது பொக்கிஷம் இருக்குமிடத்தை நான் சொல்ல மறுத்தால்?'' என்று மறுபடியும் ஆக்ரோஷத்துடன் வினவினான் நாகபாணன்.

''உமது வீரர்களே உம்மைக் கொன்று விடுவார்கள். நமது படைகள் கலகம் செய்யும் குறிகள் தெரிகின்றன. வீரர்கள் இந்த இடத்தை விட்டுச் செல்லத் துடிக்கிறார்கள்'' என்றான் யவனன்.

மகாக்ஷத்ரபனான நாகபாணன் தான் சகலவிதத்திலும் தோல்வியடைந்து விட்டதை உணர்ந்துகொண்டு தலையைக் கவிழ்ந்து கொண்டான். பிறகு மெதுவாகப் பேசினான்: ''காஷ்டானனா! யவனர் தலைவா! நான் சேமித்து வைத்திருக்கும் பொக்கிஷம் பூராவும் ''ஜோகல் தம்பி (நாஸிக்) பகுதியில் இருக்கிறது'' என்று, இதைச் சொல்லி முறிந்த மனத்துடன் கோட்டையை நோக்கித் திரும்பிச் சென்றான்.

அவன் போவதைப் பார்த்துக்கொண்டே நின்ற சித்தரஞ்சனி அந்தப் பெரிய வீரனால் வெற்றியைத் தாங்க முடிந்ததே தவிர தோல்வியைத் தாங்க முடியவில்லை என்று தனக்குள் அனுதாபப்பட்டாள். பிறகு காஷ்டானனுடனும்

zeevaa

மற்ற வீரர்களுடனும் அக்கரையை நோக்கிச் சென்றாள். அவளை நதிக்கரையிலேயே வரவேற்ற சதகர்ணி அவளைத் தனது புரவியில் ஏற்றிக் கொண்டு தாபிலேசுவரர் கோவிலுக்குச் சென்றான். ஈசுவரனை வணங்கிவிட்டு சண்டிகா தேவியையும் வணங்கினான்.

மறுநாள் இரண்டு ஆலயங்களிலும் அபிஷேக ஆராதனைகளை மிகுந்த விமரிசையுடன் செய்ய மலைவாசிகளுக்கு உத்தரவிட்ட சாதவாகனன், அந்த விழாக்களில் மிகுந்த மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டான். அடுத்து இரண்டு நாட்களில் தனது படைகளுக்கும் அந்தப் பகுதிக்கும் மகாக்ஷத்ரபனாக காஷ்டானனை நியமித்து, ''இங்கே மக்கள் அரசை நிறுத்திவிட்டு பிரதிஷ்டானத்துக்கு வந்து சேர். அங்கும் நீதான் மகாக்ஷத்ரபன்'' என்றான்.

காஷ்டானன் பிரமை பிடித்து, ''சாதவாகனரே! இத்தனை பெரிய பதவியை என்னால் தாங்க முடியாது'' என்றான்.

''இது ஒன்றும் பெரிய பதவியல்ல. நீ செய்த சேவைக்குத் தகுந்த பரிசு. சாதவாகன அரசு பேரரசாக வெகு சீக்கிரம் விரிவடையும். அதன் அமைப்பில் உனக்கும் பங்கிருக்கும்'' என்றான்.

காஷ்டானன் சாதவாகனன் காலிலும் சித்தரஞ்சனியின் காலிலும் விழுந்தான். அதைக் கண்டு புன்முறுவல் கொண்டான் சாதவாகனன். அந்தப் புன்முறுவலுக்குக் காரணத்தை உணர்ந்திருந்த சித்தரஞ்சனி அவனுடன் தனிமையிலிருக்கையில் கேட்டாள். ''காஷ்டானன் வணங்கியபோது ஏன் சிரித்தீர்கள்?'' என்று.

''உனக்குப் புருஷனாக வர இருந்தவன் ஒரு முறை காலில் விழுந்தான். நான் ஆயுள் முழுவதும் உன் காலைப் பிடிக்க வேண்டுமே என்று நினைத்தேன்'' என்று கூறிப் பெரிதாக நகைத்தான். சித்தரஞ்சனியின் கண்களில் தீப்பொறி பறந்தது.

zeevaa

தாபிலேசுவரர் மலையிலிருந்து மக்களின் ஜெயகோஷம் கலந்த வாழ்த்துடனும் பூஜாரியின் ஆசி வசனங்களுடனும் கிளம்பி பிரதிஷ்டானா வந்த மகனையும் மருமகளையும் கௌதமி பாலஸ்ரீ மங்கல ஆரத்தியுடன் வரவேற்றாள்.

''குழந்தாய்! இவள்தானே...?'' என்று கேட்டாள் தாய், மருமகளை அணைத்துக்கொண்டு.

''அந்தப் பிசாசு இதுதான். அங்கு பிடித்துக் கொண்டது இதுவரை என்னை விடவில்லை'' என்றான் கௌதமிபுத்ரன்.

கௌதமி பாலஸ்ரீ, ''டேய்! உன் துஷ்டத்தனத்தை இவளிடம் காட்டாதே'' என்று கடிந்துகொண்டு சித்தரஞ் சனியை உள்ளே அழைத்துச் சென்றாள்.

அன்றிரவு, தனது பள்ளியறையிலிருந்து வெளியே வானில் ஓடிய முழுமதியைப் பார்த்து, ''சித்தரஞ்சனி! பாடு'' என்றான் சதகர்ணி.

இம்முறை அவள் மிக மெதுவாக இசைத்தாள். ஹூங் காரமே மயக்கும் நாதமாகத் திகழ்ந்தது. அதைக் கேட்டுக் கொண்டே அவளை அணைத்து நின்ற கௌதமிபுத்ரன். ''சித்தரஞ்சனி! இதென்ன மேலும் போகாமல் கீழும் இறங்காமல் ஒலிக்கும் ராகம்?'' என்று வினவினான்.

''பிற்காலத்தில் இந்த ராகம் என் பெயரைக் கொள்ளும். இதற்கு நிஷாதத்துக்கு மேலும் கிடையாது. ஷட்ஜத்துக்குக் கீழே கிடையாது. படாடோபமற்ற குலமகளைப் போல் நடுத்தரமான சுத்தமான வாழ்க்கை உடையது'' என்று பதில் சொன்னாள் சித்தரஞ்சனி.

''உன்னை நான் உலகத்தின் உச்சியில் நிற்க வைப்பேன்'' என்றான் கௌதமிபுத்ரன்.

''என்னுடைய சாம்ராஜ்யம் நீங்கள்தான். வேறு எந்த உச்சியும் எனக்குத் தேவையில்லை'' என்றாள் சித்தரஞ்சனி.

zeevaa

zeevaa

அவன் அவளை அப்படியே தனது கைகளில் தூக்கிக் கொண்டு பஞ்சணையில் கிடத்தினான். வான் மதியின் பூரண நிலவு அவள்மீது விழுந்தது. ஸஹ்யாத்ரியின் காற்று அவள் சேலையை அப்படியும் இப்படியும் நீக்க முற்பட்டது. கௌதமிபுத்ரன் அவள் பக்கத்தில் உட்கார்ந்து அவள் மீது தனது உடலை கவிழ்த்தான். ''சித்தரஞ்சனி! இனி தடையில்லை'' என்று மெதுவாகச் சொன்னான்.

''எதற்கு?'' என்று ஏதோ கேட்க வேண்டுமென்பதற்காக கேட்டாள் சித்தரஞ்சனி.

விளக்கம் சொற்களில் வரவில்லை அவனிடமிருந்து. வந்த விதத்தில் அவள் உணர்ச்சிகள் வேகமாகச் சுழன்றன. இதயம் சொர்க்கத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. இந்தச் சொர்க்க சிருஷ்டிக்கு புருஷர்களின் முரட்டுத்தனம் மிக அவசியம் என்பதைச் சித்தரஞ்சனி புரிந்து கொண்டாள். சாதவாகனன் அவள் காதில், ''நீதான் சொர்க்க பூமி சித்தரஞ்சனி'' என்று சொன்னான்.

''அதை ஆளும் சக்கரவர்த்தி நீங்கள் தானே'' என்று முணுமுணுத்தாள் அவள்.

பி.கு: கௌதமிபுத்ரன் சாகர்களை முறியடித்து மகாராஷ்டிரம், கொங்கணம் முதலிய அனைத்தையும் கைப்பற்றி சாதவாகனப் பேரரசை நிறுவினான். அதற்கு காஷ்டானன் மகாக்ஷத்ரபனாக சாதவாகனனிடம் பணிபுரிந்தான் என்று சரித்திரம் கூறுகிறது.

zeevaa

பாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ்
23633094 -23631794

zeevaa